காற்று வெளியிடை கண்ணம்மா

ரமணிசந்திரன்

காற்று வெளியிடைக் கண்ணம்மா

ரமணிசந்திரன்

அத்தியாயம் -1

அழகாக இரண்டு தரம் கிணுகிணுத்துவிட்டு, நல்ல பிள்ளையாக வாயை மூடிக் கொண்டது, நிகிலனின் செல்ஃபோன்.

அந்த மாதிரிதான் அலாரத்தை அமைத்து வைத்திருந்தான் அவன். சாதாரணமாகக் கண் விழித்து எழுவது என்றால், அந்த இரண்டு குரலிலேயே எழுந்து விடலாம்! அதை மீறிய தூக்கம் வந்தால், அதற்கு மேல் எதுவும் அவனைத் தொல்லை செய்யக் கூடாதில்லையா?

லேசாக உடலை முறுக்கிக்கொண்டு எழுந்தபோது, செல் மீண்டும் குரல் கொடுத்தது!

திரையில் வந்த எண்ணைப் பார்த்து முறுவலித்தபடியே காதில் வைத்தால், "என்ன, திருப்பள்ளி எழுச்சி ஆகிவிட்டதா? அப்படியானால், உள் அன்பான அக்காவின் பேரன்பான பிறந்த நாள் வாழ்த்துக்கள்!" என்றது ஒரு குதூகலக் குரல்!

அவன் நன்றியுரைத்ததும், "பிறந்த நாளும் அதுவுமாக, பொழுதைக் கழிக்க, உனக்கு வே . . . று விதமாக எத்தனையோ திட்டங்கள் இருக்கும்! அதனால், இதற்கு மேல், உன்னை அறுக்காமல் வைத்து விடுகிறேன்! தீபுவும், தினுவும் உனக்குக் கார்டு அனுப்பியிருக்கிறார்களாம்! அவர்களே செய்தது! பார்த்துவிட்டு, எப்படி இருக்கிறது என்று சொல்ல வேண்டுமாம்! மறந்துவிடாதே! பை!" என்று வைத்துவிட்டாள்.

அவனுடைய தமக்கை ரஞ்சனி! அவளுக்கு மட்டும்தான், இப்படிப் பேசும்போதே சிரிக்கும் குரல் உண்டு!

குரல் மட்டும் அல்ல! கண், முகம், உடம்பு! எல்லாமே சிரிக்கும்!

அந்தச் சிரிப்பின் பின்னே , பதினைந்து ஆண்டு கால இனிய இல்லறம், அன்பான கணவன், அழகும் புத்திசாலித்தனமும் நிரம்பிய இரு குழந்தைகள், வளமான வாழ்க்கை எல்லாமே உண்டுதான்!

ஆனால், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரும், ரஞ்சி பேரழகிதான்! பிறந்த இடத்திலும் வளத்துக்கு குறைவில்லைதான்!

தங்கள் இருபதே வயதான செல்ல மகள், அவளை விடவும் பன்னிரண்டு வயது மூத்த ஒருவரை மணந்தே தீர வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தபோது, பெற்றோருக்கு வருத்தம்தான்!

மகளின் பிடிவாதத்துக்குப் பணிந்து, அப்போது மனமற்றுதான்

ரஞ்சியை மணம் செய்து கொடுத்தார்கள்! ஆனால், குணசீலன் மனைவியின் மீது பொழிந்த அன்பும், அன்றில் பறவைகள் போல அவர்கள் வாழ்ந்த விதமும், பெற்றோரின் மனதை உருக வைத்துவிட்டன!

இப்போது, மருமகன் தீயில் குதிக்குமாறு கூறினால், கண்ணை மூடியல்ல, திறந்து வைத்துக்கொண்டே குதித்து விடுவார்கள்! மருமகனிடம் அவ்வளவு நம்பிக்கை! பாசம்!

நிகிலனுக்குமே, அக்கா கணவர் மேல் ரொம்பவும் பிரியம்தான்! ரஞ்சியின் திருமணத்தின்போது, இவ்வளவு வயதான மாப்பிள்ளையா என்று, இங்கும் இங்கும் நின்று ,குணசீலனின் தலையில் நரை முடி தேடியதும், "டை" அடித்திருப்பார் என்று ஆத்திரமாக நினைத்ததும், இன்று எண்ணிப் பார்க்கையில் சிரிப்பாக வந்தது!

அத்தோடு, அத்தானின் இன்றைய காதோரத்துக் கம்பீர நரையின் ரசிகன் அவன்!

அவரது இன்னொரு சிறப்பாக, அவ்வப்போது கிண்டலாக ஓரிரு வார்த்தைகள் கூறினாலும், நிகிலனின் வாழ்க்கை முறையில், அவர் தலையிட்டதில்லை!

புத்தி சொல்லச் சொன்ன மாமியாரிடமும், " முழுசாக ஒரு தொழிலைக் கையில் கொடுத்திருக்கிறீர்கள்! அவனது நிலையில் இன்னொருவன் இருந்தால் என்னவோ ஆகியிருப்பான்! நிகில் அப்படியில்லை என்பதால், பொறுமையோடு காத்திருங்கள்! கல்யாணம் ஆகும்போது, எல்லாம் சரியாகிவிடும்! " என்று முடித்துவிட்டதாகக் கேள்வி!

அந்த வகையில், அக்கா கணவரிடம் அவனுக்கு மதிப்பு அதிகமாகவே ஆயிற்று!

அவர் ஒன்று சொல்லி, அவன் அதை மீறும்படியாக நேராமல், மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டார் அல்லவா?

ஆனால், இது அவனைப் பெற்ற அன்னைக்குப் புரியவில்லையே! புரிந்திருந்தால், மாதத்தில் பெரும்பான்மை நாட்கள், அதிக வேலை என்ற சாக்கில், அவன் "கம்பெனி கெஸ்ட் ஹவுசி"ல் வந்து தங்கும்படியாக இருக்காது!

வேலைக்காக மகன் வெளியே தங்கவில்லை என்பதில், தாயாருக்கும் நிச்சயமே! ஆனால், அதற்கு மேல், தாயின் ஊகத்தில் பெருமளவு தவறுதான்!

ஆனால், அதில் சிறு உண்மையும் இருந்ததாலேயே, விளக்கம் அளித்து தாயின் கவலையைத் தீர்க்கும் முயற்சியில், நிகிலன் ஈடுபட்டதில்லை!

அத்தோடு, அவனது திருமணம் பற்றி அக்கா கணவர் கூறியதும் சரியே! உடனே இல்லை என்றாலும், ஒரு சில ஆண்டுகளிலேனும் அவன் திருமணம் செய்வதாகத்தான் இருந்தான்! அப்படித் திருமணம் செய்யும்போது, அவனுடைய சந்ததிக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக இருக்கும் எண்ணம், அவனுக்கு நிச்சயமாகக் கிடையாது!

அப்படி ஒரு நாள் வரும்போது, அவன் ஒரு நல்ல குடும்பத் தலைவனாகத்தான் இருந்தாக வேண்டும்! இருப்பான்! அப்போது, இந்த சஞ்சலங்கள் எல்லாம் எல்லாம் சரியாகிப் போகும்!

அடுத்த அழைப்பு அம்மாவிடம் இருந்து!

வீட்டுக்குச் சாப்பிட வரச்சொல்லி! பாயசம் செய்து வைத்திருக்கிறார்களாம்!

போகலாம்தான்! ஆனால், பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தொடங்கி விடுவார்கள்! திருமணம் செய்துகொண்டு, நல் . .லபடியாகக் குடும்பம் நடத்த வேண்டுமாம்!

பாதிச்சாப்பாட்டில் எழுந்து, பெற்றவளை அவமானப்படுத்த அவனால் முடியாது!

ஆனால், அவன் ஊம் கொட்டுவது கூடக் கிடையாது!

தந்தை புரிந்துகொண்டு, “இதோ பார் மீனு, அவனது திருமணம் பற்றி, எப்போது, என்ன அவனே ஏதாவது திட்டம் வைத்திருப்பான்! அதற்கான வயது அவனுக்கு ஆகிவிட்டது! சமயம் வரும்போது அது பற்றி அவனே சொல்லுவான். இப்போது அவனைச் சாப்பிடவிடு.” என்று சொல்லிப் பார்ப்பார்!

அவனுடைய தாயார் மீனலோசனிக்கும் புரிந்திருக்கும்தான். ஆனால், புரிந்ததை ஏற்க மனம் வராது! அபூர்வமாகக் கிடைக்கும் தருணத்தை விட்டுவிடக் கூடாது என்று விடாமல் தன் கருத்தை வலியுறுத்துவாள்.

ஆனால், அவளது இந்த வலியுறுத்தல்களாலேயே, மகனின் வரவுகள் அபூர்வம் ஆகின்றன என்று உணராமல், “பிறகு என்னத்தைச் சொல்வது? சாப்பிட்டுக் கைகழுவியதும், வேலை வேலை என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடி விடுகிறானே! “ என்று கணவரிடம்

வருத்தமாக மொழிந்து, அவர் வாயை மூடிவிட்டு மகனிடம் தொடர்வாள்.

இப்போது வீட்டுக்குச் சென்றாலும், இதுதான் நடக்கும்!

பிறந்தநாள் என்பதால், இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக!

ஆனாலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக இந்த நாளில் அவனைப் பெற்றவளை நோக விட முடியாது!

இப்படி எண்ணித்தான் அவன் வீட்டுக்குச் சென்றது! எதிர்பார்த்ததற்கு, அன்னை அவனை ஏமாற்றவுமில்லை!

“வயது முப்பதைத் தாண்டிவிட்டதே! இன்னமும் எவ்வளவு காலம் இப்படித் தனி மரமாக நிற்கப் போகிறாய் . . . “ என்று தொடங்கி வளர்ந்துகொண்டே போயிற்று!

அரைகுறையாகக் கேட்டபடி, அன்றையத் தபாலைப் பார்வையிட்டவனுக்கு அக்கா பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து சிரிப்பூட்டியது.

தினுசு தினுசான சாக்கலேட்டுகள் ஐஸ்கிரீம் படங்களை விளம்பரங்களில் இருந்து எடுத்து ஒட்டி, அதெல்லாம் அவர்களுடைய அன்பு மாமாவுக்கு எப்போதும் நிறையக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தியிருந்தான் தினுக்குட்டி என்கிற எட்டு வயது தினகரன்!

மேலும் நாலு வயது பெரியவளாகக் கண்ணுக்கு எட்டிய மட்டும் போய்க்கொண்டே இருப்பது போலப் படிகளை வரைந்து, ஒவ்வொன்றிலும் வெற்றி, வெற்றி என்று பல வண்ணங்களில் எழுதிவைத்து, நிகிலனின் புகைப்படம் ஒன்றை, முப்பதை எட்டியிருப்பது போல ஒட்டி வைத்திருந்தாள் தீபு என்று அழைக்கப்படும் தீபா!

பிள்ளைகளின் அன்பு சுண்டி இழுக்கக் கணத்தில் முடிவு செய்தான் அவன்.

அன்னையின் குரல் மீண்டும் காதில் விழ, கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து, “நேரமாகிறதும்மா. போக வேண்டும்! நாம் இன்னொரு பேசுவோம்!” என்று இதமாகவே முடித்து எழுந்தான் நிகிலன்.

மகனை ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பெருமூச்செறிந்தாள் மீனலோசனி.

அவ்வளவு நேரமாக அவனுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் வீண்!

இப்போது எங்கே, எந்தச் சாக்கடையை நாடிப் போகிறானோ?

தாயின் மனதில் ஓடுவதை உணர்ந்தவன் போல, வாழ்த்து அட்டைகளைத் தாயிடம் காட்டினான் மகன்.

“அக்கா வீட்டுக்குப் போய், எல்லாருமாக எங்கேனும் போய் வரலாம் என்று ஒரு யோசனை! பாயசம் இருந்தால் கொடுங்கள். கொண்டு போய்க் கொடுக்கிறேன்!” என்று நிகிலன் கூறும்போதே, மீனலோசனியின் முகம் பூவாய் மலர்ந்தது!

“குட்டிக் கைகளால், என்ன அழகாகச் செய்திருக்கிறார்கள், பாரேன்!” என்று பேரன், பேத்தியின் முயற்சிகளை வியந்துவிட்டு, “இதோப்பா. பாயசத்தோடு, கொஞ்சம் முறுக்கும் தருகிறேன்! மருமகனுக்குப் பிடிக்கும் என்று செய்து வைத்தேன்!” என்று அவசரமாக உள்ளே சென்று, மகள் வீட்டுக்கென்று அழகிய டப்பாக்களில் பொருட்களை எடுத்து வந்தாள் மீனலோசனி.

பேரன், பேத்திக்குப் பிடித்தது பார்த்து எடுத்து வைக்கிற வேகத்தில், மகனின் விஷயம் அவளுக்கு மறந்து போயிற்று!

அது மீண்டும் அன்னைக்கு நினைவு வருமுன் கிளம்பி விடவேண்டும் என்று திட்டம்போட்டு, வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றுவிட்டான் நிகிலன்!

மகனின் கார் கிளம்பி வேகமாகச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உள்ளூர ஒரு சந்தேகம்! அவளது பேச்சை நிறுத்துவதற்காகத்தான், நிகிலன் அவனுடைய மருமக்களின் பேச்சை எடுத்தானோ? மெய்யாகவே, அங்கே போவானோ, மாட்டானோ?

ஆனால், எப்படியும் முறுக்கு போய்ச் சேர்ந்துவிடும்! அந்த வரையில் ஆறுதல் அடைய வேண்டியதுதான்!

ஆனால் மீனலோசனியின் சந்தேகமே தவறாக, படத்தில் இருந்த ஐஸ்கிரீம், சாக்கலேட் தினுசுகள் அனைத்திலும் கொஞ்சம் கொஞ்சம் வாங்கிக்கொண்டு, நிகிலன், அவனுடைய தமக்கை வீட்டுக்குச் செல்லவே செய்தான்!

“இவ்வளவு சாக்கலேட்டா? ஒரு மாதத்துக்கு வேறு கேட்கக் கூடாது!” என்ற தாயை அலட்சியம் செய்து, மாமன் வாங்கி வந்தவற்றை ஆராய்ந்துவிட்டு, “நீங்க வாங்கிட்டு வருவீங்கன்னு எனக்குத் தெரியும், மாமா! அதனாலேதான் எனக்குப் பிடித்த எல்லா சாக்கலேட் படத்தையும் ஒட்டினேன்!” என்று தினு திருப்தியுடன் அறிவிக்கவும் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

“கெட்டிக்காரன்!” என்று, பெருமையுடன் சிறுவனின் சிகையை அளைந்து, “எல்லாம் உனக்கு மட்டுமில்லை! அக்காவுக்கும் பாதி கொடுக்க வேண்டும். என்ன?” என்று நிகிலன் கூற, “ஐயய்யோ, எனக்கு வேண்டாம், மாமா! அப்புறம் நான் குண்டாகி விடுவேன்!” என்று சாக்கலேட்டை ஆவலோடு பார்த்தவாறே பன்னிரண்டு வயது தீபா மறுத்துப் பேசவும், பெரியவர்களுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது!

“உன் வேலையாக்கும்? இந்த வயதிலேயே, ஆசைப்பட்டதைச் சாப்பிட விடாமல் . . “

“ஐயோ, உன் மருமகளை நான் ஒன்றும் சொன்னதில்லைப்பா! ஆனால், இவள் செட் எல்லோருமே கலோரிக் கணக்கெல்லாம் எப்படிப் போடுகிறார்கள், தெரியுமா?” என்றாள் ரஞ்சனி.

“நீ அளவோடு உண்பதைப் பார்த்து வந்ததோ என்று நினைத்தேன். வளருகிற வயதில், ஒரேயடியாக உணவைக் குறைத்து வளர்ச்சியை விட்டுவிடாமல் பார்த்துக் கொள்! அதிருக்கட்டும் ரஞ்சி! இன்று நாம் எல்லோருமாக எங்காவது போய் வரலாமா?” என்று கேட்டான் நிகிலன்.

“சூழ்!” என்று பிள்ளைகள் கத்த, “செய்யலாமே!” என்று ஆவலுடன் எழுந்த ரஞ்சனியின் முகம் சட்டென வாடியது! “முடியாதேடா! அத்தான் ஏதோ போர்டு மீட்டிங் என்று போயிருக்கிறார்! வருடாந்திரக் கூட்டம்! இரண்டு நாளாயிற்று! இன்னும் நாளைக்குத்தான் வருவாராம்! அவர் இல்லாமல் . . போரடிக்கும்! இன்னொரு தரம் பார்ப்போம்!” என்று முடித்தாள்.

“ஆஹா, அன்பான தம்பி கூப்பிடுகிறேன், அவர் இல்லாமல் போரடிக்குமா? என்ன சகோதர பாசம்! என்னே உன் தம்பிப் பாசம்!” என்று கிண்டலடித்துவிட்டு, “அதென்ன மீட்டிங் அக்கா, சனிக்கிழமை இரவு முடிய நடக்கிற கூட்டம்? எங்கே நடக்கிறது?” என்று வினவினான் தம்பி.

“ஈசிஆர் ரோடில் ஒரு பெரிய பங்களா எடுத்து . . .”

“வழக்கமான இடம்தானே? எப்படியும் இன்று மதியத்தோடு போர்டு மீட்டிங் முடிந்துவிடும். இரவு எல்லோருக்கும் ஏதாவது விருந்து இருக்கக் கூடும்! அது ஒன்றும் முக்கியமில்லை! நாம் போய், அத்தானைக் கூட்டி வந்துவிடலாம்! அப்புறம் ஜாலியாகச் சுற்றலாம்!”

ரஞ்சனிக்கும் இந்தத் திட்டம் பிடித்திருந்தது!

“நீங்கள் வரும்வரை, கம்ப்யூட்டரில் “கேம்” விளையாடிக்

கொண்டிருக்கிறோம்!” என்ற பிள்ளைகளை விட்டுவிட்டுக் கிளம்பி, ஈசிஆரைப் பிடித்து, அதன் கிளை வழி ஒன்றில் நுழைந்து, “குணா மெட்டல்”சின் கூட்டம் நடக்கும் பங்களாவை அடையும் வரை, அக்கா, தம்பி இருவருக்கும் ஒரே சிரிப்புதான்!

நிகிலன் சொன்னது போல முக்கிய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டதாலோ என்னவோ, சுற்றுப்புறம் ஒரு விழாத்தன்மை பூண்டிருந்தது! அங்கங்கே சாவதானமாகப் பேசியவாறு நடந்துகொண்டிருந்த சிலரைப் பார்த்தவண்ணம், ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினான் நிகிலன்.

“நம்மைப் பார்த்ததும் அத்தான் மிரளப் போகிறார்!” என்றவாறு ஏசி காரின் கதவைத் திறக்கையில், வெளியிலிருந்து பேச்சுச் சத்தம் கேட்டது!

“ . . பெயரைப் பார், குணசீலனாம்! சும்மாவே, அவன் அறைக்குள் அழைத்தாலே, அசிங்கப் படாமல் வர முடியாது! இன்று இருந்து வேலையை முடித்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று சேர்மனாக உத்திரவிட்டுவிட்டான், பாவி! வயிற்றுப் பிழைப்புக்காக எவ்வளவு பொறுப்பது? நான் வேலையை விட்டுவிடப் போகிறேன்!” என்று வெறுப்புடன் ஒரு பெண் கூறியது, வெகு தெளிவாகக் காதில் விழ, ரஞ்சனியின் முகம் ரத்தப் பசையற்று வெளுத்தது!

அத்தியாயம் -2

நிகிலனின் முதல் கவலை, தமக்கையைப் பற்றியதே!

காதில் விழுந்த வார்த்தைகள் மூலமாக, அந்தப் பெண் குறிப்பிட்ட மகா மோசமான மனிதன் ரஞ்சியுடைய கணவராக மட்டுமே இருக்க முடியும்!

கனிவும் காதலுமே உருவான குணசீலன் எப்படி . . இப்படி?

கணவரிடம் உயிரையே வைத்திருக்கும் ரஞ்சனி, இதை எப்படித் தாங்குவாள்?

வெளுத்து, சிலை மாதிரி அமர்ந்திருந்தவளின் கையைப் பற்றி, லேசாகத் தட்டிக்கொடுத்து, "ரஞ்சீ!" என்று மெல்ல அழைத்தான் அவன்.

திகைத்துத் திரும்பி, புரியாத பார்வையால் தம்பியைப் பார்த்து, "அவள் சொன்னது, அத்தானைப் பற்றி அல்லதானே, நிக்கி?" என்று காற்றாகிவிட்ட குரலில் கேட்டாள் அவள்!

இதற்கு என்ன பதில் சொல்வது?

கேட்டது கணவனைப் பற்றிதான் என்று தெரிந்தே இருந்தபோதும், இல்லை என்று ஆகிவிடாதா என்ற தவிப்பு அவளுக்கு!

அவனுக்குமே, நம்ப முடியாத பிரமிப்புதான்!

அத்தான், இவ்வளவு மோசமானவராக எப்படி இருக்க முடியும்?

இது எப்படி சாத்தியம்?

இதன் பிறகே, அந்தப் பெண்ணின் பேச்சின் நம்பகத்தன்மை குறித்து, அவனுக்கு யோசிக்கத் தோன்றியது.

யோசிக்க, யோசிக்க, அவள் சொன்னதை நம்பித்தான் ஆக வேண்டும் என்று தெரிந்தது.

ஒரு வேளை, குடும்பத்தில் குழப்பம் விளைவிப்பதற்காக, யாரேனும் செய்த சதியாக இருக்குமோ என்று எண்ணிப் பார்க்கக்கூட வழியில்லாமல், ரஞ்சனியும் அவனும் அங்கே வருவதோ, கருநீல நிறத்து ஃபிலிம் ஒட்டிய ஏசி காருக்குள் ரஞ்சனி இருந்ததோ, வேறு யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லாதிருந்தது! திடுமெனத்தானே கிளம்பி வந்தார்கள்!

அவர்கள் வருவதாகக் குணசீலனிடம்கூடத் தெரிவிக்கவில்லை!

இன்னும் ஏதாவது சின்னச் சின்ன வேலைகள் இருந்து, வரவேண்டாம் என்று சொல்லிவிடுவாரோ என்ற பயம்! நேரில் வந்துவிட்டால்,

இவ்வளவு தூரம் வந்துவிட்டார்களே என்ற இளகலில் கூட வந்துவிடுவார் என்ற நிச்சயம் இருந்தது!

அதனால், சொல்லிவிட வேண்டாம் என்று, பிள்ளைகளிடம்கூட எச்சரித்திருந்தார்கள்!

எனவே, அவர்கள் வருவது யாரும் அறிந்திராத ஒரு நிகழ்வு!

அது மட்டுமல்ல!

பார்ப்பதற்கு ஓரளவு நன்றாகவே இருந்த அந்தப் பெண், அவளோடு கூட நடந்தவளிடம் தன்போக்கில் சொல்லிச் சென்ற வாசகத்தில், இடையில் ஒரு பகுதிதான் அவர்கள் கேட்டது!

அதுவும் அப்போது கார்க் கதவைத் திறக்கத் தொடங்கியதால் மட்டுமே, காரினுள் இருந்த அக்கா, தம்பியின் காதில், அந்தப் பகுதி விழுந்தது!

இல்லையென்றால், அவர்களுக்கு எதுவும் தெரியும் வாய்ப்பே இருந்திராது!

இப்படி இருக்க, சதி பண்ணி, அவர்கள் வரும் நேரம் பார்த்து, அந்தப் பெண் பேசினாள் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது!

அந்தப் பெண்கள், ஒருவருக்கொருவர் ஆற்றாமையையும் அந்தரங்கத்தையும், அவர்களுக்குள் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவே!

அப்படியென்றால், குணசீலன், பெரும் குணக்கேடன் என்றல்லவா முடிவாகிறது!

கவலையுடன் தமக்கையைப் பார்த்தால், அவளும் அதே முடிவுக்கு வந்திருப்பவள் போன்று, கண்ணும் முகமும் செவ செவ என்று சீற்றத்தினால் சிவப்பேறிக் கொண்டிருந்தன!

“இந்த மாதிரிக் கூட்டங்களின் பின் மற்றவர்கள், “கீ செயின்” அது, இதென்று ஒரு மாதிரியான விளையாட்டெல்லாம் விளையாடுவார்கள் என்று சொல்லுவார்! என்னமோ, இவர் உத்தமராக ஒதுங்கி இருந்த மாதிரிப் பொருள்படும் படியாகப் பேசுவார்! நம்பினேன், நிகில்! முழுமையாக, நூறு சதவீதமாக நம்பினேனே! வீடு வந்ததும் என்னிடம் . . .என்னிடம் வேறு மாதிரியாக . . .இரண்டு நாள் பிரிவின் வேகம் என்று நினைப்பேன்! ஆனால், இது போலப் பலபேரிடம் பழகியதை என்னிடம் . .என்னிடமும் . . காட்டினார் என்று தெரியாதே!” என்று தவித்தவள் திடுமென நிமிர்ந்தாள்!

தம்பியின் கையை அழுந்தப் பற்றி, “நான் கேட்கப் போகிறேன்,

நிகில்! இப்போதே, அந்த ஆள் சட்டையைப் பிடித்து, உலுக்கிக் கேட்கப் போகிறேன்! “ என்று சீறியவள், சட்டென அவன் கையை உதறிவிட்டுக் கார்க் கதவைத் திறக்கப் போனாள்.

“அக்கா, வேண்டாம்!”என்று தடுத்தான் நிகிலன். “நாலுபேர் நடுவில் ரசாபாசம் எதுவும் வேண்டாம்! “

“ஏன்? இங்கே மற்றவர்கள் அறியத்தானே, அவர் கூத்தடித்திருக்கிறார்? அவர்கள் முன்னிலையில் கேட்பதில் என்ன தப்பு?” என்று ஆத்திரமாகக் கேட்டாள் தமக்கை.

“அப்படியில்லை, அக்கா! இப்போது, இங்கே, எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று, ஒன்றும் பெரிதாகத் தெரியாது! ஆனால், மற்றவர் முன்னிலையில் நீ நியாயம் கேட்கப் போய் நின்றால், குடும்ப மானத்தைச் சந்திக்கு இழுத்தாய் என்று உன்னைத்தான் கேவலமாக நினைப்பார்கள்! அத்தோடு, அடுத்தவர் முன்னிலையில், அத்தான் உன்னை இழிவுபடுத்தி விடுவாரோ என்று அது வேறு கவலையாக இருக்கிறது! “

அப்படியும் நடக்குமா என்பதுபோலத் தமக்கை பார்த்த பார்வை நெஞ்சை அறுக்க, “இந்த அத்தான் என்ன செய்யக் கூடும் என்று ஒன்றும் புரியவில்லையே!” என்று வருத்தமாகச் சின்னக் குரலில் கூறினான், அவன்.

அவளுக்கும் புரியவில்லைதான்!

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி . . . இழுத்துப்போ என்று வேலையாளிடம் சொல்லி . . . ஆசையே உருவான அவள் கணவன் இப்படியெல்லாம் செய்யக் கூடுமா?

சேச்சே, வாய்ப்பே கிடையாது என்று உறுதியோடு கூறும் திடம் இப்போது இல்லையே!

அவளுக்கு மட்டுமின்றி, அவள் தம்பிக்கு[ம் அதே மரியாதைதானே நடக்கும்?

எல்லோரையும் அடித்துப் போட்டுவிட்டு அவளை அழைத்துப் போக, நிகில் என்ன சினிமா ஹீரோவா?

“அப்படியானால், சும்மாவா இருக்கச் சொல்கிறாய்?”

கண்கள் கனல, “இப்போதைக்கு மட்டும்!” என்றான் தம்பி! “அத்தான் வீட்டுக்கு வரட்டும்.., அங்கே வைத்து அவரிடம் பேசிக் கொள்ளலாம்!” என்று காரை எடுத்தான்.

“வீடா? அப்படி ஒன்று இன்னும் இருக்கிறதா?” என்றாள் அவள் உலகை வெறுத்த குரலில்!

பதறி, “ஷ்! அப்படியெல்லாம் பேசக் கூடாது, ரஞ்சி! அத்தான் வந்ததும், நேரே கேட்போம்!” என்று அவன் சொன்னதை, அவள் கேட்ட மாதிரியே தோன்றவில்லை!

வீட்டை அடைந்ததும், கம்ப்யூட்டரிலேயே கண்ணை வைத்து, அரைக் கவனமாக, “எப்போது கிளம்ப வேண்டும்?” என்று கேட்ட பிள்ளைகளிடம், அப்பா வர முடியாததால், வெளியே போகவில்லை என்று சொல்லி சமாளித்துவிட்டு, மாடிக்குச் சென்றிருந்த தமக்கையிடம் ஓடி வந்தான் நிகிலன்.

இலக்கற்று வெறித்தபடி அமர்ந்திருந்தவளைப் பார்க்கையில் அவனது நெஞ்சு கலங்கியது!

குரலோடு, அவளது கண், முகம் எல்லாம் சேர்ந்து சிரிக்கும் என்று இன்று காலையில்தானே நினைத்தான்!

“ரஞ்சீ, அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதே! எதற்கும், நன்கு விசாரிக்கலாம்!”

காதில் விழுந்ததற்கு அடையாளமாகத் தலையை மட்டும் லேசாகத் திருப்பி, “யாரிடம் என்ன விசாரிப்பது?” என்று கேட்டாள் ரஞ்சனி.

“ரஞ்சீ . . .”

கண்ணையும் அவனிடம் திருப்பி, “சொல்லு நிக்கி, எனக்குத் தெரிவதற்காக மட்டுமாய், அந்தப் பெண் பொய் சொன்னதாக, உனக்குத் தோன்றுகிறதா?” என்று கேட்டாள். அவள்.

“இஇல்லை. . . “

“அப்புறம் கேட்பதிலும் அவர் சொல்லும் பதிலிலும் என்ன இருக்கிறது? என்னைப் பொறுத்தவரையில், எல்லாம் முடிந்துவிட்டது.”

“அப்படிப் பேசாதே, ரஞ்சி!” என்றான் அவன் அவசரமாக. “உணர்ச்சி வசப்பட்டு இருக்கும்போது, அவசரப்பட்டு முடிவெடுக்காதே. சற்றுப் பொறுமையாய் யோசிப்போம் . . .அந்தக் கூட்டத்தின் நடுவில் அத்தான் ஒருவேளை நிலை தடுமாறியிருக்கலாம் . . .”

“எந்தச் சந்தர்ப்பத்திலும், நான் தடுமாறுவேனா?” என்று, இன்னும் அதிக ஆத்திரமாகக் கேட்டாள் தமக்கை.

“அஅதில்லை ரஞ்சி. அத்தானிடம் எனக்கும் கோபம்தான்! அவர் செய்தது தப்பில்லை என்று சொல்ல மாட்டேன்! பெரிய தப்புதான்!

ஆனால், ஆண்கள் இதை அவ்வளவு பெரிதாக . . . ரஞ்சீ . .ரஞ்சி, எஎன்னையே எடுத்துக் . . .கொள்ளே . ..ன். . “

“உன்மேல் உயிரையும், உலகளவு நம்பிக்கையையும் வைத்திருக்கும் மனைவி, உனக்கு இல்லை, நிகில்! அப்படி ஒருத்தி வந்த பிறகு நீ இப்படி நடந்தால், உன்னை அடித்துத் துரத்தும்படி, செருப்பை எடுத்து நானே, அவள் கையில் கொடுப்பேன்! “ என்று கொதிப்புடன் கூறினாள் ரஞ்சனி. “குணாவுக்குப் பொருத்தமான தண்டனையும், அதுவேதான்! “

திகைத்து நோக்கினான் நிகிலன்.

இனிமையே உருவான சகோதரி! இப்படிப் பேச வேண்டுமானால், அவளது உள்ளம் எப்படித் தீயாய் எரிந்து கொண்டிருக்க வேண்டும்?

அடித்து நொறுக்கலாம்! ஆனால் ரஞ்சனி சொன்ன தண்டனை குணசீலனுக்கு மட்டுமானதாக இராதே!

“இதெல்லாம் அப்புறமாகப் பார்த்துக் கொள்ளலாம்! நீ சற்று ஓய்வெடு அக்கா. வேண்டுமானால், ஒரு தூக்க மாத்திரை போட்டுக் கொள்கிறாயா? தூக்க மாத்திரை எங்கே இருக்கிறது?” என்றவன் சட்டெனப் பயந்து, அவசரமாகத் தமக்கையின் “டிரெஸ்ஸிங் டேபிளி”ன் அறைகளைத் திறந்து தேடலானான்.

இரக்கமும் ஏளனமுமாக அவனைப் பார்த்துவிட்டு, “என்னடா, அளவு மீறிப் போட்டுக் கொள்வேனோ என்று பயந்துவிட்டாயா? அதெல்லாம் மாட்டேன். ஒரு தப்பும் செய்யாத நான் ஏன் சாக வேண்டும்? அப்புறம் என் பிள்ளைகள் என்ன ஆவது? நான் இருப்பேன்! ஆனால், இனிமேல், குணாவுக்கு என் வாழ்வில் இடம் கிடையாது!” என்றாள் குரல் இறுக.

இந்த உறுதியில் இருந்து, அவள் மாறுவதாகவும் இல்லை!

குணசீலன் இருக்கும் இடத்தில், அவளால் இருக்க முடியாது என்பதில், ரஞ்சனி உறுதியாக இருந்தாள். ஆனால், அதற்காகத் தாய் வீடு வரவும் அவளுக்குப் பிடிக்கவில்லை!

“வேண்டாம், வேண்டாம் என்று அப்பாவும் அம்மாவும் சொன்னதை மீறிப் பிடிவாதம் பிடித்து குணாவை மணந்தேன். இப்போது கல்லடி பட்ட நாயைப் போல, வாலைச் சுருட்டிக்கொண்டு அங்கே சென்று விழுவதா? என்னால் முடியவே முடியாது, நிகில்! எங்கேனும் போய், தனியாகத்தான் வசிப்பேன். தொழிலில் என் பங்கு இருக்கிறது! அந்த வருமானத்தை அவரால் மறுக்க முடியாது! அத்தோடு, என் முட்டாள்த்தனத்தை மன்னித்து, அப்பா, அம்மா எனக்குத் தந்த

சொத்துக்களின் வருமானமும் இருக்கிறது! கூடவே நானும் . . “ என்று வெறி பிடித்தவள் போலச் சொல்லிக்கொண்டு போனவளின் முகம் சட்டெனக் கசங்கியது.

“நானும் என்ன நானும்? என்னால் என்ன செய்ய முடியும்? ஒரு பத்து ரூபாய் சம்பாதிக்க முடியுமா? படிப்பைக் கூட முடிக்காமல், பைத்தியக்காரி போல, அவர் காலில் போய் விழுந்தேன்! பதினைந்து ஆண்டுகள்! என் இளமைக் காலம் முழுவதும் அவருக்கு இனித்தது! இப்போது இளமை கழிந்து, அழகு குறைந்துவிட்டது என்று புதுப் பூ . . . “

“ஷ், ரஞ்சி, அப்படியெல்லாம் இல்லை! எந்த வயதிலும், நீ அழகாகத்தான் இருப்பாய்! இருக்கிறாய்! கண்டதை நினைத்து, மனதைக் கசக்கிக் கொள்ளாதே! உனக்குத்தான் யோகாவெல்லாம் தெரியுமே. மனதை அமைதிப்படுத்திக் கொள்ளும் விதமாக, எதையாவது செய்து பார்!” என்று தமக்கையின் எண்ணப் போக்கை நிகிலன் மாற்ற முயன்றான் .

ஆனால், ரஞ்சனியின் கண்களில் வலி அதிகமாயிற்று!

“நான் யோகா பயின்றது எதற்காக என்று தெரியுமா, நிக்கி? அவருக்குப் பிடித்த மாதிரி, உடம்பைக் கச்சிதமாக வைத்துக் கொள்ளத்தான்! பதினைந்து ஆண்டுகள், நிக்கி, பதினைந்து ஆண்டுகள்! இவ்வளவு காலமும் என்னைப் பெரிதாக நினைத்ததே இல்லை! அவருக்காகவே நினைத்து, அவருக்காகவே வாழ்ந்து . . என் முயற்சி, தியாகம் எல் . .லாம் , சே! எவ்வளவு பெரிய விரயம்!” என்றாள் கொதிப்புடன்!

திடுக்கிட்டு நிமிர்ந்தான் நிகிலன்!

இதே வார்த்தைகள்!

திகைப்புடன் நிமிர்ந்தவன், தமக்கையின் கண்களில் வீசிய கனலைக் கண்டதும், மீண்டும் அதிர்ந்தான்.

அந்தக் கண்களிலும் இதே கனல்தான்!

அத்தியாயம் -3

உள்ளூர நெருஞ்சியாய் ஒன்று உறுத்திக்கொண்டே இருந்தபோதும், அதைப் பற்றி யோசிக்கக் கூட நேரமின்றி, தமக்கையின் வீட்டுப் பிரச்சினையிலேயே, நிகிலன் முழுமையாக ஈடுபட நேர்ந்தது!

மிக முக்கியமாக, ரஞ்சனிக்குத் தம்பியின் துணை வெகுவாகத் தேவைப்பட்டது!

வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்த பிள்ளைகளும், "மாமா, மாமா என்று அவனிடமே ஒண்டிக்கொள்ள முயன்றனர்.

கடைசி ஆட்களாக விவரம் அறிந்து அதிர்ந்து போன மீனலோசனியையும், சுந்தரத்தையும்கூட, அவன்தான் பேசி, சமாளிக்க வேண்டியிருந்தது!

ஏனெனில், குணசீலன் பிரச்சினையைக் கையாண்ட விதம், அவர்கள் அனைவரையுமே குழப்பிவிட்டது!

மனைவியின் குற்றச்சாட்டை அவர் மறுக்கவோ, ஒத்துக்கொண்டு வருந்தவோ செய்தாரில்லை! "என்னை விட, யாரோ ஒரு முகமறியாத பெண்ணை நம்புவதா?" என்று சினம் காட்டி வாதாடவுமில்லை!

அப்படி வாதாடினால் அல்லவா, எதனால் அவளை நம்பும்படி ஆயிற்று என்று விளக்கி, அவரை மடக்க முடியும்? அதற்கு அவர் இடமே தரவில்லை என்பதோடு, அவரது ஆத்திரமும் வித்தியாசமாக இருந்தது!

"சின்னப் பெண் மாதிரி, உடம்பை அழகாக வைத்துகொள்கிறாய் என்று நினைத்தேன். ஆனால், உள்ளத்தளவிலும் நீ வளரவே இல்லை என்று இப்போது புரிகிறது! பதினைந்து ஆண்டு சேர்ந்து வாழ்ந்த பிறகும், என்னைப் பற்றி உனக்கே தெரியாததை என்ன சொல்லிப் புரிய வைக்க முடியும்? இந்த வீட்டை விட்டுப் போனால், பிள்ளைகள் தவித்துப் போவார்கள். அதனால், பிள்ளைகளுடன் நீ இங்கேயே இரு! நான் வெளியே போகிறேன்!" என்று, மனைவிக்கு முன்னதாக, அவர் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்!

குடும்பத்தைப் பிரிந்து செல்வதற்கு, அவர் சாக்கு தேடிக் கொண்டிருந்தார் என்றே, அக்கா, தம்பி இருவருக்கும் தோன்றியது!

"முதலில் எங்கள் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லுங்கள், அத்தான்!" என்று ஆத்திரத்துடன் வழி மறித்தவனிடம், சற்றும் குறைவற்ற கோபத்தை, அவரும் காட்டினார். "நீ என்னடா, என்னிடம் கேட்பது? நீ

வாழுகிற நேர்த்திக்கு, இன்னொருவரைக் குற்றம் சொல்ல வாய் வேறு வருகிறதா?" என்று சீறிவிழுந்துவிட்டு, வேகமாக வெளியேறினார் அவர்!

செய்வது அறியாது நிகிலன் திகைத்து நிற்க, "மாமா, பயமா . . . இருக்குதே! அப்பா கோபமாப் போறாரே! அப்பா எனக்கு வேணுமே!" என்று தினு அழத்தொடங்க, "ஆமாம் மாமா! அப்பா வேணும்! அவர் இல்லாமல், எங்களாலே இருக்கவே முடியாது! இனிமேல், அவர் வரவே மாட்டாரா?" என்று தீபாவும் வந்து கண்ணீர் வடிப்பதில் சேர்ந்துகொண்டாள்!

இந்தப் பிள்ளைகளைக்கூட நினையாமல், அப்படி என்ன பலவீனம் என்று பெருகிய சினத்தை மறைத்துக்கொண்டு, அவர்களை சமாதானப் படுத்தினான் நிகிலன்.

ஓரளவே விவரம் புரிந்த சிறுவர்கள் என்பதால், அவர்களுக்கு ஏற்றபடி, "அம்மாவும் அப்பாவும் ஒரு சண்டை. காய் விட்டுவிட்டார்கள்! கொஞ்ச நாள் கழித்துப் பழம் விட்டதும், அப்பா வருவார்!" என்று மாமன் சொன்னதை அப்போதைக்கு ஏற்று அழுகையை நிறுத்தி, இருவரும் விளையாடப் போனார்கள்.

அவர்கள் காது கேளாத தூரம் சென்றதும், "இந்த வீட்டுக்குள், குணா இனி வரப் போவது இல்லை என்று உனக்குத் தெரியாதா, நிக்கி ? பிள்ளைகளுக்கு ஏன் பொய்யான நம்பிக்கை கொடுக்கிறாய்?" என்று கசந்த குரலில் கேட்டாள் ரஞ்சனி. "சீக்கிரமே, அப்பா எப்போது வருவார் என்று, என்னைப் போலவே அசடுகளான இந்த அப்பாப் பைத்தியங்கள் சீக்கிரமே மீண்டும் கேட்கத்தான் போகிறார்கள்! அப்போது, உண்மையைச் சொல்லித்தானே ஆக வேண்டும்? "

குரலில் இருந்த கசப்பையும், வெறுப்பையும் மீறிக்கொண்டு, தமக்கையின் கண்களில் நீர் ததும்புவதைக் கண்ட, நிகிலனின் நெஞ்சு துடித்தது.

என்ன அநியாயம்! என்ன அநியாயம் என்ற தவிப்பை வெளிக் காட்டாமல் அடக்கிக்கொண்டு, "அதில்லை ரஞ்சி, எனக்கென்னவோ, இது பற்றி இன்னும் கொஞ்சம் விசாரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது! அத்தானை அப்படிப் பட்டவராக . . அவர் அப்படிப்பட்டவராக இருக்க முடியாது என்றே, இன்னமும் எனக்குத் தோன்றுகிறது!" என்றான் அவன், அமைதியான குரலில் .

"என்னை விடவா?" என்றவள் சட்டெனக் கட்டுப்பாடிழந்து கதறிவிட்டாள். "முழுக்க நம்பினேனே! ஒரு வினாடி கூட, அவரைச்

சந்தேகித்தது இல்லையே! பத்து நிறுவனங்களில் பங்குதாரர். அவ்வப்போது, எல்லோருமாய் “காபரே “ போனோம்! “ஸ்ட்ரிப்டீஸ்” பார்த்தோம் என்பார்! ஒரு சின்னத் துணுக்கம்கூட எனக்குத் தோன்றியது இல்லையே! கடைசியில், இப்படித் தலையில் இடியையே போட்டுவிட்டாரே! . . .”

அருகில் சென்று, அவள் கையைப் பற்றி அழுத்தி, “அடக்கிக்கொள், அக்கா! பிள்ளைகளுக்குக் கேட்டுவிட்டால் பதறிப் போவார்கள்! நீ அழுவதைப் பார்த்தால், வேலையாட்களும் கூட, ஆளாளுக்கு ஆலோசனை சொல்லத் தொடங்கிவிடுவார்கள்! அடக்கு!” என்று தட்டிக் கொடுத்தான்.

ரஞ்சனி சற்றே அமைதியடைந்ததும், “எதற்கும் விசாரிப்போம், அக்கா! யாரோ ஒருத்தியின், ஏதோ பேச்சை நம்பி அத்தானைத் தப்பாக நினைத்ததாக இருக்க வேண்டாமே!

நம் நிறுவனங்களுக்காக வேலை செய்யும் துப்பறியும் நிறுவனம் ஒன்று இருக்கிறது! அதன் மூலமாக விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன். ஒரு வேளை, ஏதேனும் நல்ல தகவல் கிடைத்தால் . . .கிடைக்கலாம் இல்லையா? நல்லதையே நினைப்போமே!” என்று இல்லாத நம்பிக்கையைக் குரலில் காட்டிச் சொன்னான் நிகிலன்.

எதிரொலி போல, ஒரு கணம் ரஞ்சனியின் கண்களில் தோன்றிய ஒளி, உடனே மறைந்தது!

“நம் நிறுவனங்களுக்காக என்றால், குணாவுக்கும் அதில் தொடர்பு இருக்குமே! அவர்களிடம், அவரைப் பற்றி . . கேவலம் இல்லையா? அத்தோடு, அவர்கள் தரும் விளக்கத்தையும் எப்படி முழுமையாக நம்புவது?” என்று கேட்டாள் அவள்.

“இவர்கள் தொழிலில் சுத்தமானவர்கள், அக்கா! அத்தோடு, அவர்கள் மூலமாக, நாம் அத்தானைப் பற்றி ஆராயப் போவது இல்லை! அந்தப் பெண்ணைப் பற்றித்தான் விசாரிக்க எண்ணினேன்! அவளது குணம் தெரிந்தால் . . .”

“என்னவோ செய்!” என்றாள் தமக்கை நம்பிக்கையற்று! “நம் கண்ணால் பார்த்து, காதால் கேட்டாயிற்று! தெளிவாக. புரட்டிப் புரட்டி யோசித்தும் பார்த்தாயிற்று! அதன் பிறகும், தீர விசாரித்து எதையோ புரட்டிவிடலாம் என்ற நம்பிக்கை உனக்கு இருந்தால், செய்து பார்! உன் விருப்பம்!”

நிகிலனுக்கும் பெரிதாக நம்பிக்கை எதுவும் இல்லைதான்!

ஆனாலும், ஒரு முயற்சி செய்து பாராமல் விடுவதற்கு அவனுக்கு மனமில்லை!

அத்தோடு, பெற்றோரிடம் இந்த விஷயத்தைச் சொல்லும்போது, எல்லா விதத்திலும், தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து அறிந்தானா என்று தந்தை கேட்பார்!

மகள் வாழ்க்கை அல்லவா? மருகனிடம் அன்பும் அதிகம்!

எனவே, சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஐயம் திரிபற அறிந்து, அதன் பின்னரே, அவர்களிடம் சொல்ல வேண்டும்!

துப்பறிவாளரின் அறிக்கையில், அவர்களது கருத்தை மாற்றிக்கொள்ளும்படியாக எதுவும் இருக்கவில்லை!

அந்தப் பெண் பெரிய அறிவாளியோ, வேலையில் மகா கெட்டிக்காரியோ கிடையாது!

குணத்திலும், அப்படிச் சிறப்பாகச் சொல்ல ஒன்றும் இல்லை! அடக்க ஒடுக்கமான பெண் என்று கூற முடியாது! ஆண் நண்பர்களும் உண்டு. அதே சமயம் மிக மோசம் என்றும் இல்லை! சென்னையின் பல்லாயிரம் மிகச் சாதாரணப் பெண்களுள் அந்த சவிதாவும் ஒருத்தி!

அவளைப் பற்றிய கடைசி விவரம், குணசீலனின் நிறுவனத்து வேலையில் அவள் இப்போது இல்லை!

ராஜினாமாக் கடிதம் அவள்தான் கொடுத்தாள் என்றாலும், அவளை வேலையில் வைத்திருக்க, நிர்வாகம் . . முக்கியமாக சேர்மன் விரும்பவில்லை என்று வதந்தி!

இந்த அறிக்கையில், எதிர்பாராத விஷயம் என்று எதைச் சொல்ல முடியும்?

சவிதா வேலையை விட்டுச் சென்றது உட்பட, நடக்கக் கூடும் என்று நினைத்ததுதான்!

வேலையை விட்டுவிடப் போவதாக, அவளே சொன்னாள்தானே? ஒரேயடியாக அசிங்கப்பட்டு விடக் கூடாது என்று வெலையே வேண்டாம் என்று வெளியேறிவிட்டாள்!

அவள் ஒத்துப் போகவில்லை என்று, குணசீலன் அவளை வேலையிலிருந்து நீக்க ஏற்பாடு செய்திருப்பதும், சாத்தியமே அல்லவா?

“சொன்னது போல வேலையை விட்டுவிட்டாள், பார்! அவள் மானஸ்தி!” என்று பெருமூச்சு விட்டாள் ரஞ்சனி.

“அவளும் அப்படிப் பெரிய மானஸ்தி இல்லை, ரஞ்சி! ஆனால் இங்கே நிலைமை, இன்னமும் மோசமாகியிருந்தது! அவ்வளவே!” என்றான் நிகிலன்.

“எப்படியோ, அவள் சொன்னது உண்மையே! இதுதாண்டா சாக்கு என்று, குணா விழுந்தடித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறியதே அதற்கு அத்தாட்சிதானே? இப்போது, வீண் ஆராய்ச்சி பண்ணி, சவப்பெட்டியில் கடைசி ஆணியும் அடித்து முடித்தாயிற்று! “ என்றாள் தமக்கை களைத்த குரலில்!

பாவம்! ஏதேனும் அதிசயம் நேர்ந்துவிடாதா என்று ஏங்கிக் காத்திருந்தாள் போலும்!

கண்கள் கசிய விலகிப் போனான் நிகிலன்.

எதனால் இப்படி நேர்ந்தது? இவ்வளவு துன்பம் நேர, என்ன பாவம் பண்ணியிருப்பாள்!

பிள்ளைகளும், இவளும்! இனிப் பெற்றோரும் . . . ஏன் அவனும் கூடத்தான்!

அவனுக்கு மட்டும் மனதுள் கொஞ்சமாகவா, வலிக்கிறது?

அக்கா ஏங்குகிறாளே, அழுகிறாளே என்று, மனம் என்னமாகத் தவிக்கிறது!

இனித் தள்ளிப் போடக் கூடாது என்று பெற்றோரிடம் சொன்னபோது, அவர்களால் நம்பவே முடியவில்லை!

மாப்பிள்ளை அப்படிப் பட்டவரில்லை என்று சத்தியமே பண்ணுவார்கள் போல இருந்தது!

அக்காவும், தம்பியுமாக, எப்படி இந்த முடிவுக்கு வந்தார்கள் என்று, திரும்பத் திரும்ப விலாவாரியாகக் கேட்டார்கள்!

அவர்களுக்கும் பேரதிர்ச்சிதானே? தெளிவுபடுத்திக்கொள்ள அவர்கள் முயன்றதில், தவறேதும் கிடையாதுதான்!

ஆனால், ரஞ்சனியிடம் இந்தக் குறுக்கு விசாரணையை ப் பெற்றோர் செய்யாதது, நிகிலனுக்கு ஒரு வகையில் ஆறுதலாகவே இருந்தது! அவள் தாங்கியிருக்கவே மாட்டாள்!

தன்னைப் போலவே, கணவரிடம் வீட்டில் எல்லோரும் கொண்டிருக்கும் அன்பு, வைத்திருக்கும் நம்பிக்கை, எல்லவற்றையும் நாசமாக்கி விட்ட கணவரின் துரோகம்!

பெற்றோரின் ஒவ்வொரு கேள்வியிலும், எல்லாவற்றையும் எண்ணி எண்ணி, எப்படித் தவித்திருப்பாள்!

பச்சைக் குழந்தையாக மகளை எண்ணி, அணைத்து ஆறுதல்படுத்த முயன்ற தாத்தா பாட்டியையும், அவர்களைப் பார்த்து அழுத தாயையும் பார்த்துப் பிள்ளைகள் இன்னமும் மிரண்டு கலங்க, அவர்களைத் தேற்றி மனதை மாற்றுவது, நிகிலனின் பொறுப்பாயிற்று.

அடுத்தவர் அறியாமல் அழுவதும், ஒருவருக்கொருவர் சாதாரணம் போலப் பேசுவதும், தன்னை மீறிக் கலங்குவதும், அதை மறைப்பதுமாக வீடு நடந்தது!

ஆனால், மேலே என்ன செய்வது என்று யாருக்கும் புரியவில்லை!

ரஞ்சனியின் முன்னிலையில், குணசீலனின் பெயரை உச்சரிக்கக் கூட முடியவில்லை! அந்த அளவுக்குக் கொதித்தாள். “அந்த ஆளாக என் காலடியில் வந்து விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சினாலும், இனி எனக்கும் அவருக்கும் ஒன்றும் கிடையாது என்று அதிலேயே உறுதியாக இருந்தாள் அவள். “மீறி யாரேனும் ஏதேனும் செய்தால், செத்துவிடுவேன்!” என்று, அனைவரையும் கையைக் கட்டிப் போட்டாள்.

அப்போதும் தாங்க மாட்டாமல், மகளுக்குத் தெரியாமல் மருமகனுடன் தொடர்பு கொண்டு சுந்தரம் பேசிப் பார்த்தார்.

“குடும்பம், பிள்ளைகள், எதிர்காலம் என்பதெல்லாம் பற்றி, ரஞ்சனிக்குக் கொஞ்சம் புத்தி தெளிய வேண்டியிருக்கிறது! தானாகத் தெளிந்து வரட்டும்! அத்தோடு, இது கணவன் மனைவி விவகாரம். இதில், அடுத்தவர் தலையீடு கூடாது! வேண்டாம்!” என்று முடித்தார் குணசீலன்.

மிரட்டலா?

பிள்ளைகள், எதிர்காலம் எல்லாம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்றால், அவர் என்ன செய்தாலும், ரஞ்சி கண்ணை மூடிக்கொண்டு இருந்தாக வேண்டும் என்கிறாரா? அத்தானை நாம் அறியவே இல்லை போலிருக்கிறதே என்று கொதித்தான் நிகிலன்.

ஆனால், என்ன கொதித்து என்ன பயன்? வேதனை, வேதனைதானே?

ஒரு மனிதனின் தப்பான செயலால், ஒரு குடும்பமே நொந்தது. , நைந்தது!

யார் செய்த பாவமோ? யாரிட்ட சாபமோ . . . என்று எண்ணங்கள் ஓடும்போதே, உள்ளத்து நெருஞ்சிமுள், நிகிலனைப் பலமாக உறுத்தியது!

அவன் செய்தது பாவம்தானோ?

அன்று நினையாதது இன்று தோன்ற, சட்டென எழுந்துவிட்டான் அவன்!

அத்தியாயம் -4

தப்புக்குத் தீர்வு இரண்டு விதம்!

ஒன்று பிராயச்சித்தம். மற்றது தண்டனை!

செய்த பாவத்துக்குப் பரிகாரம் செய்தால், தண்டனையிலிருந்த தப்பக் கூடுமோ?

குறைந்த பட்சமாக, இந்த வலியேனும் குறையலாம் அல்லவா?

பாவம், அவளுக்கு எப்படி வலித்ததோ!

வெளியூரில் இரண்டு நாள் வேலை இருப்பதாகச் சொல்லிப் பெற்றோரைத் தமக்கை வீட்டில் போய்த் துணை இருக்குமாறு கூறிவிட்டு, நிகிலன் மதுரைக்குக் கிளம்பினான்.

செல்லும்போதே, உள்ளூர ஒரு குழப்பம்.

அவனது பிராயச்சித்தத்தை, சுசிதா ஏற்றுக் கொள்வாளா என்று ஒரு சந்தேகம நிகிலனுக்கு உண்டாயிற்று.

ஏனெனில், அவளது பெரும் இழப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஏதாவது உதவி செய்யலாம் என்று, அன்றைக்கு அவன் சென்றபோதே, அவனது பேச்சில் ஒரு வார்த்தையைக் கூட, அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை!

வெறி பிடித்தவள் போல, அவளது வீட்டை விட்டு, அவனை வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தாளே தவிர, அவன் உதவ வந்தான் என்பதை அவள் ஒத்துக் கொள்ளவே இல்லை!

இரு முறை முயன்றவனுக்கு, அதற்கு மேல், “என்ன பெரிய ராங்கி பண்ணுகிறாள்” என்று அலுப்பு ஏற்பட்டுவிடக் கிளம்பி வந்துவிட்டான்!

இங்கே தொழிலை மேலும் மேலும் வளர்ப்பதிலும், தொழிலில் இறுக்கம் அதிகரிக்கும்போது, அதை மாற்றும் முயற்சியுமாக கேளிக்கை வினோதங்களிலும், வேறு நினைப்புக்கு இடம் இல்லாமலே போயிற்று!

இந்தத் துன்பம் நேரும் வரை!

இப்போது, கொஞ்சமேனும் மாறியிருப்பாளோ, என்னவோ?

மதுரைக்குப் போய், ஹோட்டலில் குளித்து உடை மாற்றிக்கொண்டு, சுசிதாவின் வீடு நோக்கிச் சென்றபோது, அங்கே முதல் முதலாக அதிர்ந்தான்!

ஏனெனில், பெரிய தோட்டத்துடன் கூடிய அந்த வீட்டில், இளஞ்

சிறார்களுக்கான இல்லம் ஒன்று இயங்கிக் கொண்டிருந்தது!

அப்படியானால், யாரோ பணக்காரர் இந்த வீட்டை அவளிடமிருந்து வாங்கி, இந்த இல்லத்துக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்க வேண்டும்!

சுசிதாவின் முகவரி கிடைக்குமா என்று விசாரிக்கப் போன போது, அவனது கருத்து திருத்தப்பட்டது!

அந்த வீட்டை, சுசிதாவேதான், அந்தத் தரும நிறுவனத்துக்குத் தானமாகக் கொடுத்திருந்தாளாம்!

“அவளா?” என்று அவன் வியந்தபோது, “ஆமாம் சார்! டாம்பீகமாக வாழ்ந்து

வீண் செலவு செய்கிறவர் என்றாலும், அந்தப் பெண்ணுடைய தகப்பனார் ஒரு பெரும் தொகைக்கு, இன்ஷ்யூரன்ஸ் எடுத்திருந்தாராம்! இந்த வீட்டின் மேல் இருந்த கடனைச் செலுத்தி, வீட்டை மீட்டு, அப்படியே இல்லம் நடத்தக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். அந்தப் பெண்ணுக்கு ரொம்ப நல்ல மனது!” என்றார் நிர்வாகி.

“ஓ! இல்லம் எப்படி நடக்கிறது என்று பார்ப்பதற்காக, அவ்வப்போது வந்து போவாளாக்கும்?” என்று மேற்கொண்டு பேச்சுக் கொடுத்தான் நிகிலன். அவள் இருக்கும் இடம் அறிந்தாக வேண்டுமே!

ஆனால் நிர்வாகியில் பதில் அவன் விரும்பிய விதத்தில் இருக்கவில்லை.

“தானமாகக் கொடுத்ததோடு சரி, சார்! அதற்கு மேல், அவர்கள் இங்கே வந்ததே இல்லை! ரொம்ப அருமையான பெண்! ஓரொருத்தர் மாதிரி, இவ்வளவு பெரிய வீட்டைக் கொடுத்திருக்கிறேன்! என் வீட்டை, இப்படி வைத்துக் கொள்ள வேண்டும், அப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று தொல்லை கொடுத்ததே கிடையாது! அது மட்டுமல்ல. கடன் போக, வீட்டில் இருந்த நகை, தட்டுமுட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் விற்று, அந்தப் பணத்தையும் இல்லத்துப் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டியிருந்த வசதிகளுக்காகக் கொடுத்துவிட்டார்களாம்! எங்கள் இல்லத் தலைவர் சொல்லியிருக்கிறார்! பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பத்துத் தடவை கணக்குக் கேட்கிற இந்தக் காலத்தில், சுசிதா மேடம் மிகவும் அபூர்வமான பெண், சார்!” என்று, அவளது புகழ் பாடினார் நிர்வாகி!

ஏன் அப்படிச் செய்தாள்?

ஏதோ புரிந்தும் புரியாமலும் நிகிலன் குழம்பினான்.

ஆனால் அது புரிவதைக் காட்டிலும், சுசரிதா இப்போது எங்கே இருக்கிறாள் என்று அறிவது, அவனுக்கு முக்கியமாகப் பட்டது. அவனது பிராயச்சித்தத்தை அப்போதுதானே, செய்ய முடியும்?

இதற்கு மேல் சுற்றி வளைக்க விரும்பாமல், “இப்போது சுசிதா எங்கே இருக்கிறாள்?” என்று நேரடியாகக் கேட்டான் அவன்.

நிர்வாகியின் எளிய பாவனை உடனே மாறியது. மேஜை மீதிருந்த பேனாவை அனாவசியமாகத் தூக்கிப் பார்த்துவிட்டு, நிமிர்ந்து, “ஏன் கேட்கிறீர்கள்?” என்று நிதானமாகக் விசாரித்தார்.

உண்மையைச் சொல்ல முடியுமா?

ஆனால் அவரது இயல்பு மாறத் தொடங்கியதுமே சுதாரித்துவிட்ட நிகிலன், உடனே அதற்கேற்ற வேறு பதிலையும் தயார்ப்படுத்தியிருந்தான் .

“சுசிதாவுடைய தாய்வழி உறவினர் ஒருவரின் சொத்து, அவளுக்குச் சேர வேண்டியது என்று, எங்கள் வக்கீலிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். வேறு வேலையாக நான் இங்கே வர நேர்ந்ததால், அவளைப் போய்ப் பார்த்து, விவரம் தெரிவித்து, தொடர்பு கொள்ளச் சொல்லிவிட்டு வருமாறு என்னிடம் கூறி அனுப்பினார்! அவர் கொடுத்த முகவரியின்படிதான், இங்கே வந்தேன். அந்தச் சொத்து, பல லட்சம் பெறுமானம் உள்ளதாம். . . என்ன செய்வது! திரும்பிப் போய், அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று வக்கீலிடம் தெரிவித்துவிட வேண்டியதுதான்! “ என்று பேச்சை முடித்து எழுந்தான்.

அவனை நம்பாதிருப்பதற்கு முகாந்திரம் இல்லை!

ஆனால், “அவ்வளவா?” என்று யோசித்தபோதும், அவருக்கும், சுசிதாவின் முகவரி தெரியாதிருந்தது!

ஆனால், பல லட்சம் பெறுமதியை அலட்சியப்படுத்தவும் முடியாமல், “நீங்கள் வேண்டுமானால், எங்கள் இல்லங்கள் அனைத்துக்கும் தலைவரான தில்லைநாயகம் அய்யாவைப் போய்ப் பாருங்களேன்! திருமங்கலத்தில் உள்ள பெரிய இல்லத்தில் இருப்பார்! அங்கே செல்லும் வழி நான் தருகிறேன்! எதற்கும் அவரைப் பார்த்துவிட்டுப் போங்களேன், சார். உங்களுக்கு அதிகத் தூரம் கிடையாது! “ என்றார் நிர்வாகி.

திருமங்கலம் தில்லைநாயகத்துக்கு சுசிதாவின் இருப்பிடம் நிச்சயம் தெரியும் என்பது, நிகிலனுக்கு உறுதியாயிற்று! இவருக்குமே

தெரிந்திருக்கலாம்! ஆனால், அதைச் சொல்லும் அதிகாரம், மற்றவருக்கு மட்டும்தான் போலும்!

ஆனால், திருமங்கலம் சென்றால், அவர் ஏதோ அவசர வேலையாகத் திருச்சிக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள்!

அங்கேயும், புறநகர்ப் பகுதியில் ஓர் இல்லம் உருவாகிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது! அது, ஆதரவற்ற, முதிய பெண்களுக்காம்! இது போன்ற இல்லங்கள் இத்தனை தேவைப் பட்டால், உலகம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறது?

திருச்சிக்குப் போய் அந்த இல்லத்திலேயே அவரைப் பார்க்கலாமா என்று தோன்றிய யோசனையை, சென்ற வேலை முடிவதைப் பொறுத்துத் தில்லைநாயகம் எப்போது வேண்டுமானாலும் கிளம்பிவிடுவார் என்று தெரியவும் கைவிட்டான்!

இவன் அங்கே செல்லவும், அதே சமயத்தில் அவர் இங்கே வரவுமாகப் பயணத்திலேயே அவரை, அவன் விட்டுவிடக் கூடுமே!

எனவே, மூன்று தினங்கள், நிகிலன் மதுரையிலேயே காத்திருக்க நேர்ந்தது!

சும்மா இருந்து பழக்கம் இல்லாததால், அவன் ரொம்பே திணறிப் போனான்!

கண்ட கண்ட கற்பனைகள் தாங்காமல், அமைதி நாடிக் கோயிலுக்குக் கூடச் சென்று அமர்ந்திருந்தான். அப்போதும், இரவு சகிக்க முடியாததாகத்தான் இருந்தது!

சுசரிதா ஏன் இப்படிச் செய்தாள் என்று, அது ஒரு பெரும் குடைச்சல்!

எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, அவளது வயிற்றுப்பாட்டுக்கு, அவள் என்ன செய்திருக்கக் கூடும்? அந்தச் சமயத்தில், அவள் எந்தப் படிப்பையும் முடித்திருக்கவும் இல்லை!

பின்னே?

கட்டுப்படுத்த முடியாத மனம், கண்டதையும் கற்பனை செய்து கலங்கியது!

இந்தப் பாவம், அவன் தமக்கையை எந்த அளவுக்குப் பாதித்ததோ? அக்கா எப்படி இருக்கிறாளோ, என்னவோ என்று, அவளைப் பற்றிய தவிப்பு வேறு!

ஆனால், ரஞ்சனியைப் பற்றிய தவிப்புக்கு உடனே விடை காண முடிந்தது!

ரஞ்சனியைத் தனியே விட்டு வரப் பயந்துதான், பெற்றோரைத் தமக்கை வீட்டிலேயே தங்குமாறு அவன் கேட்டது!

அவர்களுக்கும் செல்ல மகளை விட்டுப் பிரிய மனம் இல்லாதிருந்தது!

அவ்வப்போது தந்தையின் அருகில் போய் அமர்ந்திருந்த பெண், இன்று தானாகப் பிள்ளைகளைக் கிளப்பிப் பள்ளியில் கொண்டு விட்டுவந்தாள் என்றார்கள்.

“ரொம்ப யோசிக்கிறாளப்பா! முக்கியமாகப் பேருக்காகக் கொறிக்காமல், சாப்பிடுகிறாள். ரசித்து என்று சொல்ல முடியாது. ஆனால், வயிற்றைக் காயவிடக் கூடாது என்ற பிடிவாதத்தோடு சாப்பிடுகிறாள். பிள்ளைகளிடமும் பாடம் பற்றிப் பேசுகிறாள். திடப்பட்டு விடுவாள் என்ற நம்பிக்கை இப்போது தோன்றுகிறது!” என்றார் தந்தை, ஒரு பெருமூச்சுடன்.

“நீ சீக்கரமாக வந்துவிடு, நிகிலா. அக்கா உன்னிடம்தான் மனம் விட்டுப் பேசுவாள்!” என்றாள் அன்னை.

கலங்கிய குரல் என்றாலும், தாயிடமும் கொஞ்சம் திடம் தெரிந்தது!

பரிகார முயற்சியின் பலனோ?

முழுசாகச் செய்தால் நன்றாகியே விடக் கூடுமா? கடினம்தான் என்றாலும் . . .

கடைசியாகத் தில்லைநாயகத்தைச் சந்தித்து, சுசிதாவின் முகவரியைக் கேட்டபோது, அவனால் முந்தைய பொய்யைத் தொடர முடியவில்லை!

சற்று முயன்றுவிட்டு, முடியாமல் தலையசைத்து, அவனாக உண்மையைச் சொன்னான்.

“என் பிழையால் என்னென்ன நேர்ந்ததோ? பிராயச்சித்தம் செய்யவே விரும்புகிறேன்! தயவுபண்ணி, அவளது முகவரியைத் தாருங்கள்!” என்று பணிவாகவே கேட்டான்.

சில வினாடி நேரம் யோசித்துவிட்டு, “தருகிறேன். ஆனால் . . . இதற்குமேலே, சுசிதா வருத்தப்படக் கூடாது! “ என்றார் அவர்.

“அதுதான் என் குறிக்கோளும்!” என்றுவிட்டு உற்சாகத்தோடு கிளம்பினான் நிகிலன்

சுசிதா திருச்சியில்தான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள்! வேலை நேரத்தில் திடுமெனப் போய் நிற்பது சரியல்ல என்று எண்ணி, உணவு இடைவேளையின் போது அவளை நாடிச் சென்றான்.

தன்னந்தனியே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தாள் அவள். முகத்திலும் ஓர் ஒதுக்கம்! யாராகிலும் தூர நில் என்பது போல!

அந்த நாளில், ஆணும் பெண்ணுமாக அவளைச் சூழ்ந்திருக்கும் கூட்டமும், நடு நாயகமாக அவளது கலகலப்பும் தன்னை மீறி நினைவில் வந்தன!

ஒரு கணம் தயங்கிவிட்டு, அவளை நோக்கிச் சென்றான் நிகிலன்.

“ஹல்லோ சுசிதா!” என்றவனை, புரியாத வெற்றுப் பார்வையால் பார்த்து, “நீங்கள் யார்?” என்று கேட்டாள் அவள்!

ஒரு வினாடி, நிகிலனுக்கு அப்படியே தூக்கிவாரிப் போட்டுவிட்டது!

அவனை மறந்து போனாளா? எப்படி முடியும்?

இந்த மூன்று ஆண்டுகளில், இன்னும் பலருடன் பழகிய அவனுக்கே, அவள் முகம் மறக்கவில்லையே! அப்படியிருக்க அவள் . . . ஒரு வேளை முயன்று மறந்திருப்பாளோ?

முடியுமா? அல்லது, இவள், அவளைப் போல இன்னொருத்தியா?

ஒரு வேளை, ஹீப்னாடிசம் மாதிரி ஏதாவது செய்து . . . அல்லது, அவள் வாழ்வு அடியோடு நாசமாகிவிட்டதா? அவனால், அவள் கண்டபடி நடந்ததில் . . .

கண் சிமிட்டும் நேரத்தில், இந்த உலகையே சுற்றி வரும் வல்லமை படைத்த மனம் ஏதேதோ எண்ணிக் கலங்க, “சுசி, நான் நிகிலன். நினைவில்லை? மூ மூன்று ஆண்டுகளுக்கு முன் . . .நான்ன் . . .” என்று முடிக்க முடியாமல் தடுமாறினான்.

சாப்பிட்டு முடித்த காலிப் பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, “என் பெயர் சுசிதாதான். ஆனால், நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் இங்கே புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர் என்றால், சீக்கிரமாக உணவை வாங்கிச் சாப்பிட்டுவிடுங்கள். வேலைக்குத் தாமதமாக வந்தால், நிர்வாகி கோபப்படுவார்.” என்றவள் கை கழுவும் இடத்திற்குச் சென்று கையைக் கழுவிவிட்டுத் திரும்பியே பாராமலே சென்றும்விட்டாள்.

ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றது அவன்தான்!

இது எப்படி சாத்தியம்?

அவளது சீற்றம், கண்ணீர், வெறுப்பு, மறுப்பு எல்லாவற்றையும் நிகிலன் எதிர்பார்த்துதான் வந்திருந்தான். ஆனால், இப்படி அடியோடு வேற்றாளாக்கி விலக்கியதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை!

ஒருவேளை, அவளுக்கு வேறு நல்ல வாழ்வு அமைந்திருந்து, அது ,அவனால் பாழாகி விடக்கூடாது என்று இப்படி நடித்தாளா?

ஆனால், அவன் பாழாக்குவானா? இப்போது அனுபவிக்கும் தண்டனையே போதாதா?

இதற்கு மேல் அவள் வருத்தப்படக் கூடாது என்று தில்லைநாயகம் சொன்னது நிகிலனுக்கு நினைவு வந்தது! அவள் நன்றாகத்தான் இருக்கிறாள் என்று சொல்லாமல் சொன்னாரா? அப்படியானால், முகவரி ஏன் தந்தார்?

சுசி நல்லபடியாக இருக்கிறாள் என்பதைக் கண்ணால் பார்த்துவிட்டால் நிம்மதியாக இருக்கும் என்று தோன்றவே, காரினுள் ஏறி அமர்ந்து, பொறுமையாகக் காத்திருந்தான்!

மாலை வந்தது! அலுவல் நேரம் முடிந்து, மற்றவர்களோடு, அவளும் வந்தாள்.

அமைதியாக வந்தவளின் பார்வை, சாலை முழுவதையும் வேகமாக அலசியதோ?

ஓரமாக நின்ற சென்னைப் பதிவு எண் உள்ள ஒரு காரைப் பார்த்துவிட்டுத் தயங்கியவள், அந்தக் காரில் யாரோ ஏறிச் சென்றுவிடவும், வேகமாக நடந்தாள்.

நல்லவேளை, இது தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து எடுத்து வந்த கார்! அத்தோடு, அன்று போலவே, இன்றும் காரின் கரு நீலக் கண்ணாடிக் கதவுகளின் பின்னே இருந்த அவனை அறிவதும் சாத்தியமில்லை! ஆனால், சுசி அவனைத்தான் தேடியிருக்கிறாள் என்பது, அவனுக்குத் தெளிவாயிற்று!

தேவையான இடைவெளி விட்டு, அவளைத் தொடர்ந்தான் அவன்.

அடுத்த தெருவில் இருந்த ஒரு கட்டிடத்தினுள் சென்ற சுசிதா வெளியே வந்தபோது, அவளது கையைப் பற்றியபடி மழலை மாறாத குரலில், மூச்சு விடாமல் பேசியபடி ஒரு குழந்தையும் கூட வந்தது!

அதன் வயது, இரண்டுக்குச் சற்று கூடுதலாக இருக்கக் கூடும்!

சுசிதா அவனிடமிருந்து மறைக்க முயன்றது, இந்தக் குழந்தையையா?

அப்படியானால். . . .

அத்தியாயம் -5

அன்று சுசிதா மிகவும் ஓய்ந்து போயிருந்தாள்.

இரவு சாப்பிடக்கூடத் தோன்றாததோடு, வழக்கமாகச் செய்யும் எந்த வேலையிலும், அன்று அவளது மனம் செல்ல மறுத்தது!

குழந்தை விபு தூங்கியதும், அவசரமாக இரண்டு வாய் அள்ளிப் போட்டுக்கொண்டு, மறுநாள் சமையலுக்குத் தேவையானவற்றை ஆயத்தம் செய்து வைப்பது., இருவரும் அணிய வேண்டிய துணிமணிகளை எடுத்து வைப்பது, விபுவின் அழுக்குத் துணிகளை அலசிப் போடுவது என்று செய்தாக வேண்டிய அன்றாட வேலைகள் எத்தனையோ இருந்தன.

ஆனால், எதையுமே செய்யமுடியாமல், பெரும் சோர்வு அவளை பீடித்து, ஒன்றும் செய்ய மாட்டாமல் சும்மா உட்கார வைத்திருந்தது!

பின்னே, ஒருத்தி எவ்வளவுதான் தாங்குவாள்?

சும்மாவே இருக்கிற துன்பம் போதாது என்று, அந்த நிகிலன் வேறு வந்து நிற்க வேண்டுமா?

இந்த அழகில், மூன்று ஆண்டுகளுக்கு முன் என்று நினைவூட்டல் வேறு!

என்றேனும் மறக்குமா?

நல்லவேளையாக, அவன் காரிலிருந்து இறங்கி வரும்போதே பார்த்துவிட்டாள்.

அவசரமாகக் குளியலறைக்குள் ஓடி, பெரிய மூச்சுகள் எடுத்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளும்போதே, இதை எப்படிக் கையாள்வது என்று யோசித்து, அதன்படி நடந்தும் முடித்துவிட்டாள்!

ஆனால், அதற்குள் அவளது சக்தியெல்லாம் வடிந்துவிட்டதே!

அந்தப் பதினெட்டு வயது வரை எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்திருந்தாள்! கண்ணு, செல்லம் என்பது தவிர, அவளைப் பெயர் சொல்லிக்கூட, அவளுடைய பெற்றோர் அழைத்தது இல்லையே!

அவள் நினைக்குமுன் நடத்திக் காட்டுவார்களே!

அவ்வளவு நாள் மகிழ்ச்சியோடு இருந்தால், அடுத்து துன்பப் படுகுழியில் வீழ்ந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்? எண்ணி எண்ணி மறுகி, தவித்துத்தான் ஆக வேண்டுமா? இது என்ன நியாயம்?

கண்டவர் விண்டிடாத, விண்டவர் யாரும் கண்டிடாத கடவுளின் சட்டம்

புரியாமல் தவித்த நாட்களின் வேதனை, அதே வலிமையுடன் தாக்க, ஒன்றும் முடியாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள் அவள்!

இருக்க, இருக்க வேதனை அதிகரிப்பது போலத்தான் தோன்றியது!

இதிலிருந்து தப்ப வழியே கிடையாதா என்று அலைந்த பார்வையில், விடிவிளக்கின் ஒளியில் வரி வடிவாகத் தெரிந்த குழந்தை பட, எழுந்து அவனிடம் ஓடினாள்.

அள்ளி எடுத்து இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போல எழுந்த வேகத்தை அடக்கி, அவனைத் தொட்டபடி அருகே அமர்ந்தாள்.

குழந்தையின் பட்டு சருமம், அவனைத் தொடும் சுகத்தையும் தாண்டி, ஏதோ ஒரு தைரியத்தை மனதில் உண்டாக்கிற்று!

நீ தனியாக இல்லை, அம்மா. உனக்கு, நான் இருக்கிறேன் என்பது போல, ஒரு பிரமை!

வெறுப்பில் விளைந்ததுதான்! வேண்டாம் என்று ஒழிக்கவும் எண்ணியதுதான்! ஆனால், அதை நினைத்தாலே இப்போது நெஞ்சு என்னமாய் நடுங்குகிறது!

இந்தச் செல்லம் இல்லாமல், அவளால் இத்தனை காலம், உயிர் வாழ்ந்திருக்கவே முடியாதே! மனதளவில் செத்திருந்த அவளை உயிர்ப்பிக்க வந்த கடவுள் இவன்!

மகனின் தூக்கம் கெடாமல், அவன் முதுகில் முகம் பதித்து, அப்படியே சுருண்டு படுத்துக்கொண்டாள்!

என்னவோ ஆறுதலாக உணர்ந்து, அப்படியே உறங்கியும் போனாள்.

ஆனால் அதிகாலையில் வழக்கம்போல எழுந்ததும் எதிர்கொள்ள வேண்டிய துன்பங்கள் அத்தனையும் மீண்டும் நினைவு வந்து அவளை சோர்வடைய வைத்தன!

விசித்திரமான வகையில், நிகிலனின் வரவு இப்போது ரொம்பப் பெரிதாகத் தோன்றவில்லை!

அவனைப் பொறுத்த வரையில், செய்ய வேண்டியதைச் செவ்வனே செய்து முடித்தாயிற்று!

அவனை அறியவில்லை., அல்லது அறியவிரும்பவில்லை என்ற இரண்டுமே சொல்லும் சேதி ஒன்றுதான்! அதை மீறி, அவளை நெருங்குவதால் எந்தப் பயனும் இராது என்று அறியாத முட்டாள் அல்ல, அவன்!

அத்தோடு, அவனது உலகம் பரந்து கிடப்பது! அதில், அவனுக்கு வேண்டியது எப்போதும் கிடைக்கும்! எனவே, அவனை எண்ணி அஞ்சத் தேவை கிடையாது!

அதிர்ந்து போகாமல், சற்று நிதானமாக யோசித்திருந்தால், அவளது, முன்தினக் கலக்கமே தேவையற்றது!

ஆனால், அவளது அன்றாடப் பிரச்சினை, அப்படி ஒதுக்க இயலாததாகப் பெரு மரமாக வளர்ந்து விட்டிருந்தது!

அவள் வேலை செய்யும் நிறுவனத்தின் முதலாளிகள் இருவர். சம பங்கு முதலீடு செய்து தொடங்கிய தொழிலாம்!

ஒரு பங்குதாரருக்கு உடல் நலம் கெட்டு, அவரது பொறுப்பை மகன் ஏற்றதில் இருந்தே, சுசிதாவின் நிம்மதி கெட்டு, தொல்லை தொடங்கிவிட்டது எனலாம்!

முதலில் ஜாடைமாடையான பேச்சு மட்டுமாக இருந்தது!

சுசிதாவுக்கு, ஓரளவு அது பழக்கமாகிப் போனதுதான்.

கணவன் என்று காட்டுவதற்கு யாரும் இல்லாமல், வயிற்றைத் தள்ளிக்கொண்டு நிற்கும்போதே, பலர் வாயில் விழுந்துதான் ஆக வேண்டும்! ஆனால், கிட்டத்தட்ட அந்தக் காலம் முழுவதுமே தில்லைநாயகம் அங்கிளின் புண்ணியத்தில், ஆசிரமத்திலேயே கழிந்து போயிற்று!

அங்கே. அவளைப் போல எத்தனையோ பேர்! அவளை விடவும் மோசமான நிலையில்கூட, இருந்தார்கள்! மிருகத்தனமான கற்பழிப்பின் பலனாகக் கூட!

ஒருவேளை, அவளது நிலையையும், அப்படித்தான் சொல்ல வேண்டுமோ? அவளும் ஒன்றும், ஆசையில் போய் விழவில்லையே! வேறு வழி இல்லாமல் . . .

இல்லை! அதையெல்லாம் நினைக்கக் கூடாது! முழுக்க முடிந்துபோன கதை!

ஏதோ விபத்து போல நடந்துவிட்டது!

வயிற்றில் பிள்ளை வளரும்போதே, வயிற்றுப் பிழைப்புக்கான வழியையும் அவளுக்குக் கற்பிக்க அங்கிள் ஏற்பாடு செய்தார். இந்த வேலை வாங்கிக் கொடுத்தது கூட, அவரேதான்.

ஆனாலும், பிள்ளையும் அவளுமாக மட்டும் வாழ்வது, பலரின் பேச்சுக்கு அவள் ஆளாகும்படிதான் ஆயிற்று!

அதையும் பொருட்படுத்தாமல் ஒதுக்கி, இப்படியே, ஏதோ நிம்மதியாகக் காலத்தை ஓட்டி விடலாம் என்று, நினைத்தால், பங்குதாரர் மகன் வந்து அதைக் கெடுத்தான்!

அவனது ஜாடைப் பேச்சுக்குப் பலனில்லை என்று கண்டு, ஒரு நாள் அவளது ஒற்றையறை ஃப்ளாட்டுக்கே வந்து நின்றான்.

நல்ல வேளையாக, விபுவின் சிரிப்புக்கு அடிமையாகிப்போன எதிர்வீட்டு அம்மாவின் துணையோடு, அன்று அவனைச் சமாளிக்க முடிந்தது!

இதெல்லாம் சரிவராது என்று ஆனதும், "சேர்ந்து வாழலாம்" என்ன பாட்டை, இப்போது அவன் நேரடியாகத் தொடங்கி இருக்கிறான்! அவனுக்குத் திருமணம் ஆகியிருப்பதால், சுசிதாவை அவனால் மணக்க முடியாதாம்! ஆனால், அவளோடு சேர்ந்து வாழ்வதை, யாராலும் தடுக்க முடியாதாம்!

கல்யாணத்துக்கே கேட்டாலும், அவள் சம்மதிப்பாளா, என்ன? அப்படியிருக்க, இந்தக் கேவலத்துக்கு எப்படி உடன்படுவாள்?

சொத்து எழுதி வைக்கிறேன்., பிள்ளையைப் படிக்க வைக்கிறேன் என்று, அதற்கு எத்தனையோ தூண்டில்கள்! அதையெல்லாம் அவளால் சமாளித்து அலட்சியப்படுத்த முடிந்தது!

ஆனால், கடை கண்ணி என்று, அவள் போகும் இடமெல்லாம் பின் தொடர்வதும், அலுவலகத்தில் அவளுக்காகப் பரிந்து பேசுவதுமாக, அவனுடைய ஆள் என்கிற பிரமையை உண்டுபண்ணுவது, அவளால் சகிக்க முடியாத அளவுக்கு வளர்ந்தது!

மறுத்து அவனிடம் என்ன சொன்னாலும், பாறையில் முட்டிக் கொள்வது போல, பலனில்லாத காரியமாகத்தான் முடிந்தது!

அடுத்த பங்குதாரரிடம் முறையிட்டுப் பார்த்தாள்.

அவளுக்காகப் பரிந்து, தொழிலில் குழப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள அவர் தயாரில்லை!

அவள் சத்தமின்றி வேறு வேலை தேட முயன்றதும் பலனளிக்கவில்லை!

கடைசி சில்லுண்டித்தனமாக, அலுவலகத்தில் அவளது இடத்தின் பக்கத்திலேயே ஓர் இருக்கையைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்!

அவனது அலுவலகம்! இங்கே உட்காராதே என்று, அவனிடம் யார் சொல்வது? அவ்வப்போது எழுந்து செல்வது போல, அவளை உரச

முயல்வது வேறு!

அருவருப்போடு, கூட வேலை செய்வோர் மத்தியில் மிகவும் அவமானமாகவும் உணர்ந்தாள் சுசிதா.

பொறுக்க முடியாமல் போன பிறகுதான், தில்லைநாயகத்துக்கு ஃபோன் செய்து, உதவி கேட்டாள்.

அவரும், உடனே வந்தார்தான்! ஆனால், "இப்படி எத்தனை தரம் ஓட முடியும், சுதாம்மா?" என்று அவர் கேட்டபோது, அவளால் சரியாகப் பதில் சொல்ல முடியாது போயிற்று!

ஏனெனில், அவர் கேட்டது சரிதானே?

இந்தத் தங்கராசுவுக்குப் பயந்து இன்னோர் இடத்துக்கு ஓடினால், அங்கே இவனுக்கு அண்ணனாக இன்னொருவன் முளைக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?

ஆனால், தலைவலியும் காய்ச்சலும் வேறு நோயின் வெளிப்பாடுகள்தான்! ஆனால், அவற்றால் பாதிக்கப் படுகிறபோது, எதையாவது செய்து, அப்போதைய உபாதையிலிருந்து விடுதலை பெறுவதுதானே பெரிதாகத் தெரிகிறது?

"சீக்கிரமே நான் இன்னமும் என்னை வளர்த்துக் கொள்கிறேன், அங்கிள்! ஆனால், இப்போதைக்கு, இப்போது ரொம்பச் சிரமமாக இருக்கிறது, அங்கிள்!" என்றாள் கெஞ்சலாக.

சிறு வயதில் இருந்து, அவளை அறிந்தவர் என்பதால், சுசியிடம் அவருக்குப் பரிவும் இருந்தது! "முயற்சி செய்து பார்" என்று சென்னையில் ஒரு தொலைபேசி எண் கொடுத்தார்.

ஆனால், அவளது பயிற்சிக்கு, அவளது தேவைக்கேற்ற வருமானத்தோடு கூடிய வேலை கிடைப்பது, கடினம்தான். அதுவும் விபுவின் கல்வியை நினைக்கும்போது . . .ஆனால் ஏதோ ஒரு வேலை!

ஏனெனில், இந்த இடத்தில் நீடிப்பது, இனி முடியாது! தங்கராசுவின் சிலுமிஷம் எல்லையை எட்டிவிட்டது!

தங்கராசு எல்லைக்குப் போய்விட்டான் என்றுதான் சுசிதா நினைத்தாள்! ஆனால் இதற்கு மேலும் செல்வதற்கு அவன் ஒரு திட்டம் வகுத்து வைத்திருந்தான் என்பது, அப்போது அவளுக்குத் தெரியாது!

அன்றிரவு, ரஞ்சனி தம்பியோடு மனம் விட்டுப் பேசினாள். "ஒரு வகையில் குணா சொன்னது சரிதான், நிக்கி. மனதளவில் நான் வளரவே இல்லைதான். எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார் என்று இருந்தது,

எவ்வளவு பெரிய தப்பு என்று இப்போது புரிகிறது! நம்முடைய சகலத்துக்கும் இன்னொருவரைச் சார்ந்து இருந்ததால்தானே, அந்த ஒன்று பொய்த்ததும், உலகமே அழிந்தது போல ஆகிவிட்டது! இனி நான் அப்படி இருக்க மாட்டேன், நிகில். பிள்ளைகளுக்கு வேண்டியதைப் பார்ப்பதோடு, படிப்பு, தொழில் என்று ஏதாவது பண்ணப் போகிறேன்! இதுகூட, உன் அத்தான் அவ்வப்போது சொன்னதுதான்! எதற்கு என்று இருந்துவிட்டேன்! இப்போது புரிகிறது! ஏன் சொன்னார் என்பதும்கூட! யார் என்றாலும், என்றோ ஒருநாள் வளர்ந்துதானே ஆக வேண்டும்? நானும் வளரத் தொடங்கிவிட்டேன்!" என்றாள் முடிந்தவரை இயல்பான குரலில்.

இதற்குள் இரண்டுமுறை கணவன் சொன்னது என்று அவள் வாயில் வந்துவிட்டது!

ஆனால், வேறு விஷயமும் பார்க்க வேண்டும் என்று ரஞ்சனி சொன்னது, அவனுக்கு ஆறுதலாக இருந்தது! "செய் அக்கா! நான் திரும்பி வந்ததும், நாம் கலந்து பேசி, என்ன பண்ணலாம் என்று முடிவு செய்வோம்!" என்று இல்லாத உற்சாகத்தைக் குரலில் காட்டிச் சொன்னான் நிகிலன்.

"ஆமாம் நிக்கி! என்ன செய்வது என்று முடிவு செய்வதில், உன் உதவி எனக்குக் கட்டாயம் தேவை! இன்னொன்று! நீ திரும்பி வந்ததும், அப்பா, அம்மாவையும் கூட்டிப் போய்விடு. அல்லது, அவர்கள் கனிவில், நான் இன்னமும் சின்னப் பாப்பா ஆகிவிடுவேன்!" என்று தமக்கை கூறியபோது, உள்ளே உருகியபோதும், அவளிடம் திடப்படுத்திக் கொள்ளும் வேகமும் தெரியவே, அவனுக்கு நிம்மதியாகவும் இருந்தது!

கூடவே, அவனது பிராயசித்தத்தை முழுமையாகச் செய்துவிடும் வேகமும் அதிகமாயிற்று!

வெறும் பிராயசித்தம் மட்டுமின்றி, இப்போது குழந்தையும் இருக்கிறான்!

ஆனால், ஆளே தெரியாது என்கிறவளை, உன் பிள்ளையுடைய தகப்பன் நான் என்று எப்படி அணுகுவது?

அதுவும் அவளுக்கு வருத்தம் நேராமல்?

யோசனையுடன், அங்கங்கே ஓரளவு தொலைவில் சுசிதா அறியாமலே அவளைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தான் நிகிலன்!

அலுவலகம் முடிந்தாயிற்று!

கொடியிடை அசைய, மகனைக் "கிரஷ்"ஷிலிருந்து அழைக்க வேகமாகச் சென்று கொண்டிருந்தாள், அவள்.

அலுவலகத்துக்குச் சற்று தூரத்தில் நிறுத்தியிருந்த காரினுள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்த நிகிலனின் கவனத்தை, அதே திசையில் இன்னமும் சற்றுப் பின்புறமாக நேர்ந்த அரவம் கவர்ந்தது!

அவனைப் போலவே, சுசியின் அலுவலகத்துக்கு எதிர்ப்புறமாக சைக்கிளோடு ஒருவன், பதினேழு பதினெட்டு வயதுப் பையன், நிற்பதை ஏற்கனவே நிகிலன் கண்டிருந்தான்!

யாருக்காக நிற்கிறானோ பாவம் என்று அவன் நினைத்திருந்த பையன் சைக்கிளில் ஏறி அமர்வது தெரியவும், நிகிலனின் கவனம் அங்கே பாய்ந்தது!

சைக்கிளில் உட்கார்ந்தவாறே, சுசியின் அலுவலகத்து வாயிலில் நின்ற ஒருவனிடம் கட்டை விரல் உயர்த்திக் காட்டிவிட்டு, சைக்கிளை அழுந்த மிதித்தான், அவன்.

இவன் என்ன செய்யப் போகிறான் என்று யோசனையோடு நிகிலன் பார்க்கும்போதே, அவனது காரைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த சுசிதாவின் மீது, சைக்கிளை வேகமாக மோதினான் பையன்!

“ஏய் . . “ என்று அதட்டியபடி, நிகிலன் வேகமாகக் காரிலிருந்து இறங்கி, அங்கே விரைந்தான்.

மோதியது சைக்கிளே என்றாலும், அதன் வேகத்தினால் பின்னிருந்து தள்ளப்பட்டு, எதிரே இருந்த கம்பத்தில் தலை பலமாக மோதியதில் சுசிதாவுக்கு ரத்தக் காயத்தோடு, மயக்கமும் ஏற்பட்டுவிட, சுய உணர்வற்றுத் தெருவோரமாய் கிடந்தாள் அவள்!

பதறிப்போய் அவளிடம் ஓடினான் நிகிலன்!

அத்தியாயம் -6

அந்த வினாடியில், சுசிதா அடிபட்டு விழுந்து கிடக்கிறாள்., அவளைக் காப்பாற்ற வேண்டும் என்பது தவிர, நிகிலனுக்கு வேறு எந்த எண்ணமும் இல்லை!

ஓடிப்போய்க் காரிலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துவந்து, அவள் முகத்தில் தெளித்து, அவள் புருவம் சுளித்தபோதுதான், அவனுக்குச் சுருக்கென்றது.

அரை மயக்கத்தில் இருப்பவள், அவனைக் கண்டதும் வெறுப்பைக் காட்டினால், உதவி செய்யவும், வேடிக்கை பார்க்கவுமாகச் சூழ்ந்திருக்கும் இந்த மக்கள், எப்படி நடந்துகொள்ளக் கூடும்?

முதலில், அவளுக்குத் தேவையான உதவியைச் செய்ய விடுவார்களா?

ஒரு வகையில் கவலையைத் தந்தாலும், இன்னொரு வகையில் சிறு நிம்மதியாக, உணர்வு வந்ததன் அறிகுறியான ஒரு முனகலுடன் சுசி மீண்டும் கண்களை மூடிக்கொண்டாள்.

சூழ நின்றோரைப் பார்த்து, “நான் ஊருக்குப் புதிது! இங்கே பக்கத்தில் மருத்துவ மனை ஏதும் இருக்கிறதா? இவளை ஒரு டாக்டர் உடனே பார்ப்பது நல்லது! “ என்று கேட்டான் நிகிலன்.

அவனது தோற்றமும், போய் எடுத்து வந்து தெளித்த தண்ணீரை வைத்திருந்த காரும் மரியாதையை ஏற்படுத்த, அடுத்த தெருவிலேயே இருந்த மருத்துவமனையைச் சிலர் அடையாளம் சொன்னார்கள். யாரோ, சுசிதாவின் பையைத் தூக்கிவந்து காரில் வைத்தார்கள்!

அவளையும், இரு பெண்கள் சேர்ந்து பின் சீட்டில் ஏற்றலானார்கள்.

“அய்யோ சார், விட்டுவிட்டுப் போகாதீங்க! என்னையும் டாக்டரு கிட்டே கூட்டிப் போங்க சார்!” என்ற கெஞ்சலைக் கேட்ட பிறகுதான், சுசிதாவின் மேல் மோதிய பையனின் நினைவே நிகிலனுக்கு வந்தது!

வேடிக்கை பார்க்க வந்தவனாக இருக்கக் கூடும்! அங்கிருந்து கிளம்பிச் சென்ற ஒரு பைக்காரனைப் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தான் அவன்.

பழக்கமற்ற வேலையோ, என்னவோ, கட்டுப்படுத்த முடியாமல், சைக்கிளோடு சற்றுத் தள்ளி விழுந்து, அப்போதுதான் எழுந்து

உட்கார்ந்திருந்தான். நிறைய சிராய்ப்புக் காயங்கள்!

“ஆமாண்டா, உன்னையும் கூட்டிப் போக வேண்டியதுதான்! ஆனால், ஆசுபத்திரிக்கு இல்லை! போலீஸ் ஸ்டேஷனுக்கு! நான் பார்த்தேன், சார்! அந்தம்மா பின்னாலே வந்து, முட்டி விழத்தட்டினான்! பர்சைத் திருட வந்திருப்பான்! நீங்க, போங்க சார். இவனை நாலு போட்டு, போலீசிலே ஒப்படைத்து விடுறோம்!” என்றார் ஒருவர்.

“அய்யோ, நானில்லை! அவருதான் . . .” என்று பைக் சென்ற திசையைக் காட்டினான் சைக்கிள்காரன்.

“புருடா ! திருட்டுப் பயல்! இவனை எங்கள் கிட்டே விட்டுவிட்டு, நீங்க போங்க சார்!”

அவன் காத்திருந்ததைப் பார்த்தவன் ஆயிற்றே! ஒரு சிறு திருட்டுக்காக, இவ்வளவு நேரம் அவன் காத்திருக்கத் தேவையில்லை! ஏதோ இருக்கிறது என்று தோன்றியது நிகிலனுக்கு!

ஆனால், சுசிதாவை மருத்துவரிடம் கூட்டிப் போவதைத் தாமதப்படுத்தவும் பிடிக்காமல், “போகிறான், சார் சின்னப் பையன்! மெல்ல மருத்துவ மனைக்குக் கூட்டிவந்து விட்டுவிடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்! அவர்களை முதலில் டாக்டரிடம் காட்டியாக வேண்டும்!” என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறி ஓட்டலானான்.

அவளைப் பரிசோதித்துவிட்டு, “கவலைப்படும்படியாக ஒன்றும் இல்லை.” என்று கூறி, காயங்களுக்கான சிகிச்சையைத் தொடங்கினார் வைத்தியர்.

அதற்குள் பையனும் வந்துவிட, இருவருக்குமாகப் பணத்தைக் கட்டிவிட்டு, “கிரஷ்”ஷை நோக்கி, நிகிலன் விரைந்தான்.

அங்கே பிள்ளையைக் கூப்பிட்டுக் கொள்ள வேண்டுமே!

“கிரஷ்”சில், நிகிலன் இன்னொரு பிரச்சினையை எதிர்பர்த்தான்.

சிறார்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் “கிரஷ்” களில், அவர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் தவிர, மற்ற யார் வந்து அழைத்தாலும், பிள்ளைகளை அனுப்ப மாட்டார்கள்! ரஞ்சனியுடைய குழந்தைகள் “ப்ரீ நர்சரி”யில் படிக்கும்போது, இந்த முறையை அனுசரிப்பதைப் பார்த்திருக்கிறான்.

இது போன்ற “கிரஷ்”களிலும், இதே முறைதான் கடைப்பிடிப்பது!

அத்தோடு, அவனும் பிள்ளையை அருகில் வைத்துப் பார்த்துகூடக்

கிடையாது! ஏன், அவனது பெயர்கூடத் தெரியாது! குழந்தைக்கும் அவனை யாரென்றே தெரியாது! “கிரஷ்” நிர்வாகிகள் சந்தேகப்பட்டால், அதை மாற்ற, அவனால் எதுவும் செய்ய இயலாது!

அன்று அவனுக்குத் தப்பாகத் தோன்றவில்லைதான்!

அதன் விளைவான இந்த விசித்திரமான உறவில், இதைத்தான் எதிர்பார்க்க முடியும் என்று தனக்குத்தானே எவ்வளவோ சொல்லிக் கொண்டாலும், நிகிலனுக்குத் தன் நிலைமை, சகிக்க முடியாததாகத்தான் இருந்தது!

“கிரஷ்” நிர்வாகியிடம் சுசிதாவின் விபத்து விவரத்தைச் சொல்லி, இரு “கிரஷ்” பணியாளர்களுடன் பிள்ளையை மருத்துவமனைக்கு அனுப்பி, சுசிதாவுக்கு நினைவு வரும்வரை அங்கே காத்திருந்து, அவளிடம் மகனை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு ஏற்பாடு செய்யும்படி, நயந்து கேட்டுக்கொண்டான் அவன்.

காத்திருக்கும் நேரத்துக்காக, அந்தப் பணியாளர்களுக்குத் தனியாகப் பணம் கொடுத்து விடுவதாகவும் அவன் கூறவே, நிர்வாகியும் சம்மதித்துக் குழந்தையைப் இரண்டு பணியாளர்களோடு அனுப்பி வைத்தார்! அவரும் பையனை என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருந்தவர்தானே?

கிளம்புமுன் அந்த இரு பணியாளர்களையும் தனியே அழைத்துச் சென்றவர், அவர்களிடம் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்று அவனால், எனிதாக ஊகிக்க முடிந்தது!

குழந்தையை , சுசிதாவிடம்தான் ஒப்படைக்க வேண்டும்., எக்காரணம் கொண்டும் இவனிடம் மட்டுமாய் விட்டுவிட்டுப் போய்விடக் கூடாது என்று கண்டித்துக் கூறியியிருப்பார்!

நியாயமான, மிகவும் சரியான எச்சரிக்கையே என்றாலும், அதைச் சகிப்பது[ம், அவனுக்குக் கடினமாகத்தான் இருந்தது!

பிடிக்காதது எதையும் சகித்து அறியாதவன்தான்! ஆனாலும், இந்த சிரமங்களை எல்லாம் ஏன் பொறுத்துக்கொள்ள வேண்டும்? எல்லாவற்றையும் உதறிவிட்டுப் போய்விடலாமே என்று ஒரு தரம்கூடத் தோன்றாதது, அவனுக்கே அதிசயமே!

இந்த இக்கட்டில், தாய், மகன் இருவர் பொறுப்பும் அவனது என்று எப்படித் தோன்றியது?

அதை விடவும், இதைச் சுசிக்கு எப்படிப் புரிய வைத்து, அவளையும் குழந்தையையும் தன்னோடு எப்படி அழைத்துப் போவது

என்பதைப் பற்றியே மனம் சிந்திப்பதும்கூட, அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது!

காக்காய், குருவிகளைக் காட்டி, மழலை கலந்து பேசிய குழந்தையை அள்ளி அணைக்க அவனுக்கு ஆசையாக இருந்தது! ஆனால், கூட வந்தவர்கள் சந்தேகப்படும்படி நடக்கக் கூடாது என்று தன்னை அடக்கிக்கொண்டு, காரை ஓட்டினான்!

குழந்தையின் குரலை மட்டும் சங்கீதமாகக் கேட்டபடி!

சுசிதா நன்றாக விழித்திருந்தது மட்டுமின்றி, குழந்தைக்காகப் பதறிக் கொண்டும் இருந்தாள்! "கிரஷ்" மூடும் நேரம் ஆகிவிட்டது! நிர்வாகி ஆத்திரப்படுவார்! தங்கராசு வந்ததில் இருந்து, அடிக்கடி தாமதமாகச் சென்றதில், இனியொரு தரம் தாமதமானால், அப்புறம் வேறு இடம் பார்த்துக் கொள்ளுமாறு எச்சரித்திருக்கிறார்! இங்கு, கட்டணம் குறைவு என்பதோடு, அவளது வீட்டுப் பக்கத்தில் இருக்கும் ஜானகியம்மாவும் பணி புரிவதால் தைரியமாகவும் இருக்கும்!

ஆனால், எழுந்து செல்லும் அளவுக்கு உடலில் வலு இல்லாமல், உடல் வெலவெலத்துப் போயிருந்ததால், எதுவும் செய்யவும் முடியாமல், அவளுக்கு அழுகை வந்தது!

இந்த நேரத்தில், கையில் பூங்கொத்துடன் தங்கராசு வந்து நின்று, அவளுக்கு உதவி செய்வதற்காகவே பிறவி எடுத்தது போலப் பேசவும், மகனை அழைத்துவர ஏதாவது செய்ய முடியுமா என்று அவனிடமே, உதவி கேட்டாள் சுசிதா!

"உனக்காக உயிரையே கொடுப்பேன்! இப்படி ஒரு சின்ன சுண்டைக்காய் வேலையைத் தருகிறாயே!" என்று அலுத்துக்கொண்டான் தங்கராசு!

"இல்லை. எனக்கு அது போதும்!" என்றாள் அவள் எப்போது கிளம்புவானோ என்ற கவலையுடன்.

அதற்கேற்ப, "இல்லை போதாது!" என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக. அங்கே கிடந்த இருக்கையைக் கட்டில் அருகே இழுத்துப்போட்டு, ஒட்டி அமர்ந்து, "அன்றைக்கு விபுவைப் பார்த்ததில் இருந்து, எனக்கு அவனிடம் ஒரு தனி பாசம் வந்துவிட்டது! அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறேன்! செலவைப் பற்றி, நீ கவலையே படாதே! என் பணம், இனி உன் பணம்! அவனை அமெரிக்கா, ஆஸ்திரேலியா எல்லா இடத்துக்கும் அனுப்பப் போகிறேன். . . " என்று, கையிலிருந்த

பூங்கொத்தை ஆட்டி, ஆட்டிப் பெரிதாக அளக்கத் தொடங்கினான்.

இவனிடம் போய் உதவி கேட்கும்படி ஆயிற்றே என்று, மீண்டும் கண்ணோரம் கரித்தது அவளுக்கு! "ஏற்கனவே இந்த விபத்தால் ரொம்பத் தாமதம் ஆகிவிட்டது! அதனால் சீக்கிரமாகப் போய் . . . ." என்றவளின் குரல் லேசாக நடுங்கியது.

உட்கார்ந்த இடத்திலிருந்து அசையக்கூட இல்லாமல், "எல்லாம் போகலாம்! எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிக்கொண்டு இருக்கிறேன்! குறுக்கிடுகிறாயே! விபுவின் படிப்பு விஷயம்! பணத்தைப் பற்றிய கவலையே இல்லாமல், அவனைப் படிக்க வைக்கலாம்! அவன் படிக்கிறபோது, நாம் இருவரும் சேர்ந்து போய், அவனைப் பார்த்துவிட்டு வரலாம் . . ." என்றவனின் பேச்சில் குறுக்கிட்டு, "ஒன்றும் வேண்டாம்!" என்று எரிந்து விழுந்தாள் சுசிதா!

"நானே எப்படியாவது . . ." என்று அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, "இதோ, இந்த அறைதான்." என்ற குரலோடு, விபுவுடன், "கிரஷ்" தாதியர் இருவர் உள்ளே வந்தனர்.

தாயின் நெற்றிக் கட்டை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு, "அம்மா!" என்று விபு தாவ, மகனை வாங்கிக்கொண்டு, ""கிரஷ்"சிலிருந்தே அனுப்பி விட்டார்கள்! இனியும் உங்கள் நேரத்தை வீணாக்காமல், நீங்கள் கிளம்புங்கள் சார்!" என்றாள் சுசிதா!

கண் இடுங்க ஆத்திரமாகத் தங்கராசு நோக்கியபோது, "அட சார்! நீ இங்கேயா இருக்கிறே? என்னை இடிக்கச் சொல்லிட்டு . . . " என்ற குரல் ஒன்று கேட்க, அவன் அவசரமாக எழுந்து, வேகமாக வெளியே சென்றான்

நல்லவேளையாக ஜானகியம்மாவும் கூட வந்திருக்கவே, அவளைத் தன்கூட துணைக்கு வருமாறு சுசிதா அழைத்தாள். "விபத்து அதிர்ச்சியோ, என்னவோ, கைகால் சற்றுப் பலவீனமாக இருக்கிறது, ஜானகிம்மா. வீடு வரை, இவனைக் கொஞ்சம் தூக்கிக்கொண்டு வர முடியுமா?" என்று கேட்டாள்.

"கேட்கணுமா, தாயி?" என்றாள் அவள். "முதல்ல, நான் பள்ளிக்கூடத்துக்குப் போயி, வேலையை முடிச்சிட்டு, என் பையை எடுத்து வந்திடறேன். அப்பாலே, சேர்ந்து போவோம்!"

"விபத்து பற்றித் தெரிந்து, நீங்களாகவே விபுவைக் கூட்டி வந்ததற்கு, முதலில் உங்கள் இருவருக்கும் நன்றி, ஆயா!" என்று சுசிதா நன்றி தெரிவித்ததுமே "நாங்களாக வரலை, தாயி!" என்று இருவருமாக

நடந்த விவரம் தெரிவித்தனர்.

யோசித்துச் செயல்பட்டிருக்கும் விதம் சிறப்பாகத் தோன்றினாலும், பணம் பற்றிய பேச்சு அவளது மனதை உறுத்தியது. அறையில் அவ்வளவு நேரம் கவனத்தில் படாதிருந்த ஏசி, டீவி போன்றவைகளும் அவளது கண்ணில் பட, "யா . .ர்?" என்று தயக்கத்துடன் கேட்டாள்!

"யாரோ, இதுக்கு முன்னே பார்த்தது இல்லை! ஆனா, நல்ல மனிதனாத் தெரியுது. இதோ, டாக்டரைப் பார்த்திட்டு வரேன்னாரும்மா! அப்ப, நாங்க வரட்டுமா? வேலை முடிஞ்சதும், நான் பையை எடுத்திட்டு வரேன்!" என்று இருவரும் விடை பெற்றுச் சென்றனர்.

ஒரு நர்ஸ் வந்து நாடித் துடிப்பு, ரத்த அழுத்தம் போன்றவற்றைச் சோதித்துவிட்டுப் போக, பின் வந்த மருத்துவரோடு வந்தவனை, அவள் ஓரளவு எதிர்பார்த்திருந்தாள் என்றே சொல்லலாம்!

"தலையில் ஸ்கேன் எல்லாம் தேவையில்லை, சார்! எதிர்பாராத அதிர்ச்சி, வலி இரண்டினாலும்தான் மயக்கம் வந்திருக்கிறது! சும்மாவே, கொஞ்சம் பலவீனமாகவும் இருக்கிறார்கள்! வேறு ஒன்றும் இல்லை! போஷாக்கான உணவைச் சாப்பிடச் சொல்லுங்கள் அது போதும். " என்றுவிட்டு வெளியேறிய வைத்தியரை அனுப்பிவிட்டு, அவன், அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"இப்போதும் தெரியாது என்று சொல்லமாட்டாய் என்று நினைக்கிறேன்."

தலைக் கட்டைத் தடவித் தடவிப் பார்த்த மகனின் கையை மெல்ல அகற்றியபடி சில வினாடி பேசாதிருந்தாள் அவள்.

பிறகு லேசாக நிமிர்ந்து, "இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

நிகிலனும் உடனே பதில் சொல்லவில்லை.

கதவருகிலிருந்து உள்ளே வந்து, கட்டின் அருகே கிடந்த நாற்காலியைச் சற்றே பின்னிழுத்துப் போட்டு அமர்ந்தான்.

சற்றுமுன் தங்கராசு கட்டிலை முடிந்தவரை ஒட்டிப் போட்டு உட்கார்ந்த இருக்கைதான். தான் உத்தமன் என்று காட்ட எண்ணுகிறானா?

முகம் மாறாமல் அவள் பார்த்துக் கொண்டிருக்க, அவன் சொன்னான். "நம்புவது சற்றுக் கடினம்தான். ஆனால், முன் செய்த பிழைக்குப் பிராயச்சித்தம் செய்யவே வந்தேன்." என்றான்.

"உத்தி புதிதாக இருக்கிறதே!" என்றவளின் குரலில் ஏளனம் தெறித்தது!

அத்தியாயம் -7

நிகிலனை நம்பவில்லை என்று சொல்லாமல் சொன்ன வார்த்தைகள்! அதுவும் முகம் மாறாமல் சொன்னபோது, தாக்கமும் அதிகமாக இருந்திருக்கும்!

ஆனால், சொல்வதற்கு ஏன் பயப்பட வேண்டும்? தந்தையின் கழுத்தில் அவனது கத்தி இருந்தபோதுகூட, அவள் பேசப் பயப்பட்டதில்லை! ஆனால், இன்றைய முதிர்ச்சி இல்லாததால் உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டிவிட்டாள்!

அவனுக்கும் அதே நினைவு வந்ததோ?

முகம் கன்றியபோதும், அமைதியாகவே, "உத்தி அல்ல, சுசி. உண்மைதான் சொன்னேன். உன்னைத் தேடி வந்ததே, அன்றையப் பிழைக்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பித்தான். வேண்டுமானால், தில்லைநாயகம் சாரிடம் கேட்டுப்பார்! " என்றான் அவன்.

கட்டிலை விட்டு இறங்க முயன்ற பிள்ளையைக் கட்டுப்படுத்தியபடி, "அவரிடம் நீங்கள் சொன்னதுதானே? " என்றாள் அவள் பிடிவாதமாக.

தாய், மகன் போராட்டத்தைப் பார்த்தவாறே, "அது பொய்யாக இருக்க வேண்டிய அவசியம்? " என்று கேட்டான் அவன்.

அவனது பார்வையைக் கவனித்து, "சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வது இல்லை என்று பழமொழியே இருக்கிறது. யாருடைய அடிப்படைக் குணமும் மாறுவதில்லை! " என்று கடுப்புடன் பதில் கொடுத்தாள் அவள்.

"மாறுவது மனம் என்று கூடத்தான் சொல்கிறார்கள்! தப்பு செய்தவன் திருந்தமாட்டான் என்றால், பாவமன்னிப்பு என்ற வார்த்தையே தோன்றியிராதே!" என்று வாதிட்டான் அவன்.

அவனுக்குப் பதிலை யோசித்தவள், அதற்குள் உடலை நெளித்து, வழுக்கி இறங்கிய மகனை அழுந்தப் பிடித்துத் தூக்கியவண்ணம், செயலில் கவனமற்று எழுந்து விட்டாள்.

ஆனால், இன்னமும் சரியாகப் பலம் வந்திராத நிலையில் அவள் தடுமாறவே, நிகிலன் சட்டென்று எழுந்து, இருவரையும் தாங்கிப் பிடித்தான்.

"விடுங்கள்! எல்லாம் நானே பார்த்துக் கொள்வேன்!" என்று தன்

வசமிழந்து சுசிதா குரலை உயர்த்தியதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் இருவரையும் மீண்டும் கட்டிலில் அமர வைத்தான் அவன்.

பின், “என்னத்தைப் பார்த்தாய்? கொஞ்சம் பலமாக அடி பட்டிருந்தால், என்ன ஆகியிருக்கும்?” என்றபோது, நிகிலனின் குரலும் ஆடிப் போயிருந்தது!

அவன் சொல்லி நினைக்கப் பிடிக்காவிட்டாலும், அவளுள்ளே, ஏற்கனவே தலையை நீட்டிக் கொண்டிருந்த கேள்விதான் இது! அதில், அவளுக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை., விபு என்ன ஆவான்? இவ்வளவு சின்னக் குழந்தையை வேறு யார் கவனிப்பார்?

ஆனால் அவனது பேச்சை ஒத்துக்கொள்ள மனமின்றி, “அதற்கெல்லாம் . . “ என்று அவள் தொடங்கியபோது, “அக்கா . .” என்று அழைத்தபடி கதவைத் திறந்துகொண்டு ஒருவன் உள்ளே வந்தான்.

அவனைப் பார்த்ததும், “ஏய், உன்னைத்தான் பார்க்க வேண்டும் என்று இருந்தேன்! ஏன் சைக்கிளைக் கொண்டு இவர்கள் மேல் மோதினாய்? இல்லை என்று சொல்லாதே! நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். சொல்லு, ஏன் அப்படிச் செய்தாய்? உண்மையைச் சொல்லாவிட்டால், மற்றவர்கள் சொன்னது போலப் போலீசிடம் ஒப்படைத்துவிடுவேன்!” என்றான் நிகிலன்.

“அய்யோ வேண்டாம் , சார் ! நானே, அக்கா கிட்டே மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன்! படியவே மாட்டேன் என்குது. பணம் தாரேன். மோதிக் கீழே தள்ளிவிடு! பூங்கொத்தோடே வந்து உள்ளே பூந்துக்கிறேன் அப்படீன்னு சொன்னாப்போல! சைக்கிளோட விழுந்து கிடக்கிறப்பக் கூப்பிடக் கூப்பிட, விட்டுவிட்டு ஓடிட்டான். இப்பவும், நாங்க பேசிக்கிட்டு இருக்கிறப்போ ஏன் வந்தே, ஒன்றும் கிடையாது என்கிறான். அத்தோடே, உனக்குக் குழந்தை வேறே இருக்குதுன்னதும், எனக்குக் கஷ்டமாயிட்டுது! என்னை மன்னிச்சுக்கோக்கா!” என்று மன்னிப்பு . .ஒரு வகையில் பாவமன்னிப்புக் கேட்டான் சைக்கிள்காரன்! “

ஏதோ தோன்ற, “யார்? ஒரு சிவப்பு ரோஜாப்பூக் கொத்தோடு போனாரே, அவரா? “ என்று நிகிலன் கேட்க, ஒப்புதலாகத் தலையாட்டினான் பையன்.

“மருத்துவமனையில் சிவப்பு ரோஜாவா என்று எண்ணினேன். யார் அவன்?” என்று மேலும் விசாரித்தான் நிகிலன்.

“அதான்க்கா, உங்க முதலாளி, தங்கராசுன்னு புது முதலாளி! உன் மேலே, அவனுக்கு ரொம்ப இது!”

சுசிதாவின் முகத்தைப் பார்த்துவிட்டு, “சரி, சரி! சொல்லிவிட்டாய் அல்லவா? மன்னித்து விடுவார்கள். உனக்கும் காயம் கழுவி மருந்து போட்டுவிட்டார்கள்தானே? கிளம்பு. இனியேனும், இப்படி வம்பு வழிக்குப் போகாமல், ஒழுங்காக எதையாவது செய்து பிழை! . . கொஞ்சம் பொறு! இந்தா. இதை வைத்து சைக்கிளைப் பழுது பார்த்துக்கொண்டு, மீதி இருந்தால் ஏதாவது சாப்பட்டுவிட்டுப் போ!” என்று ஓர் ஐம்பது ரூபாயைக் கொடுத்து அவனை அனுப்பினான் நிகிலன்!

“ம்ம்ம், முதலாளி வேறா? பாதிக்கு மேல், இப்படித்தான் இருப்பார்கள் போல! இவன், இன்னும் என்ன என்ன செய்வானோ? “ என்றான் நிகிலன்.

இந்த அளவுக்குப் போனானே என்று அவளும் சற்று ஆடிப்போய்த்தான் இருந்தாள்.

ஆனால் அதை அவனிடம் காட்டாமல் மறைத்து, “நான் வேறு வேலை தேடிக் கொள்வேன்!” என்றாள, இயன்றவரை மிடுக்காக.

“அங்கேயும், இவனுக்கு அண்ணனாக ஒருவன் இருக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?” என்று நிகிலன் விடாமல் கேட்கவும், சுசிதா திகைத்தாள்.

அவள் நினைத்த அதே வார்த்தைகளையே சொல்கிறானே!

அவன் முன்னே சொன்னது போலத் தங்கராசு வேறு,இன்னும் என்னென்ன செய்வானோ?

“இப்போது என்ன செய்வது?” என்றாள் தன்னை மீறிய திகைப்புடன்.

“இனியேனும், நான் சொல்வதைக் காது கொடுத்துக் கட்கிறாயா? “

அவள் பேசாமல் பார்த்தாள்.

“முதலில் குழந்தைக்கு உணவு ஏதாவது கொடு. அவன் பசியில்தான் இப்படித் திமிறுகிறான் என்று தோன்றுகிறது! ஏதாவது பிஸ்கட் மாதிரி வாங்கி வரவா? “

“இல்லை, வேண்டாம்! என் பையில் இருக்கிறது.” என்று அவள் சுற்றுமுற்றும் பார்க்க, அவன் எழுந்துபோய், அவளது பையை எடுத்துவந்து கொடுத்தான்.

அவள் ஒரு மலைப் பழத்தை உரித்துப் பிய்த்துக் கொடுக்கவும் விபு அமைதியாக உண்ண, அதைப் பார்த்தபடி, நிகிலன் தொடங்கினான்.

அவன் முதலில் கிளம்பி வந்தது, உண்மையாகவே, அவளுக்குச் செய்த பிழைக்குப் பரிகாரம் செய்வதற்காகவேதான். அவளுக்கு என்ன தேவையோ, படிப்போ, பணமோ, வேறு வகையிலோ, அவளது விருப்பப்படி, தேவையான உதவி செய்யவேண்டும் என்பதுதான் சென்னையிலிருந்து கிளம்பியபோது நிகிலனனின் குறிக்கோளாக இருந்தது!

“என்ன திடீர்க் குறிக்கோள்? இவ்வளவு நாளும் இல்லாதது, திடுமென எங்கிருந்து வந்தது என்று கேட்டேன்”

கண் மூடித் திறந்தான் அவன். “காரணம் இருக்கிறது! நமக்கு ஓர் அடி விழும்போதுதான், அதன் காரணத்தை . . மூலம் வரை தேடத் தோன்றுகிறது! குடும்பத்தின் அத்தனை பேரையும் வருத்தும் துன்பத்தின் அடிப்படை, என் பிழையோ என்று . . .”

“ஓ! இதுவும் வியாபாரம்தான், இல்லையா? இன்னொரு லாபத்துக்காக, இந்தத் துன்பத்துக்கு விலை கொடுக்க வந்திருக்கிறீர்கள்!”

மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்த பேச்சை, வேண்டுமென்றே நினைவுபடுத்துகிறாள்! ஆனால், உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்?

முகம் வாட, ஒருகணம் தயங்கிப் பின் மீண்டும் தொடர்ந்தான் அவன். “இதை வியாபாரமாக நினைத்து வரவில்லை. வலி தாங்காமல் யோசித்தபோது, உனக்கு இழைத்த அநீதிக்காக விழுந்த அடி என்று தோன்றியது! செய்த பிழைக்குப் பரிகாரம் செய்ய எண்ணித்தான் வந்தேன்! ஆனால், இங்கே வந்து விபுவைப் பார்த்தபிறகு . . .”

சட்டெனப் பதறி, “விபு என் மகன். அவனுக்கும், உங்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை!” என்றாள் அவள் அவசரமாக!

“இது வீண் பேச்சு, சுசி. உரிமை இல்லை என்று வேண்டுமானால் சொல்லு! ஒரு வகையில் உண்மை என்று ஒத்துக் கொள்கிறேன். ஆனால், சம்பந்தம் இல்லை என்று சொல்லாதே! அந்தப் பந்தம் இருப்பதாலேயே, நீங்கள் இருவரும் இப்போது இருக்க வேண்டிய இடமே வேறு! என் தப்புக்காக, அதை மறுத்து, இந்தப் பிஞ்சுக் குழந்தையைத் தண்டிக்க நினைக்காதே! “

“தண்டிப்பதா? என்ன உளறுகிறீர்கள்? இப்போது நான் உயிர்

வாழ்வதே விபுவுக்காகத்தான்! என் ஒருத்திக்காக என்றால், அன்பு இல்லத்தில் பணிபுரிந்தே வாழ்க்கையை ஓட்டியிருப்பேனே! இவனை நன்றாக வளர்த்து ஆளாக்க வேண்டும் என்றுதானே, வெளியே வந்து இந்த மாதிரிக் கஷ்டங்களுக்கு நடுவே வேலை செய்து சம்பாதிக்கிறேன்! என்னைப்போய், என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்?" என்று ஆத்திரப்பட்டாள் சுசிதா.

"விபுவிடம் உன் அன்பையோ, தனி ஆளாக மகனை வளர்ப்பதற்காக நீ செய்யும் தியாகங்களையோ, இம்மியளவுகூட நான் குறைவாக மதிப்பிடவில்லை, சுசி! ஆனால், இன்றைய நிலையை விட்டு, இன்னும் கொஞ்ச காலம் தள்ளி யோசித்துப்பார்! "என்று, அடுத்த பழத்துக்காகப் பரபரத்த மகனைப் பார்த்தான் நிகிலன்.

ஓ, நீ அங்கே வருகிறாயா என்று எண்ணியவாறு இன்னொரு பழத்தை உரித்து, மகனுக்கு ஊட்டியவாறே, "கொஞ்சம் வளர்ந்திருப்பான் என்பது தவிர, அப்போது மட்டும் என்ன வேறுபாடு வந்துவிடப் போகிறது? " என்று அலட்சியமாகக் கேட்டாள் அவள்.

"நீ வேண்டுமென்றே முக்கியமான விஷயத்தை அலட்சியப்படுத்துவது போலத் தெரிகிறது. விபுவின் வளர்ச்சி அவனது உடலில் மட்டும் இராது! பேச்சில், எண்ணத்திலும் இருக்கும். எல்லோருக்கும், எல்லாம் செய்யும் தந்தை எ . ." என்றவனைக் குறுக்கிட்டு, "உனக்கு இல்லை! அவர் செத்துவிட்டார் என்று சொல்லுவேன். "என்றாள் அவள், அவனைக் குரோதமாக நோக்கி!

"உடனே, இந்தப் பூ, பொட்டு, வண்ண உடை எல்லாம் விட வேண்டியிருக்கும் என்று மிரட்ட வேண்டாம்! அந்த மாதிரி மூடத்தனங்களையெல்லாம் இப்போது யாரும் நினைப்பது கூடக் கிடையாது! " என்றாள் எகத்தாளமாக!

எத்தனை காலம்தான் இது போன்ற மூட சம்பிரதாயங்களிலும், அசட்டு உணர்ச்சிகளிலுமாகப் பெண்களைக் கட்டி வைப்பார்கள்!

"மறுபடியும், முக்கிமான விஷயத்தை அலட்சியப்படுத்துகிறாய், சுசரிதா! சற்று முன் உன்னைப் பற்றி விசாரித்தேன். உன் அலுவலகத்தைப் பற்றியும்! இந்த வருமானத்தில், இவனை நீ எந்த அளவுக்கு வளர்க்க முடியும்? நல்ல தரமான கல்விக்கு, இப்போது என்ன செலவாகிறது, தெரியுமா? தரமான கல்வி, அன்பான பல உறவுகள், வளமான வாழ்க்கை முறை, உயர்நிலைப் பழக்கம்! இவை அனைத்தையும் தரக்கூடிய தந்தையை ஒதுக்கிவிட்டு, ஒரு குச்சு வீட்டுக்குள் இவனைக்

குறுக்க நினைப்பது, எனக்காக இவனைத் தண்டிப்பது ஆகாது என்று, இன்னமும் வாதிடுவாயா? எந்த நாளிலும் நீ பொய்க்கு இடம் கொடுப்பவள் இல்லையே! “

வயிறு நிரம்பிவிட்ட விபு, தாய் தந்த கரடி பொம்மையை வைத்து விளையாடத் தொடங்கினான். இடையிடையே தாயைப்பார்த்து ஏதாவது சொல்வதும், புதியவனான தந்தையைக் குறுகுறுவென நோக்கிப் பொம்மைகளை நீட்டிக் கொடுப்பது போல ஏமாற்றி, அவனைக் கவர முயன்றதும் தவிர, வெகு நேரம் அங்கே ஒரு கனமான அமைதியே நிலவியது!

பிள்ளையின் விளையாட்டில் கலந்துகொள்ள நிகிலனுக்குப் பேராவல்தான்!

ஆனால், அந்தச் செயல், சுசிதாவைப் பாதித்து, அவளது முடிவை எதிர்மறையாக்கி விடக் கூடாதே என்றெண்ணி, தன்னை அடக்கிக்கொண்டு பேசாதிருந்தான் அவன்.

வெகு நேரம் போலத் தோன்றிய சில நிமிஷங்கள் கழித்து, “இப்போது என்னதான் செய்யலாம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?” என்று கம்மிய குரலில் கேட்டாள் அவள்.

அந்த நேரத்தில், கையில் பையுடன் ஜானகியம்மா உள்ளே வந்தாள்.

வரவேற்பாய் முறுவலித்து, மகனைத் தூக்கி அவள் கையில் கொடுத்தான் நிகிலன்.

“இவனோடு வரவேற்புப் பகுதியில் சற்று நேரம் உட்கார்ந்திருங்கள், ஜானகியம்மா. இங்கே எல்லாவற்றையும் ஒதுக்கிக்கொண்டு, பண விவகாரத்தையும் முடித்துக்கொண்டு, சீக்கிரமே வந்து விடுகிறோம்! உங்கள் பை இருக்கட்டும். அதையும், சேர்த்து, இங்குள்ள அட்டென்டரே எடுத்து வருவான்!” என்று அனுப்பிவைத்தான்.

ஏறிட்டுப் பார்த்தவளிடம், “இங்கேயே நாம் பேசி முடித்து விடுவோம். தங்கராசு நடந்துகொண்ட முறைக்கு, இனி நீ இங்கே இருப்பதே நல்லதல்ல! விபுவுக்கும்கூட ஆபத்து நேரக் கூடும். அந்த அலுவலகத்தில் உன் ஒப்பந்தம் எப்படி என்று எனக்குத் தெரியாது. ஆனால், பொதுவாக, இரு தரப்பிலும் ஒரு மாத முன்னறிவிப்பு, அல்லது ஒரு மாதச் சம்பளம் என்று இருக்கும்! நாளையே போய்க் கணக்கு முடித்து, அங்கிருந்து வெளியேறிவிடு! “என்றான் அவன் “நான் வேண்டுமானால் கூட வருகிறேன்.”

“வேண்டாம். அதை நானே பார்த்துக் கொள்வேன். ஆனால் அப்புறம்?”

என்று கேட்டாள் அவள்.

அவள் கேட்பது புரிந்து, “தில்லைநாயகம் சாரிடம் போவோம். அவர் முன்னிலையில் உன்னை மணந்து, மனைவியும் மகனுமாக உங்களைச் சென்னைக்கு அழைத்துப் போகிறேன்! “ என்றான் அவன் உறுதியான குரலில்.

மகனின் எதிர்காலத்துக்காக வாதாடியவன், வேறு விதத்தில் அழைப்பதற்கு இல்லைதான்.

ஆனால், இதை ஏற்பதும் அவளுக்குக் கடினமாகவே இருந்தது!

பிழை புரிவதும், பிராயச்சித்தம் செய்வதும், இவனுக்கு எவ்வளவு எளிதாக இருக்கிறது!

யோசனையாக அவனைப் பார்த்தாள் சுசிதா!

அத்தியாயம் -8

விபு, நிகிலனுடைய மகனே!

அந்த வகையில், நிகிலனுடைய சொத்து, செல்வம், வாழ்க்கைத்தரம் அனைத்திலும் அவனுக்கு உரிமை உண்டுதான்! ஒரு வளமான வாழ்க்கை முறை கிடைக்கும்போது, அவனுடைய தாயாக இருந்துகொண்டு, அவள் அதைத் தடுப்பது சரியாகாது .

ஆனால், எல்லாம் அவனுக்காகத்தான்! அவனுக்காக மட்டுமேதான்!

அவனுடைய பிள்ளைக்குத் தாயாக அவள் இருந்தாலும், நிகிலன் அவளுக்கு மனதளவில் அன்னியனே! ஒரு வகையில் வெறுப்பதற்குரிய விரோதியும் கூட!

இந்தப் பிராயச்சித்தத்தில், அவனது குற்ற உணர்வு திருப்தி அடைந்து விடலாம். ஆனால், இந்த மூன்று ஆண்டுகளாக அவள் பட்ட வேதனை மறைந்துவிடுமா?

அது மட்டுமல்ல. பெற்றோர் மூலமாக அவளுக்குக் கிடைத்த சொத்துகளை எதற்காகத் தர்மத்துக்குக் கொடுத்தாளோ, அந்தக் காரணம் , அவளைப் பொறுத்தவரையில் அப்படியேதானே இருக்கிறது? அதை இழிவுபடுத்த முடியாது!

அவளது பார்வையைத் தவறாக உணர்ந்து, “உன் நம்பிக்கையைப் பெற, நான் இன்னும் என்ன செய்ய வேண்டும், சுசி? விபுவின் படிப்புக்கான பணத்தை இப்போதே போட வேண்டுமா? சொத்து எழுதி வைக்க வேண்டுமா? “ என்று அடுக்கியவனின் குரல், அவளது முக மாறுதலில் தேய்ந்தது. “நீ வேறு ஏதோ சொல்ல விரும்பினாய் போல?”

ஏளனமாக நோக்கி, “ஆமாம்! ஆனால், எதற்கும் பணத்தையே அளவுகோலாகக் கொள்ளும் உங்கள் புத்தி அப்படியேதான் இருக்கிறதில்லையா?” என்றாள் அவள் குத்தலாக.

முகம் கன்றியபோதும், “ஆனால், பணமும் முக்கியமே என்பதை, உன்னாலும் இப்போது மறுக்க முடியாதுதானே?” என்றான் நிகிலன்.

உண்மைதான். மகனின் வளமான எதிர்காலத்துக்காகத்தானே, அவள் அவனோடு செல்லச் சம்மதித்திருப்பதே! மேலும், அவளது வாழ்வின் மிக மோசமான திருப்பமே, பணத்தால், அல்லது தேவைப்பட்ட அளவு பணமின்மையால் நிகழ்ந்ததுதானே?

“நீங்கள் சொல்வதும் சரிதான்!” என்றாள் முகம் வாட. “ஆனால், பணம்

மட்டும்தான் முக்கியம் என்று . . “ என்று வாதாடத் தொடங்கியவள் தானாகவே நிறுத்தி, “இப்போது அந்தப் பேச்சு, நம்பிக்கை, அது முக்கியமில்லை! உங்கள் பேச்சை நம்பியிராவிட்டால், மேலே என்ன செய்வது என்று உங்களிடம் நான் கேட்டிருக்க மாட்டேன். ஆனால், எனக்கு என்று சில கொள்கைகள் இருக்கின்றன! நிபந்தனைகள் என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். அவைகளுக்கு நீங்கள் ஒத்துக்கொண்டால் . . .நீங்கள் சொல்வது போலச் செய்யலாம்! “என்று கூறி முடித்தாள்.

மணம் புரிந்து கொள்ளலாம் என்று அவளால் இலகுவாகச் சொல்ல முடியாததை, அவளைப் போலவே, அவனும் உணர்ந்தான்.

கவனியாதது போல, “என்ன நிபந்தனைகள்?” என்று வினவினான்.

“ஒன்று, உங்களுக்கும் எனக்கும் இடையில், இனி ஒன்றும் கிடையாது! தனிமையில் நாம் அன்னியர்!” என்றாள் தெளிவாக.

எதிர்பார்த்தவன்போல, உடனே, “ஒப்புக் கொள்ளுகிறேன்.” என்றான் அவன்.

“அடுத்தது, உங்கள் பணத்தில் ஒரு பிடி அன்னம்கூட உண்டு வாழ மாட்டேன்.” என்றாள் வேகத்துடன். “விபுவுக்காக, உங்கள் கூரையின் கீழ் வசிப்பேன். ஆனால், என் உணவு, உடை எதுவானாலும், என் செலவில்தான் நடக்கும்! சம்மதமானால், அதற்கு மேல் நீங்கள் சொன்னபடி செய்யலாம்!” என்றாள் தீர்மானமாக!

திகைத்து நோக்கியபோதும், அதற்கும் “உன் விருப்பம்!” என்றான் அவன் சுருக்கமாக.

மூச்சு விடாதிருப்பதை அப்போதுதான் உணர்ந்தவளாக ஒரு நெடுமூச்சை எடுத்து, விட்டுவிட்டு, அவனை நேராகப் பார்த்தாள். “ஒப்பந்தத்தின் முதல் படியாக, இந்த மருத்துவமனை பில் எவ்வளவு என்று சொல்லுங்கள். பாங்கிலிருந்து எடுத்துத் தருகிறேன். “ என்று கேட்டாள்.

சட்டெனப் பாய்ந்த அவனது பார்வை, அறையின் ஏசி, டீவி, சின்ன ஃப்ரிட்ஜ் முதலியவற்றின் மீது பதிந்து மீண்டது! அவளது இன்றைய நிலையில் இந்த அறையை, அவள் நிச்சயமாக எடுத்திருக்க மாட்டாள். எவ்வளவு சிரமப்பட்டுச் சேர்த்த பணமோ?

ஆனால், தொடங்குமுன்பே அவளோடு வாதாட மனமின்றி, “சரி!” என்றான் அவன் மறுபடியும் சுருக்கமாகவே!

அதற்கு மேல் எல்லாமே, நன்கு கிரீஸ் தடவிய இயந்திரம் தடையின்றிச்

சுழல்வது போல, எளிதாக நடந்தது! வேகமாகவும்.

மறு நாள் அலுவலகம் சென்று கணக்கு முடித்துக்கொண்டு, அங்கிருந்து வெளியேறினாள்.

ஒரு மாத நோட்டீசுக்குப் பதிலாகப் பணத்தைக் கட்டிவிடுவதாக சுசிதா சொன்னபிறகு, அங்கே அவளைப் பிடித்து வைக்கத் தங்கராசுவுக்கு வழியில்லாது போயிற்று!

வேறு எங்கே, என்ன வேலை என்று துளைத்தெடுத்த அவனது கேள்விகளுக்கு, அவள் பதிலே சொல்லவில்லை.

ஓர் அசங்கியத்திலிருந்து தப்பித்த உணர்வுடன், முதிய பங்குதாரர், அவளிடம் தாராளமாகவே நடந்துகொண்டார்.

நஷ்டப்படாமல் வெளியேறிய திருப்தியோடு, தில்லைநாயகம் கொடுத்த சென்னை எண்ணுடன் ஃபோனில் தொடர்புகொண்டு, சுசிதா பேசினாள்.

“அய்யா சொன்னாரம்மா! அவர் லேசில் இது போலச் சொல்ல மாட்டார். அவரே சொன்னார் என்பதால், கட்டாயமாக வேலை தருகிறோம். வரவேற்புப் பணி. அதற்குரிய சம்பளம் இது.” என்று அந்த நடுத்தர வயதுக் குரல் சொன்ன தொகை, சுசிதாவுக்குச் சம்மதமாகவே இருந்தது.

தேவையை மிகவும் குறுக்கிக் கொண்டிருந்ததால், சுசிதா குடியிருந்த வீட்டைக் காலி செய்வது, அப்படி ஒன்றும் கடினமாக இருக்கவில்லை!

பெரும்பான்மைப் பொருட்கள் விபுவுக்காக வாங்கியவையே! எடுத்துச் செல்ல முடியாதவையாகத் தோன்றிய பொருட்களை, அவ்வப்போது உதவும் எதிர்வீட்டுப் பெண்மணிக்கும் ஜானகியம்மாவுக்குமாகக் கொடுத்தாள்.

ஆனால், அவர்களிடமும் கூட, எங்கே போகிறாள் என்று சொல்லவே இல்லை! வற்புறுத்திக் கேட்டபோது, “வெளியூரில் வேலை தேடி விட்டேன். போய், வேலையில் சேர்ந்து, வீடு பார்த்துக் குடி போனதும் எழுதுகிறேன்.” என்று சொல்லி, சமாளித்தாள்.

இந்தத் திடீர்த் திருமணத்தைப் பற்றி யாரிடமும் அவள் மூச்சுக்கூட விடவில்லை!

சொன்னால், பல்வேறு விளக்கங்களையும் அளிக்க வேண்டியிருக்கும் என்பதால், அதைப் பற்றிய கேச்சை, அடியோடு விடுத்தாள்!

அவள் கூறியதை ஏற்று, நிகிலனும் அந்தப் பக்கம் தலை காட்டாமல் ஒதுங்கிக் கொண்டான்!

விபுவின் துணிமணிகளில், சின்னதாகி விட்டவற்றை, இல்லத்துக் குழந்தைகளுக்காக ஏற்கனவே தில்லைநாயகத்திடம் கொடுத்துவிட்டிருந்ததால், சுசிதாவுக்கு மூட்டை கட்டப் பொருட்கள் அதிகம் இருக்கவில்லை!

நிகிலன் அவளிடம் சொன்னதுபோல, சுசிதா, விபுவை, நேராகத் தில்லைநாயகம் இருக்கும் திருமங்கலம் "அன்புஇல்ல"த்துக்கே அழைத்துச் சென்றான்.

ஏற்கனவே தன் திட்டத்தை அவரிடம் அவன் தெரிவித்திருந்ததால், நிகிலன், சுசிதா இருவருக்கும் சட்டப்படியான திருமணம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை, அவர் செய்து வைத்திருந்தார்.

எளிய முறையில் திருமணம் நடந்து முடிந்ததம், விபுவோடு ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருமாறு நிகிலனை அனுப்பிவைத்தார்.

சுசிதாவிடம் திரும்பி, "ராமநாதன் ஃபோன் பண்ணினார். சொல்லும்மா, இன்னும் வேலைக்கு என்ன அவசியம்?" என்று வினவினார்.

சற்று யோசித்து, "என் ஒவ்வொரு செலவுக்கும், அடுத்தவரை எதிர்பார்த்து நிற்க முடியாது, அங்கிள்!" என்றாள் அவள்.

"அடுத்தவரா? " என்று கேட்டார் அவர்.

நிகிலனிடம் என்று சொல்லியிருந்தால், இந்தக் கேள்விக்கு இடம் இருந்திராது!

"தாயும் பிள்ளையும் என்றாலே, வாயும் வயிறும் வேறு என்று எப்போதோ எழுதி வைத்திருக்கிறார்களே, அங்கிள்?" என்று வேடிக்கை போலக் கேட்டு முறுவலித்தாள் அவள்.

பதிலாகப் புன்னகை செய்தபோதும், "நிகிலனிடம் உண்மை தெரிகிறது, சுதாம்மா. முடிந்து போனதை நினைத்து, வீணாக யாரையும் வருத்தாமல் இருப்பது நல்லது! நீயும் முட்டாளல்லவே?" என்றார் அவர்.

"என்றோ நடந்த கொலைக்காக இன்று தூக்குத் தண்டனை கொடுக்கிறார்களே!" என்று வெடுக்கெனக் கேட்டவள், பெரியவர் கவலையோடு நோக்கவும், உடனே சிரித்தாள். "அங்கிள், உங்களை மடக்கிவிட்டேனே! மெய்யாகவே நானும் கெட்டிக்காரிதான் போல!" என்று அதிசயித்தாள்!

"நீ கெட்டிக்காரியாக இருப்பது, எனக்கும் சந்தோஷம்தானம்மா.

ஆனால், வாழ்க்கையை நல்லபடியாக நடத்தினால், அதை விடவும் சந்தோஷமாக இருக்கும்!" என்றார் அவர் விடாமல்!

இவரிடம் அதிகமாக மறைக்க முடியாது! பாராதது போல, நிறையப் பார்த்துவிடும் கூர்மையாக புத்தி அவருக்கு!

ஒரு பெருமூச்சுடன், "பார்க்கலாம் அங்கிள். சில காயங்கள் மெல்லத்தான் ஆறும் என்று நினைக்கிறேன்!" என்று முடிக்க முயன்றாள் அவள்.

"குத்திக் கிளறாமல், ஆற விடுவதுதான் முக்கியம், மகளே!" என்று பேச்சை அவர் முடித்தார்!

சென்னையில், அவனது "கெஸ்ட் ஹவுஸு"க்குத்தான் முதலில் போனார்கள்!

அவளுக்கும் விபுவுக்கும் வேண்டியனவற்றுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, பெற்றோரை அழைத்து வருவதாகக் கிளம்பினான் நிகிலன். அவனும் குளித்து, பெற்றோரையும் கிளப்பிக்கொண்டு வர, சற்றுத் தாமதம் ஆனாலும் ஆகலாம் என்றான்.

அவனைக் கூர்ந்து பார்த்தாள் சுசிதா. "இன்னமும் ஒன்றும் சொல்லவில்லை போல? பயமா?"

முகம் மாறாமல் காத்து, "நேரில் சொல்வது நல்லது என்று எண்ணினேன்!" " என்றான் அவன்.

"அதுவும் நல்லதுதான்! நேரில் என்றால், காலிலேயே விழுந்துவிடலாமே! "என்றாள் அவள் ஏளனமாக.

அவளைத் திரும்பிப் பார்த்தான் நிகிலன். "மூன்று ஆண்டுகளுக்கு முன் செய்த தப்பை சீர் செய்தேன்., மணந்து, பிள்ளையோடு கூட்டி வந்திருக்கிறேன் என்று மட்டும்தான் சொல்ல நினைத்தேன். "

"ஒத்துக் கொள்வார்கள் பொலும்! பெரிய மனதாகத்தான் இருக்க வேண்டும்! "

மீண்டும், அதே எகத்தாளம்!

"ஒவ்வொருவருக்கு, ஒவ்வொரு வகை நிர்ப்பந்தம். நீ என்னை மணந்துகொண்டது போல. ஆனால், அடிப்படையில் அன்பு இருந்தால், எதிலும் அதிகப் பிரச்சினை இராது! விபுவுக்காக நீ செய்ததை, எனக்காக என் பெற்றோர் செய்வார்கள் என்று . . .." என்று நிகிலன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கார் ஒன்று கேட் தாண்டி வேகமாக வரும் ஓசை கேட்க, "காட்!" என்று பாதி வாக்கியத்தில் பேச்சை நிறுத்திக்கொண்டு, வெளியே விரைந்தான் அவன்.

“ . . .ன்ன அமைதிப் படுத்திக் கொள்வது? அந்த மாதிரி வேலையா, நீ செய்து வைத்திருகிறாய்? நான் பயந்த மாதிரியே . .” என்று கோபமாகக் கூறியபடி உள்ளே வந்த பெண்மணியைக் கண்டதும், சுசிதா மெல்ல எழுந்து நின்றாள்.

நிகிலனுடைய தாயாக இருக்க வேண்டும்! தனியாகச் சென்று, பெரியவர்களைத் தாஜாப் பண்ணி அழைத்துவரும், அவனது திட்டம் நடக்கவில்லை! எப்படியோ விவரம் தெரிந்து. . .

வாங்கி வந்த உணவுகளை மேஜையில் வைத்துக் கொண்டிருந்த பணியாள் பெருமாள், கண்ணில் பயத்துடன் பின்னறைக்கு ஒதுங்குவதை ஓரக் கண்ணில் படவும், அவளுக்கு விஷயம் புரிந்துபோயிற்று!

உணவுப் பொருட்களை வாங்கப் போனபோது, பணியாள் முதலாளி வீட்டுப் பெரியவர்களுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறான்!

மூத்த தலைமுறை என்கிற மரியாதைக்கு எழுந்து நின்றாயிற்று! அடுத்த முயற்சி அங்கிருந்துதான், தாய் அல்லது மகனிடமிருந்துதான் வரவேண்டும்!

ஆனால், இந்தக் கணக்கு வழக்கு எதுவுமின்றி, “அப்ப்பா!” என்று நிகிலனிடம் ஓடினான் விபு! இரு கைகளையும் உயர்த்தி, “தூக்கு!” என்று கட்டளையிட்டான்!

இல்லத்தில் தொடங்கி, இந்த இரண்டு நாட்களில், ஆசையாகப் பழகிய நிகிலனிடம் ஒட்டிக்கொண்டான் குழந்தை!

ஆனால் மூத்த தலைமுறைக்கு, முறையற்று வந்த அந்த உறவு தாங்கவில்லை!

“இரண்டு வயதுக்கு மேல் இருக்குமே! இதைப் போய் என்னவென்று சொல்லி . . .அங்கே ஒருத்தர் கேவலப் படுத்தினார் என்றால், நீ மிச்சம் மீதி இருப்பதையும் நாசம் பண்ணி முடித்து விட்டாயே!”என்று சினந்த மீனலோசனி, சுசிதாவையும், விபுவையும் ஒரு தரம் வெறுப்புடன் வெறித்தாள்! கொதிப்புடன் “சை!” என்றவள், முகத்தைத் திருப்பிக்கொண்டு, வந்த வேகத்திலேயே, அங்கிருந்து வெளியேறிவிட்டாள்!

அந்தச் சை என்ற வார்த்தையில், சுசிதாவுக்கு மிகுந்த ஆத்திரம்தான். ஆனால், இது ஆத்திரத்தை அப்படியே காட்டும் நேரமல்ல.

“என்னவோ அன்பான உறவினர் என்றீர்களே!” என்றாள் வியந்த

குரலில், அவள்!

நிகிலன் பதிலற்று நிற்கையில், “இந்த மாதிரி அன்பான உறவினரோடு வாழ்வதற்கு, என் ஒற்றையறைக் குச்சு வீட்டில் தன்னந்தனியே விபு வளர்வது எவ்வளவோ மேல் என்றே எனக்குத் தோன்றுகிறது! உங்களுக்கு எப்படி? “ என்று, ஏளனமாகக் கேட்டான்.

அத்தியாயம்- 9

தாயின் ஏளனத்துக்கு மாற்றே போல, தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவன் கன்னத்தில் முத்தமிட்டான் விபு.

அழுந்தப் படிந்திருந்த பிள்ளையின் மெத்தென்ற சருமம் ஆறுதலைத் தர, அவனை வருடிக்கொடுத்தான் நிகிலன்.

உடனே நினைவு வந்து, சுற்றுமுற்றும் பார்த்தான்.

“உங்கள் பெருமாள்தானே? விபுவுடைய அருமைப் பாட்டியைப் பார்த்ததும், அப்படியே நழுவிவிட்டான்! அன்பொழுகும் பேச்சைக் கேட்டதுமோ, அந்தர்த்தானமே ஆகிவிட்டான்!” என்றாள் சுசிதா கிண்டலாக.

இவள் விடுவதாக இல்லை!

“அம்மாவிடம் மெல்லச் சொல்லி அழைத்துவர எண்ணினேன்! மடையன், நல்லது செய்வதாக எண்ணி, அம்மாவிடம் உளறிக் கொட்டி, அதிர்ச்சி அடையச் செய்துவிட்டான்! நம்பாமல் நேரில் பார்க்க வந்தால் . . . “

“நம்பியதால்தான் வந்தார்கள் என்று நான் நினைத்தேன்!”

பாவி! வாய்ப்புக் கிடைத்தது என்று என்னமாகக் குத்துகிறாள் என்று எண்ணியபோதும் அதைக் காட்டிக் கொள்ளாமல், “எப்படியோ! இந்தச் செல்லக்குட்டி வேறு அப்பா எனவும் ரொம்பவே அதிர்ந்து போயிருப்பார்கள்! அந்த அதிர்ச்சியில் சொன்னது. பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்!” என்றான் அவன், நயமாகவே.

“ஓ! கடுமையான பேச்சுக்கு, இப்படி ஒரு லைசன்ஸ் உண்டா? “

“சுசி, ப்ளீஸ்! ஒவ்வொரு வார்த்தைக்கும் நீ இப்படிக் குதர்க்கம் பேசினால், எதையும் உன்னிடம் விளக்கவே முடியாது! “

அவள் தோளைக் குலுக்கிவிட்டுப் பேசாதிருக்கவும், “குடும்பத்தில் ஒரு வருத்தம் என்று சொன்னேனே . . . பெரும் வேதனை! அதில், எல்லோருமே கொஞ்சம் நிலைகுலைந்து போயிருப்பதால், அதிலும் அம்மா சட்டென வசமிழந்து போகிறார்கள்! “ என்று எடுத்துச் சொன்னான் நிகிலன்.

வருத்தம் , வேதனையில் நிலைகுலைவது என்றால் என்னவென்று, சுசிக்குத்தான் நன்றாகவே தெரியுமே!

அன்று கதறி அழுததும், அடியோடு தன்வசமிழந்து, இதோ, இவனையே

விரட்டியதும் . . . எல்லாம் எதையும் தாங்கி நிமிரக் கூடிய இளமையில்!

இதுவும், சாதாரண விஷயமில்லை!

பாவம் அந்தப் பெரியவள் என்று மனம் இளகவே, “பெற்றோரைப் பார்த்து வருகிறேன்.” என்று நிகிலன் கிளம்பியபோது, நக்கல், கிண்டல் எதுவும் பண்ணாமல், சும்மா தலையாட்டி வைத்தாள்!

அவன் எதிர்பார்த்தபடியே, மீனலோசனி, மாடி சோஃபாவில்தான் , கண்ணீருடன் சாய்ந்திருந்தாள்! சுந்தரம் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றிக் கொண்டிருந்தார்!

மகனைப் பார்த்ததும் முதலில் இருவருக்குமே பேச்சு எழவில்லை!

பிறகு, “வாப்பா! ஏதேது, அவளாக உன்னை இந்த வீட்டுக்குக் வர விட்டாளா? அல்லது, சொந்த வீட்டிலிருந்து தாய், தகப்பனை விரட்டிவிட்டு வந்து, என்னைக் கூட்டிப்போ என்று அனுப்பி வைத்தாளா? “ என்று ஆத்திரத்துடன் பொரிந்தாள் அன்னை!

“ஷ், சும்மா இரு, மீனா.” என்று, சுந்தரம் மனைவியை அடக்கினார். மகனிடம் திரும்பி, “என்னப்பா, என்ன விஷயம்? என்னென்னவோ காதில் விழுகிறது?” என்று கேட்டார்.

“அவனிடம் என்ன கேள்வி? அந்தப் பையன் “அப்பா” என்று கூப்பிட்டுத் தூக்கச் சொன்னதைக் காது குளிர, நானே கேட்டேன் என்றேனே! அப்புறம், அவன் என்னத்தைச் சொல்லப் போகிறான்? “

“ஏதோ சொல்லத்தானே வந்திருக்கிறான்? அதைச் சொல்லி முடிக்கும்வரை, கொஞ்சம் பொறுத்திரேன்! “ என்று மீண்டும் அவளை அடக்கிவிட்டு, “சொல்லு. “ என்று மகனைப் பணித்தார் அவர்.

“அப்பா . . . “ என்று தொடங்கியவன் தாயிடம் திரும்பி, “உங்களுக்கு இவ்வளவு மனக் கஷ்டத்தைத் தந்திருப்பதற்காக, முதலில் என்னை மன்னித்து விடுங்கள் அம்மா! “ என்று மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தந்தையிடம் சொன்னான். “சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு தப்பு செய்தேன், அப்பா! இப்போது விவரம் தெரிந்து, தப்பைத் திருத்த அவளை மணந்து, மகனோடு கூட்டி வந்தேன்! இதை நானே . .” என்றவனை இடைமறித்துப் பேசினார் தந்தை.

“ஒரு மகனிடம் தந்தை கேட்கக் கூடாத கேள்விதான். ஆனால், இப்படி எத்தனை பேரை மணக்க முடியும் சொல்லு? அப்படி மணப்பதே சட்டப்படி குற்றமாகும், தெரியுமா?”

வலித்ததின் அறிகுறியாகக் கண்மூடித் திறந்துவிட்டு,

“வாழ்க்கையைக் கொஞ்சம் அலட்சியமாக நடத்தினேன்தான். ஆனால், நிஜமான தப்பு, இது மட்டும்தான் அப்பா! செய்த தப்புக்குப் பரிகாரம் செய்தேன்.” என்றான் அவன்.

“பரிகாரம் இப்படித்தான் செய்தாக வேண்டுமா? பெண்களுக்காக எத்தனையோ கருணை இல்லங்கள் இருக்கின்றன. அதற்குப் பெரிய உதவிகள் செய்திருக்கலாமே!”

“ராமகிருஷ்ணர் சொன்னதாகப் படித்தேன், அப்பா! ராமனிடம் கடன் வாங்கிவிட்டுக் கிருஷ்ணனிடம் திருப்பிக் கொடுக்க முடியாது என்று கூறுவாராம். யாரைக் காயப்படுத்தினோமோ, அவருக்குத்தானே, மருந்தும் தடவியாக வேண்டும்?”

மகனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் அன்னை. “ராமகிருஷ்ணர், விவேகானந்தர் என்கிறாய். அவர்கள் சொன்னதையெல்லாம் படித்துவிட்டு, எப்படிப்பா, இப்படி?” என்றாள் வருத்தமாக.

“படிக்கும்போது, சொல்லின் நயமும் சுவாரசியமும் மட்டும்தான் தெரிகிறது, அம்மா! வலிக்க அடி விழும்போதுதான், இது நமக்காகவும் சொல்லப்பட்டது என்பதே புரிகிறது! அத்தோடு, விபு, என் மகன், அம்மா! நம் குடும்பத்து வாரிசும் கூட! “

“அப்படிச் சொல்லி, அவள் உன்னை வரச் சொன்னாளாக்கும்?” என்ற தாயின் குரலில், நம்பாமை தெரிந்தது!

“இல்லை அம்மா!” என்று அழுத்தமாகத் தலையசைத்தான் மகன். “நானேதான் அவளைத் தேடிச் சென்றேன்! அக்கா விஷயமாக எவ்வளவு வேதனையாகிப் போயிற்று? அப்பாவைப் பார்க்கவே முடியாதா, மாமா என்று பிள்ளைகள் கேட்கும்போது, தாங்க முடியவில்லையே! யாரிட்ட சாபமோ? யாருக்குச் செய்த அநியாயமோ என்று யோசித்தபோது, சுசிதாவின் சினந்து சீறிய முகம் நினைவு வந்தது! அப்போது பெரிதாக நினைக்காதபோதும், அவளுக்கு நான் செய்தது, அநியாயமேதானோ என்று, இப்போது யோசித்தேன்! அன்று அவளது மனதில் பற்றிய நெருப்புதான், இன்று நம் ரஞ்சியை இப்படிப் பொசுக்குகிறது என்றே தோன்றியது! சுசிதாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இயன்ற ஏதாவது உதவி செய்துவிட்டு வர வேண்டும் என்றுதான் தேடிப் போனேன். . .” என்று அந்த விவரம் முழுதும் தெரிவித்தான்.

“அப்போதும், “நீ யாரென்று தெரியாது” என்று சொல்லி என்னை விரட்டவே முயன்றாள். மகனை என்னிடம் இருந்து மறைப்பதற்காக என்று பிறகு தெரிந்தது! இப்போதும், அவள் விரும்பி வரவில்லை,

அம்மா! மகனுக்காகத்தான் வர ஒப்புக்கொண்டாள். ஆனால் குழந்தையைப் பார்த்த பிறகு . . . இருவரையும் விட முடியாது என்று எனக்கு நிச்சயமாகப் புரிந்து போயிற்று. . . .தப்பு என்று தோன்றுகிறதா, அம்மா?"

கண்ணைத் துடைத்துக்கொண்டு, "இல்லை, கண்ணா." என்று தலையசைத்தாள் தாயார். "ஆனால், என்னவோ, ராமன் வேறு, கிருஷ்ணன் வேறு என்று கதை சொன்னாய்! ஆனால், நீ செய்த தப்புக்காகக் கடவுள் ரஞ்சியைத்தானே அழ வைத்துவிட்டார்!" என்றாள் மீண்டும் கண்ணீர் பெருக.

"இல்லை மீனா! எல்லாம், செய்த தப்பை இவனுக்கு உணர்த்துவதற்காகத்தான்! அத்தோடு, நம் வாரிசு உரிய இடத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவும் இருக்கலாம். ரஞ்சி பாவம்! இடையில் அகப்பட்டவள்! கடவுள் அருளால், ஏதோ விதத்தில் அதுவும் சரியாகி விடும் என்று நம்புவோம்!" என்றார் சுந்தரம்.

அந்த நம்பிக்கை இல்லாதபோதும், அதை மறுத்துப் பேச மனமற்றுத் தொடர்ந்த சிறு அமைதியில், கணவரும் மனைவியும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சுந்தரம் லேசாகத் தலையசைக்கவும், மகனை நோக்கி, "அவர்கள் இரண்டு பேரையும், இங்கே கூட்டி வந்துவிடுகிறாயா, நிகிலா? நம் குடும்பம். இங்கேதானே, இருக்கவேண்டும்? யார், யாரோ பேசுவார்கள்தான்! ஆனால், யார் என்ன சொன்னாலும் . . . எப்படியாவது பார்த்துக் கொள்ளலாம்!" என்றாள் பெற்றவள்.

முறுவலித்து, "தெரியும், அம்மா. நேரில் வந்து நடந்ததைச் சொன்னால், நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்! அதற்குள் இந்தப் பெருமாள் அவசரப்பட்டுக் குட்டை குழப்பிவிட்டான்!" என்றான் மகன்.

"அதற்காக அவனை விரட்டி விடாதேடா. பாவம்!"

"சேச்சே! அவனும் தன் கடமை என்று எண்ணியதைத்தானே, செய்திருக்கிறான்! அதற்காக அவனை எப்படி தண்டிப்பது?" என்று எழுந்தான் நிகிலன்.

சற்று யோசித்து, "நான் கண்டபடி பேசிவிட்டேனே, நிக்கிம்மா! அவளும் விருப்பப்பட்டு வரவில்லை என்றாய்! ஒரு வேளை நான் மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்குமோ?" என்று லேசான முகக் கண்றலும், கவலையுமாகக் கேட்டாள் மீனலோசனி.

“சேச்சே! அதெல்லாம் வேண்டாம்மா! உங்கள் நிலையில் யார் இருந்தாலும், அப்படித்தான் பேசியிருப்பார்கள்! எடுத்துச் சொல்லும்போது, அவள் புரிந்துகொள்வாள். அதே மாதிரி . . .”

“அதே மாதிரி . . . ? என்ன அதே மாதிரி?”

“விருப்பமற்று வந்திருப்பவள்! கொஞ்சம் வித்தியாசமாக நடந்தால், கண்டுகொள்ளாமல் விட்டுவிடுங்கள் . . .எதுவானாலும் என்னிடம் . . .என்னிடமே கேளுங்கள்!” என்று, சிறு தடுமாற்றத்துடன் மொழிந்தான் மகன்.

தலையாட்டி மகனை அனுப்பிவிட்டு, அவன் சென்றதும், “அந்தப் பெண்ணோடு சண்டை போடுவேன் என்று நினைக்கிறான் போல! நான் மட்டும் பாவத்தைச் சேர்ப்பேனா?” என்றாள் அன்னை சிறு வருத்தத்துடன்!

“பொறு, பொறு என்று சொல்லச் சொல்லக் கேளாமல் போய், வாயில் வந்ததைக் கத்திவிட்டு வந்திருக்கிறாயே! சந்தேகம் இருக்காதாம்மா?” என்று கனிவாகவே கேட்டார் வீட்டுப் பெரியவர்!

“ஆமாம், குழந்தைக்கும் அவளுக்கும் எந்த அறையைக் கொடுக்கப் போகிறாய்? நிக்கி சொல்லுவதைப் பார்த்தால், அவனது அறையிலேயே இருக்கச் சொல்வது முடியாது போல இருக்கிறதே! குழந்தையையும் வைத்துக்கொண்டு, மூன்று பேருக்கு இடமும் போதாது.”

“ஆமாமில்லை? இப்போது . .. நிகில் அறையோடு ஒட்டினாற்போல இருக்கும் பெரிய அறையைத்தான் கொடுக்க வேண்டும்! ரஞ்சியின் அறை! வருத்தப் படுவாளோ? ஆனால், நிகிலுக்குத் திருமணம் ஆனதும், அவன் குடும்பத்துக்கு அந்த அறை தேவைப்படும் என்று அவளுக்கும் தெரியும்தானே? அதனால், கோபப்பட மாட்டாள். . . .பாவம், என் செல்லம்! என்ன பாடு படுகிறாள் என்று நினைக்கும்போது எவ்வளவு வேதனையாக இருக்கிறது? “என்றாள் மீனலோசனி வருத்தத்துடன்!

ஒரு பெருமூச்சு விட்டு, “ஒரு வேளை, நிகில் சொல்லுகிற மாதிரி, மாப்பிள்ளை பிரச்சினை சரியாகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!” என்றாள் ஏக்கத்துடன்!

“ச்சு! ஒரு பேரன் கிடைக்கிறான் என்று மட்டும் நினை! மற்றபடி, மாப்பிள்ளையின் பேச்சில், எந்த நம்பிக்கைக்கும் இடம் இருப்பதாக, எனக்குத் தெரியவில்லை! ரஞ்சி படிப்பு, தொழில் என்று மனதை வேறு புறம் திருப்புவதுதான் நல்லது!” என்றார் சுந்தரம் மரத்த குரலில்.

“பேரன்!” என்று அதுவும் மீனலோசனியைப் பெருமூச்சு விடவே வைத்தது! “இரண்டு வயசுக்கும் பெரிய பையனைப் பேரன் என்று யார், யாரிடம் எப்படிச் சொல்வது? அக்கம் பக்கம், உறவு சொந்தம், பார்த்தவர்கள் பழகியவர்கள் எல்லோர் வாய்க்கும் அவலாக ஆகிவிடுமே! எப்படியெப்படிப் பேசுவார்கள் என்று எண்ணும்போதே, எனக்கு உடம்பு கூசுகிறது! இந்தப் பையனும்தான் கொஞ்சம் ஒழுங்காக இருந்திருக்கலாம் . . .இப்போது, இப்படி ஒரு . . “

“அதென்ன “இப்படி ஒரு” ? சிறு வயதில் ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் மொத்தமாகப் பணத்தைப் பிள்ளையிடம் கொடுக்க வேண்டாம் என்று, அன்றைக்கு எவ்வளவு சொன்னேன்? உன் அப்பாவுக்கும் புரியவில்லை., உனக்கும் புரியவில்லை! பேரன் கேட்டான் என்று தாத்தா கொடுக்க, நீயும் தாளம் போட்டாய்! இது அறுவடை நேரம், மீனா! ஏதோ, நிகிலன் ஒரேயடியாக நாசமாகி விடவில்லை என்று சந்தோஷப்படு! வீணாக எதையாவது பேசி, வேதனையை இழுத்துக் கொள்ளாதே!” என்றார் சுந்தரம்!

“எனக்கு வருத்தமாக இராதா? பிள்ளை திருமணம் பற்றி எத்தனை கனவு கண்டேன்!”

“இருக்கலாம்மா! ஆனால், அதனால் இப்போது என்ன பிரயோஜனம், சொல்லு? எப்படியும், மருமகளும், பேரனும் வரப் போகிறார்கள்! இதை நல்லவிதமாக ஏற்றுக் கொண்டால், எல்லோரும் பிரியமாகவும், அமைதியாகவும் இருக்கக் கூடும்! குறைந்தபட்சமாக, நிக்கியேனும்! எனவே, அதற்கு முயற்சி செய்!” என்று முடித்துவிட்டு எழுந்த கணவனின் குரலுக்குப் பணிந்து, தானும் எழுந்தாள் மீனலோசனி.

கணவனின் சொல்லை ஏற்றுக் குடும்ப அமைதிக்காக மீனலோசனி செயல்பட, அதே சமயத்தில் சுசிதாவின் நிபந்தனைகளும், அவளது போக்கும், வீட்டில் என்ன மாதிரியான களேபரங்களை ஏற்படுத்தப் போகிறதோ என்ற கலக்கத்துடன், கையில் பொருட்களடங்கிய ஒரு பாலிதீன் பையுடன் கடையிலிருந்து அவள் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் நிகிலன்!

அத்தியாயம் -10

அந்த சூப்பர் மார்க்கெட்டின் முன் காரை நிறுத்தும்படி சுசிதா சொன்னபோதே, நிகிலனுக்கு உள்ளே நெருடல்தான்!

மகனுக்குத் தேவை என்று கருதிய அனைத்தையும் மதுரையிலேயே வாங்கியாகிவிட்டது! அவளுக்கு வேண்டிய ஒரு சிலவற்றையும், அங்கேயே சுசிதா வாங்கிக் கொண்டாள். அவளது காசில்தான்.

சாதாரணப் பொருட்களைக் கூட, விலை, செலவைக் கணக்கிட்டு அவள் வாங்குவதை, ஒரு விதக் கையாலாகாத்தனத்துடன் அவன் பேசாமல்தான் பார்த்துக் கொண்டிருந்தான்!

அவளது செலவு, அவளது பொறுப்பு என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறானே! அவளாகக் கேளாமல், அவன், அதில் எப்படித் தலையிட முடியும்?

வரும் வழியிலும், இங்கே மதியத்துக்கும் தான் உண்ட உணவுக்கு விலை கணக்கிட்டு அவள் பணம் கொடுத்ததையும், உள்ளூர வலித்ததை மறைத்து, மாறு பேசாமல் வாங்கிக் கொண்டான்.

சொல்லப் போனால், அது மனதுக்கு இவ்வளவு கஷ்டம் தரக் கூடும் என்று, அவனே எதிர்பார்த்திருக்கவில்லை!

ஆனால், ஒத்துக்கொண்ட நிபந்தனை! மாற்ற, மறுக்க முடியாது!

ஆயினும், அப்போது ஒரு சிறு ஆறுதலும், அவனுக்கு ஏற்பட்டிருந்தது!

வீட்டுச் சாப்பாட்டுக்குக் கூட, இதே போல அவனிடம் தருவாள்., சத்தமின்றி வாங்கி வைத்துக்கொண்டால், விஷயம் அவர்களுக்குள்ளேயே இருந்து விடும் என்று எண்ணினான். ஓரளவுக்கு, அப்படித்தான் எதிர்பார்த்தும் இருந்தான்!

ஆனால், சூப்பர்மார்க்கெட் பைக்குள் தெரிந்த ரொட்டி, சாஸ் பாட்டில்கள், அவனது அந்தக் கனவைத் தகர்த்தன.

அப்போதும் மெதுவாக, “இதெல்லாம் எதற்காக, சுசி? வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்ளலாமே!” என்று சொல்லிப் பார்த்தான். அவளது முகம் மாறிய விதத்தில், “இப்போது போலப் பணம் தந்து விடலாமே.” என்று, அவசரமாகச் சேர்த்தான்.

ஆனால், “உங்கள் வீட்டுச் சாப்பாடா? அந்த நட்சத்திர ஹோட்டல் உணவுக்கெல்லாம், என் சம்பளம் கட்டி வராது!” என்று சுசிதா

மறுத்தாள்.

வருவோருக்கெல்லாம் விரும்பி உணவு படைக்கும் தாயாரின் வருத்தம் பெரிதாகத் தோன்ற, “எளிய உணவும் இருக்கும், சுசி! உடம்பு சரியில்லாமல் போன பிறகு, அப்பா, அப்படித்தான் சாப்பிடுகிறார்! அதிலும், இரவுக்கு இட்டிலி, இடியாப்பம் போலத்தான் இருக்கும். உனக்கு விருப்பமானதை எடுத்துக் கொள்ளலாம்!” என்று சொல்லிப் பார்த்தான் அவன்.

“என் விருப்பம் இதுதான்!” என்றாள் அவள் சுருக்கமாக. முடிவாகவும்.

மேலே பேசப் பிரியமற்றவள் போல அவள் வெளியே பார்க்கவும், விபுவின் மழலைக் குரலின் அளப்பு தவிர, அவர்களிடையே மௌனம் நிலவியது.

வீடு நெருங்கவும் காரின் வேகத்தைக் குறைத்து, “அப்பா, அம்மா தவிர வேலையாட்கள் இருப்பார்கள்! தவிர சமையல்காரம்மா, தோட்டக்காரன் என்று பணி புரிகிறவர்கள் ஆறு பேர் இருப்பார்கள்! அம்மாவிடம் ரொம்பவும் ஒட்டுதலாக இருக்கிறவர்கள்! உனக்குப் பிடிக்காத எதுவும் நடந்தால் . .நடக்காமல் அம்மா பார்த்துக் கொள்வார்கள். மீறி எதுவும் நடந்தால், என்னிடம் சொல்லு! நா . .ன், நான் பார்த்துக் கொள்கிறேன். “ என்றான் நிகிலன் மெதுவாக.

அவனைத் திரும்பிப் பார்த்து, “வேலையாட்கள், வீட்டாரின் கருத்தைப் பிரதிபலிக்கிறவர்கள் என்று சொல்வார்கள்! உங்கள் அம்மாவின் கருத்து, ஏற்கனவே தெரிந்த விஷயம்! ஆனால், நான் இங்கே சண்டை போட வரவில்லை! விபுவின் நன்மைதான் எனக்கு முக்கியம்! உங்களுக்கும் . . . மற்ற எல்லோருக்குமே அது முக்கியமாக இருக்கும்வரை, மற்ற எதைப் பற்றி, எனக்கு அக்கறை இல்லை! நானுண்டு., என் வேலையுண்டு என்று ஒதுங்கி விடுவேன்.” என்றாள் அவள். “ஆனால், அதற்காக யாரேனும் வம்புக்கு இழுத்தால், சும்மா இருப்பேன் என்றும் எதிர்பார்க்க வேண்டாம்!”

ஆதங்கத்தில், தாயார் சில சமயம் புலம்புவது உண்டு! அதை இவள் வம்புக்கு இழுப்பதாக எடுத்துக் கொள்வாளோ? அன்னையை எவ்வளவு பொறுத்துப் போகச் சொல்வது?

கல்லாக இருக்கும் மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டுக் காரை கேட்டினுள் திருப்பியவனுக்கு, உணர்ச்சிக் குவியலாக, நினைத்ததை அப்படியே வினாடிக்கு வினாடி முகத்தில் காட்டும் பழைய சுசிதா நினைவுக்கு வந்தாள்.

அவளது துள்ளலும் துடிப்பும், சிரிப்பும் கலகலப்பும்!

எல்லாம் அடங்கி, இப்படி இறுகிவிட காரணம் அவன் என்றால், பட வேண்டியதுதானோ?

பிராயச்சித்தம் என்பதும் வெறும் பண்டமாற்று வியாபாரம் அல்ல. உள்ளம் நொந்து வருந்தி, உருகித் திருந்தித்தான் செய்தாக வேண்டும்!

அவன் வருந்தத் தயாராகத்தான் இருந்தான்! ஆனால், தாயார்? அவள் ஒரு பாவமும் அறியாதவள் ஆயிற்றே!

மீனலோசனியும், செய்வன திருந்தச் செய்கிறவளாக மகன், மருமகள், பேரன் மூவரையும் நிற்க வைத்து ஆலம் சுற்றியே வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

“ஐ, தீ! சு .டு . ம்!” என்று கண்ணை உருட்டிக் காட்டிய விபு, அந்தக் கணமே மூத்த தலைமுறையைக் கவர்ந்துவிட்டது, நன்றாகவே தெரிந்தது!

அங்கங்கே நின்று குறுகுறுவென்று வேலையாட்கள் எட்டிப் பார்க்கவில்லை என்றால், கூடக் கொஞ்சம் நன்றாக இருந்திருக்கக் கூடும்!

ஆனால், வேலையாட்களை ஓர் இளக்கத்துடனேயே மீனலோசனி நடத்திப் பழகியிருந்ததால், அவர்கள் எல்லோருமே நின்று பார்க்கவும் செய்தார்கள்., அதிர்ச்சியை முகத்தில் காட்டவும் செய்தார்கள்!

அதைக் கண்டுகொள்ளாத பாவனையில், எல்லோருக்கும் பழச்சாறு கொண்டு வா, ஏசியைப் போடு, காரிலிருந்து சாமானை எடுத்துவா என்று ஆளாளுக்கு ஒரு வேலையைச் சொல்லி, எல்லோரையும் அனுப்பிவிட்டு, “அப்பா, உங்கள் மருமகள், பேரன்! சுசி, அப்பா, அம்மா!” என்று அறிமுகம் செய்து வைத்தான் நிகிலன்.

மூத்த தலைமுறைக்கு மதிப்புக் கொடுத்து, சுசிதா அவர்கள் காலில் விழுந்து வணங்குவாள் என்று யாரேனும் எதிர்பார்த்திருந்தால், அலர்களுக்கு ஏமாற்றம்தான்!

ஆனால், ஒரேயடியாக அலட்சியமும் காட்டாமல், “வணக்கம்.” என்றுவிட்டு, “பெரியவர்களுக்கு வணக்கம் சொல்லு, விபு!” என்று மகனிடம் கூறினாள் அவள்.

தாய் சொன்னதை ஏற்று, அரிசிப் பற்களைக் காட்டிக் கும்பிடு போட்டு, விபு தொடர்ந்து ஒரு சலாம் வேறு அடிக்கவும் எல்லோர் முகத்திலும்

முறுவல் பரவியது.

“வாம்மா. உட்கார்ந்து பேசுவோம்.” என்று உள்ளே அழைத்துச் சென்று உட்கார குழந்தைக்கு என்று அவசரமாக வாங்கி வந்த சில விளையாட்டுச் சாமான்களை எடுத்துக் கொடுத்தார்கள்.

“நல்லபடி அறிமுகப் படுத்திக்கொள்ள மட்டும்!” என்று சுசிதாவிடம் கூறி, ஆளுக்கொரு சாக்கலேட்டை விபுவிடம் நீட்டினார்கள்!

எல்லாம் சுமுகமாக நடக்க, சற்று நேரம் எல்லோருமாகக் கொஞ்சம் கஷ்டப்பட்டு, ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்!

பெரும்பாலும் விபுவைப் பற்றிய பேச்சுதான்! அவனுக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது? பிறந்த நாள் எப்போது என்று, யாருக்கும் சங்கடமற்ற, சாதாரணக் கேள்விகள்.

விபுவும் சந்தோஷமாக விளையாடவே, அவ்வப்போது சிரிக்கவும் முடிந்தது!

சற்றுப் பொறுத்து, “இங்கே பக்கத்தில் “கிரஷ்” ஏதாவது இருக்கிறதா?” என்று சுசிதா கேட்டபோது, உரையாடலில் முதல் தேக்கம் நேர்ந்தது!

திகைத்து, “அ . .அது எதற்கு? “ என்றாள் மீனலோசனி.

இது கூடவா தெரியாது என்று உள்ளூரக் கடுத்தபடி, “நான் வேலைக்குச் செல்லும் சமயத்தில் விபுவைப் பார்த்துக் கொள்தற்காக!” என்று பதிலிறுத்தாள் சின்னவள்.

“வேவேலையா? “

மனைவி ரொம்பவே குழம்புவதைப் பார்த்துவிட்டு, “அங்கே திருச்சியில் இருந்தபோது, அதுதான் பழக்கமாக இருந்திருக்கும். இங்கே என்ன, எப்படி என்று பிறகு யோசிப்போம்!” என்று, அப்போதைக்கு விஷயத்தைத் தள்ளிப் போட்டார் சுந்தரம்.

“பழச்சாறு குடிக்கவில்லையே! வேண்டுமானால், சூடாக ஏதாவது கொண்டு வரச்சொல்லவா?” என்று மீனலோசனி உபசரணையாகக் கேட்டாள்.

அவளுக்குப் பதில் சொல்ல வாய் திறந்த சுசிதா, ஒரு கணம் தயங்கிப் பின், “வந்ததும், அங்கே சாப்பிட்டது, எனக்கு வேறு எதுவும் வேண்டாம் போல இருக்கிறது!” என்று முடித்தாள்.

நிகிலனிடம் ஒரு தரம் பார்வை சென்று மீள, “விபு பால் மட்டும்தான் குடித்தான்.” என்று மறுபடியும் பேச்சைப் பிள்ளையிடம் திருப்பினாள்.

குறிப்புணர்ந்து, “இரவு எத்தனை மணிக்கு சாப்பிடுவான்? என்ன சாப்பிடுவான்.?” என்று மீனலோசனி விசாரித்தாள்.

“சப்பாத்தி, தோசை, பால்சோறு எதுவானாலும், விபு பசிக்குச் சாப்பிட்டுவிடுவான்! மணி ஏழு தாண்டிவிட்டது! பயண அலுப்பு வேறு! உணவு தயார் என்றால், கொடுத்துவிடலாம். “ என்றாள் சுசிதா.

“சாதம், தோசையோடு, இட்டிலியும் கூட இருக்கிறது! சாம்பார், சட்டினி இரண்டும் இருக்கும். அவனுக்குப் பிடித்தபடி இப்போதே கொடுக்கலாம்! “ என்று மீனலோசனி சாப்பாடு எடுத்து வைக்கும்படி, சமையலறைக்கு ஆள் அனுப்பினாள்.

விபுவுக்கு அவள் ஊட்டும்வரை காத்திருந்துவிட்டு, பிறகு நால்வருமாக உண்பது என்று திட்டம் என்று உணர்ந்தபோதும், அப்போதைக்கு ஒன்றும் பேசாமல், மகனுக்கு ஊட்டினாள், சுசிதா.

விபுவின் கைகளிலும் ஓரிரு தோசைத் துண்டுகளைச் சாப்பிடக் கொடுத்தாள். அவன் உண்டு முடித்ததும், “இவன் கைகளைக் கழுவுவதோடு, உடம்பையும் கழுவிவிடுவேன். எங்கள் சாமான்கள் எங்கே இருக்கின்றன?” என்று, நிகிலனைக் கேட்டாள்.

“ நிகில், உன் அறைக்கு அடுத்த அறை! சாமான்களை அங்கேதான் வைத்திருக்கிறது. ஒட்டினாற்போலக் குளியலறை. உன் மனைவியைக் கூட்டிப்போய், அறையைக் காட்டப்பா. அங்கே வேறே எதுவும் தேவை என்றால், தயக்கமின்றிச் சொல்லும்மா. “ என்றார் சுந்தரம்.

“குழந்தை வேலை முடிந்ததும் வாம்மா. எல்லோருமாகச் சாப்பிடலாம்!” என்ற மீனலோசனியின் குரல் காதில் விழுந்ததாக, சுசிதா காட்டிக் கொள்ளவில்லை.

யாரும் அவளை ஒதுக்கவில்லை., அவமதிக்கவில்லை! ஆனாலும் எதற்கு இந்தத் தொல்லை என்று, சுசிதாவுக்கு அலுப்பாகவே இருந்தது! சற்றுத் தனியாக இருக்க மாட்டோமா என்று அவள் மனம் ஏங்கியது!

குளியலறையில் மகனின் கைகளைக் கழுவிவிட்டு வந்துதான் அறையையே சுசிதா சரியாகப் பார்த்தாள்.

மிகவும் வசதியான அறைதான். ஆனால், கட்டிலும் மெத்தையும், டீவியும் ஏசியும் இதர வசதிகளும் அவள் அறியாதது இல்லை! அத்தனையும் இழக்கக் காரணமானவன் என்பது, இன்று மீண்டும் கிடைக்கச் செய்ததாலேயே மறந்துவிடுமா?

அல்லது, இதற்காக ஏங்கிக் கொண்டிருந்தாளா?

இரண்டு ஆண்டுகளாகத் தான், தன் பிள்ளை என்று, ஒற்றை அறையிலும் தன் விருப்பம் போல இருந்து பழகியவளுக்கு, இந்தப் பெரிய வீட்டில், மூச்சு முட்டுவது போல எரிச்சல்தான் வந்தது!

மனதில் இருப்பதை மறையாது காட்டி விடலாம் என்று பார்த்தாலோ, பாவம், இந்தப் பெரியவர்கள் என்று அதற்கும் மனம் வரவில்லை!

எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போய்விடலாம் என்றாலும், வந்தது விபுவுக்காக அல்லவா? அவனது நன்மைகளை எப்படி அலட்சியப் படுத்துவது?

ஏற்றாற்போல, "அம்மா, குட்டி . .கட்டில்! விபுக்கா?" என்று, பெரிய படுக்கையோரம் கிடந்த சிறு தொட்டில் கட்டிலை மகிழ்ச்சியோடு விபு தொட்டுப் பார்த்து மகிழ்ந்தான்.

அதுவும் அழகாகவே இருந்தது! கட்டில் போலவும், அதே சமயம், தொட்டில் போல ஆட்டுவதற்கும் வசதியாகத் தலை, கால் புறங்களில் தாங்கிகளில் தொங்கும்படியாக இணைக்கப் பட்டும் இருந்தது! உள்ளே பட்டு மெத்தை, தலையணைகள்!

குதிக்கும்போது மகன் விழுந்துவிடாமல் இருப்பதற்காக, தாங்கிகளில் இருந்த கொண்டிகளை இழுத்து மாட்டிக் கட்டிலை ஆடாமல் இருக்கச் செய்துவிட்டு, அவனைத் தூக்கி அதில் விட்டான் நிகிலன்.

விபு மகிழ்ச்சியோடு குதிப்பதை அவன் ரசிப்பதைப் பார்க்கும்போது, சுசிதாவுக்கு இன்னமும் ஆத்திரம் வந்தது! இவனால் அல்லவா, மூத்த தலைமுறையான மீனலோசனியின் அழைப்புக்குப் பதில் சொல்ல முடியாமல், சொல்லாமல் வர நேர்ந்தது!

"என் நிபந்தனைகள் உங்களுக்கு நினைவிருக்கும். நான் இங்கே சாப்பிடமாட்டேன் என்று, உங்கள் தாயாரிடம் சொல்லி விடுங்கள்!" என்று கறார்க் குரலில் கூறிவிட்டுப் பெரிதாக இருந்த பெட்டியைத் திறந்தாள் சுசிதா!

மனைவியின் பிடிவாத முகம் நம்பிக்கை அளிக்காதபோதும், "உனக்கு என் மீதுதானே, கோபம்? அம்மாவை வருத்துவானேன்? வரும்போதே சொன்னேனே, அது போல, வேண்டியதை உண்டுவிட்டு, அதற்கான பணத்தைத் தருவதில் என்ன பிரச்சினை? மதுரையிலிருந்து வருகிற வழியில் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் தரவில்லையா? அது போல எண்ணிக் கொள்ளேன்!" என்று, மீண்டும் சொல்லிப் பார்த்தான் நிகிலன்.

ஆனால், "அது வேறு!" என்றாள் சுசிதா. "அத்தோடு, முதலிலேயே என்

முடிவைச் சொல்லி, அதற்கு நீங்கள் ஒத்துக்கொண்ட பிறகுதான், இந்தத் திருமணம் என்கிற கூத்துக்கே நான் சம்மதித்தேன். உறுதிமொழி என்பது, உங்களுக்கு எப்படியோ? என்னைப் பொறுத்தவரையில், யாருக்காகவும், அதை நீர்த்துப் போக, நான் விடமாட்டேன். இப்படிக் கூடத்தான்!” என்று மெத்தைக் கட்டிலைக் காட்டிவிட்டு, பெட்டியிலிருந்து ஒரு தலையணையையும், கைத்தறிப் போர்வையையும் வெளியே எடுத்துத் தரையில் போட்டாள் அவள்!

அதற்கு மேல் உணவு பற்றி நிகிலன் அவளிடம் வாதாடவில்லை.

ஏசியை ஆன் செய்து, உள்ளே ஏதோ செய்தான். “விபுவுக்காகக் குளிர்ச்சியைக் கொஞ்சம் குறைத்து வைத்திருக்கிறேன். சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள். குட்நைட்!” என்றுவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

நக்கலா? ஆத்திரத்துடன் அவனது முதுகை வெறித்தாள் அவள்!

அத்தியாயம் -11

சாஸ், ஜாம் தடவி நாலு ரொட்டித் துண்டுகளோடு இரவு உணவை முடித்துக் கொள்வது, சுசிதாவுக்கு ஒன்றும் கடினமாக இருக்கவில்லை! ஆனால், புது இடத்தில் படுத்ததாலோ என்னவோ, வழக்கம் போல அயர்ந்து உறங்கவும் முடியவில்லை!

ஏசியின் இதக் குளிர் உடலுக்கு சுகமாக இருந்தபோதும், அது பற்றி நிகிலன் சொன்னது, நெருஞ்சியாய் உறுத்தியது!

அவன் இயல்பாகவும் சொல்லியிருக்கலாம்! மகனை முக்கியமாகக் கொண்டுதானே, திருமணமும், தாயும் மகனும் இங்கே வந்ததும்? அவனுக்கு இதமாகச் செய்திருப்பதாக நிகிலன் சொல்லியிருக்கவும் கூடும்!

ஆனால், இது மட்டும் "நீர்த்துப் போவதி"ல் அடங்காதா என்று குத்தலாகச் சொன்னானோ என்று முதலில் தோன்றிய சந்தேகமும், அவள் என்ன முயன்றும் மறைவதாக இல்லை என்பதோடு, அவளுக்கே அப்படித்தானோ என்றும் தோன்றத் தொடங்கிவிட்டது!

அதற்காக ஏசியை நிறுத்துவது என்றால், அதுவும் மடத்தனமே. இங்கு வந்தத[ின் அர்த்தமே வீணாகிப் போகும்!

ஆனால், இங்கே வந்ததுதான் தப்போ?

அந்த மாதிரி அடி பட்டுப் பலவீனமாக இருந்த சமயத்தில் இந்தப் பெரிய முடிவை எடுத்திருக்கக் கூடாது! நிதானித்து யோசிக்கும் வலு இல்லாத வேளையில், நிகிலன் ஏதோ சொன்னதற்குச் சும்மாத் தலையாட்டி விட்டாள் போல!

இப்படி ஆயிரம் சஞ்சலங்களால் அல்லல்பட்டுப் போனாள் அவள்!

மறுநாள் காலையில், சுசிதாவுக்கு உலகம் வேறு விதமாகத் தோன்றியது.

பட்டு மெத்தை, தலையணையில் தூங்கும் மகனைப் பார்க்கையில், உரிய இடத்தில் அவனை வைத்திருப்பதாகப் பெருமிதமாக இருந்தது!

விபுதானே முக்கியம்?

அவசரமாக ஓடிப் போய்க் குளித்துவிட்டு வந்தால், தொட்டில் கட்டிலின் அருகே நின்று, நிகிலன் மகனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் முகத்தைப் பார்த்ததும், "கதவைத் தட்டினேன். நீ குளித்துக் கொண்டிருந்ததால் கேட்கவில்லை போலும்! விபுவுக்குப் பால், கார்ன் ஃப்ளேக்ஸ் எல்லாம் அம்மா அனுப்பினார்கள். வேறு ஏதேனும் தேவை

என்றால், சொல்லு!” என்றான்.

“நானே கீழே வந்து எடுத்து வந்திருப்பேனே!”

“செய்யலாம். ஆனால், வந்த மருமகள், வீட்டில் ஒரு காஃபிகூடக் குடிக்கக் காணோமே என்று வேலையாட்கள் பேசுவார்களே என்ற பயம் அம்மாவுக்கு! குற்றம் கூறுவதாக எண்ண வேண்டாம்! அம்மாவின் கருத்தைச் சொன்னேன்! அவ்வளவே!” என்றான் நிகிலன்.

“என்றைக்கோ தெரியத்தானே, போகிறது?”

“அன்றைக்குத் தெரியட்டுமே! இன்றைக்கே என்ன அவசரம்?”

இது பதில் சொல்ல முடியாத கேள்விதான்! பதில் சொல்லியாக வேண்டியதும் இல்லை!

ஏசி பற்றிக் கேட்கலாமா என்று யோசித்துவிட்டு, மாறாக முடிவு செய்தாள். சாதாரணமாகத்தான் சொன்னேன் என்றால், அவள்தான் கண்டபடி யோசிக்கிறவளாகி விடுவாள்!

“இந்தப் பக்கம் “கிரஷ்” ஏதாவது இருக்கிறதா என்று, உங்களுக்கு ஏதாவது தெரியுமா?” என்று அவனிடம் வேறு விவரம் கேட்டாள் சுசிதா.

“இந்த விவரம் எல்லாம் அம்மாவுக்குத்தான் தெரியும். ஆனால் . . .”

“உங்கள் அம்மாவுக்குத்தான் “கிரஷ்” என்றாலே என்னவென்று புரியவில்லையே!” என்றாள் அவள் சிறு ஏளனத்துடன் கூடிய குரலில்.

“என்னவென்று அம்மாவுக்குத் தெரியும். ஆனால், அது எதற்கு என்றுதான், அவர்களுக்குக் குழப்பம்! “ என்றான் நிகிலன் சற்றே அழுத்தமான குரலில்.

சட்டென அவன் முகத்தைப் பார்த்தவளுக்கு ஒன்று புரிந்தது! என்னதான் அவளது நிபந்தனைகளுக்கெல்லாம் தலையாட்டி, அவளை மணந்து வந்திருந்தாலும், அவனுடைய தாயாரை, ஒரு சிறு விஷயத்தில்கூட, அவன் விட்டுக் கொடுத்துவிட மாட்டான்!

பரவாயில்லையே என்றுதான் சுசிக்குத் தோன்றியது!

ஏனெனில், அவளும் அப்படித்தான்! பெற்றோரைப் பற்றி, அவளுக்கு வெறியே உண்டு! அவர்களுக்குத் தலையிறக்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று . . .இல்லை! இது நினைக்கக் கூடாத விஷயம்!

லேசாகத் தலையை உலுக்கி, நடப்புக்கு வந்தாள்.

என்ன சொன்னான் என்று வேகமாக யோசித்து, “எதற்கு என்றால், என்ன அர்த்தம்? நான் வேலைக்குச் செல்லும்போது, இவனைப்

பார்த்துக்கொள்ள ஆள் வேண்டுமே!" என்றாள்.

"அதற்குத்தான் வெளியே போவானேன் என்றார்கள்! வீட்டில் வைத்துப்பார்த்துக் கொள்ள அவர்களே இருக்கும்போது, எதற்காக வெளியே அனுப்புவது என்று கேட்டார்கள்."

"ஓ! " என்றாள் சுசிதா!

அவள் யோசிக்கையில், "இன்னும் சில மாதங்கள் ஆனபிறகு, ஆதாவது "ப்ளே ஸ்கூலி"ல் சேர்த்துவிடலாம்! ரஞ்சி . .என் அக்கா பிள்ளைகளை அப்படித்தான் சேர்த்தோம்!" என்றான் நிகிலன்.

ஆக, இவனுக்கு ரஞ்சி என்று ஓர் அக்கா இருக்கிறாள்! அந்த "ரஞ்சி" ரஞ்சனியோ, ரஞ்சிதமோ? பெரிதாகக் கேட்டறியும் ஆவல் இல்லாமல் பேசாதிருந்தாள் அவள்.

அவனும், அவள் எதையும் கேட்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பே இல்லாமல் தொடர்ந்து "இப்போது நான் அக்கா வீடு வரை போய்விட்டு வருகிறேன். அவளிடமும் நானே நேரில் சொல்வதுதான் சரியாக இருக்கும்! அதற்குள் உனக்கு ஏதாவது தேவைப்பட்டால், என் செல்லில் தொடர்பு கொள். அல்லது, அந்த ஃபோனில் ஒன்று எண்ணை அழுத்தினால், யாராவது வந்து, வேண்டியது கேட்டுச் செய்வார்கள்! கீழே போய் உட்கார்ந்திருப்பது என்றாலும் செய்!" என்றான் அவன்.

"அங்கேயும் காலில் விழுவீர்களா?" என்று கிண்டலாகக் கேட்டாள் சுசிதா.

"இங்கே போலவே, அங்கேயுமே காலில் விழ வேண்டியிராது! எடுத்துச் சொன்னால் புரிந்துகொள்ள முடியாது என்று காதையும், கருத்தையும் மூடி வைத்துக் கொள்கிறவர்கள் இங்கே யாருமில்லை!" என்றுவிட்டுக் கிளம்பினான் அவன்.

அப்படியானால், அவள் புரிந்துகொள்ள மறுப்பதாகக் குற்றம் சாட்டுகிறானா? புரிந்து கொள்ளாமலா, ஒற்றை அறையே என்றாலும், அவள் வீட்டுக்கு ராணியாக இருப்பதை விட்டுவிட்டு, இங்கே வருவாள்?

அநியாயமாகக் குறைகூறும் நிகிலனை, அவனுடைய தமக்கையாவது நன்றாகத் திட்டித் தீர்க்கட்டும்!

அவளது சாபம் பலித்ததே போல, ரஞ்சனி, தம்பியின் பேச்சைக் காதில் வாங்கவே இல்லை!

"குணாதான் முதுகில் குத்திவிட்டார் என்று பார்த்தால், நீயுமா இப்படிக் காலை வாருவாய்? பேதமின்றிப் பழகிப் பேரைக் கெடுத்துக்

கொண்டாய் என்று நினைத்தால், பிள்ளையோடு வந்து நிற்கிறாயே! பாவம், அம்மா! ஏன் நிக்கி, அவரும் நீயுமாய் எங்களையெல்லாம் நிம்மதியாக இருக்க விடவே கூடாது என்று இருக்கிறீர்களாடா?" என்று கோபமாகப் பொரிந்து கொட்டினாள் அவள்.

"அக்கா, ப்ளீஸ்! பழைய கதையை விட்டுவிடு! இப்போது, சுசிதாவை மணந்துவிட்டேன். இனி நான் தப்பு செய்தால், சொல்லு! என் பிள்ளைக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக நான் ஒரு நாளும் இருக்க மாட்டேன்! இது உறுதி, அக்கா!" என்ற தம்பியின் வாக்குறுதியைக் கூட, அவளுக்கு நம்ப மனமில்லை!

"நாய் வாலை நிமிர்த்த முடியாமாடா? போடா, போ! ஆண்களிடம் உள்ள நம்பிக்கை, எனக்கு அடியோடு போய்விட்டது!" என்றாள் அவள் வருத்தத்துடன்!

"அப்படி ஒரேயடியாகச் சொல்லாதேக்கா! இனி நான் நடந்துகொள்ளும் விதத்தில், உன் நம்பிக்கை இரு மடங்காகப் பெருகப் போகிறது, பார்! . . . இப்போது . .உன் மருமகனைப் பார்க்க, எப்போது வரப் போகிறாய்?" என்று கேட்டான், தமக்கையை அழைக்க வந்தவன்.

"இப்போது வேண்டாம், நிக்கி. என் மனது, இதைச் சரியென்று ஏற்கவில்லை! இந்த மன நிலையில், அங்கே வந்து, அவளிடம் ஏதாவது சொல்லிவிட்டேன் என்றால், காலத்துக்கும் நன்றாக இராது! அம்மாவுக்கும் பிரச்சினையாகிவிடும்! இன்று இவர்கள் பள்ளிக்கு ஏதோ விடுமுறையாம். பிள்ளைகளை வேண்டுமானால், கூட்டிப்போ! தாத்தா பாட்டியைப் பார்ப்பதோடு, உன் . . உன் பிள்ளையை . . அவனோடும் பழகி விளையாடிவிட்டு வரட்டும்!" என்று மக்களை மட்டும் தம்பியுடன் அனுப்பச் சம்மதித்தாள் ரஞ்சனி.

அவளது வாழ்க்கை நிலை பற்றியும் பேச்சு நடந்தது!

படிக்கிற காலத்தில் ரஞ்சனிக்கு நிறைய சினேகிதிகள் உண்டு! திருமணமானபின் எல்லாத் தொடர்புகளையும் அவள் விட்டுவிட்டபோதும், அங்கங்கே சந்திக்கும் சில தோழியர், மற்றவர்களைப் பற்றிய விவரங்களையும் தருவதும் உண்டு!

அவளைப் போல வீட்டரசியாக இருப்பதே சொர்க்கபோகம் என்று ஒரு சிலர் வாழ்ந்திருந்தபோதும், பல்வேறு துறைகளில் உயர்ந்த பதவிகளை வகிப்போரும் பலர் இருந்தனர்.

அப்படி இருக்கும் பலரின் முகவரிகளைத் தேடிப்பிடித்து, அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாளாம்!

அவளைப் போன்ற நிலையில், இந்த வயதில், வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள என்ன செய்வது என்று ஆலோசனை கேட்டிருக்கிறாளாம்!

அவர்களிடம் இருந்து பதில்கள் வந்ததும், அதற்குமேல் என்ன செய்வது என்று தம்பிதான் சொல்ல வேண்டும் என்றாள் ரஞ்சனி.

தொடர்ந்து பழகிக் கொண்டிருக்கும்போதே, உதவி என்றால் ஓடி விடுகிற காலம் இது! பதினைந்து ஆண்டுகளுக்கு முந்திய பழக்கத்துக்காக, யார் அலட்டிக் கொள்வார்கள்? இதை யோசிக்கும் அளவு கூட, இவளுக்கு வெளி உலகம் தெரியவில்லையே!

தன் கடிதங்களுக்கான பதில்களுக்காக வேறு, அவள் ஏங்கி வாட வேண்டுமா?

உள்ளே உருகியதைக் காட்டிக் கொள்ளாமல், "நீ செய்தது, ரொம்பச் சரி அக்கா!" என்று மெச்சினான் தம்பி! "ஆனால், உனக்குப் புரிகிறதில்லையா, அக்கா? ரொம்ப காலமாகத் தொடர்பு விட்டுப்போனவர்கள், அவர்கள் உடனடியாகப் பதில் எழுதுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது! பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்! மேலும் ஒரு தரம் நினைவுபடுத்தவும் வேண்டியிருக்கலாம்!" என்றான் மென்மையான குரலில்!

திகைத்து விழித்துவிட்டு, "பதினைந்து ஆண்டுகளாக நான் அவர்களை மறந்திருந்த மாதிரி, அவர்களும் இருக்கக் கூடும் என்கிறாயா, நிக்கி? இருக்கவும் செய்யலாம்! ஆனால் . . .

ஓரிருவருக்காவது என் ஞாபகம் இருந்தால், அதுவே பெரிதுதான். பார்க்கலாம்! நீ சொன்னது போலப் பொறுத்திருந்து பார்ப்போம்!" என்றாள் தமக்கை, மெதுவாக!

இதுவும், நிகிலனுக்கு வேதனையாகத்தான் இருந்தது!

வீட்டுக்கு வரும் வழியெல்லாம், இரு பிள்ளைகளுக்கும் அப்பாவின் பேச்சுதான்.

அப்பா வரவே இல்லையே., பேசவும் மாட்டேன் என்கிறாரே., அப்பா என்ற வார்த்தையைக் கூட, வீட்டில் சொல்லக் கூடாது என்கிறாளே, அம்மா! எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறதே!

போய், குணசீலனின் சட்டையைப் பிடித்து உலுக்கி, இந்தப் பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய் என்று கேட்கலாமா என்று, நிகிலனுக்கு வரத்தான் செய்தது! ஆனால், இனி அதனால் என்ன பயன்?

பிள்ளைகளுக்காக என்று அவர் திரும்பி வந்தாலும், மன்னிப்பே கேட்டாலும் கூட, ரஞ்சனி அவரை ஏறிட்டும் பார்ப்பதாக இல்லை!

அத்தோடு, மன்னிப்புக் கேட்கும் மனோபாவத்தில் குணசீலன் இருப்பதாகவும் தெரியவில்லை! அவர் இன்னமும், என்னை யார் கேட்பது என்ற முறுக்கில்தான் இருந்தார்!

எதிர்காலமே இல்லாமல் ஒட்டுமொத்தமாகப் பட்டுப்போன உறவு!

விபுவுக்காவது, தாயும் தந்தையும் ஒரே இடத்தில் இருக்கிறார்கள்! என்றைக்கேனும், கணவன் மாறிவிட்டான் என்பதை சுசி உணரக் கூடும் . . . உணர்வாளா?

ரத்த பந்தமோ, என்னவோ, பிள்ளைகள் மூவரும் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொண்டார்கள்!

பேரப் பிள்ளைகளைப் பார்த்ததும், அவர்களுக்குப் பிடித்த பதார்த்தங்களைச் சமைக்கச் சொல்லிவிட்டு வந்த மீனலோசனியின் முகம் எதையோ சொல்ல, தாயின் அருகில் வந்து அமர்ந்து விவரம் கேட்டான் நிகிலன்.

“என்னத்தை என்று சொல்ல?” என்றாள் அன்னை எரிச்சலுடன். “பிள்ளைக்கு உணவு அள்ளிக் கொடுக்கிறாள். ஒரு வாய்க் காஃபி கூடவா குடிக்கக் கூடாது? அந்தம்மா எதுவுமே வேணாங்கிறாங்களே என்று வேலைக்காரி என்னிடம் வந்து கேட்கிறாள்! நான் என்ன பதிலைச் சொல்ல? விரதம், கிரதமாக இருக்கும்., வேணுமானால் அவர்களே சாப்பிடுவார்கள் என்று சமாளித்தேன். ஆனால், என்னமோ மாமியார்க் கொடுமை மாதிரி பார்த்துவிட்டுப் போகிறாள் அவள். வடிவு வேறு வந்து, அந்தம்மாவுக்குக் காரம், புளி கூடாது என்றால் கேட்டுச் சொல்லுங்கம்மா., அது போலச் சமைத்து வைக்கிறேன் என்கிறாள். அதெல்லாம் வேண்டாம் என்றால், அவள் இன்னொரு மாதிரிப் பார்க்கிறாள்! காரை எடுத்துப்போ என்று சொல்லத்தான் செய்தேன்! வேண்டாம் என்று நடந்து வெளியே போனது, உன் அவள்தான்! டிரைவர் நாகு, அவளைப் பரிதாபமாகப் பார்த்து, உச்சுக் கொட்டுகிறான்! மொத்தத்தில், என்னைத் தெய்வமாகக் கொண்டாடிய நம் வேலையாட்கள் நடுவில், இந்த ஒரு நாளில், நான் பொல்லாத ராட்சசி ஆகிவிட்டேன்!” என்று கொட்டித் தீர்த்தாள்!

வருவோர், போவோருக்கெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்கிறவள் தாயார்! முறையற்று வந்திருந்தாலும், மருமகளுக்கும் செய்துபோட, அவள் தயார்தான்! ஆனால், ஏற்றால்தானே?

என்னவென்று சொல்லி, இந்தத் தாயை சமாதானப்படுத்துவது?

அவர்களது பழைய கதையை, இந்த முந்திய தலைமுறைத் தாயிடம் விளக்கிச் சொல்வது, அடியோடு முடியாத காரியம்!

யோசித்து, “சுசிதாவுக்கு என்னிடம் கோபம், அம்மா! அதை அவள் வெளிக்காட்டும் விதம் இப்படி! எனக்காகப் பொறுத்துப் போங்கள்!” என்றான் கெஞ்சுதலாக.

“உன் மேலும்தான் எனக்கு ஆத்திரம் வருகிறது. ஆனால், இந்தக் குட்டிச் செல்லத்துக்காக, உங்கள் இரண்டு பேரையுமே பொறுத்துப் போகிறேன். “ என்றாள் அவனுடைய அன்னை!

அத்தியாயம் -12

விபுவுடன் மூத்த இரு பேரக் குழந்தைகளும் கொஞ்சி விளையாடுவதைக் கண்கள் கனியப் பார்த்தபடி, சற்று நேரம் உட்கார்ந்திருந்த மீனலோசனி, மறுபடியும் மகனிடம் திரும்பினாள்.

“ஆமாம், பார்த்துக் கொள்ளுகிறேன் என்றதும், மகனை விட்டுவிட்டுப் போய்விட்டாளே, இப்போது விபு திடீரென்று அம்மா வேணும் என்று அழுதால், என்ன செய்வது? அதை யோசனை செய்த மாதிரியே தெரியவி[ல்லையே!” என்று, மறுபடியும் குறைப்பட்டவளின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தான் மைந்தன்.

“அப்படியெல்லாம் விபு அழ மாட்டான், அம்மா! அம்மாவை விட்டுவிட்டு, நாள் முழுவதும் “க்ரஷ்”ஷில் இருந்து அவனுக்குப் பழக்கம்தானே? இங்கே பிரியமாகவும் பார்த்துக்கொள்ள நீங்கள் இருப்பதால், [நிச்சயமாக அவன் அழவே மாட்டான்!”

“பாவம்! எப்போதிருந்து, பிள்ளை அப்படித் தனியே கிடந்தானோ? எப்படியும், முதலில் அம்மாவுக்காக ஏங்கி அழத்தானே செய்திருப்பான்!” என்று அதிலேயே உழன்ற மீனலோசனி, கடைசியில் “ஆனால், பெற்றவளுக்கு இல்லாததா? முதலில் விட்டுவிட்டுப் போகும்போது, அவளுக்கும்தான் எப்படி இருந்திருக்கும், பாவம்! “ என்று தானாகவே அந்தப் பேச்சை முடித்தாள்.

பிறகு, “கேட்கவே பயமாக இருக்கிறது! ஆனால், அக்கா எப்படிப்பா இருக்கிறாள்? அதைச் சொல்லு! உன் விஷயத்துக்கு என்ன சொன்னாள்?” என்று மகளைப் பற்றி விசாரித்தாள்.

“அவளது மனம் இருக்கும் நிலையில், இதை ஏற்பது ரஞ்சிக்குக் கடினமாக இருக்கிறதாம்மா! அவள் கொஞ்ச நாள் கழித்து வருவதாகச் சொல்லி, பிள்ளைகளை மட்டும் கூட்டிப் போகச் சொன்னாள்!” என்று விவரம் சொன்ன நிகிலன், மகளின் நிலை பற்றித் தாயார் வருந்தத் தொடங்குமுன், தமக்கையின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும் தெரிவித்தான்.

“ஏதோ செய்யட்டும்! எனக்கு அவளோடு பேச வேண்டும் போல இருக்கிறது! ஆனால், ஆறுதல் சொல்கிறேன் என்று, எப்படியோ அவளை அழ வைத்து விடுகிறேன். அதனால்தான், நீ சொன்னது போல, இப்போதெல்லாம் நானாக ரஞ்சிக்கு ஃபோன் செய்வதே இல்லை! அவள் திடப்பட்டுவிட்டாள் என்று உனக்கு நிச்சயமான பிறகுதான் பேச வேண்டும் என்று இருக்கிறேன்!” என்றாள் அன்னை.

கூடவே, “ஆனாலும், அந்தப் பாவி மனிதர் மாப்பிள்ளை இப்படி அநியாயம் பண்ணுவார் என்று கனவில்கூட எண்ணவில்லையே!” என்றுரைத்துக் கண் கலங்கினாள்.

இந்தப் பேச்சுதான், அக்காவையும் அழ வைப்பது என்று எண்ணியபோதும், அதைச் சொல்லாமலே, “நானும் போய்க் குளித்துக் கிளம்புகிறேன்! அலுவலகத்தில் ஓர் எட்டு எட்டிப் பார்த்துவிட்டுச் சீக்கிரமாக வந்துவிடுகிறேன்!” என்று, நிகிலன் எழுந்தான்.

“உன் மனைவி, அவள் எப்போது வருவாளாம்?”

எப்படிச் சொல்வது? அவனுக்கும் தெரியாது என்பதையும்தான் எப்படிச் சொல்வது?

அதைச் சொல்ல அவமானமாக இருந்தது என்பதோடு, சுசிதாவிடம் அன்னைக்கு ஆத்திரமும் அதிகரிக்கக் கூடும்!

கைக்கடிகாரத்தைப் பார்ப்பது போலப் பாவனை செய்து, “ஐயோ, இவ்வளவு நேரமாகிவிட்டதா?” என்றபடி அவசரமாக ஓடிப் போனான் நிகிலன்.

என்னதான் அவனிடம் கோபம் என்றாலும், எங்கே என்றுகூடச் சொல்லாமலா போவது என்று எண்ணியவாறு, பக்கத்து அறையினுள் எட்டிப் பார்த்தான்.

வேலை செய்ய இருக்கும் நிறுவனத்துக்குப் போய் வருவதாக எழுதி, “டிரஸ்ஸிங் டேபிள்” மீது, வைத்துவிட்டுச் சென்றிருந்தாள் சுசிதா. விபுவுக்காகத் தேவைப் பட்டால் என்று, அலுவலக டெலிஃபோன் எண்ணும் அதில் குறிக்கப் பட்டிருந்தது!

யாருக்கு என்றுகூடக் குறிப்பிட்டிராத, ரத்தினச் சுருக்கமான கடிதம்!

அதுவும் விபுவுக்காகத்தான்!

என்றாலும், மனம் அமைதியுற, எண்ணை செல்லில் பதிவு செய்துகொண்டாலும், அந்தக் கடிதத்தையும் தன்னோடு எடுத்துச் சென்றான் அவன்.

கிளம்புமுன், “சுசிதாவின் அலுவலக எண் இருக்கிறது, அம்மா. ஆனால் அது, அவளது தனி எண் அல்ல! அதனால், தேவை என்றால், என்னையே கூப்பிடுங்கள்.” என்று தாயிடம் சொல்லிவிட்டே தொழிலைக் கவனிக்கச் சென்றான் நிகிலன்.

மதியம் தாண்டி, அவன் திரும்பி வந்தபோது, அவர்களுடைய

தாயின் கட்டளைக் கேற்ப, தீபுவும், தினுவும், பாட்டி மூட்டை கட்டித் தந்திருந்த பலகாரங்களோடு கிளம்பத் தயாராக இருந்தனர்!

“பாருங்கள் மாமா! விபு விழித்ததும், அவனோடு இன்னும் கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு வருகிறோம் என்றால், அம்மா கேட்க மாட்டேன் என்கிறார்கள்! பாடம் படிக்க வேண்டுமாம்., உடனே வரச் சொல்லிவிட்டார்கள்! “ என்று உதட்டைப் பிதுக்கினான் தினு!

மாமனின் காதருகில் வந்து, “மாமா, இதேபோல, ஒருநாள் எங்களை அப்பாவிடம் கூட்டிப் போகிறீர்களா?” என்று தீபா ரகசியமாகக் கேட்டபோது, நிகிலனுக்கே தொண்டையை அடைத்தது!

இரண்டும்கெட்டான் வயது! தந்தை எப்போதுமே, தீபாவுக்கு ஹீரோ!

ஆனால், ரஞ்சனியை மீறி, அழைத்துப் போவதும் சரியல்ல! அப்படியே அழைத்துப் போனாலும், மனிதர் விறைத்துக்கொண்டு இருக்கிற தினுசில், பெற்ற பெண்ணிடமே பேச முடியாது என்று விரட்டிவிட்டால் சிறுமி இன்னும் ஒடிந்து போவாளே!

குணசீலன்தான் எந்த நேரத்தில் என்ன செய்வார் என்றே இப்போது சொல்ல முடியவில்லையே!

வீணாகப் பிள்ளைகளை நோகடிக்கக் கூடாது என்றெண்ணி, “அப்பா ஒரு வெளியூர் வேலையில் மும்முரமாக இருக்கிறார், கண்ணு! அந்த வேலை முடிந்து அப்பா வந்ததும் அவரைப் போய்ப் பார்க்கலாம்!” என்று சமாளித்தான்!

“குட்டித் தம்பியோடு விளையாட நன்றாக இருந்ததா? பாட்டி என்ன பலகாரம் தந்தார்கள்?” என்று பேச்சை மாற்றினான்.

சூதறியாமல் அவன் கேட்டதற்குப் பதில் சொல்லும்போதே தீபாவின் முகம் மலர்ந்துவிட்டது. தொடர்ந்து சிரித்தவாறே, “மாமா, என் பெயர் தீபு! குட்டித் தம்பியின் பெயர், விபு! வேடிக்கையாக இல்லை?” என்று ஆச்சரியமாக வினவினாள்.

தினுவின் கையில் சாக்கலேட் பாக்கெட்டைக் கொடுத்தவாறே, “அதென்னடா, விபு என்று பெயர்?” என்று மீனலோசனி விசாரித்தாள்.

“கடவுள், அம்மா.!” என்றான் நிகிலன் புன்னகையோடு. “நீங்கள் எனக்கு, எல்லாமே நான்தான் என்பதாக, நிகிலன் என்று பெயர் வைத்தீர்கள்! அந்த எல்லா இடத்திலும் நிறைந்து இருப்பவனான கடவுள் என்று பொருள்பட, விபு என்று உங்கள் மருமகள் பிள்ளைக்குப் பெயர் வைத்திருக்கிறாள்!” என்று பெருமைக் குரலில் விளக்கினான்!

“அருமையாகத்தான் யோசித்துப் பெயர் வைத்திருக்கிறாயம்மா!” என்று மீனலோசனி பாராட்டவும், அவசரமாகத் திரும்பிப் பார்த்தால், அப்போதுதான் சுசிதாவும் வீட்டுக்குள் வந்திருந்தாள்!

பிள்ளையைச் சீக்கிரமாகப் போய்க் காண்பதற்காக, வேகு வேகென்று விரைந்து வந்திருப்பாள் போல அவள் முகம் கன்றிச் சிவந்திருந்து!

நிகிலன் அங்கே இருப்பதைக் கண்டுகொள்ளாதவள் போன்று, “விபு ஒன்றும் பிரச்சினை பண்ணவில்லையே?” என்று மீனலோசனியைப் பார்த்து வினவினாள்.

“இல்லை. நல்லபிள்ளையாக இவர்களுடனேயே விளையாடிச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான்.” என்று பதிலிறுத்தாள் மாமியார்.

அதுவரை சுசிதாவைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தினு, “அப்போ நீங்கதான் விபுவோட அம்மாவா? நாங்க மூன்று பேரும் இன்னும் ரொம்ப நேரம், ரொம்ப ஜாலியாக விளையாடியிருப்போம், தெரியுமா? இரண்டு மணிக்கு அவனைத் தூங்கப் போடணும் என்று நீங்க சொன்னீங்கன்னு, பாட்டி அவனைத் தூங்க வைத்திட்டாங்க. இனிமேல் நாங்க வரும்போது அவனைத் தூங்க வைக்க வேண்டாம் என்று சொல்லி விடுங்க! சரியா?” என்று, சிறுவர்களுக்கே உரிய விதமாக வெளிப்படையாகக் கூறினான் தினு.

“அக்கா மகன். பெயர் தினகரன். இவள் பெண், தீபா! தினு, தீபு! இவர்கள், உங்களுக்கு அத்தைடாம்மா.” என்று புன்னகையோடு அறிமுகம் செய்து வைத்தான் நிகிலன்.

“அழகான பிள்ளைகளுக்கு அழகான பெயர்கள்!” என்று சிறுவர்களிடம் முறுவலித்தாள் சுசிதா.

அவளை வியந்து நோக்கிவிட்டு, “எங்கள் அம்மா போலவே, நீங்களும் அழகாக இருக்கிறீங்க, அத்தை!” என்றாள் தீபா.

“அதிருக்கட்டும். பாட்டிகிட்டே சொல்லி விடுறீங்களா?” என்று, அதிலேயே குறியாக நின்றான் தினு.

“அது . . . அந்த நேரம் தூங்காவிட்டால், விபு அழுது தொல்லை செய்வானேம்மா! அதனால் . . .” என்று விளக்க முயன்றவளைக் குறுக்கிட்டு, “அதெல்லாம் மாட்டான், அத்தை! எங்கள் கூடச் சிரித்துச் சிரித்து எப்படி விளையாடினான், தெரியுமா? சிரிக்கிறபோது, யாராவது அழுவாங்களா?” என்றான் தினு!

“ஆமாம் அத்தை! என் முதுகிலே உப்பு மூட்டை தூக்கினபோது,

செம ஜாலிதான்! அவனுக்கு ரொம்பப் பிடித்தது! அதனாலே, அவன் அழவே மாட்டான்!" என்று தீபுவும் கூறவே, சுசிதா இளகினாள்.

"சரிம்மா. அவன் அழாமல் இருக்கிறவரை விளையாடுங்கள்! ஆனால், சிணுங்கத் தொடங்கினாலே, தூங்க விட்டுவிட வேண்டும்!" என்று சம்மதிக்க, இருவரும் "குட் அத்தை!" என்று கத்தி, ஒருவருக்கொருவர் "ஹைஃபைவ்" கொடுத்துக்கொண்டு, சுசிதாவிடமும் திரும்ப, அவளும் தயக்கமின்றிக் கைகொடுக்கவே, பிள்ளைகளுக்கு ஒரே குஷியாகிவிட்டது!

"மாமோவ்!" என்று ஓடிப்போய் அவனோடும் "ஹைஃபைவ்" கொடுத்தார்கள்!

இந்த "ஹைஃபைவ்" இன்னமும் நெருக்கத்தை ஏற்படுத்திவிட, "மாமா, அடுத்த லீவு நாளுக்கும் நாங்கள் இங்கே வரட்டுமா? இங்கேதான் ஜாலியாகச் சிரிக்க முடியுது! அம்மாதான் சிரிக்கவே மாட்டேன் என்கிறாங்களே! ப்ளீஸ் மாமா, வரவா? " என்று கெஞ்சிக் கேட்டனர்.

மீனலோசனியின் முகம் வாடிவிட்டபோதும், நிகிலன் முகம் மாறாமல் காத்து, "ஏதாவது பரீட்சை, வீட்டுப்பாடம் இல்லாவிட்டால், அம்மாவிடம் கேட்டுக் கூட்டி வருகிறேன்!" என்று வாக்களித்தாள்.

"ஹையா!" என்று இன்னொரு சுற்று "ஹைஃபைவு"க்குப் பிறகு, அக்கா மக்களைக் கூட்டிக்கொண்டு நிகிலன் கிளம்பினான்.

ரொட்டி, காய்கள் அடங்கிய பையைத் தூக்கிக்கொண்டு, எதையோ தீவிரமாக யோசித்தபடி மாடிப்படி ஏறிய மருமகளைக் குழப்பத்துடன் நோக்கிய மீனலோசனிக்கு, உண்மையாகவே ஒன்றும் புரியவில்லை!

வந்ததிலிருந்து நத்தையாகச் சுருட்டிக்கொண்டு, கெட்டியான ஓடாக இறுகிய முகத்தை மட்டுமே காட்டிவந்த மருமகளும், தீபு, தினுவுடன் கைதட்டி இணக்கமாகப் பேசிய சுசிதாவும் ஒருத்தியேதானா?

இவர்களுள் யார் நிஜம்?

இப்போதும், ரொட்டியும் காயுமாகத்தான் வந்திருக்கிறாள்! சப்பென்று இதையே சாப்பிட வேண்டும் என்று, அப்படி என்ன பிடிவாதம்?

எல்லாவற்றையும் விடப் பெரிய கவலையாக அவளுக்கு இருந்தது, இன்னொன்று. நிகிலனுடனும், சுசிதா இலகுவாகப் பேசிய மாதிரியே தெரியவில்லையே என்பதுதான்!

அன்று விபுவுக்குப் பால் கலந்து கொடுக்கையில் சுசிதாவின் அருகில் வந்து, "உனக்குத் தம்பி தங்கை இருக்கிறார்களா?" என்று பேச்சுக்

கொடுத்தாள்.

“இல்லை.” என்று சுருக்கமான பதில்தான் வந்தது.

ஆனாலும் விலகிப் போய்விடாமல், “அதில்லை, பேரப் பிள்ளைகளோடு, கையைத் தட்டி என்னவோ விளையாடினாயே . . .” என்று மீனலோசனி இழுக்க, “ “ஹைஃபைவ் “ “என்று மீண்டும் ஒற்றை வார்த்தை ஒன்று வந்தது.

“ஆமாம். அதுதான். அதெல்லாம் எப்படித் தெரியும் என்று, அதுதான் கேட்டேன்!” என்றாள் மாமியார்.

பாலை ஆற்றியபடி, “படிக்கிற காலத்தில், மூன்று ஆண்டுகளுக்கு முன் மற்ற நண்பர்களோடு இப்படியெல்லாம் . .பழக்கம்!” என்றாள் சுசிதா.

பேச்சை வளர்க்காவிட்டாலும், முறிக்கவும் இல்லையே!

“எதுவரை படித்திருக்கிறாய்?” என்று மீண்டும் கேட்டாள் மீனலோசனி.

“எதையும் முடிக்கவில்லை., அம்மா, அப்பா விபத்தில் இறந்துவிடவே, அத்தோடு எல்லாம் முடிந்து போயிற்று!” என்று மகனிடம் பால் தம்ளரைக் கொடுத்தாள் சுசிதா.

எப்படி முடியும்? இந்தப் பிள்ளை . . நிகிலன் . . . என்னென்னவோ கேட்க மனம் துடித்தபோதும், மீனலோசனிக்கு, அதற்குமேல் பேச்சு வர மறுத்தது!

பிள்ளை, பிராயச்சித்தம் என்றல்லவா, மகன் சொல்லியிருக்கிறான்!

மேலும் சில தினங்கள் இப்படியே கழிந்தன.

வீட்டுக்கு வருவோர் போவோர் அதிகரிப்பதும், அவர்கள் விபுவைப் பார்த்து ஜாடை மாடையாக ஃபோனிலும், நேராகவும் ஏதேதோ பேசுவதும், கேட்பதும், வீட்டிலிருந்த மீனலோசனியை வெகுவாகப் பாதித்தன.

மகனிடம் இது பற்றி அவள் கூறி வருத்தப்பட்டபோது, அவன் ஒரு வழி சொன்னான்.

எதுவுமே தெளிவாகத் தெரியாதவரையில்தான், குறுகுறுப்பும் ஆர்வமும்! இன்னதுதான் என்று வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டால்?

விருந்தொன்று வைத்து, அதில் விபுவை எல்லோருக்கும் வெளிப்படையாக அறிமுகப் படுத்திவிடலாம் என்றான் அவன்.

மற்றவர் பார்வையில் காட்சிப் பொருளாக நிற்பது பிடிக்காமல் சுசிதா முதலில் மறுத்தபோதும், விபுவைப் பற்றிய கிசுகிசுப்பு மறையும் எனவும்

அவளும் சம்மதித்தாள்.

விருப்பமற்ற ஓர் உறவை, வாழ்நாள் முழுவதற்கும் ஏற்க அவள் முன்வந்ததே, விபுவுக்காகத்தானே? ஒரு சில மணி நேரம், காட்சிப் பொருளாக நிற்பதைச் சகிக்க முடியாதா, என்ன?

விரைவிலேயே ஒரு விடுமுறை நாளில், மிக முக்கியமான உறவு, நட்பினரோடு, கூடவே தொழிற்சாலை, அலுவலகம் தொடர்பாக முக்கியமான அனைவரையும் அழைத்து விருந்து நடத்த, நிச்சயித்தனர்.

அந்த விருந்து, யாரும் எதிர் பாராத ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தியது!

அத்தியாயம் -13

விருந்து நடத்துவது என்று தீர்மானித்துவிட்டபோதும், அதை நடைமுறையில் நிறைவேற்றுமுன் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது!

குடும்பத்தில் இரு புதிய அங்கத்தினரை அறிவிக்கும் விழா!

இதற்கு வீட்டின் ஒரே மகள் வர மறுத்ததாள்.

“அவரும் நானும் நன்றாக இருந்திருந்தால், நானே முன்னின்று நடத்தியிருப்பேன்! இப்போது குணா இல்லாமல் நான் மட்டும் வந்து, நாலு பேர் வாய்க்கு அவலாவதா? நிக்கியுடைய பையனை விட்டு, எல்லோரும் என் விஷயத்தைதான் அலசி ஆராய்வார்கள்! எங்கே விழா என்றாலும், இருவராகப் போய்விட்டு, இன்று நம் வீட்டு விழாவில் தனியாக வந்து நிற்க, என்னால் முடியாதும்மா! திரும்பத் திரும்ப இதைப் பற்றி வற்புறுத்திப் பேசி என்னைக் கஷ்டப்படுத்தாமல், தயவுபண்ணி விட்டுவிடுங்கள். பிள்ளைகளை வேண்டுமானால் அனுப்பி வைக்கிறேன். கூட்டிப் போங்கள்!” என்று ஒரே பிடிவாதமாக முடித்துவிட்டாள் ரஞ்சனி.

வீட்டு மாப்பிள்ளையிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட வேண்டும் என்பதற்காகவும், ஒருவேளை கணவர் வந்தால், ஒரு வெளித் தோற்றத்துக்காகவேனும் ரஞ்சனி வருவாளோ என்ற ஆசையாலும், குணசீலனை அழைக்கச் சென்றார்கள்!

குறுக்கிடாமல் கேட்டுவிட்டு, “தப்பைத் திருத்துகிறாய். நல்ல காரியம்தான்! ஆனால், இன்றைய சூழ்நிலையில் நான் வருவது முடியாது! என்றேனும், ரஞ்சிக்குப் புத்தி வரட்டும் அப்போது பார்ப்போம். கிளம்புங்கள்” என்று, அவர்களை வழியனுப்ப எழுந்தார் அவர்!

பாவீ, பாதகா, யாருக்கு புத்தியில்லை என்ற கொதிப்பை அடக்கிக்கொண்டு தந்தையோடு திரும்பி வந்தான் நிகிலன்.

ஆனால், இது பேரனை அறிமுகப் படுத்துவதற்கான விழா என்பதால், யாருக்காகவும் அதை நிறுத்தக் கூடாது என்பதில் சுந்தரம் உறுதியாக இருந்தார்!

மகளுக்காக மீனலோசனி சற்றே கலங்கினாலும், சமாளித்துக்கொண்டு விழா ஏற்பாடுகளில் ஈடுபடலானாள்.

தீபுவும், தினுவும், விபுவைப் பார்க்கப் போகிறோம் என்று குதித்துவிட்டு,

“அப்பா வருவாரா, மாமா?” என்று நிகிலனிடம் ரகசியமாகக் கேட்டனர் . இல்லை என்று சொல்ல நேர்ந்தபோது, மீண்டும் குணசீலனிடம் சீற்றம் பொங்கியது, அவனுக்கு!

விபுவுக்கு ஒரு ராஜகுமாரனைப் போல உடை தேர்வு செய்தார்கள்.

சின்னப்பிள்ளைகளுக்கான உடைகள் வரைந்து, ஒரு புத்தகமே போட்டு வைத்திருந்தார் அந்த தையல்காரர்.

மற்றவர்களோடு சேர்ந்து அமர்ந்து, விபுவுக்கான உடையை அதில் தேர்ந்தெடுத்து, அதில் செய்யக் கூடிய சிறு மாறுபாடுகளைப் பற்றிப் பேசி முடிவெடுத்தபோது, வழக்கமான அன்னியத் தன்மை மறைந்து, சுசிதா மனதில் சந்தோஷமாகவே உணர்ந்தாள்

என் பிள்ளை இந்த உடையில் எவ்வளவு அழகாக இருப்பான் என்று உள்ளூரப் பெருமைப்பட்டபோது, அதற்காகக் கூடச் சேர்ந்து ஆலோசித்த மற்றவர்களிடம் இருந்த ஒதுக்கம் வெகுவாக மறைந்து போனது!

அளவு கொடுக்கச் செல்லுகையில், “உங்கள் இருவருக்கும் கூட, நல்லதாக ஏதாவது வாங்கி வந்துவிடுங்கள்!” என்று பொதுவாகச் சொல்லிவிட்டு, வேலைக்காரியிடம் ஏதோ சொல்ல வேண்டியிருப்பது பற்றி முணுமுணுத்தவாறே அவசரமாக உள்ளே போனாள் மீனலோசனி.

சுசிதாவிடம் நேரடியாகச் சொல்ல, அவளுக்குத் தயக்கம்! மகனது உடை விஷயத்தில் சாதாரணமாகப் பேசியபோதும், அவளுக்கு என்றால் மருமகள் எப்படி ஏற்பாளோ என்ற பயம்!

இன்னமும் இந்த வீட்டில் ஒரு வாய்ச் சோறு உண்ணாதவள் ஆயிற்றே!

சற்று நேரம் பேசாமல் காரை ஓட்டிய பிறகு, “அம்மா சொல்வது, விழாவின்போது, நாமும் பளிச்சென்று இருக்க வேண்டும் என்பதுதான். இருக்க வேண்டும்தானே? அதுபோல ஏதாவது வைத்திருக்கிறாயா?” என்று சாதாரணக் குரலில் கேட்டான் நிகிலன்.

“இல்லை. அப்போது . . துணிமணி உட்பட எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன்! எல்லாமே தொடக்கூடப் பிடிக்காமல் அருவருப்பாக இருந்ததால், எதுவும் வேண்டாம் என்று எதையுமே வைத்துக் கொள்ளவில்லை! மாற்றிக் கட்டியது கூட, “இல்லத்”தில் தந்ததுதான். “

அடுத்து இயல்பாக வரக் கூடியது, அப்படி என்ன அருவருப்பு என்ற கேள்வி.

அந்தக் கேள்விக்காக சுசி காத்திருந்தாள்தான்.

ஆனால் அதை விடுத்து, “அப்படியானால், அம்மா சொன்னது போலப் புதிதாக வாங்கி விடலாம்! விபு கூடவே, உனக்கும் தைக்கச் சொல்லி விடலாம்! “என்றான் நிகிலன்.

சற்று நேரம் பேசாதிருந்தாள் சுசிதா.

“வேறு வழியில்லை, சுசி.விபுவை அறிமுகப்படுத்தும்போது, அவனுடைய தாயாக நீயும் ஏற்ற ஆடை, அணிமணிகள் பூண்டிருந்தால்தானே, நன்றாக இருக்கும்? இல்லாவிட்டால், அதுவே இன்னொரு வம்புப் பேச்சைக் கிளப்பி விட்டுவிடும்!” என்று எடுத்துச் சொன்னான் அவன்.

தொடர்ந்து, ஒரு வாக்குவாதத்தை எதிர்பார்த்து அவன் காத்திருக்கையில், “அணியமாட்டேன் என்று நான் சொல்லவில்லையே!” என்றாள் அவள். “விபுவுக்காக உங்கள் கூரையின் கீழ் வாழவில்லையா? அதே போல, இந்த அணிமணிகளுக்குள்ளும் சற்று நேரம் இருந்துவிட்டுப் போகிறேன். ஆனால், விழா முடிந்ததும் திருப்பித் தந்துவிடுவேன். அவ்வளவுதான்!”

உனக்கென்று அளவெடுத்துத் தைத்த சட்டையைத் திருப்பி வாங்கி, நான் என்ன செய்யட்டும் என்று மனதுள் எண்ணினானே தவிர, நிகிலன் வாயால் எதுவும் சொல்லவில்லை!

அனாவசியமான வாதாடல் இன்றி, பட்டும் நகையும் அணிவதற்கு, சுசிதா ஒத்துக் கொண்டதே, அவனுக்குப் பெரிதாக இருந்தது!

ஆனால், இதுதான் சரி என்று தெரிந்துவிட்டால், சுசிதா அனாவசியமாக வாக்குவாதம் செய்வது இல்லை என்றும் அவனுக்குத் தோன்றியது! திருச்சி மருத்துவனையில், திருமணம் பற்றிக் கேட்டபோதும், அனாவசியமாக அவள் வாதாடவில்லைதானே?

வெட்டி வீம்புக்காக, வறட்டு வாதம் பண்ணாதிருப்பது, என்னவோ மிக உயர்ந்த நல்ல குணமாக அப்போது அவனுக்குத் தோன்றியது!

விழாவின் தன்மைக்கு ஏற்ப சேலை வாங்கியபோதும் கூட, அப்படித்தான் இருந்தாள்.

நகைகள் மட்டும் வாங்க வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். “உங்கள் அம்மாவிடம் ஏதாவது இருந்தால் அணிந்துவிட்டுத் திருப்பி விடலாம்! மற்றபடி, ஒரேஒருமுறை அணிவதற்காக, வீணாகச் செலவு செய்ய வேண்டாம்!” என்று, சற்று அழுத்தமான குரலில் அவள் மறுத்தபோது, நிகிலன்தான் வாதாடாமல் வாயை மூடிக் கொண்டான்!

அவன் அறியாதது ஒன்று உண்டு!

அந்தப் பெரிய துணிக்கடையில் பொருத்தமான துணி தேடி வாங்கியபோது, அது போன்ற பழைய நிகழ்வுகள் மனதுள் தோன்றி அவளை அலைக்களித்தது, அவனுக்குத் தெரியாது!

இற்த நிறம், இந்த டிசைன் என்று ஆர்ப்பரித்தவண்ணம் அவள் துணிகள் தேர்வு செய்ததும், பெற்றோர் அவைகளை வாங்கியதும், அணிகையில் பார்த்து ரசித்ததும், பிறகு அத்தனையையும் ஒன்று விடாமல் கொண்டுபோய்த் தானமாகக் கொடுத்ததும் . . . அதன் பிறகு எத்தனை நடந்துவிட்டபோதும், எதுவும் மறந்து போகவில்லையே!

அன்றிரவும் சுசிதா தூக்கமின்றித் தவித்தாள்.

முன்னைப் போல, மகனைத் தொட்டுக்கொண்டிருந்து மனதைச் சமாளிக்கவும் வழியின்றி, அவனுக்குரிய தொட்டில்கட்டிலில் அரசகுமாரனைப் போலத் துயின்று கொண்டிருந்தான் பிள்ளை!

அதை விட்டு, அவனை எப்படித் தூக்கித் தரையில் கிடத்துவது?

என்னென்னவோ எண்ணிப் பிள்ளையை இழக்கிறோமோ, இங்கே வந்ததே தப்போ என்றெல்லாம் சற்று நேரம் சுசியின் மனம் ரோம்பவும் கலங்கிப் போயிற்று!

இல்லை! அப்படியில்லை! விபுவின் நலம்தான் முக்கியம்., அவனுக்கு ஒரு தாயாக இருந்து, அவள் இவ்வளவு கூடச் செய்யாமல் எப்படி என்று பலவாறு தனக்குத்தானே அறிவுறுத்திக்கொண்டு அவள் வெகுவாக முயன்று அமைதியை வரவழைத்தாள் என்பதும், அந்த அமைதியைத் தக்க வைத்துக்கொள்ள அவள் தொடர்ந்து பாடுபட வேண்டியிருந்தது என்பதும் கூட, நிகிலன் அறியாததே!

நிகிலன் மட்டுமல்ல. அந்த வீட்டில் மற்ற யாருமே!

அந்த அளவுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள் அவள். இம்மெனுமுன் மனதை முகத்தில் கண்ணாடி போலக் காட்டி, வார்த்தைகளைக் கொட்டி, வலிய இழுத்துக்கொண்ட வேதனைகள் போதாதா? இன்னமுமா வசமிழப்பது?

நல்ல மாட்டிற்கு ஒரு சூடு!

சில சஞ்சலங்கள் ஏற்பட்டபோதும், விபுவின் வரவினால் வீட்டில் எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது!

பல காலம் கழித்து ஒரு சின்னக் குழந்தையின் தோற்றமும் விளையாட்டும், அவன் எப்படி வந்திருந்தபோதும், எல்லோர் மனதையும்

குளிர்வித்தது.

விபுவும் சும்மாச் சும்மா அழுகிற குழந்தை அல்ல! மிகச் சிறு பிராயத்திலேயே தாயைப் பிரிந்திருப்பதோடு, இருக்கும் சூழலில் மகிழ்ச்சியோடு இருக்கவும் பழகியவன்.

ஆரோக்கியமும் அழகும், கூடவே புத்திசாலித்தனமும் நிரம்பிய அவனது சிரிப்பும் விளையாட்டும், அந்த வீட்டுப் பெரியவர்களான சுந்தரம், மீனலோசனி தம்பதியருக்கு, அவர்கள் பெற்ற பிள்ளைகளின் சிறு பிராயத்தை நினைவூட்டவே, விரைவிலேயே, அவர்களுடைய ஆசைப் பேரன் ஆகிப் போனான் அவன்.

வெகு காலமாக அவர்களோடு இருக்கும் சமையல்கார வடிவு, தோட்டக்காரக் கந்தனுக்கும் விபுவிடம் அலாதிப் பிரியம்! மூத்த வேலையாட்களைப் பின்பற்றி மற்ற எல்லோருக்குமே!

சுசிதாவிடமும் எல்லோருக்கும் மதிப்பு என்றுதான் சொல்ல வேண்டும். அவள் அதட்டிப் பேசுகிறவளாகவோ, அலட்சியம் காட்டுகிறவளாகவோ இருந்திருந்தால், வேறு மாதிரி பிடிக்காமல் போயிருக்கலாம். ஆனால், தானுண்டு, தன் வேலையுண்டு என்று ஒதுங்கிப் போகிற அவளிடம் எல்லாப் பணியாளர்களும் மரியாதையாகவே நடந்துகொண்டனர்.

அந்த வீட்டில் அவள் உண்பது இல்லை என்பதுகூட, நாளடைவில் பழகிப் போய்விட, முன்னைக்கிப்போது, வீடு கலகலப்பாக இருக்கலாயிற்று!

விழா தினத்தை எல்லோருமே ஆவலாக எதிர்க்கலாயினர்.

ஆனால், இதில் இன்னும் ஒரு பிரச்சினை பாக்கி இருக்கிறது என்பதை, நிகிலன் மறந்துவிடவில்லை!

சில குத்துக்கள் படவேண்டியிருக்கும் என்று தெரிந்தே இருந்தாலும், வேறு வழியின்றி, சுசிதாவிடம் அது பற்றிப் பேசப் போனான் அவன்.

“இன்னொரு முக்கியமான விஷயம்! “ என்று மனைவியிடம் தொடங்கினான் அவன்.

“விழாவில் நாம் விபுவை அறிமுகப் படுத்தப் போகிறோம். அதற்குமுன், அவனுடைய தாயான உன்னைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும்! எப்படி, என்ன சொல்வது என்று முடிவு செய்ய வேண்டும்.”

“உண்மையைச் சொல்வது, கஷ்டம்தான் இல்லையா?”

நிகிலன் உதட்டைக் கடித்துக்கொண்டு அசையாமல் நிற்பதைக் காண, அவளுக்கு உள்ளூர உற்சாகமாக இருந்தது!

எனவே, தொடர்ந்து, “உத்தம புத்திரன் என்று எண்ணிய பெற்றோர், நல்லவன் என்று நினைத்த மற்றோர் முன்னே தலை குனிந்து நிற்க நேருமே என்று, பாவம், ரொம்பக் கவலையாகத்தான் இருக்கும்!” என்று, போலியாக வருத்தப்பட்டாள் !

இமை இடுங்க ஒரு தரம் பார்த்துவிட்டு, “இருவரும்தானே தலைகுனிய வேண்டியிருக்கும்!” என்றான் அவன்.

சீறும் பாம்பாய் சுசியின் தலை திரும்பி உயரவும், “தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு, உனக்கும் இருந்ததுதானே?” என்று கேட்டான் அவன்.

என்ன வாய்ப்பு? என்ன வாய்ப்பு! கொஞ்சமாவது அன்பு பாசம் பற்றி ஏதாவது தெரிந்திருந்தால், இப்படிக் கேட்க முடியுமா?

வெறுப்பும் கோபமுமாக மனதுள் குமுறிய வார்த்தைகளை அடக்க முயன்று கொண்டிருந்தவளிடம், “ஸாரி!” என்று மன்னிப்புக் கேட்டான் நிகிலன். “மன்னித்துக்கொள். உன்னை வருத்தும் விருப்பம் எனக்கில்லை! நடந்த பிழையில் பெரும்பங்கு என்னுடையதே என்பதால்தான், பிராயச்சித்தம் செய்வதற்காக நான் உன்னைத் தேடி வந்ததே. மேலும், இப்போது பழைய கதையைப் பேசி ஒரு பயனும் இல்லை! “டாமேஜ் கண்ட்ரோல்” என்பார்களே, அது போல, முடிந்தவரை விபுவுக்கும், அவனுடைய பெற்றோராக நமக்கும் அதிகப் பாதகமின்றி சமாளிப்பது எப்படி என்பதுதான் முக்கியம். . . .”

“கேட்டுக்கொண்டிருக்கிறேன்” என்பதுபோல, சுசிதா அசையாமல் நிற்கவும், நிகிலன் மேலே தொடர்ந்தான். “இருவருக்கும் முன்பே பழக்கம்., எல்லை மீறிவிட்டதில் கோபம் கொண்டு பிரிந்து போய்விட்டாய்., பிள்ளை விவரம் தெரிந்ததும், திருமணம் செய்து அழைத்து வந்தேன் என்று சொன்னால், ஓரளவு ஆர்வம் அடங்கிவிடும் என்று எண்ணினேன். இப்போதே, அப்பாவும், அம்மாவும் அப்படித்தான் எண்ணுகிறார்கள் என்பது, என் கருத்து! இதையே பரவ விட்டுவிட்டால், பெரிதாக எண்ணாமல், வயதின் வேகத்தில் நேர்ந்த அசட்டுத்தனம் என்று “உச்”சுக் கொட்டி ஏற்றுக்கொள்ளக் கூடும் . . . உனக்கு என்ன தோன்றுகிறது?”

எந்த உணர்ச்சியும் காட்டாத குரலில் “முழுப்பொய்.” என்றாள் அவள்.

“பொய்தான். ஆனால், உண்மையைச் சொல்லி விளக்க முடியுமா? நமக்கு மட்டுமின்றி, இல்லாதவர்களுக்குக் கூட அவமானம்! “

குறிப்புணர்ந்து, அவள் விழியகல நோக்கவும், “எல்லாவற்றையும் தவிர்த்துவிடலாமே என்றுதான் இப்படி யோசித்தேன். நன்மை தரும் என்றால், “பொய்மையும் வாய்மையிடத்து” என்று வள்ளுவரே சொல்லவில்லையா?” என்றான் அவன்.

எதற்குத்தான் வள்ளுவரை இழுப்பது என்று இல்லையா என்று எண்ணியபடி, “பாவம் வள்ளுவர்!” என்றாள் அவள் சற்றே ஏளனமாக.

“பாவம் என்ன? எக்கால நடப்பும் உணர்ந்து சொல்லியிருக்கிறார் என்று பாராட்டலாமே! இப்போது, தங்கராசு உன்னைப்பற்றிக் கேட்டால் தில்லைநாயகம் என்ன சொல்லுவார்? தெரியாது என்றுதானே? அதைப் பொய் என்பாயா?” என்று நிகிலன் கேட்கவும், சுசிதா சற்றுத் திடுக்குற்றாள்.

“எதற்கு இந்தத் தேவையற்ற பேச்சு?”

“உனக்குப் புரிய வைப்பதற்காகச் சொன்னேன். எப்படி எதிர்த்தாலும், கடைசியில் காதலை ஒரு மாதிரி ஏற்றுக் கொள்கிற சமூகம் நம்முடையது. அதனால்தான் இப்படிச் சொல்லத் திட்டமிட்டேன். சரியில்லை என்று உனக்குத்

காதலா? அதன் அர்த்தம் தெரியுமா இவனுக்கு?

சினந்து சீறிய முகத்தை மறுபுறம் திருப்பி மறைத்து, “சரிதான்.” என்றாள் சுசிதா.

அத்தியாயம் -14

எப்படிச் செய்தான் என்று சுசிதாவுக்குத் தெரியாது. ஆனால், நிகிலன் சொன்ன கதை, உரிய இடங்களில் மெல்லப் பரவியிருக்கிறது என்று அவளால் ஊகிக்க முடிந்தது!

விழாவுக்குச் சில நாட்கள் முன்னதாக வீட்டுக்கு வந்திருந்த ஒரு பெண்மணி, விபுவோடு வீட்டின் பக்கவாட்டுத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த சுசிதாவின் காதில் விழும்படியாகவே மீனலோசனியிடம் இதைப் பற்றிப் பேசினாள்.

“அப்படியானால், நம் நிகிலன் பற்றி வந்ததெல்லாம் வெறும் வதந்திதானா, அண்ணி? அவள் ஒருத்திதான் என்று இருந்ததாலேதானே, பிள்ளையைப் பார்த்ததும், உடனே இருவரையும் கையோடு கூட்டி

வந்திருக்கிறான்! எல்லோரோடும் அவன் சகஜமாகப் பழகுகிறதை வைத்து, எல்லோரையும் போல நானும், நிக்கியைத் தப்பாக எண்ணிவிட்டேன், அண்ணி!" என்றாள் அவள்.

"உன்னை விடு, பங்கஜம்., நான் கூட, எக்குத் தப்பாக எந்தப் பேய் பிசாசிடம் மாட்டப் போகிறானோ என்றுதானே பயந்து கொண்டிருந்தேன்! " என்றது, மீனலோசனியின் குரலே!

ஆக, எல்லோரும் இலகுவாக ஏற்கிற கதையைச் சொல்லுகிறேன் என்று, நிகிலன் தன்னையே பெரிதாக உயர்த்திக் கொண்டிருக்கிறான்! இவள் ஒருத்திதான் என்று இருந்தானாம்! உணர்ச்சி மீறிச் செய்த தப்பையும், விவரம் தெரிந்ததுமே திருத்திவிட்டானாம்! உத்தமபுருஷன்!

"நெல்லுக்கிறைத்த நீர், வாய்க்கால் வழிந்தோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்"

ஆனால், இதில் யார் நெல்? யார் புல்?

கதை உருவாக்கப்பட்டது, நிகிலனுக்காகவா? அல்லது விபுவுக்காகவா?

"பெண் எப்படி, அண்ணி? இந்த விஷயத்தில் நிக்கியிடம் கோபப்பட்டுப் பிரிந்து போயிருக்கிறாள் என்றால் . . ." என்று தொடர்ந்ததை நின்று கேட்க விருப்பமின்றி, மகனைத் தூக்கிக்கொண்டு பின் பக்கம் சென்றுவிட்டாள் சுசிதா!

நெல்லோ, புல்லோ? விபு நல்லபடியாக ஒத்துக் கொள்ளப் படுகிறான்! அத்தோடு திருப்தி அடைய வேண்டியதுதான்!

வேறு சலசலப்பு எதுவுமின்றி, விழா நடந்தேறியிருக்கும்!

ஆனால், மீனலோசனி ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டாள். அவளிடம் இருப்பதெல்லாம், பழைய மோஸ்தர் நகைகளாம். அதனால், இந்தக் காலத்து நாகரீகத்துக்கு ஏற்ப, மருமகளுக்குப் புதிதாகவே வாங்கச் சொன்னாள்.

"பரவாயில்லை." என்று சுசிதா அப்போதும் மறுக்கவே, உண்மைக் காரணம் வெளியே வந்தது! அந்த நகைகளை மீனலோசனி அவ்வப்போது அணிந்து, விழாவுக்கு வரப் போகிற எல்லோரும் பார்த்திருக்கிறார்களாம்! இப்போது அவைகளையே சுசிதாவும் அணிந்துநின்றால், நன்றாக இராதாம்!

வேறே இல்லை, அல்லது வேறு வாங்கப் பணம் இல்லை என்று நினைப்பார்களாம்! அல்லது, மருமகளுக்குப் புதிது வாங்கிக் கொடுக்கப் பிடிக்காத கஞ்சப் பிசுநாரி என்று பேசுவார்களாம்!

ரோஸி பிறந்த நாளைக்கு அணிந்துவிட்டேன்., இது வேண்டாம்! மஞ்சுவுடைய அக்கா திருமணத்தில் பலர் பார்த்திருப்பார்கள்., அதனால் இந்த விழாவுக்கு வேறுதான் வாங்க வேண்டும் என்று, தேடித் தேடி அலைந்து வாங்கிய அணிமணிகள் நினைவு வர, சுசிதா அதற்கு மேல் , மறுத்து ஒன்றும் சொல்லவில்லை!

ஆனால், நகைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டவுமில்லை!

ஆனால், இதைச் சாக்கிட்டு நிகிலன் வாங்கி வந்து கொடுத்த வைர நகைகளைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் பொங்கியது!

“ஏன், இவைகளைப் பார்த்ததும் உச்சி குளிர்ந்து, உங்கள் காலடியில் விழுந்துவிடுவேன் என்று எண்ணினீர்கள் போல!” என்றாள் ஓர் ஏளனமான உதட்டுப் பிதுக்கலோடு.

“உன்னை அவ்வளவு மோசமானவளாக நான் ஒருபோதும் கருதியதே கிடையாது, சுசி! ஆனால், உன்னை நீயே ஏன் தாழ்த்திக் கொள்ளுகிறாய்? “ என்று நிகிலன் நிதானமாகக் கேட்டது, அவளது சினத்தை மேலும் அதிகரிக்கவே செய்தது!

“பின்னே, ஒரு நாள்க் கூத்துக்கு இவ்வளவு செலவு செய்வானேன்?”

“பணக் கணக்கை விட, நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக இருப்பதுதான் முக்கியம் என்று நினைத்து வாங்கினேன்! உனக்குத்தான் இலகு வழி இருக்கிறதே! பட்டுச் சேலை போல, இவற்றுக்குள்ளும் சற்று நேரம் இருந்துவிட்டுத் திருப்பி விடலாம்தானே?”

“நிச்சயமாகத் திருப்பத்தான் போகிறேன். அப்போதும்கூட, இவ்வளவு பகட்டாக அணிய எனக்கு விருப்பமில்லை! “

“ஓகே. உன்னிஷ்டம்!” என்று உடனே விட்டுக் கொடுத்தான் நிகிலன். “ஆனால், உனக்கு வேண்டிய விதத்தில், நீயே வந்து தேர்ந்தெடுத்துக் கொள்! பிடித்தால் வாங்கிக் கொள்வதாக நம் நகைக் கடைக்காரரிடம் சொல்லித்தான், எடுத்து வந்தேன். விபுவுக்காகப் புலி நகச் சங்கிலி ஒன்று செய்யும்படி அம்மா சொல்லியிருந்தார்கள்! அது தயார் என்று ஃபோன் வந்தது. அதை வாங்கிக்கொண்டு, அப்படியே இதையும் மாற்றிக்கொண்டு வந்துவிடலாம். நாளைக்கு மாலை ஐந்தரைக்குக் கிளம்ப முடியுமா?”

அவன் வேகமாகத் திட்டமிட, சுசிதாவுக்கு மூச்சு முட்டுவது போல இருந்தது!

மூன்று ஆண்டுகளாக வேண்டாம் என்று ஒதுக்கி விட்டிருந்த விலை உயர்ந்த ஆடை, அணிகலன்கள்!

அவைகளுக்காக அலைவதும், அதுவும் இவனுடனேயே சுற்றுவதும், எதிர்க்க வலுவற்று, நீரோட்டத்தோடு அடித்துச் செல்லப்படும் துரும்பு மாதிரி சக்தியற்றவளாக உணர வைத்தது!

ஆனால், அவள் ஒன்றும் சக்தியற்றவள் அல்லவே!

மூன்று ஆண்டுகளாகத் தன்னையும், கூடவே மகனையும் சேர்த்துப் பேணி வந்திருக்கும் அவளா வலுவில்லாதவள்? நகை, பட்டு என்றதும், பழைய வாழ்வு அதிகமாக நினைவு வருவதால் வந்த பலவீனம். அவ்வளவே!

இந்த விழா முடிந்து, அன்றாட வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டால், எல்லாம் சரியாகிப் போய்விடும். அதுவரை, பலக் குறைவைக் காட்டிக் கொள்ளாமல், சமாளித்தால் போதும்! சமாளித்தே ஆகவேண்டும்!

அவளது பதிலுக்காக நிகிலன் காத்திருப்பதை உணர்ந்து, "முடியும்" என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள்.

புலி நகச் சங்கிலியை அணிவித்துப் பார்த்தபோது, அவன் அணிந்திருந்த சாதாரண டீஷர்ட்டில்கூட, விபு ரொம்பக் கம்பீரமாகத் தோன்றினான்.

நகையை அணிந்தவாறே விபு இங்குமங்கும் ஓடி விளையாடலானான்.

எதையும் உடைத்து, தட்டி விட்டுவிடுவானோ என்று ஓடிப்போய் அவனைப் பிடித்து, "ரௌடி, ரௌடி!" என்று செல்லமாக வைதாள் சுசி. "பேசாமல் உட்கார்! அல்லது உதை விழும்!" என்று மிரட்டினாள்.

குறுக்கிட்டு, "ஐய்யோ! குழந்தையை வையாதேம்மா! அற்புதமான குழந்தை! இத்தனை வருஷத்திலே, இவ்வளவு அழகான குழந்தையை, நான் பார்த்ததே கிடையாது! வீட்டிலே போய், திருஷ்டி சுத்திப் போடுங்கோ!" என்று கடைக்காரர் கூறவும், அவர் வியாபார நோக்கில் கூறுகிறார் என்று தெரிந்தபோதும், பெற்றவர்கள் இருவரின் முகங்களும் மலர்ந்து விகசித்தன.

வேண்டியதைத் தேர்ந்தெடுத்து பணம் கொடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், "யார்? நிக்கிதானே? வெளியே உன் கார் மாதிரித் தெரிகிறதே என்றுதான் உள்ளே வந்தேன்!" என்றது சுசிதா காதில் விழ, சமீபத்தில் "அண்ணி" என்று மீனலோசனியை அழைத்த பெண்குரல்.

"சாட்சாத் நானேதான் அத்தை!" என்று முறுவலித்தான் நிகிலன்.

அவன் அரைக்கணம் தயங்குமுன், "நான், இவனுக்கு ஒன்றுவிட்ட அத்தை! இவன் அம்மாவுடைய சித்தப்பா மகனுடைய மனைவி! இது . . .இவள்தான் உன் மனைவியா? லட்சணமாக இருக்கிறாள்! இவன்

பையனாக்கும்! அப்படியே ரஞ்சியைச் சிறு வயதில் பார்த்த மாதிரியே இருக்கிறானே! பெயர் என்னப்பா?" என்று விபுவின் கன்னத்தை வருடிக் கேட்டாள்

நிகிலனை ஒரு தரம் பார்த்துவிட்டு சுசிதா பதில் சொல்லத் தொடங்குமுன், "விப்பு!" என்று அழுத்தம் திருத்தமாகத் தன் பெயரைச் சொன்னான் விபு.

"அட கண்ணே!" என்று அவனைக் கொஞ்சிவிட்டு, "உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன், அம்மா! இந்தக் காலத்தில் பணக்காரப் பையன் என்றால், எப்படியாவது பிடித்துக் கொள்ளத்தான் பார்ப்பார்கள். அண்ணிக்கே, அது ஒரு பயம் எப்போதும் உண்டு! ஆனால், நிக்கியாக நெருங்கியதற்கே கோபப்பட்டுப் பிரிந்து போனாயாமே! பிள்ளை என்று ஆனபிறகும், அதைக் காட்டி இவனைப் பிடித்துக்கொள்ள வராமலே இருந்துவிட்டாயாமே! என் பையன் சொன்னதுமே, உங்கள் வீட்டுக்குக் கிளம்பி வந்தேன்! நீ, இந்தத் தங்கத்தோடு உலாவப் போயிருப்பதாக வேலைக்காரி சொன்னாள்! இப்போது . . அடப் பாரேன் நிக்கி, உன் தம்பிதான் ஹாரன் அடித்துக் கூப்பிடுகிறான்! இறங்கும்போதே, இங்கே காரை நிறுத்த முடியாது என்று தகராறு பண்ணினான். உடனே வருவதாகச் சொல்லி ஓடி வந்தேன் . . . சரி, சரி . . இதோ வந்துவிட்டேன் . .நான் வருகிறேன்ப்பா! வருகிறேன்மா! ஞாயிறன்று சந்திப்போம்! பை, குட்டி!" என்று கையாட்டியவாறே வேகமாகக் கடையை விட்டு வெளியே சென்றாள்.

"பங்கஜம் அத்தை!" என்று நிகிலன் பெயர் சொல்லு முன்பாகவே, அந்தப் பெயரை, சுசிதா ஊகித்து விட்டிருந்தாள்.

ஆனால், அந்தப் பங்கஜம் அத்தை சொன்ன விவரம், சுசியை அல்லவா, உயர்த்தியது!

வீட்டுக்குக் காரைச் செலுத்தியபடி நிகிலன் சொன்னான். "பங்கஜம் அத்தைக்குக் கெட்ட புத்தி என்று ஒன்றும் கிடையாது. ஆனால், அத்தை காதில் ஒன்று விழுந்தால், இரண்டே நாட்களில், அது ஊரெல்லாம் பரவிவிடும்! அதற்காகத்தான், அத்தை பையனிடம் நாம் ஒத்துக் கொண்ட மாதிரியான இந்தக் கதையைச் சொன்னேன்! "

அதுதானே குழப்பம்!

நிகிலன் பரப்பிய கதை, அவளை அல்லவோ மிக நல்லவளாக ஆக்கிக் காட்டியது? மெனக்கெட்டு அவளுக்காகவா, நிகிலன் நீர் இறைத்திருக்கிறான்?

நெல்லாக அவள் பெரும்பயன் பெற, புல்லாய் விபுவும் ஏற்றுக் கொள்ளப்பட, நிகிலனுக்குத்தான் லாபமேதும் இல்லை! ஓரளவு குறைதான்!

இதை ஏன் செய்தான்?

“இருவரும்” என்று அவளையும் கூடப் பிழையில் பங்குபெற வைத்திருக்கலாம்! இவ்வளவு பெரிய உத்தமி ரத்தினமாக அவளைக் காட்டவேண்டிய தேவையே இல்லையே!

பின்னே ஏன் . . . .ஓ!

சட்டென விஷயம் புரிந்தது சுசிதாவுக்கு.

சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்று சீசர் சொன்னதாக வரும்! எகிப்தின் மேல் படையெடுப்பதாகப் போய், சீசர் கிளியோபாட்ராபோடு கொட்டமடித்துவிட்டு வரலாம்! ஆனால், அவர் மனைவி மட்டும், மற்றவர்கள் சந்தேகமாக நினைக்கக் கூட முடியாத கற்பரசியாக இருக்க வேண்டுமாம்!

அதே புத்திதான், நிகிலனுக்கும் இருக்கிறது!

அவனுடைய மனைவி மகா ஒழுக்கவாதி என்று உலகம் நினைக்க வேண்டும்!

சொல்லப் போனால், முதலாளியான தங்கராசுவையே அவள் தூரத்தான் நிறுத்தியிருந்தாள் என்று தெரிந்ததால்தான், அவளை மணக்கவே துணிந்தானோ, என்னவோ?

அப்படித்தான் இருக்கும்!

ஓர் அலட்சியத் தோள் குலுக்கலோடு, அது பற்றி யோசிப்பதை விடுத்தாள் சுசிதா!

இது போல இது போல விழாவுக்குத் தேவையான அனைத்துக்கும், கடைகளுக்குச் செல்லுதல், தையல்காரரிடம் அளவு கொடுக்க, அளவு பார்க்கப் போதல் என்று எல்லாவற்றுக்கும் கணவனோடு சென்றாலும், வேறு எதிலும் சுசிதாவிடம் மாற்றமில்லை என்பதைக் கண்ட மீனலோசனி கணவரிடம் கவலைப்பட்டாள்.

“நிக்கியோடு, மருமகள் சிரித்துப் பேசி இதுவரை நான் பார்க்கவில்லை! சாப்பாடு தண்ணீரையும் தொடுவதில்லை என்று இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாளே! பையன் என்ன பண்ணினானோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது! இந்..தக் கதைகளில் வருகிற மாதிரி, பலவந்தம், ரேப் மாதிரி எதுவேனும் பண்ணியிருப்பானோ என்று . . அது

பற்றி ஒரு வார்த்தை கேட்கக் கூடப் பய . . மாக இருக்கிறது!" என்று நடுங்கும் குரலில், கணவரிடம் தன் சுமையை இறக்கி வைத்தாள் மீனலோசனி.

"சேச்சே, என்னம்மா நீ? நிக்கி அப்படிப்பட்ட பிள்ளை இல்லை! ஏதோ தவறான அபிப்பிராயம்! பங்கஜம் சொன்னதே மெய்யாக இருக்கலாமே. இவன் செட் மாதிரி இல்லாமல், ரொம்பவும் ஒழுங்கு முறை பார்க்கிறவளாக வளர்ந்திருப்பாளோ, என்னவோ? கொஞ்ச நாளில், எல்லாம் சரியாகிவிடும், கவலைப்படாதே!" என்று அவளைத் தேற்றினார், சுந்தரம்!

விழா நாளும் வந்தது!

சொன்ன வாக்குத் தவறாமல், பிள்ளைகளை அவரவருக்கு உரிய உடை, அலங்காரப் பொருட்களோடு, ரஞ்சனி அனுப்பி வைத்தாள்.

வந்ததுமே விபுவும் அவர்களுடன் சேர்ந்து ஓரே ஆட்டம் போட்டான்.

பெரியவர்களின் குழப்பங்கள், அதிகப்படி ஆலோசனைகள், தயக்கம் ஏதும் இல்லாததால், "அத்தை, அத்தை" என்று என்று தீபா தினு இருவரும் சுசிதாவிடம் சொந்தமாக நடந்து கொள்ள, அவளும் அவர்களோடு சரளமாகவே பேசிப் பழகினாள்.

மதியம் விபுவோடு சேர்த்து அவர்களுக்கும் சுசிதாவே பிசைந்த சாதம் அள்ளிக் கொடுக்க, ஊர்ப்பட்ட கதை பேசியவாறே அவர்களும் ஆனந்தமாகச் சாப்பிட்டார்கள்.

"இப்போதெல்லாம், அம்மா இப்படிக் கையில் பிடியள்ளித் தருவதே இல்லை, அத்தை!" என்று புகார் சொன்னார்கள்.

மீனலோசனியின் முகம் வாடுவது ஓரக் கண்ணில் பட, "உடம்பு ஏதும் அசதியாக இருந்திருக்கும். சீக்கிரமே நன்றாகி, மீண்டும் பிடி அள்ளித் தருவார்கள் பார்!" என்று தேற்றிய சுசிதா, நாத்தனார் பிள்ளைகள் மீண்டும் ஏதோ வீட்டுக் குறையைச் சொல்லத் தொடங்கவும், "ஆமாம், விபுவுக்கு ஏதோ புது "ரைம் ஆக்ஷனோ"டு கற்றுக் கொடுத்தீர்களே, ஒழுங்காகச் சொன்னானா?" என்று பேச்சை மாற்றினாள்.

கிளுகிளுவென்று சிரித்தபடி, "ஐய்யோ இல்லை, அத்தை! தொப்பு தொப்பு என்று விழுகிற மாதிரி, உட்கார்ந்து கொள்ளுகிறான்! எங்களையும், அப்படி உட்காரச் சொல்லுகிறான்!" என்று அவர்கள் நகைக்க, "அம்மா, விப்பு தொப்!" என்று சின்னவனும் சேர்ந்து சிரிக்க, கொஞ்ச நேரம், அங்கே ஒரே கலகலப்பாக இருந்தது!

இப்படியே இந்தப் பிள்ளைகளோடு சேர்ந்தேனும் சுசிதாவும் இங்கே

சாப்பிடக் கூடுமோ என்ற ஆவலில் ஒதுங்கியிருந்து கவனித்த மீனலோசனிக்கு ஏமாற்றம்தான்.

பெரிய பேரப் பிள்ளைகள் அது போல ஏதோ கேட்ட பிறகும், அவர்களுக்குப் போக்குக் காட்டிவிட்டு, சுசிதா அவளது அறைக்குச் செல்வதைப் பாராதது போலப் பார்த்தவளுக்கு வருத்தமாக இருந்தது!

அதையே உணர்ந்தாற்போல, மகனும் அரைகுறைச் சாப்பாட்டிலேயே எழுந்துவிடவும் “அப்படியென்ன பிடிவாதம்” என்று அவளுக்கு, மருமகளிடம் ஆத்திரமும் வந்தது!

விருந்திலும் இப்படியே செய்தால், எல்லோரும் என்ன சொல்லுவார்கள்? அதுவும், முழுப் பார்வையும் அவள், விபு இருவர் மீதும் இருக்கும்போது!

ஆனால், சுசிதாவும் அதை யோசித்திருந்தாள். விருந்தின்போது, விபு அவனுடைய அத்தை மக்களுக்கு இடையே அமர, அவர்கள் இருவரும் அவனுக்கு அள்ளிக் கொடுப்பதைப் பார்த்துவிட்டு, பங்கஜத்தின் பக்கமாக மெல்ல நகர்ந்து சென்றாள்.

இந்த பங்கஜத்தின் இயல்பை நிகிலன் மட்டும்தான் பயன்படுத்திக்கொள்ள முடியுமா, என்ன?

அத்தியாயம் -15

விபுவை அறிமுகப் படுத்தும் விழா! அந்தக் காரணத்துக்காகவே, அவளும் சந்தோஷமாகவே ஒத்துக் கொண்டதுதான்!

ஆனால், விழா நாள் நெருங்க, நெருங்க, அந்த விழாவின் ஒரு முக்கியமான பகுதி, சுசிதாவை வெகுவாக உறுத்தியது!

அதுதான் அன்றைய விருந்து!

அதை, எப்படித் தவிர்ப்பது? அதுவும், விழாவின் கதாநாயகி நிலையில் இருந்துகொண்டு?

ஏதேதோ வழிகளை யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு, அன்று நகைக்கடையில் இருந்து திரும்பி வரும்போது, அவனுடைய ஒன்றுவிட்ட அத்தை பங்கஜத்தைப் பற்றி நிகிலன் சொல்லவும், ஓர் ஐடியா கிடைத்தது!

அதை வலுப்படுத்துவது போல, விழாவின் முதல் பகுதியாக விபு, சுசிதாவை அறிமுகப் படுத்தியபோது, யாருமே அதை, வேண்டாத, வெறுப்புக்குரிய புதுச் செய்தியாக எதிர்கொண்டதாகத் தெரியவில்லை!

எனவே, மீனலோசனி உள்ளூரக் கலங்கிக் கொண்டிருந்தது போல, அதிர்ச்சி, ஆத்திரம், எதிர்ப்பு போன்ற எந்த எதிர்மறை உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளையும் காட்டாமல், தாய், மகன் இருவரும் பார்வைக்கு எப்படி இருக்கிறார்கள் என்பதில் மட்டுமே வந்திருந்தோரின் கவனம் செலுத்தப்படுவதாகவே தோன்றியது!

அதுவும், எதிர்பார்த்த அளவு இருக்கிறதா என்று ஒத்து நோக்குவது போலத்தான்.

தோற்றத்தைப் பொறுத்த வரையில், விபு, சுசிதா இருவரிடமும் குறை காண முடியாது போகவே, விரைவிலேயே எல்லாம் சரியாகிப் போயிற்று!

ஒரு சில எதிர்ப்புகளும், ஏளனங்களும் பெருவாரியான ஒப்புதலில் ஒடுங்கிவிட, இளவட்டங்களின் கேலி, கிண்டல்களில், விழா நல்லபடியாகவே தொடரலாயிற்று!

இதன் முக்கிய காரணம் பங்கஜத்தின் விஷமற்ற விஷயப் பரப்பல் என்று சுசிதாவுக்கு நன்றாகவே புரிந்தது!

எனவே, விருந்து தொடங்கியதும், விபு, அவனுடைய அத்தை மக்களுடன் அமர்ந்து ஜாலியாகச் சாப்பிடுவதைப் பார்த்துவிட்டு, சுசிதா,

பங்கஜத்தை நாடிச் சென்றாள்.

முன் கொசுவத்தை ஒரு விதமாகப் பிடித்தபடி பங்கஜத்தை அணுகியவள், “ஹல்லோ ஆன்டி!” என்று முறுவலித்தாள். தொடர்ந்து, “அவருக்கு அத்தை என்றால், எனக்குப் பெரியம்மா . . ஊகூம்! இவ்வளவு சின்ன வயது என்றால், கட்டாயம் நீங்கள் எனக்குச் சித்தியாகத்தான் இருக்க வேண்டும்! “ என்று, இளமை ததும்பும் தாயின் முகத்திடம் மனதுள் மன்னிப்பை வேண்டியபடி கூசாமல் ஐஸ் வைக்கவும், அந்தம்மாளுக்கு வாயெல்லாம் பல்லாகிப் போனது!

சுசிதாவை மகிழ்ச்சியோடு நோக்கி, “நீதான் ரதியாகவே இருக்கிறாய்! ஆனால், ஏன் சேலையை ஒரு மாதிரியாகப் பிடித்திருக்கிறாய்?” என்று விவரம் கேட்டாள்.

அதற்காகவே காத்திருந்தவள் ஆயிற்றே! உடனே விவரம் தெரிவித்தாள்! “விபு எப்படியோ இழுத்துப் பிடித்து விளையாடினானா, கொசுவம் இறங்கித் தப்பாகிவிட்டது! அதைச் சீர்ப்படுத்திக் கொண்டு வரலாம் என்றுதான், அறைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்! “

“ஓகோ!” என்று தலையை ஆட்டிய பங்கஜம், “ஆனால், சாப்பாடு வைத்துக் கொண்டிருக்கிறார்களே, சுசிம்மா! சரி, சீக்கிரமாகப் போய்ச் சேலையைச் சரியாகக் கட்டிக்கொண்டு வந்துவிடு! என் பக்கத்தில் இடம் போட்டு . . .” என்றவளை, சுசிதா இடையிட்டுத் தடுத்தாள்.

“இடமெல்லாம் போட்டுப் பெரிது படுத்தவேண்டாம், சித்தி! “பின்” எல்லாம் எடுத்துச் சரி பண்ண வேண்டும்! அதுவரை உணவு காயும்! சேலையைச் சரி பண்ணிக்கொண்டு வந்ததும், சத்தமில்லாமல் அப்படியே ஓரமாக ஏதாவது ஓர் இடத்தில் உட்கார்ந்து, நானே பார்த்துக் கொள்கிறேனே! வரட்டுமா?” என்று முறுவலித்துவிட்டு, உள்ளே போனாள் சுசிதா.

அறைக்குள்ளே செல்லுமுன் திரும்பிப் பார்த்தவளுக்கு, பங்கஜம் மற்றொரு பெண்மணியிடம் பேசுவதைக் காணவும் திருப்தியாக இருந்தது!

இனி, அவள் சாப்பிட்டாளா, இல்லையா என்று கண்ணில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு, யாரும் தேட மாட்டார்கர்.

இலகு நடையோடு, அவர்களுக்கான அறையை அடைந்து, அங்கே ஏற்கனவே கொண்டு வந்து வைத்திருந்த சான்ட்விச் பொட்டலத்தைத் திறந்தவள், கையை உதறிக்கொண்டு, அப்படியே அதைத் தூக்கிப் போட்டாள்! பொட்டலம் முழுவதும் ஒரே சிவப்பெறும்புக் கூட்டம்!

சற்று நேரம் ஏமாற்றத்துடன் பார்த்திருந்தவள், நுனி விரல்களால், பொட்டலத்தை எடுத்துச் சென்று குப்பைக் கூடையுள் போட்டாள்.

இன்று எறும்புகளுக்கு விருந்து., அவளுக்குப் பட்டினியா?

பாட்டிலில் வைத்திருந்த தண்ணீரை வயிறு நிறையக் குடித்துவிட்டு, பந்தி முடியும் நேரம் வரை தனியே உட்கார்ந்திருந்தாள்!

அவளுக்கு அந்தத் தனிமை தேவையாகவும் இருந்தது!

என்னதான் மனதை நன்கு திடப் படுத்திக்கொண்டதாக எண்ணியிருந்தாலும், அந்த நேரத்தில் அவளுக்குத் தவிப்பாகத்தான் இருந்தது!

பார்த்தோர் எல்லாம் பொருத்தமான ஜோடி என்றும், இருவருக்கும் ஏற்ற பிள்ளை என்றும் சொல்லச் சொல்ல, இது மெய்யாக இருக்கவில்லையே என்று, கட்டுப்பாட்டை மீறி, சுசிதாவுக்குள் ஏக்கம் தோன்றவே செய்தது!

உருவத்தில் பொருத்தமான கணவனாக, உரிமையோடு நெருங்கி நின்றவன், அன்புக் கணவன் அல்ல., அப்படி ஆகவும் முடியாது என்ற உண்மை, ஓர் ஆழமான வெட்டுக் காயம் போல, அவள் நெஞ்சுக்குள் வலித்தது.

மீண்டும் விழா நடக்கும் ஹாலுக்குள் சுசிதா சென்றபோது, விருந்தினர் எல்லோரும் விடை பெறத் தொடங்கியிருந்தனர்!

அப்போதும், கையில் பாதாம் ஸ்வீட்டை வைத்துச் சுவைத்துக் கொண்டிருந்த விபுவை சுசிதாவிடம் கூட்டிவந்து, “ஒரே ஸ்வீட்டாகத் தின்னுகிறான், அத்தை! போதும், ரொம்ப குண்டாகி விடுவாய் என்றால் கேட்க மாட்டேன் என்கிறான்! இவன் கேட்கிறான் என்று, தினு வேறு எடுத்து வந்து, கொடுத்துக்கொண்டே இருக்கிறான்!” என்று புகார் சொன்னாள் தீபா.

“இவள் கொடுத்த கட்லட்டைச் சாப்பிடாமல், என் கிட்டே வாங்கினான் என்று, தீபுக்குப் பொறாமை, அத்தை! அதனால்தான் உங்களிடம் கோள் சொல்லுகிறாள்! “ என்று தன் பங்குக்கு தினு புகார் சொல்ல, அவர்களிடையே சமாதானம் செய்வதில் ஈடுபட்டாள் சுசிதா.

“ஏதோ ஒரு நாள் இனிப்பைச் சாப்பிடுவதால், குண்டாகிவிட மாட்டார்கள் தீபுச் செல்லம்! சின்னப் பிள்ளைகளுக்குக் காரத்தை விட இனிப்புதானே பிடிக்கும்? அதனால், விபுவுக்கு நீயும் ஒரு இனிப்பையே எடுத்துக் கொடுத்துவிடு!” என்று தீர்வு சொன்னாள்.

“ஆஹா!” என்று ஓடிப்போய், ஒரு பெரிய சாக்கலேட் பாரை

எடுத்துவந்து விபுவிடம் அவள் கொடுக்கவும், மீதியிருந்த பாதாம் இனிப்பை ஒரே வாயாய் விழுங்கிவிட்டு, “சாக்கி, சாக்கி!” என்று, சந்தோஷமாகச் சாக்கலேட்டைத் தின்பதில் ஈடுபட்டான் விபு!

பொதுவாக விபுவுக்குச் சாக்கலேட் கொடுக்க, சுசிதாவுக்கு அவ்வளவாகப் பிடிக்காதுதான். ஆனால், தீபாவின் திருப்திக்காகப் பேசாமல் இருந்துவிட்டாள். அத்தோடு, ஒரு நாள் உண்பதில், பெரிதாக என்ன கெட்டுவிடப் போகிறது என்று எண்ணமும் கூட!

ஆனால் . . . எதிலும் பட்டறிவுதானே, சிறந்தது?

மீனலோசனியைப் பொறுத்தவரையில், அன்றைய விழா, அவள் எதிர்பார்த்திராத அளவுக்குப் பெரிய வெற்றிதான்!

அவள் உள்ளூரக் கலங்கியது போல, அருவருப்பு, ஏளனம், எகத்தாளம், கிண்டல், குத்தல் என்று எதையும், குடும்பத்தினர் யாரும் பெரிதாகச் சந்திக்க நேராததே, வெற்றிதானே?

பொதுவாக யார் வம்புக்கும் போகாத குடும்பம் என்பதோடு, உண்மையான கஷ்டத்தில் கை கொடுக்கிறவர்கள் என்ற நல்ல பெயரும் அவர்களுக்கு ஏற்கனவே உண்டு. கூடவே, மகள் ரஞ்சனியுடைய குடும்பம் கலைந்தது குறித்துப் பலருக்குப் பரிதாபம் இருந்ததும், அவள் அறிந்ததே.

ஆனாலும், வம்பு பேசுவதற்காகவே அலைகிற, சில தவிர்க்க முடியாதவர்களைப் பற்றி அவளுக்குக் கவலை இருந்தது! நாகரீகம் கருதி, நேரடியாகப் பேசாதபோதும், ஜாடையாகப் பேசுவார்களோ, அவர்களுக்குள் குசுகுசுவென்றும், மேடை ரகசியமாகவும் பேசி, மனதை நோகடிப்பார்களோ என்றெல்லாம், அவளுக்கு உள்ளூரக் கலக்கம்தான்!

ஆனால், பெரும்பான்மையான நல்ல உற்றம், சுற்றத்துக்காகத்தான், இந்த விழாவை அவள் ஏற்று நடத்தியதே!

கூடவே, பல மோசமான நிகழ்வுகளுக்கு மனதைத் திடப்படுத்தி வைத்தும் இருந்தாள்.

ஆனால், பங்கஜம் போன்ற பல நல்லவர்களின் உதவியால், அப்படிப்பட்ட சூழ்நிலைகள் பெரும்பாலும் தவிர்க்கப் பட்டுவிடவே, அவளுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது!

சுசிதாவின் அமைதியான எழிலும், விபுவின் துறுதுறுப்பும் வம்பர்களையும் வாயடைக்க வைத்துவிட, விழாவை வெற்றியென்றே சொல்லிவிடலாம்தான்!

ஆனால், மற்றவர்களுக்குத் தெரியாதபோதும், அதற்காகவே கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்ததால், மருமகள் விழா விருந்தில் ஒரு பருக்கை கூட வாயில் போடவில்லை என்பதை மீனலோசனி அறிந்தே இருந்தாள்!

அவளுக்காகவும், அவள் பெற்ற பிள்ளைக்காகவுமே வைக்கப் பட்டிருக்கும் விழா! அதில் கூடச் சாப்பிடக் கூடாது என்று இப்படி என்ன மூடப் பிடிவாதம் ?

அது மட்டுமின்றி, மனைவியின் இந்த நடத்தை பாதித்ததாலோ என்னவோ, நிகிலனும் வெறும் தயிர் சாதத்தை மட்டுமே சாப்பிட்டு, உணவை முடித்துக் கொண்டதையும் தாயார் பார்த்திருந்தாள்.

ரொம்பவும் யோசித்து, அவனுக்குப் பிடித்தமான உணவு வகைகள் அத்தனையையும் விருந்து அயிட்டங்களில் சேர்க்குமாறு அவள் சொல்லியிருக்க, அவற்றில் ஒன்றையும், மகன் ருசி கூடப் பார்க்கவில்லை எனும்போது, மீனலோசனிக்கு ஆத்திரம் வராதா, என்ன?

மருமகளிடம் போய், என்ன இது என்று கேட்டுவிடலாமா என்றுகூடத் தோன்றியது!

ஆனால், மூடிய கதவு! அதன் பின்னே பெரிதாக ஒன்றும் இல்லாவிட்டால், நல்லதுதான்!

ஒருவேளை, இதை விடப் பயங்கரமாகப் புலிசிங்கம், பூதம் பிசாசாக ஏதேனும் இருந்துவிட்டால்?

கேட்கத் துடித்த நாவை அடக்கிக்கொண்டு, மகனுக்கும் மருமகளுக்கும் இடையில் எல்லாம் நன்றாகி விட வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டாள் மீனலோசனி!

தீபாவையும், தினுவையும் மகள் வீட்டில் விட்டுவிட்டு, வீட்டுக்குச் சென்று உறங்கப் போவதாக, சுந்தரம் முதலிலேயே கிளம்பிவிட்டார்.

விருந்து நடந்த ஹோட்டலில் எடுத்திருந்த அறையைக் காலி செய்துகொண்டு மற்றவர்கள் வீடு திரும்பினார்கள்.

முகம் சுளித்திருந்த மகனைத் தூக்கிவந்து அறைக்குள் விட முயன்றால், இறங்க மறுத்து, தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, விபு சிணுங்கினான்.

பசி, களைப்புடன், இழப்பின் ஏக்கமும் சேர்ந்து வாட்ட, “என்னடா ஒரே ஒட்டல்?” என்று அதட்டியவாறு, மகனைப் பிடித்து, வேகமாக

இழுத்தாள் சுசிதா.

எதிர்பாராமல் சுசிதா அவனை இழுத்த வேகத்தில், விபுவின் பிடி இறுக்கமாக இருக்கவே, இலகுவாக நின்ற நிகிலனும் தடுமாற, மூவருமாகக் கீழே சரியலாயினர்.

மகனோடு சமாளித்து நின்றதோடு, மனைவியையும் விழுந்துவிடாமல், தாங்கிப் பிடித்து நிறுத்தினான் நிகிலன்.

ஆனால், சட்டென அவனது பிடியிலிருந்து உதறி விடுவித்துக்கொண்டு, "ஏன், இவ்வளவு நேரம் ஒட்டி உரசிக்கொண்டு நின்றது போதாது? முதலில் இங்கிருந்து வெளியே போங்கள்!" என்று சீறினாள் சுசிதா!

சற்றுத் திகைத்து, "விபுவைப் போலவே, நீயும் களைத்துப் போயிருக்கிறாய் என்று நினைக்கிறேன்! ஆனால், என் மீதுள்ள கோபத்தைக் குழந்தையிடம் காட்டாதே!" என்று, தாயின் சீறலில் மிரண்டு விழித்த மகனைக் கட்டிலில் இறக்கி விட்ட நிகிலன், அறையை விட்டு வேகமாக வெளியேறினான்!

மகனின் மிரண்ட தோற்றம் மனதைச் சுட, "சாரிடாக் கண்ணா!" என்று ஓடிப்போய் அவனை அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டாள் சுசிதா!

சற்று நேரம், தாயின் அணைப்பில் சுருண்டு கிடந்த விபு, திடுமென, "அம்மா, விப்பு ஆ . . ." என்று மீண்டும் சிணுங்கத் தொடங்கினான்.

கண்ணீர் நின்று, லேசாகக் கண் சொக்கத் தொடங்கியிருந்த சுசிதா சட்டென விழித்து, "என்னடா கண்ணா? எங்கே வலிக்கிறது?" என்று மகனிடம் பரிவாகக் கேட்டாள்.

விபு வயிற்றைக் காட்டவும், கொஞ்சம் தண்ணீரைக் குடிக்க வைத்து, பிள்ளை வயிற்றை மெல்ல வருடி விடலானாள்.

மேலும் சிறிது நேரம் லேசாக அனத்திய விபு, அதன்பின் வயிற்றைப் பிடித்துக்கொண்டு, "ஆ ஆ . . ." என்று அழத் தொடங்கினான்.

அதுவும் கொஞ்ச நேரம்தான். அப்புறம், வாந்தி எடுக்கலானான்.

பொதுவாக மகனுக்கு அதிகம் மருந்து கொடுக்க, சுசிதாவுக்குப் பிடிப்பதில்லை! என்றாலும், அவசரத்துக்கு என்று, அஜீரணம், காய்ச்சல் முதலானவற்றுக்காகச் சில மருந்துகள் வாங்கி வைத்திருந்தாள்.

இன்று கண்டபடி உண்டதால் இருக்கும் என்று எண்ணி அஜீரண மருந்தை ஒரு “டோஸ் “ கொடுத்தால், அதற்குப் பலன் இருப்பதாகவே தெரியவில்லை!

மேலும் இரு தரம் வாந்தி எடுத்த பிள்ளைக்கு, உடம்பில் சூடு ஏறலாயிற்று!

அப்போதும் கூட, சுசிதா ரொம்பப் பெரிதாகப் பயந்துவிடவில்லை! விடிந்ததும், விபுவை மருத்துவரிடம் கூட்டிச் செல்ல வேண்டும் என்று எண்ணியபடி, மகனை அடிக்கடி பார்த்தவாறு, அவசரமாக எல்லாவற்றையும், சுத்தம் செய்துவிட்டு வந்தால், “ஊம், ஊம்!” என்ற அனற்றல் தவிர, விபுவிடம் அசைவே இல்லை!

இவ்வளவு வாந்திக்கு, அவனுக்குத் தண்ணீர் கொடுப்பது நல்லது என்று, மகனை மெல்ல எழுப்பினாள்.

தாயின் குரலில் விழித்த பிள்ளையின் கண்கள் மேலே சொருகியதைப் பார்த்ததுதான் அவளுக்குத் தெரியும்! அடுத்த வினாடி, நிகிலனை உலுக்கி எழுப்பிக் கொண்டிருந்தாள், அவள்!

“நிகிலன்! நிகிலன்!”

அத்தியாயம் -16

நிகிலனும் ஆழ்ந்து தூங்கவில்லையோ, அல்லது எழுப்பினால் சட்டென்று எழுந்து விடுகிற வழக்கமோ, அவள் அறியாள். ஆனால், சுசிதாவின் ஓர் உலுக்கலிலேயே, அவன் விழித்து, எழுந்தும் விட்டான்!

“என்ன?” என்று கேட்டவாறே, கை கொடுத்து அவளை எழுப்பியிட்டவன், மூச்சு வாங்க, “விபு விபு!” என்று அவள் கதறவும், சட்டெனத் திரும்பி அடுத்த அறைக்கு விரைந்தான்.

அதற்குமேல் என்ன நடந்தது என்பதெல்லாம், சுசிதாவுக்குத் தெளிவற்ற குழப்பமே!

அவளுக்குத் தெளிவு வந்தபோது, பொழுது விடிந்து, வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. விபுவுக்கு “ட்ரிப்ஸ்” இறங்கிக்கொண்டு இருந்தது! தூக்க மாத்திரை போட்டுக்கொண்டு உறங்கும் சுந்தரம் தவிர, குடும்பத்தின் மற்ற மூவரும் மருத்துவ மனை அறையில் இருந்தார்கள்.

காரில் ஓட்டியவாறே நிகிலன் தந்த செல் ஃபோனில், மகன் பற்றிய விவரங்களை மருத்துவரிடம் சொன்னது அவளுக்கு அரைகுறையாக நினைவு இருந்தது!

அந்தப் பின்னிரவிலும் சுறுசுறுப்பாக இயங்கிய மருத்துவமனைப் பணியாளர்கள், அவர்களது வரவுக்குத் தயாராக இருந்ததும்!

“விபுவின் நிலைமை பற்றி, நீங்கள் தெளிவாகச் சொன்னதால்தான், உடனேயே சிகிச்சையைத் தொடங்க நாங்கள் தயாராக இருக்க முடிந்தது!” என்று மருத்துவர் சொன்னபோது, சுசிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது!

என்ன சொன்னாள்? இப்போது எண்ணிப் பார்த்தால், ஒன்றுமே நினைவு வராதபோது, எப்படி சரியாகச் சொல்லியிருப்பாள்?

அருகில் நின்றவனை விழி உயர்த்திப் பார்த்தபோது, “ரொம்பத் தெளிவாகத்தான் சொன்னாய்.” என்றான் அவன். “என்னென்ன, எப்போது சாப்பிட்டான், எப்போதிலிருந்து, என்ன செய்கிறது என்று எல்லாமே நீ சொல்லும்போதுதான் நானே தெரிந்துகொண்டேன்!”

“உடனே சிகிச்சையைத் தொடங்கியதால், குழந்தைக்குப் பெரிய ஆபத்தின்றி மீட்க முடிந்தது! நாங்களே ஆராய்ந்து கண்டுபிடிப்பதில், பொன்னான எத்தனை நிமிஷங்கள் வீணாகப் போயிருக்குமோ? நல்லகாலம்! அதெல்லாம் இல்லாமல், உடனே செயல்பட முடிந்தது! எதற்கும், நாளை முழுவதும் “ட்ரிப்ஸ்” இறங்கட்டும்! சரியாகிவிடும்.

ஊரில் கொஞ்சம் இதுபோல வாந்தி, வயிற்று வலியோடு காய்ச்சல் ஒன்று சுற்றிக்கொண்டு இருக்கிறது! பையன் இனிப்பை வேறு நிறையத் திணிக்கவும், சட்டென்று பற்றிக்கொண்டுவிட்டது! ஆனால், ஆரோக்கியமான குழந்தை என்பதால், சீக்கிரமாகக் குணமாகிவிடும்!" என்றார் மருத்துவர்!

"வெளியே எதையும் வாங்கிக் கொடுப்பதே இல்லையே, டாக்டர்! எப்படி வர முடியும்?" என்று கவலையும், குழப்பமுமாகக் கேட்டாள் சுசிதா!

"அதெல்லாம் ஒரேயடியாகச் சொல்ல முடியாது மிசஸ் நிகிலன்! நோய்க் கிருமிகள் காற்றிலேயே பரவும்! சமீபத்தில் எங்காவது, வெளியே கூட்டிப் போயிருப்பீர்கள்! நோய் கண்டு, முழுதாகக் குணமாகியிராத யாராவது அருகில் வந்திருப்பார்கள்! அப்படிக்கூட வரலாமே! அதற்காகக் குழந்தையை வெளியே கூட்டிப் போவதையே நிறுத்தி விடாதீர்கள்! எப்போதும் ஒரு கவனம் இருக்கட்டும். அவ்வளவுதான். வரட்டுமா? மனைவியையும் பார்த்துக் கொள்ளுங்கள், நிகில்! ரொம்பவும் பயந்து போயிருக்கிறார்கள்!" என்று முறுவலித்துவிட்டு, மருத்துவர் கிளம்பிச் சென்றார்.

விபுவுக்காகவே இரவில் வந்தார் போலும்!

அவர் சொன்னதுபோல, அவளுக்குப் பயம்தான்! ஆனாலும் டாக்டர் ஏன் இப்படிச் சொல்லுகிறார் என்று யோசித்தபோது, கணவன் அருகே, மிக நெருங்கி நிற்பது போல, அவளுக்குத் தோன்றியது. தைரியத்துக்காக, அவனை ஒட்டிக்கொண்டு நிற்பதாக எண்ணிவிட்டாரா?

மெய்யாகவே அப்படித்தான் இருக்குமோ என்று எண்ணம் தோன்றவும், சட்டென விலகி நின்றாள் அவள்.

இருந்திருந்து, அவனைச் சார்ந்து நின்றா, அவள் திடம் அடைவது?

"நான் அம்மாவை வீட்டில் விட்டுவிட்டு, உடனே வருகிறேன். அம்மா, நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு, அப்புறமாக வரலாம்! நேற்று வேலைக்குப் பிறகு, ஓய்வெடுக்காமல், தொடர்ந்து விழித்தால் உங்கள் உடம்பு தாங்காது!" என்ற மகனின் கூற்றை ஏற்று, பேரனை ஒரு தரம் அருகில் சென்று பார்த்துவிட்டு, மீனலோசனி வீட்டுக்குக் கிளம்பினாள்.

தாயின் சோர்வுதானே தெரிகிறது என்று குறையாக நினைத்துவிட்டுத் தன்னைத்தானே கண்டித்துக் கொண்டாள் சுசிதா!

மீனலோசனி, ஒரு தலைமுறை மூத்தவள்! ஓய்வு தேவையே. அத்தோடு,

சுசிதாவையும் அவன் வீட்டுக்குக் கூப்பிட்டிருந்தாலுமே, மகனை விட்டு, அவள் நகர்வாளா, என்ன?

நிகிலனும் மீனலோசனியும் அந்தப் பக்கம் செல்லுமுன் சுந்தரம், பேரனைப் பார்க்க வந்தார். "இப்போதுதான் வடிவு சொன்னாளம்மா! நிக்கியிடம் செல்லில் கேட்டபோது, இனிப் பயம் இல்லை என்றான்! ஆனால், செல்லம் வாடி விட்டானே!" என்று வருந்தியவர், சற்று நேரம் உட்கார்ந்திருந்துவிட்டுப் போனார்!

நிகிலன் திரும்பி வந்தபோது, கட்டிலின் அருகே ஒரு நாற்காலியில் அமர்ந்து, மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுசிதா.

இன்னொரு நாற்காலியை ஓசையின்றி எடுத்துப் போட்டு, நிகிலன் அமரவும், "ரொம்ப நன்றி." என்றாள் அவள்.

இவன் என் மகனும்தான் என்று மறந்துவிட்டாயா என்று உள்ளூர எண்ணியபடி "எதற்கு?" என்று கேட்டான் அவன்.

"எல்லாவற்றுக்கும்! இவனுக்குக் கண்கள் எப்படியோ உயரே போகவும், ரொம்பவும் பயந்துபோனேன்! உங்களை எழுப்பியதும் உடனே வந்து, எல்லா ஏற்பாடுகளும் செய்ததற்கு! இனிப் பயமில்லை என்று சிஸ்டர் சொன்னார்கள்! அப்பாடி என்று இருக்கிறது!"

விபு தவிர, வேறு நினைவே இல்லை! பாவம் என்று தோன்ற, "இனி நன்றாகிவிடும்." என்று மட்டும் சொன்னான் நிகிலன்.

அவனது பேச்சைக் கவனிக்கக் கூட இல்லாமல், "இந்த ட்ரிப்ஸ் பாட்டில் முடிந்ததும் சொல்லச் சொன்னார்கள். இன்னும் ஒன்று, மெதுவே ஏற்ற வேண்டுமாம்! அத்தோடு கிளம்பி விடலாமாம்!" என்று மேலும் மகன் பற்றிய விவரம் தெரிவித்தாள் சுசிதா.

நிகிலனின் மனம் முழுமையாக இளகிப் போயிற்று!

இதற்கிடையே, விபு கண்விழித்து, பெற்றோரைப் பார்த்து முறுவலித்தான். எழுகிறேன் என்று, கையில் ட்ரிப்ஸ் இறங்கிக் கொண்டிருந்ததைப் பிய்த்துப் போடப் போனான்.

வயிற்றில், "ஆ" என்று வலிக்காமல் இருப்பதற்காக என்று இருவருமாகப் புரிய வைத்தபின், அதை விட்டுவிட்டு, ஏதோ சொல்லலான் பிள்ளை.

சிறுவர்களுக்கான அந்த மருத்துவமனையில், மருந்து விற்கும் இடத்தில் சில விளையாட்டுக் சாமான்களைப் பார்த்த நினைவில், நிகிலன் அங்கே சென்று சிலதை வாங்கி வரவும், அவைகளை வைத்துக்கொண்டு, அவன்

சந்தோஷமாக விளையாடலானான்.

“நல்ல வேளை, உங்களுக்கு நினைவு வந்து, இதையெல்லாம் வாங்கி வந்தீர்கள்! இவனை எப்படி இந்தக் கட்டிலில், ஏன், இந்த அறைக்குள்ளேயே எப்படிப் பிடித்து வைப்பது என்று கவலையாக இருந்தது!” என்று சுசிதா தன் நிம்மதியை, அவனிடமுள்ள வழக்கமான ஒதுக்கத்தை விடுத்து, தயக்கமின்றி வெளிப்படுத்தவும், நிகிலனுக்கும் ஆறுதலாக இருந்தது!

இப்படியே, எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை வந்தது.

விபுவுக்கு இப்போது எதையும் உண்ணக் கொடுக்க வேண்டாம் என்று மருத்துவர் கூறியிருந்தார்.

உணவு “ஆர்டர்” கொடுத்தால் சொண்டுவருவார்கள். அப்படிக் கொண்டு வரச் சொல்லி, விபு காணாமல் சாப்பிடலாமா என்று, நிகிலன் கேட்டான்.

சற்று யோசித்து, “விபு பார்த்துவிட்டுக் கேட்டால் கஷ்டம். கொடுக்காவிட்டால் அழுவான். அதனால், “காண்டீனி”லேயே ஒவ்வொருவராகப் போய்ச் சாப்பிடலாம் .” என்றாள் சுசிதா.

“அதுவும் நல்ல யோசனையே!” என்று சாப்பிடப் போனான் நிகிலன்.

அப்படியே, அவளது அலுவலகத்துக்குத் தகவல் தெரிவித்து விடுப்பு சொல்லுமாறு அவள் கூற, அதையும் செய்தான்.

ஆனால், அவன் உணவருந்திவிட்டு வந்து, சுசிதாவைப் போகச் சொன்னால், “கொஞ்சமும் பசியில்லை.” என்றாள் அவள், மகனையே பார்த்தபடி.

ஒரு கணம் யோசனையாகப் பார்த்தபோதும், நிகிலன் அவளை வற்புறுத்தவில்லை!

இரவு முழுவதும் மகனோடு பட்ட பாடாகவும் இருக்கலாமே!

இரவெல்லாம் பட்ட உடல் வாதனையும் தூக்கமிக்மையும் சேர, விபு விரைவிலேயே மீண்டும் உறங்கிவிட்டான்.

கூடவே, சுசிதாவும் சோர்வதைக் கவனித்து, நிகிலன் கொண்டு வரச் சொன்ன பானத்தை அருந்துவதற்கும் அவள் மறுத்தபோது, கணவனுக்கு விஷயம் தெளிவாகப் புரிந்து போயிற்று!

“பாவீ இப்போதுமா?!” என்று கொதிப்புடன் கூறியவனின் பார்வையைச் சந்திக்க மனமின்றித் தலையைத் திரும்பிக் கொண்டாள் அவள்!

ஏன், இப்போது மட்டும், அப்போது நடந்தது எதுவும் இல்லை என்று ஆகிவிடுமா என்று உள்ளம் சீறியபோதும், அவள் எதையும் வாய்விட்டுச் சொன்னாளில்லை! இப்போது பிள்ளை பிழைத்திருப்பதே அவனால் அல்லவா?

நன்றிதான்! நிறையவே! ஆனால் அதற்காகக் கொள்கையை கைவிட்டுவிட முடியாது! அது வேறு விஷயம்!

சுசிதா பேசாதிருக்கவும், அவனும் பெரு முயற்சி செய்து, சினத்தை அடக்கிக்கொண்டு, "பார் சுசி, இது பிடிவாதம் பிடிக்கும் நேரமல்ல! விபுவைப் பார்த்துக் கொள்வதற்கான சக்தி வேண்டாமா? அதற்காகவாவது, எதையாவது சாப்பிடு! நான்தான் அதற்கான பணத்தை வாங்கிக் கொள்ளுகிறேன் என்கிறேனே! பிறகென்ன?" என்று முடிந்தவரை பொறுமையாகக் கேட்டான் .

"எனக்குப் பிடிக்கவில்லை என்றால், விடவேண்டியதுதானே?"

"என்னத்தை விடுவது? ஒருத்தி, கிறுக்குத்தனமாக உடம்பைக் கெடுத்துக் கொள்வாளாம்., பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டும் என்றால் பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை? இவ்வளவு பார்க்கிறவள், உன் பர்சையாவது எடுத்து வந்திருக்க வேண்டியதுதானே? அதை எங்கே வைத்திருக்கிறாய் என்றாவது சொல்லு! எடுத்து வந்து தொலைக்கிறேன்! " என்று பொறுமையிழந்து எரிந்து விழுந்தான் நிகிலன்.

நல்ல யோசனைதான் ஆனால், பர்ஸ் பற்றிச் சொல்ல, சுசிக்கு விருப்பமில்லை!

இது, மாதக் கடைசி! அத்தோடு, விழா தொடர்பாக அங்குமிங்கும் அலைந்து திரிந்ததில், அவசரத்துக்கு பஸ்சுக்குப் பதிலாக ஆட்டோவில் வந்து, அப்படி, இப்படி என்று, அவளுக்கும் கொஞ்சம் பணம் செலவாகிவிட்டிருந்தது! மீதியாக, அவளது பர்சில் இருக்கும் மிகக் கொஞ்சமான பணம் பற்றி, நிகிலனுக்குத் தெரியவிட, அவளுக்கு மனமில்லை!

எனவே, "தேவையில்லை! அப்படி ஒரு நாள் பட்டினியில் நான் செத்தா போய்விடுவேன்?" என்றாள் அலட்சியம் போலக் காட்டி!

ஆனால், "ஏய் . . ." என்று எழுந்துவிட்டான் அவன்!

மேலே என்ன நடந்திருக்குமோ, அந்தத் தருணம் பார்த்து, "இதோ இந்த அறைதான், நாகு! உள்ளே கொண்டு வைத்துவிட்டுப் போப்பா!" என்று மீனலோசனியின் குரல் கேட்டது!

கதவைத் தட்டிக்கொண்டு மீனலோசனி உள்ளே வர, அவள் பின்னோடு, சாப்பாட்டுக் கூடை போல ஒன்றைத் தூக்கிக்கொண்டு டிரைவர் வந்தான்!

காட்டிய இடத்தில் கூடையை வைத்துவிட்டு, விபுவிடம் சென்று, அவனது நலம் பற்றி சுசியிடம் விசாரித்துவிட்டு, டிரைவர் கிளம்பிச் சென்றான்!

“என்னதம்மா? சாப்பாடா? நல்ல நேரத்தில்தான் கொண்டு வந்தீர்கள்! உங்கள் அருமை மருமகளின் வயிற்றுக்குள் அதில் கொஞ்சத்தையேனும் திணிப்பதற்கு, முடிந்த முயற்சி பண்ணுங்கள்! எனக்கு அலுவலகத்தில் முக்கிய வேலை இருக்கிறது! நான் அங்கே பார்த்துக் கொள்[கிறேன்!” என்றுவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

ஆனால், நேரே வெளியே செல்லாமல், விபுவுக்கு வைத்தியம் செய்த மருத்துவரைப் போய்ப் பார்த்தான். முடிந்தவரை சீக்கிரமாக விபுவை வீட்டுக்கு அழைத்துப் போக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, அதன் பிறகே அங்கிருந்து கிளம்பினான் அவன்.

சும்மா என்றால் எப்படியோ! ஆனால், அப்போது நிகிலனின் கோபம் சுசியை மிகவும் பாதித்தது!

முந்திய நாள் விழா அலுப்பு, வழக்கமான தூக்கம் கூட இல்லாத களைப்புடன், இதுவும் சேர்ந்துகொள்ள, வாடிப் போனாள் அவள்.

மகனின் கோபம் புரிந்தாலும், பெற்ற பிள்ளைக்காகப் பயந்து, கலங்கி, பரிதவித்திருந்த மருமகளிடமே தாய் மனம் இரங்க, “இன்னும் ஒன்றுமே சாப்பிடவில்லையா?” என்று மீனலோசனி மெதுவாகக் கேட்டாள்.

சுசிதா பேசாமல் தலையசைத்தாள்.

“பிள்ளையைப் பார்ப்பதற்குத் தெம்புக்காகவேனும் . . என்று தொடங்கியவள், .”சாரிம்மா. வேண்டாம். ப்ளீஸ்!” என்ற மருமகளின் மெல்லிய வேண்டலுக்கிணங்கி, வாயை மூடிக் கொண்டாள்.

பசி இருக்கத்தான் செய்யும்! ஆனாலும், அயர்ந்து, தளர்ந்து நிற்கும் இந்த நிலையிலும், என்ன உறுதி! கட்டிலும் மெத்தையும் ஒதுக்கி, சுசிதா தரையில் படுப்பதும், இப்போது தெரிய வந்திருந்தது! எந்த சுகமும் வேண்டாம் என்று, இந்த வயதில் சன்னியாசியாக இருக்கிறாளே!

அத்தோடு, இனிப்புக் கொடுத்தது நாத்தனார் பிள்ளை என்று ஒரு வார்த்தை குற்றம் கூறாதது, இன்னமும் பெரிதாகத் தோன்றியது.

“இந்தத் திவானில் படுத்து, சற்று ஓய்வெடு. பேரனை, நான் பார்த்துக்

கொள்ளுகிறேன்!”

குனிந்து திரும்பி சுசிதாவின் அசைவுகளில், அவள் மறைவாகக் கண்ணைத் துடைப்பது புரிந்தது. கணவர் சொன்னது நினைவு வர, “நீ எப்படிம்மா, அப்போது நிக்கி இருந்த செட்டில் சேர்ந்தாய்?” என்று கேட்டாள் மாமியார்.

“இல்லை. சேரவில்லை! நான் அப்போது தியாகம் செய்வதாக . . . “ என்றவளின் குரல் விக்கியது.

“தி . .தியாகமா?” சிங்கமா, புலியா, பேயா, பூதமா? என்ன வரப் போகிறது?

அத்தியாயம் -17

சுசிதா பிடிவாதமாக வீட்டில் ஒரு பானம்கூட அருந்துவது இல்லை என்பதைக் கண்டிருந்த மீனலோசனிக்குப் பெரிதாக என்ன நடந்ததோ என்ற பயம் நிறையவே இருந்தது!

ஆனால், கணவரின் சொல்லுக்கும், அவளிடம் அதிகமான மதிப்பு உண்டு! ஏதோ மன வேறுபாடு., சீக்கிரத்தில் சரியாகிவிடும் என்று அவர் சொன்னபோது, அதையும் நம்பினாள்! பல விஷயங்களில், முக்கியமாக நிகிலனுக்குத் தொழில் தொடங்கப் பணம் கொடுத்த விதம் பற்றி, அவரது கருத்து சரியாக இருந்ததை, அனுபவத்தில் கண்டதால் வந்த நம்பிக்கை!

பங்கஜத்தின் மூலம் வெளி வந்த தகவலும், அதற்குச் சரியாகவே இருந்தது!

எனவே, அந்த நம்பிக்கையில்தான், நிகிலன் செட்டில் எப்படிச் சேர்ந்தாள் என்று அவள் கேட்டதே! ஆனால், சுசிதாவின் பதில், அவளைத் தூக்கிவாரிப் போட வைத்துவிட்டது!

இவ்வளவுக்கு வந்தபின், முழுதும் அறியாமல் எப்படி விடுவது?

தியாகம் என்கிறாள்! மகனும், பிராயச்சித்தம் என்றானே! அப்படியானால், அவன் மட்டுமே செய்த தவ . . . தப்பா?

நெஞ்சு பதறினாலும், இதற்கு மேல், ஒன்றுமில்லை என்பது போல ஒதுங்கிக் கொள்ளவும், மீனலோசனியால் முடியவில்லை! எனவே, “எ என்ன தியாகம்? எதற்காக?” என்று கலக்கத்துடன் கேட்டாள்.

அன்றையத் தளர்ச்சி காரணமோ? அன்றித் தன்னந்தனியாகச் சுமந்து வந்த சுமை தாங்க முடியாமல் போனதோ? அல்லது, மகனுக்காக இரவு முழுவதும் கூடவே இருந்ததால், இவள் நமக்கு வேண்டியவள்தான் என்று தோன்றியதோ?

என்ன காரணம் என்று வரையறுக்க முடியாதபோதும், மறுக்க, மறைக்கத் தோன்றாமல், தன் வழக்கமான ஒதுக்கத்தை விடுத்து, பழைய கதை பற்றி, மாமியாரிடம் சுசிதா சொன்னாள்.

சுருக்கமாகத்தான். காரண காரியங்கள் பற்றி, அன்று அனுபவித்த உணர்ச்சிகரமான விளக்கங்கள் ஏதுமின்றி, வெறுமனே நடந்ததை மட்டுமேயாகத் தெரிவித்தாள். “வேறு பணம் வந்துவிடும் என்று, என் தந்தை, நிகிலனுக்கு ஒரு பெரிய தொகைக்கு செக் சொடுத்திருந்தார். பணம் இல்லாததால், செக் திரும்பி வந்துவிட்டது! அந்தத் தொகைக்கு

ஈடாக என்னை . . .”

“எஎன்ன சொ சொல்லு . . கிறாய்! நிநிக்கி . .என் மகன் . . அவனா . . .”

சற்று மரத்த குரலில், யாருக்கோ நடந்ததைக் கூறுவது போலச் சொல்லிக் கொண்டிருந்த சுசிதா, மூச்சுக்குத் தவிப்பது போல ஏங்கியவாறு மீனலோசனி பேசிய விதத்தில் திடுக்கிட்டு, அவளைப் பார்த்தாள்.

நெஞ்சை அழுத்தியபடி, உள்ளே எரிக்கும் தீயையே பிரதிபலிப்பது போலச் சிவந்த முகத்துடன்,” . .கொடும் . . கொடும் கொலைகாரப்பாவி போல . . இப்படி ஒரு நி நிபந்தனையை அவன் எளப்படி . . “ என்று திக்கித் திணறவும், மருமகள் ஒரு கணம் திகைத்தாள்.

என்ன நடந்தது, ஏன் இந்த மாற்றம் என்று மரத்த மனதுக்குச் சட்டெனப் புரிய, அவசரமாக மாமியாரிடம் ஓடிச் சென்று, அவள் கையைப் பற்றி, “இல்லை! இல்லை, அத்தை. நீங்கள் நினைப்பது போல, அப்படி இல்லை! என் பெற்றோர் கழுத்தில் கத்தி வைத்தெல்லாம் . . . ஊகூம், அப்படி வில்லன் மாதிரியெல்லாம் இல்லை. . . “ என்று விளக்க முயன்றாள்.

மூச்சு சற்று இலகுவான போதும், “ஆனால், அப்படித்தானே சொன்னாய்?” என்று கோபமாகவே கேட்டாள் மீனலோசனி.

என்னவென்று விளக்குவது?

கண்களில் நீர் மல்க, பெரியவளைப் பார்த்தாள் சுசிதா.

“சொல்.லு! அப்படித்தானே சொன்னாய்?” என்றாள் மற்றவள் விடாமல்.

ஒரு பெருமூச்சுடன், “கூட்டிக் கழித்துப் பார்த்தால், விஷயம் அப்படித்தான் என்றாலும், முழுத் தப்பும் நிகிலனுடையது என்று சொல்ல முடியாதும்மா! “ என்றாள் அவள்.

“புரியவில்லை!”

விளக்கம் சொல்வது கடினம் என்பதோடு, வலியெழுப்புவதும் கூடத்தான். காயத்தில் கத்தியால் திருகுவது போல! இலகுவாக, நிகிலன் மீது குற்றம் சுமத்திவிடலாம். குற்றம் சுமத்திப் பழி வாங்கியும் விடலாம் என்றால், இந்தத் தாயின் மனம் தாங்காது!

அத்தோடு, அது முழு உண்மையும் அல்லவே!

சற்று யோசித்துவிட்டு, மீனலோசனியின் கூரிய பார்வையை எதிர்கொண்டாள் சுசிதா.

“புரிய வைப்பது கடினம்தான்!” என்றாள் மீண்டும் ஒரு பெருமூச்சுடன். “அந்த மாதிரியான ஓர் எண்ணம் நிகிலனுக்குத் தோன்றியது, பெரிய தப்புதான். ஆனால் . . . அவரைத் தேவையற்று சீண்டி விட்ட முதல் தவறு என்னுடையதே! என்னவோ, அவரைப் பார்த்ததுமே ஒரு கலக்கம்! அவரால், என்னவோ தலை கீழாக மாறப் போவதுபோல . . . அப்பாவின் தொழில் விஷயம் அப்போது எனக்குத் தெரியாது! என்னவோ சொந்த வீட்டில் போல எங்கள் வீட்டில் நிகிலன் உட்கார்ந்திருந்த விதமும், கூடவே அவரைப் பார்த்து அப்பா கலங்குவது போலவும் தெரியவும், அப்பாவுக்குத் தெரியாமல், இவரை உதாசீனமாகப் பேசி விரட்டிவிட்டேன்! ஃபோனில் கூடப் பேச விடவில்லை! என் வார்த்தைகளும், எப்படியோ சற்று அதிகப்படி தடிப்பாகவே இருந்தன! பணத்தையும் ஏமாற்றிவிட்டு, அவமதிப்பது வேறா, அதுவும் ஒரு பெண்ணைக் கொண்டு என்று நிகிலனுக்கு ஆத்திரம் வந்திருக்கலாம்! என்னைப் பழி வாங்க வேண்டும்., அடக்க வேண்டும் என்று எண்ணியிருக்கலாம்!

“செய்த தப்புக்கு உன் தந்தை தண்டனை அனுபவிப்பதுதான் நியாயம்! அவர் வெளியே இருக்க அனுமதிப்பது தப்புதானே? அந்தத் தப்பை நான் செய்வதானால், இதுதான் வழி! ஏற்பதோ, விடுவதோ எதுவானாலும், உன் தேர்வு என்றுதான் அப்போதும் சொன்னார். . . . “

உண்மையைச் சொல்வதும் மிகவும் கடினமாகத்தான் இருந்தது!

அதில் ஏதோ கொஞ்சம் பொய் சேர்த்து இட்டுக்கட்டி, நிகிலனை முழுக் குற்றவாளியாக்கி, அவனைப் பெற்ற தாயையே அவளுக்கு அன்னியப்படுத்த வாய்ப்பிருந்தும், அதைச் செயல்படுத்தத் தன்னால் இயலவில்லை என்பது இன்னமும் எரிச்சலூட்டியது!

மீனலோசனி பிடிவாதமாகக் காத்திருப்பது தெரிய, மீண்டும் கதையை. . உண்மைக் கதையைத் தொடர்ந்தாள்.

“தேர்ந்தெடுத்தது நான்தான். பணப் பிரச்சினையை எந்த விதத்திலும் சமாளிக்க இயலாமல், கடவுள்தான் கதியென்று, கோயிலும் பூஜையறையுமாகக் கிடந்த பெற்றோர்தான், அந்தப் பதினெட்டு வயதின் தொடக்கத்தில் எனக்குப் பெரிதாகத் தெரிந்தனர். அவர்களது நிம்மதியை எண்ணுகையில், இது சின்ன தியாகமாகத் தெரிந்தது!

“இ . . இது உங்களுக்கு எப்படித் தோன்றுமோ, என் தேர்வு நிகிலன் சொன்ன முதல் வழியாக இருந்தது. ஆனால், அந்த இரண்டு நாட்களும் நான் அஞ்சியது போல இருக்கவில்லை. மோசமான பழிவாங்கலை எதிர்பார்த்துப் போன என்னை, ஒரு மகாராணி போல உணரவைத்தார்.

ஆனால் . .

“அப்பா கொடுத்து திரும்பி வந்த செக், அது தொடர்பாக எழுத்து மூலமான மற்ற அனைத்தையும் வாங்கிக்கொண்டு திரும்பி வந்தபோது மகாக் கேவலமாக, அருவருப்பாக இருந்தது! ஒரு மாதிரி, சாக்கடைப் புழுவாகிவிட்டது போல!

“சரி, நமக்கு என்ன நேர்ந்திருந்தாலும், அப்பா அசிங்கப் படாமல், நிலை இறங்காமல் காப்பாற்றினோம் என்ற எண்ணம் அப்போதும், அந்த வலிக்குள்ளும் இருந்தது!

“ஆனால், ஒரு கேவலத்தின் பலனை அனுபவிக்க மனமில்லாதவர்கள் போல, அப்புறம் என் . .என் பெற்றோர் இருவரையும் நான் உயிருடன் பார்க்கவே இல்லை! ஒரு விபத்தில் . . . உடனடி மரணம்!” என்றவளின் குரல், மறுபடியும் மரத்துப் போயிருந்தது!

“ஐயோம்மா!” என்று கூவிவிட்டாள் மீனலோசனி.

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, “அப்போது, எனக்கு எப்படி இருந்திருக்கும்?” என்று மூச்சு இரைக்கக் கேட்டாள் சுசிதா. “ தியாகம் என்று நான் செய்த பிழையின் பலனை ஏற்க மறுத்துதான் போய்விட்டார்களோ, என்ற எண்ணம், கிட்டத்தட்ட என்னைக் கொன்றது! அதனாலேயே, எல்லாச் சொத்துகளையும் தருமத்துக்குக் கொடுத்துவிட்டேன். வேலையில் சேர்ந்தேன்! . . . “

“உன் . .உன் பெற்றோர் . . விஷயம், நிகிலனுக்குச் சொன்னாயா?”

“எதற்குச் சொல்லவேண்டும்?” ஆத்திரமாகக் கேட்டாள் அவள்!

தயங்கிவிட்டு, “அவனுக்குத் தெரியாதோ?” என்று மீண்டும் வினவினாள் மீனலோசனி.

மகன் முழு ராட்சசனா, இல்லையா என்ற சந்தேகமா?

அப்படித்தான் என்று சொல்ல விரும்பியும், மனதறியப் பொய் பேச முடியாத ஒரே காரணத்தினால், “தெரிந்து வந்தார்!” என்று ஒப்புக்கொண்டாள் சுசிதா. “ஆனால், என் பெற்றோர் . . இல்லை, .பெற்றோரின் உடம்பு இருந்த இடத்தில் அவர் நிற்பதைச் சகிக்க முடியாமல் , வெளியேறச் சொல்லிவிட்டேன்!”

அதுவும் எப்படி? ஆத்திரமும், வெறுப்புமாக விரட்டியடித்தாளே! ஆனால், அதையும் அப்படியே சொல்லத் தேவையில்லை! அன்பான அம்மாவுக்கு, அவள் மனம் நோகாதிருக்க, அருமை மகன் ஒரேயடியாக அரக்கனில்லை என்றுதான் சொல்லிவிட்டாளே! அதுவே போதும்!

மாமியாரின் பார்வையைத் தொடர்ந்து, மருமகளின் பார்வையும், அயர்ந்த தூக்கத்தில் இருந்த விபுவிடம் சென்றது!

கேளாத கேள்விக்குப் பதிலாக, "பிள்ளை வளர்ந்திருப்பது, பிறகுதான் தெரிநதது! ஏதோ உடம்பு சரியில்லை., அப்பா, அம்மாவைப் பிரிந்த துன்பம், என்று அவ்வப்போது நினைத்தது தவறு என்று தெரிந்தபோது, ஒன்றும் செய்ய முடியாத நிலை!

"ஆனால், அதுவும் நல்லதுதான்! இல்லாவிட்டால், விபு கிடைத்திருக்க மாட்டான். வாழ்வில் பிடிப்பும் வந்திராது!" என்று முடித்தாள் சுசிதா.

மகனைப் பற்றிப் பிள்ளை சொன்னது நினைவு வர, "குழந்தை உருவானது பற்றியேனும், அவனுக்குத் தெரிவித்திருக்கலாமே?" என்றாள் பெரியவள்.

"எதற்குச் சொல்ல வேண்டும்?" என்றாள் சுசிதா முன்னைப் போலவே! "நிகிலனைப் பொறுத்தவரை, விலையும் விற்பனையும் அப்போதே முடிந்து போயிற்று! முன்னே பின்னே செத்தால்தானே சுடுகாடு தெரியும் என்பார்கள். அதுபோல, இதைத் தடுப்பதற்கான வழிகள் ஏதும் அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை! தெரியாத பிழைக்கு அனுபவித்துத்தானே ஆக வேண்டும்?" என்றாள் கைத்த குரலில்.

வருத்தமாக நோக்கி, "நீ சொல்வது உனக்கே சரியாகத் தோன்றுகிறதா? விபுக்குட்டியைத் தண்டனை போலவா, உணர்கிறாய்?" என்று குறைப்பட்டாள் மீனலோசனி.

தலையசைத்து, "இல்லை! என் பெற்றோரின் மரணம்தான் எனக்குத் தண்டனை! விபு என்னை வாழ வைக்கும் அமுதம்! அவன் பிறக்கவில்லை என்றால், நானும், என்றோ போய்ச் செர்ந்திருப்பேன்!" என்றாள் சுசிதா மெதுவாக, ஆனால் தெளிவாக.

"நிகிலுக்குத் தெரிந்திருந்தால் அவனும் உன்னைப் போலவே உணர் . . "

"நிச்சயமாகக் கிடையாது!" என்று அதே தெளிவுடன் மறுத்தாள் மற்றவள்! "நிகிலனுக்கு அலட்சியப் படுத்தியவளை அடக்குகிற வெற்றி மட்டும்தான் குறிக்கோள்! வெற்றி கிடைத்த பிறகு, வேறு அக்கறை அவருக்கு ஒன்றுமில்லை! இருந்திருந்தால், என்ன ஆயிற்றோ என்று, அவரே விசாரித்திருக்கலாமே! ஆனால் . . .உண்மையிலேயே, விளைவுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?"

"நீ சொல்வது சரியென்று உனக்கே தோன்றுகிறதா?"

இல்லைதான்! அதுவும் இப்போது . . . . ஊகூம்! ஆனால், அதை ஒத்துக்கொள்ள மனமின்றிக் கண்மூடிப் பேசாதிருந்தாள் சுசிதா.

உடலும் மனமும் ஒரே களைப்பாக இருக்கும் இப்போது, இந்த ஆராய்ச்சியெல்லாம் இல்லாமல், இப்படியே அவளை விட்டுவிட்டால் நன்றாக இருக்குமே!

அசைவு உணர்ந்து கண் திறந்து பார்த்தால், வாடிய முகத்துடன் மீனலோசனி எழுவது தெரிந்தது!

இந்தப் பெண்மணியிடம் பொய்ப்பது நியாயமில்லை! இவளை அலட்சியப்படுத்துவதும் அப்படித்தான்! இவள் நினைத்திருந்தால், எப்படியெப்படியோ நடந்திருக்கலாமே! விபுவைக்கூட வெறுத்திருக்கலாம்!

“நீங்கள் நினைப்பது சரிதான். தொடர்பு இருக்கத்தான் செய்கிறது! மற்றபடி, நான் இங்கே உங்கள் வீட்டில் இருப்பானேன்?” என்றாள் சோர்வுடன். “விபுவின் எதிர்காலம் பற்றிய கவலை என்னை மருட்டிவிட்டது என்று நினைக்கிறேன்! ஆனால், அன்றைக்கு, நிகிலனின் பணத்தில் கிடைத்த எதையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று எல்லாவற்றையும் தருமத்துக்குக் கொடுத்திராவிட்டால், விபுவோடு இங்கே வந்திருக்க மாட்டேன்!”

குழப்பத்துடன் நோக்கினாள் மீனலோசனி. “ஏதோ விபத்து என்றானே, நிக்கி! நீ கீழே விழுந்து . .. அப்போது பார்த்துக்கொள்ள ஆள் இல்லாமல் . . ..”

புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, “ஆனால், அப்பாவின் சொத்து இருந்திருந்தால், அந்த மாதிரி விபத்துக்கு நான் ஆனாகவே நேர்ந்திராதே!” என்று பதில் சொன்னாள் சுசிதா.

ஆனால், உடனேயே உள்ளிருந்த நேர்மை இடித்துரைக்க, “இல்லை! நடந்த எதையும் மாற்ற முடியாது. அப்பாவின் சொத்தை நான் பயன்படுத்தினால், என் தசையை நானே தின்பது போல அருவருப்பாக இருக்கும் என்றுதான் தருமத்துக்குக் கொடுத்தேன்! அதனால், அந்த விபத்தையும் தவிர்க்க இயலாதுதான்! அதனால், இந்த நிலையும் தவிர்த்திருக்க முடியாததே!” என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

சுசிதா சொல்லச் சொல்ல, புதிரின் பாகங்களாய் அனைத்தும் அததின் இடத்தில் விழ, மீனலோசனிக்கு நடந்தது எல்லாம் புரிந்தது!

சுசிதா சொல்லாமல் விட்டது, இப்போது கணவன் சொத்தில் உண்டால், அதுவும் அருவருப்பாகத்தான் இருக்கும் என்பதை.யே! அதைத் தப்பு சொல்ல முடியாது! அந்த விஷயத்தில், பெண்ணுக்குப் பெண்ணாய், மாமியார் மருமகளின் பக்கமே!

ஆனால், மகனிடம் மாற்றம் இருப்பதையும், அந்தத் தாயுள்ளம் கண்டுகொண்டிருந்தது!

ஒரு பெண்ணாக இருந்து மருமகளின் உணர்வுகளையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்ததால், அவளிடம் குறைப்படவும், மீனலோசனியால் முடியவில்லை..

பிராயச்சித்தம் என்று மகனும் வேண்டிய வேதனைப் பட்டுவிட்டான்! இப்போதும் படுகிறான்! இந்தப் பெண்ணும் பெரும் துன்பம் அனுபவித்துவிட்டாள்! இனி, இருவருக்கும் நல்லதைச் செய் கடவுளே என்று வேண்டிக் கொண்டாள் அவள்

ஏனெனில் மனித முயற்சியால் சீராகக் கூடிய விஷயமாக, இது அவளுக்குத் தோன்றவில்லை!

தூக்கத்தில் புரண்ட விபுவை, சோர்வுடன் குனிந்து சரியாகக் கிடத்திய மருமகளின் மெலிவு, மீனலோசனியை உறுத்தியது!

சோர்வும், மெலிவும்! கடவுள் அருளுக்காகக் காத்திராமல், இது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்!

யோசித்தவாறே சென்று, கொண்டு வந்த உணவில் தேவையானவற்றை ஒரு கிண்ணத்தில் போட்டுப் பிசைந்து எடுத்துவந்தாள்.

மறுப்பதற்குத் தயாரான மருமகளிடம், “நிக்கியின் பணத்தில் சாப்பிடக் கூடாது என்பதுதானே உன் உறுதி? இதை உண்பதால், அந்த உறுதிக்கு எந்த பங்கமும் வராது! சாப்பிடு!” என்று சாதக் கிண்ணத்தை நீட்டினாள்.

இதை நம்புவதற்கு, சுசிதா என்ன, முட்டாளா?

அத்தியாயம் -18

ஒருவர் என்ன சொன்னாலும் நம்புவதற்கு, சுசிதா அவ்வளவு அசடாகவா தெரிகிறாள்?

மீனலோசனி வீட்டிலிருந்து வரும்போது கொண்டு வந்த உணவு! உள்ளே கொணர்ந்து வைத்தவன் வீட்டு டிரைவர்! இது வீட்டுச் சாப்பாடு இல்லை என்றால், யார் நம்புவார்?

வரும் வழியில் ஹோட்டலில் வாங்கி வந்திருந்தாலும், அப்படித்தானே? அப்படி, வாங்கி வருவதற்கு, இந்த மருத்துவமனை “கான்டீனி”ல், நிகிலன் வாங்கித் தந்து உண்டிருக்க மாட்டாளா?

மருமகளின் பார்வையைத் தளராமல் எதிர்கொண்டு, “நீ எங்களைப்

பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய், சுசி?" என்று கேட்டாள் மீனலோசனி. "நாங்கள் வீட்டுச் செலவுக்கு நிக்கியிடம் பணம் வாங்குகிறோம் என்று உனக்கு யார் சொன்னார்கள்? மாமா இன்னமும் செயலாகத்தானே இருக்கிறார்? ரத்த அழுத்தம் சற்று அதிகம் இருக்கிறது என்று சற்று நிதானமாக இருப்பதால், எல்லாமே உன் புருஷனால்தான் நடக்கிறதென்று நினைத்தாயா? இது உன் மாமா கட்டிய வீடு! மகன் தயவில் வீட்டை நடத்துகிற நிலைமை, கடவுள் புண்ணியத்தில் இன்னமும் எங்களுக்கு வரவில்லை! அதனால் தைரியமாகச் சாப்பிடு!" என்றாள் !

தனக்காக ஒருவர் பார்க்கிறார் என்பது இதமாக இருந்தபோதும், "நீங்கள் அவருடைய பெற்றோர்தானே, அம்மா!" என்றாள் சுசிதா.

"கொஞ்ச நேரம் முன்னால், "அத்தை" என்று அழைத்தாயே! அது எனக்குப் பிடித்தது. அப்படியே கூப்பிடு!" என்றவள் மேலே தொடர்ந்து பேசினாள். "என்ன சொன்னாய்? நாங்கள் அவனுடைய அப்பா, அம்மாதானே என்றா? அப்போது, ஊரிலிருந்து வந்த எதையாவது தந்தால், அவனுடைய தாத்தாவுடையதுதானே என்று கேட்பாயா? அன்றைக்கு, நிக்கியும் அவன் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்., நம் நாட்டை விடவும் அதிக மக்கள் தொகை உள்ள சீனாவில், குடும்பப் பெயர்கள் நூறை ஒட்டித்தானாமே! குடும்ப மூலம் தேடினால், அங்கே எல்லோரும் உறவுதான்! உலக மக்கள் அத்தனை பேரும் ஆதாம் ஏவாளில் இருந்து வந்தவர்கள் என்கிறது, கிறிஸ்தவ மதம்! தொட்டுத் தொட்டு, எல்லாம் சொந்தம்தானே? எதை ஏற்பாய்? எதை விலக்குவாய்?"

தன் சோர்வையும் மீறி முறுவலித்தாள் சுசிதா. "நன்றாகப் பேசுகிறீர்கள், அ . . த்தை! நிகிலன் எதையும் பேச்சில் நியாயமாக்குகிறவர். உங்களிடம் இருந்து வந்திருக்கும்போல!" என்றவளின் முகம் பழைய நினைவில் மீண்டும் வாடியது.

சட்டென அருகில் வந்து, சின்னவளின் தலையை வருடிவிட்டாள் மீனலோசனி. "பார், கொஞ்ச நாளைக்கு முன்னால் யாரோ சொல்லக் கேட்டேன். நாம் அனுபவித்தவை எல்லாம், சாம்பார் மாதிரியாம். சாம்பார் வயிற்றுக்குள் இருந்தால், செரிமானம் ஆகி நம் உடல்நலத்துக்குப் பயன்படும். வெளியே வைத்திருந்தால், ஊசிப்போய் நாற்றமடித்து சாப்பிட்டால் நம் உடம்பையும், சும்மாவே வைத்திருந்தால் சுற்றுச் சூழலையும் கெடுப்பது ஆகிவிடுமாம்! அதே போலத்தான் கடந்த கால அனுபவங்களும்! பட்டறிவாக நமக்குப் பயன்பட்டால் சரி! வெறுமனே நினைத்து நினைத்து, உடம்பையும் மனதையும் கெடுக்க

விடக் கூடாது! பழசெல்லாம் எப்படியோ போகட்டும்! யோசி. இப்போது, விபுவைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போக, உனக்குத் தென்பு வேண்டும்! வழியிலேயே, அவனையும் வைத்துக்கொண்டு விழுந்து வைத்தாயென்றால் என்ன ஆவது? அப்புறம் மருத்துவமனையில் இரண்டு பேருக்குப் பார்ப்பதா? அப்புறம், மருத்துவம் யார் பணத்தில் நடப்பது என்று அது வேறு பிரச்சினை ஆகும்! எப்படியும், இது, நிக்கியின் பணத்தால் வந்தது அல்ல! அதனால், நான் அள்ளித் தருவதை , வாயை மூடிக் கொண்டு . . .இல்லையில்லை, மறுத்துப் பேசாமல் சாப்பிடுவாயாம்!" என்று, பிசைந்த சாதத்தை ஸ்பூனில் எடுத்து வாயருகே கொணர்ந்தபோது, சுசிதாவால் மறுக்க முடியவில்லை!

ஏதோ கோயிலில் கொடுத்தார்கள் என்று, இரண்டு பச்சை நிறக் கண்ணாடி வளையல்கள் அணிந்து, பாடம் படித்துக் கொண்டிருக்கும்போதே, இதேபோல ஊட்டிய தாயின் நினைவில் சுசிக்குக் கண்ணைக் கரித்தது!

இந்த மாமியாரும் அவளுடைய தாயேதானா? அல்லது, மகளின் பசி பொறுக்காமல், பெற்றவளின் ஆவிதான் மாமியாருக்குள் புகுந்து இப்படி அள்ளித் தருகிறதா?

"ஷ் , சாப்பிடும்போது அழக் கூடாது! புரையேறிவிடும்! முதலில் சாப்பிட்டு முடி! " என்று, விட்டால் நிறுத்தச் சொல்வாளோ என்று அஞ்சியவள் போல, சற்று விரைவாகவே அள்ளிக் கொடுக்கலானாள், மீனலோசனி.

ஒரு நிலையில் போதும் என்றவளை வற்புறுத்தி, மேலும் இரண்டு வாய் உண்ண வைத்துவிட்டு, "ரஞ்சியும் இப்படித்தான்! தன் பசியே தெரியாது! வற்புறுத்தித்தான் உண்ண வைக்க வேண்டும்! ஆனால், இவன் லேசில் வாயில் வாங்கவே மாட்டான். ஸ்பூன் போட்டு, அவன் கையில்தான் கொடுக்க வேண்டும்! கையால் பிடியள்ளிக் கொடுத்தால்கூடக் கையில் வாங்கி, என்ன இருக்கிறது என்று பார்த்துத்தான் சாப்பிடுவான்! " என்றவாறு பாத்திரத்தை வைத்துவிட்டு வந்தவள், மருமகளின் கண்களில் நீர் வடிவதைப் பார்த்துவிட்டு, "அம்மா நினைவு வந்ததாம்மா? கவலைப்படாதே. உன் அம்மாவிடம் என்னென்ன கேட்க ஆசையோ, அதையெல்லாம் என்னிடம் கேள். செய்து தருகிறேன்! இந்த மெலிவு மாற, நன்றாகச் சாப்பிட வேண்டும்!" என்றாள் பரிவாக.

சற்றுத் திகைத்தாள் சுசிதா. இன்றைய ஒரு போழுதின் நடப்பை,

மாமியார் நிரந்தரம் ஆக்கப் பார்க்கிறாள்!

அவளது நன்மைக்காகவே என்றாலும், நிகிலன் வீட்டு உணவறையில், எல்லோருடனும் அமர்ந்து சாதாரணமாகச் சாப்பிடுவதை நினைத்தால், அவளுக்கு உள்ளே கூசியது!

அத்தோடு, நிகிலன் என்ன நினைப்பான்? சாக்குக் கிடைத்ததும் கொள்கையைப் பறக்க விட்டுவிட்டதாக எண்ண மாட்டானா?

இந்த எண்ணம் இன்னமும் கூசவைக்க, "இஇப்போது வேண்டாம், அம் . .அத்தை! கொஞ்ச நாள் போகட்டும்! அப்புறமாகப் பார்க்கலாம்." என்றவள், மீனலோசனி ஏதோ வாதிட வாயைத் திறக்கவும் "நான் கொஞ்சம் யோசிக்க வேண்டும், அத்தை, ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலாக.

"ம்ம்ம் . . " என்று யோசித்துவிட்டு, "சரி. உன்னிஷ்டம்." என்று விட்டுக் கொடுத்தாள் பெரியவள். "ஆனால், இப்போது போலப் பச்சைத் தண்ணீர்கூடப் பல்லில் படாமல் பட்டினி கிடக்கக் கூடாது! விரதம் இருக்கிறபோது மாதிரி, ஒரு பால், காஃபி, இதுகளையாவது குடிக்க வேண்டும்! . . .ஊகூம், இதையும் மறுக்கக் கூடாது! இது எனக்காக, ப்ளீஸ்!" என்று மீனலோசனி பதிலுக்குப் "ப்ளீஸ்" போட்ட விதத்தில் தன்னை மீறிப் புன்னகை வந்துவிட, அதற்கு மேல், சுசியால் மறுக்க முடியாது போயிற்று!

ஆனாலும், இதல்லாம் "நீர்த்துப் போவதி"ல் சேர்த்தி இல்லையா என்று அவளது மனம் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்காமல், உள்ளூரக் குன்றலாகத்தான் இருந்தது!

நிகிலன் கேட்டுக் கொண்டபடி, விபுவுக்குச் சிகிச்சை முடிகிறபோதே மருத்துவமனைக் கணக்குகளையும் முடித்துவிடவே, அன்று முன் மாலை மூன்று மணியளவிலேயே வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்கள்.

அதற்குள் பேரன் எப்படி இருக்கிறானோ என்று பார்ப்பதற்காக சுந்தரமும் மருத்துவமனைக்கு வந்திருக்கவே, எல்லோரும் சேர்ந்தே வீட்டுக்கு வந்தார்கள்.

இந்த வீட்டுக்குள் செல்வது, இவ்வளவு இனிமையாக இருக்கக் கூடும் என்று சுசிதா ஒரு நாளும் கருதியது இல்லை!

"அப்பாடி! நேற்றுத்தான் விழாவா? என்னமோ ஒரு மாதம் முன்னாலே நடந்தது போல இருக்கிறது! இந்த ஒரு நாள் அவ்வளவு நீண்ட காலமாகத் தெரிகிறது!" என்றாள் மீனலோசனி.

"மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்போது, கண் சிமிட்டுமுன் முடிந்துவிட்டது போல விரைவாகவும், கஷ்டமாக இருக்கும்போது

நகரவே மறுப்பது போல மெதுவாகவும் பொழுது போவது போலத் தோன்றுவது இயல்பே. “முடியாப் பகலே, விடியா இரவே” என்று சொல்வதில்லையா? நமக்கு நேற்று இரவிலிருந்து அப்படியாகிவிட்டது! “ என்றார் சுந்தரம்.

இந்த மூன்று ஆண்டுகளும் உனக்கு இதே போலத்தான் இருந்தனவா என்று கேட்ட நிகிலனின் பார்வையிலிருந்து திரும்பினால், மீனலோசனியும் கிட்டத்தட்ட அதே போல, இன்னும் கொஞ்சம் பரிதாபமாக சுசிதாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டும் பிடிக்காமல், “பழந்தமிழில் இது போல, எந்த நிலைமைக்கும் பொருத்தமாக எத்தனையோ அருமையான வாசகங்கள் இருக்கின்றன. ஆனால், கடந்து போன கஷ்டத்தைப் பற்றி நினைக்கக் கூடாது என்பதற்கு சாம்பாரை உவமைப்படுத்தி இன்று அத்தை எவ்வளவு அழகாக ஒன்று சொன்னார்கள், தெரியுமா? அதை இப்போது சொல்லுங்களேன், அத்தை!” என்று கவனத்தை மாமியார் மீது, சுசிதா தள்ளிவிட்டாள்.

இரு ஆண்களும் உந்த, “நானாகச் சொல்லவில்லை! யாரோ செல்லக் கேட்டதுதான்!” என்றுவிட்டு, மீனலோசனி அதை விளக்க, “ஆஹா! ஒரு சாம்பாரில் இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாயா? சாப்பாட்டைப் பற்றி, நீ என்சைக்ளோப்பீடியாவே எழுதலாம், மீனா!” என்று சுந்தரம் சிலாகிக்க, “என்னது? என் சைக்கிளைப் பிடியா? உங்களுக்கு ஏது சைக்கிள்? எதற்கு, எப்போது வாங்கினீர்கள்?” என்று அப்பாவி போல அவள் கேட்க, விபுவும் “சைக்கிள்! சைக்கிள்!” என்று கூற, சற்று நேரம் அங்கே சிரிப்பும் கலகலப்புமாக இருந்தது!

மருத்துவமனை சூழ்நிலைக்குத் தேவைப்பட்ட மாற்றாகவும் இருக்கவே, முடிந்த அளவு எல்லோருமே அதை வளர்த்தனர்!

கலகலப்பின் போர்வையில் அருகே வந்து, “நீ அத்தை என்றதும், அம்மாவின் முகம் பளிச்சென்று மலர்ந்து போயிற்று! நன்றி!” என்றான் நிகிலன்.

இயல்பாக வந்தது என்று ஒப்ப மனமின்றி, “மற்றவர்களைப் பொறுத்த வரை, அதுதானே முறையான அழைப்பு? அதனால், அப்படிக் கூப்பிடச் சொன்னார்கள்.” என்றாள் சுசிதா.

அவனைக் கணவனாக மனதில் ஏற்றதால் வந்த அழைப்பு என்று நிகிலன் எண்ணிவிடக் கூடாதே! அத்தோடு, மீனலோசனி கூப்பிடச் சொன்னதும் மெய்தானே?

நிகிலனும் சுசிதாவும் பேசுவதைக் கவனித்துவிட்டு, விபுவைத் தூக்கி வைத்துக்கொண்டு, பெரியவர்கள் இருவரும் கொஞ்சினார்கள்!

எல்லோருமாகச் சேர்ந்து பேசிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், "சின்னம்மாவைப் பார்க்க யாரோ வந்திருக்கிறாங்க!" என்று வந்தான் பணியாள். "மதுரையிலே இருந்தாம்! திதில்லைநாயகமின்னாத் தெரியும் என்று சொன்னாங்க!"

"ஓ!" என்று சுசிதா வாயிலுக்கு விரைய, அவளோடு கூட நடந்தபடி, " உன்னையும், விபுவையும் நல்லபடியாகப் பார்த்தால் சந்தோஷப்படுவார் என்று விழாவுக்கு அழைப்பு அனுப்பியிருந்தேன். நேற்று வர முடியாமல் போயிற்று போல! இன்று வந்திருக்கிறார்!" என்று நிகிலன் வேகமாகச் சொன்னான்.

இருவருமாகத் தில்லைநாயகத்தை வரவேற்று, உள்ளே ஹாலுக்குக் கூட்டி வந்தார்கள்!

எல்லோருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்!

"நேற்று வைகைக்கே கிளம்பினேன். ஆனால், ரயிலைப் பிடிக்க முடியாமல் வேறு வேலை வந்துவிட்டது! சரிதான், இன்று வந்தால், சாவகாசமாகப் பேசிக் கொண்டிருக்கலாமே என்று நினைத்துக் கிளம்பிவிட்டேன்! " என்றார் பெரியவர்.

எப்படியோ சற்று நேரத்தில் பார்த்தால், சுசிதா மட்டுமாக இருந்து, தில்லைநாயகத்தோடு பேசிக் கொண்டிருந்தாள்.

"நல்ல மனிதர்களாகத் தெரிகிறது! உன்னோடு தனியே பேச இடம் தந்து, எப்படி விலகிப் போனார்கள், பார்த்தாயா? கூடவே, விபுவை எல்லோரும் பிரியமாகத் தூக்குவதைப் பார்த்தால், மகிழ்ச்சியாக இருக்கிறதம்மா. ஆனால், நீதான் இன்னும் சரியாகக் காணோம் போலத் தெரிகிறது?" என்று கேள்வியாக நோக்கினார் பெரியவர்.

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"இன்னமும் வேலையை விடக் காணோமே!"

"சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம் என்பீர்களே, அங்கிள்! சோம்பிச் சும்மா வீட்டில் கிடப்பது, சரியில்லைதானே?" என்று சமாளித்தாள் சுசிதா.

"வீட்டிலே சோம்பிக் கிடக்காமல் கருணையோடு செய்வதற்கு, எத்தனையோ தன்னார்வத் தொண்டுகள் இருக்கின்றன, சுசிம்மா! ஆனால், இன்னோர் ஏழைப் பெண்ணின் வாய்ப்பையும், பிழைப்பையும்

பறிப்பானேன்? எனக்கென்னவோ, உனக்கு இன்னமும் மனம் சரியாகவில்லை என்றே தோன்றுகிறது!" என்று அவளைக் கூர்ந்து நோக்கினார் தில்லைநாயகம்.

சுசிதாவின் முகம் சட்டெனக் கடுத்தது! "மனம் சரியாகிவிடுவது என்றால் என்ன அர்த்தம், அங்கிள்? வாழ்க்கையையே கிட்டத்தட்ட நாசம் செய்த ஒருவரோடு, பசை போட்ட மாதிரி ஒட்டிக் கொள்வதா? முடியும் என்றா எண்ணுகிறீர்கள்?" என்று படபடத்தாள் அவள்.

"மனம் வருந்தித் திருந்தினால், கொலைகாரன் கூட, மன்னிக்கப் படத் தக்கவன் என்றுதான், எல்லா மதத்திலும் சொல்லுகிறார்கள்! தெரியாமலா சொல்லுவார்கள்? "

"என் மனது, அவ்வளவு நல்லது இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், அங்கிள்!" என்றாள் சுசி, பிடிவாதமாக.

இந்தப் பேச்சு பிடிக்கவில்லை., விடு என்பதுபோலத் தலையைத் திருப்பிக்கொண்டு அமர்ந்திருந்தவளைப் பார்த்தவரின் முகம் கனிந்தது!

சின்ன வயதிலிருந்து, அவர் பார்த்து வளர்ந்த பெண்!

ஆசைப்பட்டுப் பெற்ற மகளின் பிறந்த நாள்தோறும், இல்லத்தின் முழுச் சாப்பாட்டுச் செலவும், இவள் தந்தையுடையதுதான்! ஒருவருக்குக் கஷ்டம் என்றாலும் இளகிப் போவார்! இவ்வளவு மனிதாபிமானம் உள்ளவர், தொழிலையும் நேர்மையாக நடத்தி இருந்தால் பிரச்சினையே நேர்ந்திராது!

ஆனால், அதற்காக அவரைக் கெட்டவர் என்று சொல்ல முடியுமா?

அவர் கெட்டவராகவே இருந்தாலும், நிகிலன் நடந்துகொண்ட முறை ஒத்துக்கொள்ள முடியாததே!

தவிப்பு தாங்க மாட்டாமல் சுசிதா அழுததை அவர் மறந்துவிடவில்லை!

ஆனால், மனதில் கருணையை வளர்த்துக் கொண்டிருந்த அவருக்கு மன்னிக்கத் தகாத குற்றம் எதுவும் உலகில் இருப்பதாகத் தெரியவவில்லை! அதிலும், தேடிவந்து பிராயச்சித்தம் செய்கிறவனை மன்னிப்பதுதானே நியாயம்?

ஆனால், இப்போது இவளிடம் நியாயம் பேசிப் பயன் இல்லை என்பது புரிய, "அப்போது நான் கிளம்பட்டுமா? உன் கணவரைக் கூப்பிடுகிறாயா? சொல்லிக்கொண்டு கிளம்புகிறேன்." என்று எழுந்தார் அவர்.

சட்டெனக் கண்கள் கலங்க, "என்மேல் கோபமா, அங்கிள்?" என்று

கேட்டாள் அவள்.

“சேச்சே!” என்று அவள் தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார் அவர். “கிளம்புமுன் வருவதாக, ராமநாதனிடம் சொல்லியிருக்கிறேனம்மா! அதனால்தான் கிளம்புகிறேன். ஆனால் ஒன்றும்மா! இன்றைக்கு உன் பெற்றோர் உயிருடன் இருந்தால், நீ எப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்படக் கூடும் என்று சற்று யோசித்துப் பார். சரிதானா? நான் கிளம்பட்டுமா?”

அவர்கள் உயிருடன் இருந்திருந்தால், நிகிலனை மணக்கவே வேண்டியிராதே என்று எண்ணியபோதும், சுசிதா வாயைத் திறக்கவே இல்லை .

அதற்குள் தில்லைநாயகம் எழுவதைக் கவனித்துவிட்டு அங்கு வந்த மற்றவர்களிடமும் விடைபெற்று, அவர் கிளம்பினார்.

வாயில் வரை சென்று அவரை வழியனுப்பிவிட்டுத் திரும்பிய நிகிலனின் முகத்தில் யோசனை இருந்தது!

அத்தியாயம் -19

நிகிலன் வீட்டினுள் வரவும், சுந்தரம் கேள்வியாக நோக்க, மீனலோசனி “என்னப்பா? என்ன பிரச்சினை?” என்று வெளிப்படையாகக் கேட்டாள்.

அதற்குள் தன்னிடம் தாவியிருந்த மகனைச் சமாளித்துக் கொண்டிருந்த சுசிதா மட்டும் உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்தாள்.

அவளிடம் சொன்னது போல, நிகிலனிடமும் தில்லைநாயகம் ஏதாவது சொல்லியிருப்பாரோ? இப்போது அதைப் பற்றி, இவன் சொல்லாமல் இருக்க வேண்டுமே!

“பெரிதாக ஒன்றுமில்லை, அம்மா! சுசிதா நன்றாக வேலை செய்தாளாம். அதனால், அந்த அலுவலக முதலாளிகள் எல்லோரும், இவளது முகவரி வேண்டும் என்று அவரிடம் கேட்டார்களாம்! மீண்டும் சுசியை அங்கே கூட்டிப் போக ஆசை! சுசிக்குத் தேவையற்ற தொல்லை என்று எண்ணி, தெரியாது என்று சொல்லிவிட்டதாகச் சொன்னார்! “ என்றான் அவன்.

“கல்யாணம் ஆகிவிட்டது. வரமாட்டாள் என்று சொல்ல வேண்டியதுதானே?” என்றாள் மீனலோசனி.

“திருமணத்துக்கும் வேலைக்கும், தற்போது என்னம்மா சம்பந்தம்? எங்கேயானாலும் கூப்பிடத்தான் செய்வார்கள்!” என்று தாய்க்குப் பதில் சொன்னான் மகன்.

ஆனால், சொல்லாமல் சொல்லி, நிகிலன் அவளுக்கு உணர்த்திய சேதி புரிய, சுசிதா திடுக்குற்றாள்! தங்கராசுதான்! உடும்பாகத் தொடருவான் போல இருக்கிறதே!

உள்ளக் கலக்கத்தை வெளிக் காட்டாமல் மறைக்க முயன்றபடி, கணவனைப் பார்த்தாள் அவள்.

அவன் லேசாகப் புன்னகை புரிந்து, “ஆனால் ஒன்று! யார் இங்கே வந்து, என்னதான் குட்டிக்கரணம் போட்டாலும், அவர்கள் யாரையும், உன் கிட்டேகூட நான் வரவிடப் போவது இல்லை!” என்று கூறவும், அவளது அச்சம் உடனே மறைந்தது!

சரிதானே? அவள் இருக்கும் இடம் தெரிந்து, தங்கராசு இங்கேயே வந்தாலும்தான் என்ன? முதலைக்குத் தண்ணீரில்தான் பலம்! அங்கே, அவன் இடத்திலேயே, அவனால் பெரிதாக ஒன்றும் முடியவில்லை! அப்படியிருக்க, இங்கே இந்தப் பரந்து விரிந்த சென்னைக்கு வந்து, அப்படி என்ன கிழித்துவிட போகிறான்? அதுவும், கணவனாக நிகிலன் வேறு துணையிருக்கும்போது! வாலைச் சுருட்டிக்கொண்டு

பின்னங்கால் பிடரியில் இடிக்க ஓடி விட வேண்டியிருக்கும்!

“அதானே? இங்கேயே, எனக்கு உதவியாக மருமகளை என் அலுவலகத்திற்கு வரச் சொல்லலாமா என்று நானே யோசித்துக் கொண்டிருக்கிறேன்! இதில், திருச்சிக்கு எங்கே போவது?” என்றார் சுந்தரம்.

“உங்களுக்கு உதவியாகவா? சுசிதான் வீட்டிலேயே தூங்குவாளேப்பா, அதற்காக, உங்கள் அலுவலகத்துக்கு வேறு எதற்காக வருவது?” என்று தந்தையைக் கிண்டலடித்தான் நிகிலன்.

“அசதி மறதியாகவேனும், அப்பாவின் தொழில் பக்கம் கொஞ்சம் எட்டிப்பார்த்தால் அல்லவா, தூக்கம் தவிர, அங்கே என்ன வேலை நடக்கிறது என்று தெரியும்?” என்று மகனுக்கு லேசாக ஒரு குட்டு வைத்துவிட்டு, சுந்தரம் தொடர்ந்தார். “எதற்கு என்றா கேட்டாய் ? இதோ, கேட்டுக்கொள். மறதி மன்னனாகிய நான், இன்னின்ன தேதியில், என்னென்ன செய்வது என்று எனக்கு நினைவுபடுத்த வேண்டாமா? . . .ஆஹா . . . “ என்று திடுமெனத் தலையில் தட்டிக்கொண்டார் அவர்.

“என்னப்பா?”

“அக்காப்பா! ஏதா அவள் எதிர்பார்த்த கடிதங்கள் சிலது வந்திருக்கிறதாம்! அது பற்றி, உன்னிடம் பேச வேண்டுமாம். நேற்றிரவு பிள்ளைகளைக் கொண்டு விடப் போனபோது சொன்னாள். இரவு நீங்கள் வர நேரமானதால், தூங்கப் போய்விட்டேனா, இன்றும் . . இந்தக் குட்டிப்பையன் பரபரப்பில் மறந்து போயிற்று! அவசரம் ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்! முடிந்த நேரம் வருமாறுதான் சொன்னாள். நேரம் கிடைக்கும்போது, ரஞ்சியைப் போய்ப் பார்த்து வா நிக்கி. பாவம் அவள்!” என்று மகளிடம் உருகினார் சுந்தரம்.

“ஆமாம்! இருபது தொடங்குமுன் காலில் கஞ்சியைக் கொட்டிக்கொண்டவள் போல, அப்படித் துடித்துக்கொண்டு, அவரைக் கட்டிக்கொண்டாள்! வேண்டாம் என்றால் ஒரு வார்த்தை கேட்டாளா?” என்று கோபமும் வருத்தமுமாக மகளைக் குறை கூறினாள் மீனலோசனி.

“இதை, இன்னும் பதினைந்து ஆண்டுகள் கழித்துச் சொல்வதுதானே? அவளைக் குற்றம் சொல்ல, நல்ல நேரம் கண்டுபிடித்தாய்! சும்மாவே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவளுக்கு ஆறுதலாகப் பேசுவதை விட்டு, அவளைத் திட்டுகிறாயே!” என்று சுந்தரம் எரிச்சல்பட்டார்!

“ஐயோ, ஆமாம்! என் கண்மணி அங்கே என்ன வேதனைப் பட்டுக்

கொண்டிருக்கிறாளோ? சீக்கிரமாக, அவளுக்கு ஒரு ஃபோன் போட்டுக் கொடும்மா!" என்று மகனை ஏவினாள் தாயார்!

பான்ட் பாக்கெட்டிலிருந்து, நிகிலன் செல்ஃபோனை எடுத்துக் கொண்டிருக்கும்போது, "அம்மா, விப்பு . . ஆ . . .!" என்று விபு கத்தவும், மற்றது மறந்து, எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு, அவனிடம் ஓடினார்கள்.

"எல்லாம் குணமாகி விட்டதாகச் சொல்லித்தானே, வீட்டுக்கு அனுப்பினார்கள்? இப்போது வலிக்கிறது என்கிறானே குழந்தை! நீ அவசரப்பட்டாய் என்று, சீக்கிரமாகப் பில்லைப் போட்டு, அரைகுறை நிலையிலேயே அனுப்பிவிட்டார்களா?" என்று கவலையுடன் மகனிடம் படபடத்தாள் மீனலோசனி.

"அப்படியெல்லாம் பண்ண மாட்டார்கள் அம்மா!" என்று தாயைத் தேற்றியவாறு மகனைப் பார்த்தான் நிகிலன்.

"மருத்துவமனையில் சரியாகத்தான் செய்வார்கள்! வரும் வழியில், வீட்டில் யாரும், அவனுக்கு எதையேனும் தின்னக் கொடுத்து விட்டீர்களா?" என்று கோபமாகக் கேட்டார் சுந்தரம்.

அதற்குள் மகனின் அருகே மண்டியிட்டு அணைத்தபடி, "கண்ணுப் பையனுக்கு எங்கேம்மா வலிக்குது?" என்று பரிவுடன் கேட்டாள் சுசிதா.

அருகில் வந்து உருகி நின்ற நாலு பெரியவர்களையும் விழி மலர நோக்கி, "காக்கா போச்!" என்று பிள்ளை சிரித்தான்.

அவனது அந்த மழலைச் சொல்லுக்குக் "காணாமல் போய்விட்டது" என்று அர்த்தம் என்பதை அறிந்திருந்த பெரியவர்களுக்கு ஆறுதலோடு, சிரிப்பும் வந்துவிட, சந்தோஷமாகக் குழந்தையைக் கொஞ்சலானார்கள்.

பொதுவாக, வீட்டுப் பெரியவர்களோ, நிகிலனோ விபுவைத் தூக்கி, கொஞ்சி விளையாடினார்கள் என்றால், சுசிதா மெல்ல விலகிப் போய்விடுவாள். தூர நின்று கவனிப்பாளே தவிரக் கூட நின்று பேசிச் சிரிக்க மாட்டாள்.

அதிலும் விபுவோடு இருப்பது நிகிலன் என்றால், கண் படும் இடத்தில் கூட அவள் நிற்பதே கிடையாது!

ஆனால், முந்திய நாள் பட்ட மன வேதனையில், அந்த ஒதுக்கம் அவளுக்கும், மற்றவர்களுக்கும் மறந்தே போய்விட, நால்வரும் சேர்ந்தே விபுவோடு விளையாடி, விளையாட்டுக் காட்டி மகிழ்ந்தார்கள்!

விபுவுக்கும், இப்படி நாலு பேரின் கவனமும் தன் மீதிருப்பது பிடித்துப்

போக, ஒவ்வொருவர் தோளுக்கும் மடிக்குமாகத் தாவிக் கொண்டே இருந்தான்!

சிரிப்பும் விளையாட்டுமாக, செல்வது அறியாமல் நேரம் சென்றுவிட, ஒரு வழியாக அவனைப் பிடித்து, உணவு கொடுத்துத் தூங்க வைப்பதற்கு, அன்று வெகு தாமதமாகிப் போயிற்று!

“அப்பா, உங்கள் மாத்திரை . . “ என்ற மகனிடம், “ஒரு நாள், சற்றுத் தாமதம் ஆவதில், ஒரு பாதிப்பும் ஏற்பட்டுவிடாது!” என்றார் அவர்.

என்றாலும், மற்றவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, உணவு, மருந்துகளை உட்கொண்டுவிட்டு, அவரும் உறங்கப் போனார்.

அறையில் வைத்திருந்த பிஸ்கட்டுகளோடு இரவு உணவை சுசிதா முடித்துக்கொள்ள எண்ணினாள்.

ஆனால், அந்த நேரத்திலும் ஒரு பெரிய டம்ளரில் பாலைக் கொணர்ந்து கொடுத்து, “சொட்டு விடாமல் குடித்து விடவேண்டும்! வந்ததற்கு இப்போது எவ்வளவு மெலிந்துவிட்டாய்!” என்று மீனலோசனி கூறியபோது, மறுபடியும் பெற்றவள் நினைவு வந்தது!

மறுக்காமல் வாங்கிக்கொண்டு, “இவ்வளவு குடித்தால், ஒரே குண்டாகி விடுவேன்!” என்று இலகுவாகப் பேசியபோதும், அவளுக்குச் சஞ்சலமாகவும் இருந்தது!

செய்கையால் அவளுடைய தாயை நினைவூட்டியபோதும், மீனலோசனி நிகிலனுடைய அன்னை அல்லவா? அவள் கையால் வாங்கி உண்பது மட்டும் எப்படிச் சரியாகும்?

ஆதாம் ஏவாளையும், சீனர்களையும் இழுத்து, அவள் என்னென்ன கதை சொன்னாலும்?

குழம்பியபடியே அவள் அமர்ந்திருந்தபோது, கதவைத் தட்டிவிட்டு நிகிலன் வந்தான்.

“தூங்கிவிட்டானா?” என்று மகனைப் பார்த்தவன், “ஏதேனும் சிறு பிரச்சினை என்றாலும், தயக்கமின்றி உடனேயே என்னை எழுப்பிவிடு. நேற்றளவு முற்றவிட வேண்டாம்! இன்னும் கொஞ்சம் தாமதித்திருந்தால், ஆபத்தாகி இருக்கும் என்று டாக்டர் சொன்னார்.” என்றான்.

மறுத்துப் பேச எதுவும் இல்லாமல், “சரி.” என்றாள் அவள் சுருக்கமாக.

“தேவை உனக்கு என்றாலும், தயங்க வேண்டாம்.” என்றவன் அவளது பதிலுக்காக நில்லாமல், “குட்நைட்”டுடன் வெளியேறிவிட்டான்.

அவளது பதிலை எதிர்பாராமல் நிகிலன் சென்றது, சுசியை உறுத்தியது! பதில் சொல்ல மாட்டாள், அல்லது தேவையில்லை என்று மறுப்பாள் என்று உணர்ந்து, போயிருக்கிறான். மூன்று ஆண்டுகளாக யார் பார்த்தார்கள் என்றும் கேட்கலாமே!

போராடாமலே தோல்வியைத் தவிர்த்தல் என்பது இதுதான் போலும்!

ஒத்துக்கொள்ளப் பிடிக்காவிட்டாலும், நிகிலன் கெட்டிக்காரன் என்று தோன்றியது! இதில் மட்டுமல்ல. தில்லைநாயகம் சொன்னதைப் பெற்றோர் அறியாமல் அவளுக்குத் தெரிவித்ததிலும், திடமூட்டியதிலும் கூட! பெற்றோருக்கு ஏற்ற பதிலைச் சொல்லாமலுமில்லை!

ஏதேது? போகிற போக்கைப் பார்த்தால், நிகிலன் விசிறிகள் சங்கத்தில் அங்கத்தினர் ஆவதுதான் பாக்கி என்று தன்னையே கிண்டலடித்துச் சுரணை கிளப்ப முயன்றவளுக்குத் திடுமென சுரீலென்றது!

முந்திய இரவு! நிகிலனை எழுப்பச் சென்றபோது, அவன் கட்டிலில் இல்லை! எங்கே என்று பதறித் தேடியபோது, கட்டிலுக்கு மறுபுறத்தில் தரையில் படுத்திருந்தான்! முழந்தாளிட்டு அவனை உலுக்கி எழுப்பியதும், விபு என்றதும், அவன் சட்டென எழுந்து, அவளுக்குக் கைகொடுத்துத் தூக்கி விட்டதும், இப்போது அவளுக்கு நன்றாக நினைவு வந்தது!

ஏன்? சுகமாக அமுங்கிக் கொடுக்கும் மெத்தையை, மெத்தை பரப்பியிருந்த விசாலமான கட்டிலை விட்டு, நிகிலன் ஏன் தரையில் படுத்து உறங்க வேண்டும்?

பிறந்ததிலிருந்து அந்த சுகத்தில் பழகியவன் என்பதற்கு, விபுவின் தொட்டிலே சான்று!

எல்லாவற்றையும் தருமத்துக்குக் கொடுத்துவிட்டு, “இல்லத்தி”ல், பாயில் படுத்தபோது, எவ்வளவு கஷ்டமாக இருந்தது! முதலில் எத்தனையோ நாட்களுக்கு சுசிதா அனுபவித்த துன்பம்தானே? பிறகு பழகிப் போயிற்று!

அவளுக்கு வேறு வழியில்லை! இவனுக்கு என்ன தலையெழுத்து?

இதுதான், தில்லைநாயகம் அங்கிள் சொன்ன மனம் வருந்தித் திருந்துவதா?

பிராயச்சித்தத்தை வியாபாரம் மாதிரி எண்ணுகிறான் என்று அவள் எண்ணியதுதான் தவறா?

ஆனால், நிகிலன் என்னதான் உருகி வருந்தினாலும், அவனால் அவள்

அனுபவித்த வேதனைகள் இல்லையென்று ஆகாதே!

பெற்றோரின் மரணச் செய்தியைக் கேட்ட அந்த வினாடி, அதே வலியுடன் நினைவு வர, இதற்குப் பிராயச்சித்தம் செய்ய, நிகிலன் இன்னமும் பலமடங்கு வேதனைப்பட்டாக வேண்டும் என்று ஆத்திரத்துடன் நினைத்தாள் சுசிதா!

மறுநாள் காலை உணவின்போது, அன்று மாலையில் தமக்கை வீட்டுக்குப் போவதால், வீடு வரத் தாமதம் ஆகும் என்று பொதுவாகச் சொன்னான் நிகிலன்.

பிறகு தாயை நோக்கி, "அக்காவுக்கு எதுவும் செய்து கொடுப்பது என்றால், செய்து அலுவலகத்துக்கு அனுப்பிவிடுங்கள், அம்மா!" என்றான் தொடர்ந்து.

"அப்படியே பிள்ளைகளோடு ஒரு நாள் வீட்டுக்கு வரச் சொல்லு. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது நல்லது இல்லை!" என்றாள் மீனலோசனி.

அன்று சம்பள நாள் என்று, ஆண்கள் இருவரும் உணவு முடிந்ததும், அலுவலுக்குக் கிளம்பிச் சென்று விட்டானர்.

வழக்கம்போல விளையாடினாலும், முந்திய நாளின் பாதிப்பினால், விபுவுக்கு அடிக்கடி அழுகையும் வந்ததால், மேலும் இரண்டு நாட்களுக்கு, சுசிதா லீவு போட்டிருந்தாள்.

பாலில் ஊறிய கார்ன் ஃப்ளேக்சை மகனுக்கு ஊட்டி முடித்துக்கொண்டிருந்த சுசிதா, அவன் திடுமென நாற்காலியை விட்டிறங்கி, "பட்டாஃபை என்றபடி தோட்டத்தை நோக்கி ஓடவும், "ஏ . .ய் விபு . . . " என்று அழைத்தபடி, அவன் பின்னோடு ஓடி அவன் வாயைக் கழுவிவிட்டு, அங்கேயே வைத்து விளையாட்டுக் காட்டலானாள்.

வண்ணத்துப் பூச்சிகளை விரட்டிய விபுவைப் பார்த்து ரசித்தவாறு மீனலோசனியும் தோட்டத்துப் பக்கமாக நடந்தாள்.

திடுமெனக் கார் ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து ரஞ்சனி இறங்கவும், அவளுக்கு ஒரே ஆச்சரியம்! ஆனந்தம்!

"ரஞ்சிம்மா! வாடாக் கண்ணு!" என்று மகிழ்ச்சியோடு மகளை நோக்கி விரைந்தாள்.

ஆனால், "ரொம்பத்தான் உருகுகிறீர்களே!" என்றாள் ர்ஞ்சனி ஆத்திரத்துடன். "நேற்று முழுவதுமாக, துடைத்துப் போட்ட மாதிரி என்

நினைவே உங்கள் யாருக்கும் கிடையாது! அப்பாவிடம் சொல்லி அனுப்பியும், நிக்கி, என்னை எட்டிக்கூடப் பார்க்கவில்லை! காத்திருந்து, காத்திருந்து அலுத்துப்போய், வெட்கமில்லாமல் நானே வந்தபிறகு, என்ன பெரிதாகக் கொஞ்சல்!" என்று பொருமினாள் அவள்.

"ஓ, யாரும் வராததா? அதும்மா . . " எனுமுன் "பாத்தீ என்று ஓடி வந்து காலைக் கட்டிக்கொண்ட பேரனை, ஆசையாகத் தூக்கிக் கொண்டாள் மீனலோசனி. "இந்தக் குட்டிச் செல்லத்துக்கு வயிறு சரியில்லாமல் போய், நேற்றெல்லாம் மருத்துவமனையில்தான் வாசம்! அந்தப் பதட்டத்தில், நிக்கியிடம் சொல்லவே அப்பா மறந்துவிட்டார். நிக்கி இன்று வருவான், பார்!" என்றாள் மகளுக்குத் தேறுதலாக.

ஆனால், அதை ஏற்க மறுத்து, "அன்று கண்டபடி ஐஸ்கிரீமைத் தின்று, தினுவுக்குக் கூடத்தான் ஒரே சளி, இருமல்! ஒழுங்காகக் கல்யாணம் செய்து, முறை தவறாமல் பிறந்த பிள்ளைகள்! எப்படி இருக்கிறார்கள் என்று கேட்கக்கூட, அவர்களுக்கு நாதியில்லை! புருஷனைப் பிடிக்கவென்று பெற்று வந்த பிள்ளைக்கானால் ராஜ மரியாதை!" என்று ரஞ்சனி மேலும் கொதித்தாள்!

"ஐயோ, சும்மாயிரு ரஞ்சனி!" என்று மகளை அடக்க முயன்றவாறு திரும்பிப் பார்த்தால், விறைப்புற்று நிமிர்ந்த தலையுடன், சுசிதா வேகமாக வீட்டினுள் சென்றுகொண்டிருந்தாள்!

அத்தியாயம் -20

சுசிதாவின் காதில், ரஞ்சனியின் வார்த்தைகள் நிச்சயமாக விழுந்திருக்கும்! நடந்ததை அறிந்ததாலேயே, அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று மீனலோசனியால் உணர முடிந்தது!

எப்போதும் இனிமையாகப் பேசும் மகளின் மாறுபட்ட பேச்சு, அதன் மூல காரணத்தை எண்ணி, இன்னொரு புறம் அவளைக் கலங்க வைக்க, மருமகளை அழைத்து சமாதானம் செய்து, மகளுக்கு அறிமுகம் செய்யக்கூட, அப்போது அவளுக்குப் பயமாக
இருந்தது!

தன் சொந்த வேதனையில் உளைந்து கொண்டிருக்கும், ரஞ்சனி இன்னமும் கடுமையாக சுசியிடம் பேசிவிட்டால்?

எனவே, "முதலில் உள்ளே வா! வெளியே நின்று என்ன பேச்சு?" என்று மகளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஓடி ஓடி வந்து குசலம் விசாரித்த பழைய வேலையாட்களின்

பரிவும், ஆர்வமும், ஆறுதலுக்குப் பதிலாக ரஞ்சனியை மேலும் வருத்தின!

ஒரு வழியாக, அவரவர் வேலையைச் செய்யுமாறு வேலையாட்களை அனுப்பியபின், விபுவிடமும் அவனது விளையாட்டு பொம்மைகளை விளையாடக் கொடுத்துவிட்டு, மீனலோசனி மகளிடம் திரும்பினாள்.

ஆனால் அதற்குள்ளாகவே, "என்னம்மா, உங்களைப் பிள்ளைக்கு ஆயா வேலை பார்க்க வைத்துவிட்டு, மகாராணி சப்பிர மஞ்சத்தில் உறங்கப் போய்விட்டாளா?" என்று ஏளனமாகக் கேட்டாள் ரஞ்சனி.

வியப்பும் திகைப்புமாக நோக்கி, "என்ன ரஞ்சிம்மா இப்படியெல்லாம் பேசுகிறாய்? நீயா, என்று இருக்கிறது!" என்று வருத்தப்பட்டாள் தாயார்!

சலிப்புடன் உச்சுக் கொட்டினாள் மகள். "அப்படி என்ன இல்லாததைச் சொல்லிவிட்டேன்? கண்ணால் பார்க்கிற நடப்பைக் கொஞ்சம் கடுமையாகச் சொன்னேன். அவ்வளவுதானே?" என்றாள் வெறுப்பாக!

"இல்லைம்மா. நீ நினைப்பது தப்பு! அவள் மேல் தப்பு இல்லை! எல்லாம் உன் தம்பியின் திருவிளையாடல்தான்! சுசிதாவுக்கு இப்போதுதான், இருபத்தியொரு வயது ஆகிறது தெரியுமா? அப்போது, அவள் அறியாப் பெண்! நீ சொன்ன மாதிரி, புருஷனைப் பிடிக்கும் எண்ணம் என்றால், பிள்ளை உருவானதுமோ, பிறந்ததுமோ சொல்லியிருக்க மாட்டாளா? இவனல்லவா, தேடிப் போய், வர மாட்டேன் என்றவளை வற்புறுத்திக் கூட்டி வந்திருக்கிறான்!" என்று நடந்த விவரங்களை, முடிந்தவரை சுருக்கமாகச் சொன்னாள் அன்னை!

தமக்கையின் துயர் தாங்காமலே பிராயச்சித்தம் செய்ய நினைத்துத் தம்பி சென்றான் எனவும், ரஞ்சனி அழுதுவிட்டாள்!

"இங்கே என் வாழ்க்கை தலைகீழாகப் போன எரிச்சலில், எனக்கு எல்லாமே தப்புத் தப்பாகத் தெரிகிறதும்மா! இல்லாவிட்டால், உங்கள் எல்லோரையும் நான் எப்படி, இப்படி நினைப்பேன்? அநியாயமாக, அந்தப் பெண்ணை வேறு வருத்திவிட்டேன் போல இருக்கிறதே!" என்று கண்ணீர் சொரிந்தாள்.

பொம்மைகளை ஒன்றுடன் ஒன்று முட்டவைத்து விளையாடிக் கொண்டிருந்த விபு, கண்ணீர்க் குரலைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தான்.

ரஞ்சனியின் கண்களில் நீர் வடிவதைப் பார்த்து எழுந்து வந்து, அவள் அருகே சோஃபாவில் ஏறி நின்று,"ஆ . .வா?" என்று கேட்டு, அவள் வயிற்றில் தடவிக் கொடுத்து, மெத்தென்ற கைகளால், கண்களையும் துடைத்துவிட்டான்.

சிரிப்பும் அழுகையுமாகத் தம்பி மகனை அணைத்து முத்தமிட்டாள் அவள்.

"கெட்டிக்காரச் சர்க்கரைக் கட்டி!" என்று பெருமைப்பட்டாள் பாட்டி! "வலித்தால்தான் அழுவாய் என்று யோசித்து, அதுவும் அவனை மாதிரி வயிற்று வலி என்று முடிவு பண்ணித் தடவி விடுகிறான், பார்! இந்த வயதிலேயே, இவ்வளவு யோசிக்கத் தெரிகிறதே!"

"ஆமாம்மா! ஒரே ரத்தம் என்பதால், நான் அழுவது தாங்காமல் கண்ணைத் துடைத்து விடுகிறான்! இநதச் செல்லத்தைக் கூட, இவ்வளவு நேரம் தூக்கிக் கொஞ்சாமல் இருந்தேனே " என்று தன்னையே கடிந்துகொண்டாள் ரஞ்சனி.

மனம் சற்று லேசாகிவிட, விபுவைத் தூக்கிப் போட்டு, உப்பு மூட்டை சுமந்து எல்லாம் விளையாடினாள்.

"இவன் யார் சாயல், அம்மா? பழகிய முகமாக இருந்தாலும், நிக்கி ஜாடை தெரியவில்லை! அவள் . . நிக்கி மனைவி போலவா?" என்று கேட்டாள்.

"ம்ம்ம் . . .? கொஞ்ச காலமாகவே நீ கண்ணாடி பார்ப்பதில்லை என்று தெரிகிறது! இல்லாவிட்டால், உன் முகமே, உனக்கு மறக்குமா? அப்படியே, இவன் உன் அச்சு! கண் மட்டும் சுசி போலத் தெரிகிறது!" என்று வருத்தமும் சிரிப்புமாக மீனலோசனி கூற, நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு, "அட, ஆமாம்!" என்று ஆச்சரியமாகக் கூறி மகிழ்ந்தாள் மகள்.

"நீங்கள் சொன்னது போலக் கண்ணாடி பார்த்து அலங்காரம் பண்ணிக்கொள்ள, எனக்கு இப்போது பிடிக்கவே மாட்டேன் என்கிறதும்மா!" என்ற ரஞ்சனியின் பேச்சு, சுற்றிச் சுற்றிக் கணவனிடமே வந்து நின்றது!

"நாற்பது வயதில் நாய்க் குணம் என்று படித்தேன், அம்மா! குணாவுக்கு ஐம்பது வயதில் அது போல வந்து, வேறே தேடுகிறது என்றே வைத்துக் கொள்வோம். . . தேடக் கூடாதுதான்! ஆனால், ஏதோ இப்படி ஒரு விளக்கம் சொல்லிக் கொண்டாலும், பெற்ற பிள்ளைகளை எப்படிம்மா மறக்க முடியும்? அதுகள் தவிப்பதைப் பார்க்கும்போது,

எப்படி வருகிறது, தெரியுமா?" என்று வேதனையோடு புலம்பிய மகள் அறியாமல் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மீனலோசனி.

ரஞ்சனியிடம் நம் வருத்தத்தைக் காட்டக் கூடாது என்று, மகன் சொல்லியிருக்கிறானே! அவளுக்குக் கொஞ்சநஞ்சம் இருக்கும் தைரியமும் போய்விடுமாம்!

சிரமப்பட்டு முகத்தை நேராக்கிக்கொண்டு, "வேண்டாம்மா! மீண்டும் அழுதுவிடாதே! விபு எவ்வளவு கவலையாகப் பார்க்கிறான், பார்! இப்போது, நீ என்ன சாப்பிடுகிறாய், சொல்லு! மதியத்துக்கு . . " என்று வழக்கமான உணவளிக்கும் வேலையைத் தொடங்கினாள்.

"ஐயோ, ஒன்றும் வேண்டாம்மா! சர்க்கரை போடாத பழச்சாறு ஏதாவது இருந்தால் கொடுங்கள்! குடித்துவிட்டு, வீட்டுக்குப் போகிறேன். மாலையில் நிக்கி வருவான் என்றீர்களே, அவனுக்குப் பயறு மிக்சர் பிடிக்கும் செய்துவிட்டு, இனிப்புக்கு . ." என்று திட்டமிட்டவளின் பேச்சில் இடையிட்டு, "ரொம்ப மெனக் கெடாதே, ரஞ்சி. இப்போதெல்லாம் உன் தம்பி, வகை வகையாக ரசித்துச் சாப்பிடவே காணோம்! அவள் சாப்பிடுவது இல்லை என்பதற்காகவோ, என்னவோ என்று எனக்குக் கலக்கமாக இருக்கிறது!" என்றாள் தாயார்!

அது என்ன என்று கேட்ட மகளுக்கு மீனலோசனி விவரம் சொன்னாள்.

"என்னம்மா, இந்த சுசிதா ரோஷக்காரியாகத் தெரிகிறாளே! உறுதியும் இருக்கிறது! ரொம்ப நல்ல விதமோ. . ."

"ஆமாம்மா. தினு கொடுத்துதான் இந்தக் குட்டி நிறைய இனிப்பு சாப்பிடதாக, தீபுவே சொன்னாள்! ஆனாலும், நாத்தனார் பிள்ளை கொடுத்ததால் வந்தது என்று ஒரு வார்த்தை, அவள் சொல்லவே இல்லை! அதை யோசித்து, அப்புறம்தான் விவரம் கேட்டேன்! அப்போதும், நிக்கியை முழு ராட்சதன் ஆக்கிக் காட்டாமல், ஒரு மாதிரியாகத்தான் சொன்னாள்! யாரையும் குறை கூறுகிற விதமில்லை!" என்றாள் தாயார்!

"ஐயோடா! இவளைப் போய்க் கண்டபடி பேசிவிட்டேனே! என்ன மடத்தனம்! இப்போது, அவளிடம் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டுமோம்மா? கேட்கத்தான் வேண்டும்! என்னம்மா?" என்று தாயிடம் ரஞ்சனி கேட்டாள்.

"நானும் முதலில் சுசியை இப்படித்தான் ஏதோசொல்லிவிட்டேன்! ஆனால், அது பற்றி, தானே சமாளித்துக் கொள்வதாகத் தம்பி

சொன்னான்! அப்படியே செய்தான். வேண்டுமானால், நீயும் . . . “

“இல்லம்மா. தப்பு செய்தது நான்! உங்களை மாதிரி, பெரிய மரியாதை முறையும் இல்லையே! நானே அவளிடம் கூறி விடுகிறேன்!” என்று ரஞ்சனி எழுந்தாள். “எந்த அறைம்மா?”

“ரஞ்சிம்மா, தப்பாக எடுத்துக் கொள்ளாதேடா! நிக்கி அறையை ஒட்டினாற்போல இருக்க வேண்டும் என்று, சுசிக்கும் பிள்ளைக்கும் உன் அறையைத்தான் . . .” என்று தயக்கத்துடன் இழுத்தாள் மீனலோசனி.

“என் அறையையா?” என்று ஒரு கணம் முகம் வாடியபோதும், தாயின் தயக்கம், இன்னமும் அதிகமாக மகளைத் தாக்கியது!

“இதில் தப்பு என்னம்மா இருக்கிறது? அதுதானே எல்லோருக்கும் வசதி? எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. நான் அவ . .சுசிதாவைப் பார்த்து ஒரு வார்த்தை நல்லபடியாகப் பேசிவிட்டு வந்துவிடுகிறேன்!” என்று படியேறிச் சென்ற மகளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள் பெற்றவள்!

சுசிதா கதவைச் சாத்தி வைத்திருக்கவில்லை! சும்மா ஜன்னலோரம் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். தன் பேச்சின் விளைவோ என்று சங்கடமாக உணர்ந்தபடி, கதவை வேசாகத் தட்டினாள் ரஞ்சனி.

தன் இடமாகப் பழகிய அறையின் கதவைத் தட்டுவது, இன்னமும் சங்கடமாகப் பட, சுசிதா திரும்பியதுமே, “வந்து, ததப்பாக நினைத்து . . . உன்னைப் பற்றித் தெரியாமல் ரொம்பத் தப்பாகப் பேசிவிட்டேன். எனக்குக் கொஞ்சம் . . . வந்து, ரொம்பவே மனது சரியில்லாததால், சட்டென்று கடுமையாகப் பேசி விடுகிறேன். அதை மறந்துவிடு. ப்ளீஸ்!” என்று, சற்றுத் தடுமாறியபோதும், வேகமாகச் சொல்லி முடித்தாள்.

“உள்ளே வந்து பேசுங்களேன். “ என்றாள் சுசிதா. “அல்லது . . . இந்த அறை உங்களதாக இருந்தது என்று வடிவு ஒருதரம் சொன்னாள். அதனால், உள்ளே வரக் கஷ்டமாக இருக்கிறதோ?”

சின்னவளின் பேச்சு முடியுமுன், “ஊகூம்., அப்படி ஒன்றும் இல்லையே!” என்று உடனே அறைக்குள் வந்து நின்றாள் ரஞ்சனி. “நான் சொல்ல வந்தது அவ்வளவுதான். சொல்லிவிட்டதால் கிளம்பினேன். வரட்டுமா?”

“ஒரு நிமிஷம்! நானும் சொல்லி விடுகிறேன்.” என்று அவளைத் தடுத்து நிறுத்தினாள் சுசிதா. “இந்தச் சூழ்நிலையில், எல்லோருக்கும் என்ன தோன்றுமோ, அதைத்தான் நீங்களும் சொன்னீர்கள். ஆனால், அத்தை மூலமாக அது சரியாகிவிடும் என்றும் எனக்கு நம்பிக்கை.

அதனால், நான் அந்த வார்த்தைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை! நீங்களும் அதை நினைத்து, சங்கடப் படவேண்டாம். “ என்று அவள் சமாதானமாகப் பேசவும், ரஞ்சனிக்கு ஆறுதலாக இருந்தது!

“உண்மைதான். அம்மா சொன்னார்கள்தான். அதனால்தான் . . . மமன்னிப்புக் கேட்க எஎண்ணி வந்தேன்! பிள்ளைகளும் சொன்னார்கள், நீ பிரியமாக இருந்ததாக! அவர்களோடு விளையாடினாயாம்! “

“அவர்கள் அருமையான பிள்ளைகள். தீபு உங்களைப் போலவே அழகாக இருக்கிறாள். “

முகம் மலர, “நிஜமாகவா?” என்று ஆவலுடன் கேட்ட ரஞ்சனியின் முகம் உடனே வாடியது! “அழகாக இருந்து என்ன செய்வது? அதிருஷ்டம் இருந்தால்தான் பிரயோஜனம்! கடவுள் புண்ணியத்தில், தீபுவுக்கேனும், அதிருஷ்டம் முழுசாக இருக்க வேண்டும்!”

பேசி முடித்து ஒரு பெருமூச்சு விட்ட ரஞ்சனிக்கு, திடுமெனத் தான் அதிகம் பேசிவிட்டது போல ஓர் உணர்வு! அதுவும் அவளது சொந்த விஷயம் பற்றி!

பேச்சை மாற்றும் விதமாக, “நிக்கி வீட்டுக்கு வருவதாகச் சொன்னானாம்! பயறு மிக்சர் செய்யலாம் என்று இருக்கிறேன்! இனிப்பில் அவனுக்கு, இப்போது ரொம்பவும் பிடித்தம் என்று ஏதாவது இருந்தால் சொல்லேன், செய்து வைக்கிறேன். “ என்று கேட்டாள்!

“எனக்குத் தெரியாது! அது பற்றி, அத்தையிடம்தான் கேட்க வேண்டும்!” என்று சுசிதா இயல்பாகப் பதிலிறுக்க, மற்றவள்தான் திணறிப் போனாள்!

கணவனுக்கு என்னென்ன பிடிக்கும் என்பதை மாமியாரிடம்தான் கேட்க வேண்டும்., தனக்குத் தெரியாது என்று நாத்தனாரிடமே இவ்வளவு சர்வ சாதாரணமாக சொல்கிறவளிடம், மேற்கொண்டு என்ன பேசுவது?

திருமணமான நாளில் இருந்து, குணாவுக்கு என்னென்ன வகை உணவு, உடை பிடிக்கும் என்று பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்ததோடு, , அதற்கேற்பத் தன் சுவைகளையும் மாற்றிக் கொண்டதை நினைக்கையில், ரஞ்சனிக்கு நெஞ்சை அடைத்தது!

அதனால், இப்போது என்ன கிடைத்துவிட்டது? கிரீடமா சூட்டிவிட்டார்? புத்தி வளர வேண்டுமாமே, அவளுக்கு!

இந்த மாதிரி ஒட்டுதல் இல்லாமல் வேறுபாடாகவே

இருந்திருந்தால், இப்படிச் செய்தோமே அப்படிப் பார்த்தோமே என்ற ஏக்கமாவது இல்லாதிருந்திருக்கும்! ஆனாலும் . . . .

அதுவரை, உரையாடலில் தொய்வு விழாமல், எப்படியோ இருவருமே முயன்று காத்திருந்தனர்!

ஒரே உருக்கமாக இல்லாவிடினும், ரொம்பவும் சங்கடப்பட்டுப் பேச்சை ஓட்டவில்லை!

ஆனால், இதற்கு மேல் ஒன்றும் ஓடாது என்று இருவருக்கும் தோன்றிவிட, "வந்து நான் கிளம்புகிறேன்!" என்று ரஞ்சனி விடைபெற, "பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, அடிக்கடி வாருங்கள்!" என்று வழியனுப்பிய சுசிதாவும் அதற்கு மேல், அவளைத் தடுத்து நிறுத்தவில்லை!

மேஜை மேல் சில எளிய உணவுப் பொருட்களும், "ஃபால்சி"ல் பிரிந்திருந்த தையலைப் பாதி தைத்து, ஊசி நூலோடு வைத்திருந்த சேலையும் பார்வையில் பட, ரஞ்சனிக்கு மனம் கசிந்தது.

தம்பி இப்போது வாழ்வது, என்ன வாழ்க்கை? இந்தப் பெண்ணும்தான்!

வருத்தம் படிந்த முகத்துடன், கீழே இறங்கிவந்த மகளின் முகத்தைப் பார்த்த மீனலோசனிக்கு, ஒன்றும் புரியவில்லை!

"என்னம்மா?" என்று மெல்லக் கேட்டுப் பார்த்தாள்.

திடுக்கிட்டாற்போல, "ம் ?" என்று கேட்டுவிட்டு, "சொல்லிவிட்டேன், அம்மா! அதில் பிரச்சினை எதுவுமில்லை! ஆனால், நான் கிளம்புகிறேன், அம்மா! தீபுவுக்காக ஒரு கட்டுரை எழுதி வைக்க வேண்டியிருக்கிறது! நிகில் வருவதற்குள் அதை முடித்துவிட்டால்தான், அவனோடு நிம்மதியாகப் பேச முடியும். வரட்டுமா?" என்று கிளம்பிவிட்டாள் மகள்.

அன்றிரவும் கதவைத் தட்டிவிட்டு, நிகிலன் உள்ளே வந்தான்.

சேலையில் மீதித் தையலை முடித்து, நூலை வெட்டிக் கொண்டிருந்தாள் சுசிதா.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, நிறுத்திக் கொண்டான் அவன்.

ஏதோ பால், பழரசம் என்றாவது அருந்தத் தொடங்கியிருக்கிறாள்! சேலை பற்றிப் பேசி, அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது!

கேள்வியாக நோக்கியவளிடம், "அக்கா நல்லவள்தான். துன்பத்தில் வந்த வார்த்தை! தப்பாக எண்ண வேண்டாம்!" என்று கேட்டுக் கொண்டான்.

“இல்லை. தப்பாக நினைக்கவில்லை! வேதனை மிகும்போது எப்படி இருக்கும் என்று எனக்கும் தெரியும்! நீங்கள் முன்பு சொன்ன “எல்லோரையும் வருத்தும் துன்பம்” இதுதான் என்று புரிகிறது! ஆனால். . .. என்ன ஆயிற்று? “ என்று கேட்டவள், உடனேயே, “சொல்ல விருப்பம் இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். பரவாயில்லை!” என்றும் சேர்த்துச் சொன்னாள்.

“உன்னிடம் மறைக்க எனக்கு ஒன்றும் இல்லை!” என்று தொடங்கி, நடந்தது அனைத்தையும் நிகிலன் தெரிவித்தான்.

குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, யோசனையோடு கணவனைப் பார்த்தாள் சுசிதா.

மனைவியின் முகத்தில் தன்னோடு ஒத்துப் போகாத ஒரு கருத்தைக் கண்டு, “என்ன?” என்று நிகிலன் வினவினான்.

அத்தியாயம் -21

ரஞ்சனி வந்து ஒரு விதமாக மன்னிப்புக் கேட்டுவிட்டுப் போன பிறகு, வெகு நேரம் அவளைப் பற்றி யோசித்தவாறே சுசிதா உட்கார்ந்திருந்தாள்.

அதுவும், இந்த நேரம் சுசிதா பணியில் இருக்கும் சமயம் என்பதால், பேரனைப் பாட்டி பார்த்துக் கொள்வது வழக்கமாகி, இன்றும் விபு மீனலோசனயிடமே இருந்ததால், அவளது யோசனைக்குத் தடையும் நேரவில்லை!

பெற்றோர் இறந்து, அனைத்துச் சொத்துக்களையும் தானமாகக் கொடுத்துவிட்டு, தில்லைநாயகத்தின் "இல்லத்"தில் சரணடைந்து, அங்கே அவள் தங்கியிருந்த போது, அவரது ஆலோசனையின் பேரில், "சுந்தரகாண்டம்" படித்தது உண்டு.

சீதை படாத துயரமா என்று அவள் யோசிக்க வேண்டும் என்பது, தில்லைநாயகத்தின் விருப்பமாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால், சுந்தர காண்டத்தின் இறுதிப் பகுதியில், சீதையைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்த அனுமார், அவளைப் பற்றி, "துக்கப் படத் தகாத அரசகுமாரி துக்கத்தில் இருக்கிறார்" என்று சொல்வதாக வரும்!

அதைப் படிக்கையில், நானும் துக்கப் படத் தகாதவள்தான்., இப்படி துக்கப்படும்படி ஆகிவிட்டதே என்று சுசிதாவுக்குக் கொதிப்புதான் ஏறும்!

அதற்குக் காரணன் என்று, நிகிலன் மீது மேலும் சீற்றத்தை வளர்த்துக்கொண்டாள் என்பது வேறு விஷயம்!

ஆனால், ரஞ்சனியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அவளது முப்பத்தைந்து வயதுக்குப் பூ மாதிரி இருந்த முகத்தைப் பார்க்கையில், இவளல்லவோ துக்கப்படத் தகாதவள் என்ற எண்ணம் சுசிக்கு உண்டாயிற்று!

ரஞ்சனி துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதும் நன்றாகவே தெரிந்தது! அடிக்கடி அவளது கண்களில் தெரிந்த நிராசையும், வலியும், மற்றவளுக்கு வருத்தத்தை அளித்தன.

விபுவுக்கான வரவேற்பு விழாவுக்கு, நாத்தனாரும் அவளுடைய கணவரும் வரவில்லை என்றபோது, சுசிதா அதைப் பெரிதாக எண்ணவில்லை!

கணவனே யாரோவென்று இருக்கும்போது, என்ன பெரிய நாத்தனார், அவள் வராதது என்ன பெரிய விஷயம் என்று அலட்சியமாகவே நினைத்தாள்.

விபுவுக்கு வேண்டியது ஒழுங்காக நடக்கும்வரை, மற்ற எதைப் பற்றிய அக்கறையும் அவளுக்கு இருக்கவில்லை! ஆனால், அவனுக்கு உடம்பு சரியில்லாமல் போன பிறகு, எதையுமே சற்று வித்தியாசமாக யோசிக்கத் தோன்றியது!

விபுதான் பேரன்., வாரிசு! அவனுக்காக எல்லோரும் பதறியது இயல்புதான்!

ஆனால், அவளைப் பற்றியும் மாமியார் அக்கறை காட்டத்தானே செய்தாள்! எவ்வளவு கஷ்டப்பட்டு, அவளைச் சாப்பிட வைத்தாள்! தேவையே இல்லையே!

அடுத்து, நிகிலன் தரையில் படுத்திருந்தது நினைவு வந்து, அது வேறு அவ்வப்போது மனதை உறுத்திக்கொண்டே இருந்தது!

இப்போது, வாடிய பூவாய்த் தோன்றிய நாத்தனாரின் வேதனை!

காரணம் என்னவாக இருக்குமோ என்று அவள் மனம் பரிதாபப் பட்டது!

அந்தப் பரிவில்தான் சட்டென, நிகிலனிடம் அவள் விவரம் கேட்டது! அவனும் மறுக்காது எல்லாம் சொல்லிவிடவே, அவளுக்கு இன்னொன்று தோன்றியது!

பெற்றோர் விருப்பத்தையும் மீறி, ரஞ்சனி எவ்வளவு உறுதியோடு குணசீலனை மணந்திருக்கிறாள்! அவரும் உறுதியில் தளரவில்லை! இந்த அன்பு எப்படிப் பொய்யாகும்?

ஆனால், உணர்ச்சி பூர்வமான இந்த எண்ணம், வாதத்துக்கு உதவாது!

சொன்னாலும், குடும்பத்தில் அத்தனை பேருமாகச் செய்த முடிவை, வேண்டும் என்றே அவள் ஒத்துக் கொள்ளவில்லை என்று எண்ணுவானோ என்று தோன்றவும் “நீங்கள் நன்றாக விசாரித்தீர்களா?” என்று வினவினாள் சுசிதா.

சலிப்புடன் தோளைக் குலுக்கினான் நிகிலன். “ஒரு முறைக்குப் பலமுறை! ஓர் அவசியம் என்றால், நமக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பக்காவாகச் செய்கிற துப்பறியும் நிறுவனம் ஒன்று இருக்கிறது! ரொம்பக் கெட்டிக்காரர்கள். அங்கே கூட, அத்தானுக்குத் தெரிந்தவர்களும் இருக்கக் கூடுமே என்று வேறோர் நிறுவனத்தின் மூலம் விசாரித்தோம்! அவர்கள் ஒன்றும் இல்லை என்றதும், மறுபடியும்,

நம் வழக்கமான நிறுவனத்தின் மூலமாக இன்னொரு தரம்! இப்போதும், அத்தானுக்கு, இரவு பகல் ஆள் போட்டுக் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறோம். ஆனால், அவர் மிகவும் உஷாராக இருப்பதாகத் தெரிகிறது!" என்றான் அவன்.

"அப்புறம்?" என்று கேட்டாள் சுசிதா.

கேட்கும்போதே, தமக்கை விஷயத்தால், நிகிலன் அமைதியிழந்து அலைப்புறுவதைக் கண்டு , "உட்கார்ந்து சொல்லுங்கள்." என்றாள்.

"நீ . . ." என்றவன், அவளுக்கு "டிரெஸ்ஸிங் டேபிள்" மோடாவை இழுத்துப் போட்டுவிட்டு, அங்கே கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவளும் உட்கார்ந்ததும், "அந்த சவிதா பற்றியும் முழுமையாக அலசியாயிற்று! ரொம்பக் கெட்டவளும் இல்லை., நல்லவளும் இல்லை! பணம் என்றால், கொஞ்சம் இப்படி அப்படி வளைந்து கொடுக்கிற இன்றைய பல பெண்களில் ஒருத்தி! ஆனால், அத்தான் கொடுத்த அதிகத் தொல்லை தாங்காமல் வேலையை விட்டுவிட்டாளாம்! இப்போது வேறே ஒரு சின்ன நிறுவனத்தில் வேலை செய்கிறாள். " என்றுரைத்து, இன்றளவும் அவளையும் அலட்சியமாக விட்டுவிடாமல் கவனிப்பதாகவே தெரிவித்தான்.

சுசிதா யோசனையில் ஆழவும், "சவிதாவோடு பேசிக்கொண்டு போன இன்னொருத்தியைக் கூட விடவில்லை, சுசி! அடக்கமான பெண். அத்தான் குணம் அறிந்ததும், அந்த நிறுவனத்தில் வேலை செய்யப் பயந்து, வெளியேறிவிட்டாள். ஆனால் வேலையில் கெட்டிக்காரி என்பதால், இப்போது நல்ல, பெரிய வேலையே கிடைத்து, கிடைத்த வேலையை நல்லபடியாகவே பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது, கடைசித் தகவல். " என்று முடித்தான்.

மேலும் சில வினாடிகள் அமைதியில் கழிந்தன.

பிறகு, "பாறையில் முட்டிக் கொள்வது என்பார்களே, அது போல, இதற்கு மேல் என்ன செய்வது என்றே புரியாமல், போயிற்று! பதினைந்து ஆண்டுப் பழக்கத்துக்குப் பிறகு, அத்தானின் இந்தப் புது அவதாரம், வீட்டில் எல்லோரது மகிழ்ச்சியையும் சாகடித்துவிட்டது!

உயிரே அவர் என்று வாழ்ந்த அக்கா நிலை குலைந்து போனாள்! இப்போதுதான், வேறு ஏதாவது செய்யவேண்டும் என்று முயற்சி செய்கிறாள். இதையே நினைத்து உருகிக் கொண்டிராமல், மனதும் மாறும்., கூடவே, வருமானமும் கிடைக்கும் என்று எண்ணம்! அது பற்றிப் பேசத்தான் என்னை அழைத்திருந்தாள்!" என்றான் அவன்.

விழி உயர்த்தி, கணவனைப் பார்த்து, “இதில் இன்னமும் விடுபடாத புதிர் ஏதோ இருப்பதாக . . .உங்களுக்குத் தோன்றவில்லையா?” என்று கேட்டாள் சுசிதா.

“தோன்றுகிறது! சொல்லப் போனால், நடந்த எதையுமே ஒத்துக்கொள்ள மனதளவில் முடியவே இல்லைதான்! அதிலும், ரஞ்சிக்கு . . . எப்படி முடியும் , எப்படி முடியும் என்று திடும் திடும் என்று அதே திகைப்புதான்! ஆனால், நடப்பு வேறாக இருக்கிறதே! அத்தானே, எதையும் மறுக்கவில்லை. இதையெல்லாம் ஒத்துக்கொள்ளும் அளவுக்கு, ரஞ்சியல்லவா வளர வேண்டும் என்கிறார்!” என்றான் குரலில் சினம் ஏற!

“அங்கேதான் . . அதில்தான் குழப்பமாக இருக்கிறது! பொதுவாக, எனக்கு ஆண்களிடம் நம்பிக்கை கிடையாதுதான்! உங்கள் அத்தான், மிஸ்டர் குணசீலனை நான் பார்த்ததும் இல்லை! ஆனால் . . .இப்படி யோசித்துப் பாருங்கள் நிக்கி, மிஸ்டர் குணசீலன் நல்லவராக இருந்து, அநியாயமாகக் குற்றம்சாட்டப்பட்டதில் ஆத்திரமுற்று, உங்கள் அக்காவின் புத்தி வளரவேண்டும் என்று சொல்லியிருக்கலாமில்லையா? அப்படி இருந்தால்?”

பிரச்சினையில் முழுமையாக ஈடுபட்டிருந்த சுசிக்கு, குடும்பத்தில் மற்றவர்களைப் போலவே தானும் கணவனை இயல்பாக “நிக்கி” என்று அழைத்தது, மனதில் படவே இல்லை!

ஒரு கணம் பிரமித்து நோக்கிய நிகிலனும், தமக்கையின் பிரச்சினையில் உடனேயே அதை மறந்து, சுசிதா சொன்ன விளக்கத்தை ஆவலாக ஏற்று முகம் மலர்ந்தான்.

ஆனால், உடனேயே வாடி, “ஆனால், அந்த சவிதா? அவள், அத்தானைப் பற்றிச் சொன்னது? அதற்கு எந்த வித விளக்கமும் இல்லையே!” என்றான் வருத்தத்துடன்.

“அதற்கு ஏதாவது காரணம் இருந்திருந்தால்? உங்கள் அக்காவிடம் அவளுக்கு ஏதாவது விரோதம் . . .”

“ஊகூம். அத்தான், அலுவலையும் வீட்டையும் கலக்க விடுகிறவர் அல்ல!” என்றவன் அதன் காரணம் இப்போதுதான் புரிந்தாற்போல, மேலும் முகம் வாடினான். உச்சுக் கொட்டி, “இந்தப் பெண்ணை, அக்கா பார்த்ததே இல்லை! அப்புறம் என்ன விரோதம்?” என்றான் சலிப்பாக.

“ஒரு வேளை, மிஸ்டர் குணசீலனிடம் அவளுக்கு விரோதம் இருந்திருந்தால்? வேலை சரியில்லை என்று திட்டியிருக்கலாம்.

அதனால் ஆத்திரப்பட்டு . . .ஆனால், இதையெல்லாம் நீங்களும் யோசித்துப் பார்த்திருப்பீர்கள், அப்படித்தானே?" என்று கேட்டாள் சுசிதா.

"ஆமாம். இது பொய் என்று ஆகிவிடாதா என்று, எத்தனை எத்தனையோ விதத்தில் யோசித்தோம்! ஆனால், அக்காவும் நானும் அங்கே வரக்கூடும் என்பதோ, காருக்குள் நாங்கள் இருந்தோம் என்பதோ, அந்த சவிதாவுக்குத் தெரிய வாய்ப்பே இல்லையே! அப்படியிருக்க, எங்களுக்காக, அந்த நேரத்தில், அந்த வார்த்தைகளை, அவள் எப்படிச் சொல்லியிருக்க முடியும்? இந்த ஒரு வாதத்தில், எல் . . லாம் அடிபட்டுப் போயின!" என்று வெறுத்த குரலில் நிகிலன் கூறினான்.

எப்படி முடியும்? இந்த வாதத்துக்குப் பதில் இல்லைதான்! ஆனாலும் ஒரு நெருடல்! இன்னமும் என்னவோ இருப்பதுபோல!

எதுவும் இல்லையென்று ஒத்துக் கொள்ள முடியாமல், சுசிதா வேகமாக யோசித்தாள்.

ஒன்று தோன்ற, ஆவலாக அவனைப் பார்த்து, "சவிதா அந்த வார்த்தைகளை உங்களுக்காகத்தான் சொல்ல வேண்டும் என்று ஏன் எண்ண வேண்டும்? ஒரு வேளை, அவளோடு வந்த, அந்த இன்னொரு பெண்ணை மிரள வைப்பதற்காகவும், சவிதா இப்படியெல்லாம் சொல்லியிருக்கலாமே! அந்தப் பெண்ணும், பதவி உயர்வைக்கூட வேண்டாம் என்று, வேலையை விட்டுப் போய்விட்டதாக நீங்கள் கூறவில்லை? யோசியுங்கள் நிக்கி, அவளை அப்படி விரட்டுவதற்காகவே சவிதா பொய்யாக இட்டுக்கட்டி . . . . " என்று சொல்லிக் கொண்டிருந்த சுசிதா, நிகிலன் சட்டென எழுந்து, அவளை நோக்கி வரவும், சற்றுத் திகைத்து பேச்சை நிறுத்தித் தானும் எழுந்தாள்.

அவள் அருகில் வந்து, அவளது தோளை இறுகப் பற்றி, "சுசி, சுசி! அப்படி மட்டும் இருந்துவிட்டால் . . . உனக்கு நான் செய்யக் கூடாதது என்று உலகில் என்ன இருக்கக் கூடும்? ஆனால், இதை எப்படித் தெளிவு படுத்திக் கொள்வது? அது புரியவில்லையே! "என்று ஆவலாகக் கேட்டான் அவன்.

நிகிலனின் கண்ணில் இருந்த பளபளப்பு சுசிதாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது! ஆனால், அது நிலைக்க வேண்டுமே!

யோசித்து, "அந்த இன்னொரு பெண்ணிடம் கேட்டுப் பார்க்கலாம்! ஆனால், அவள் உண்மையே சொன்னாலும், உங்கள் அத்தானின் மீது சவிதா சுமத்திய பழியைப் போக்குவது ஆகாது! மாறாக, அவள்

சொன்னதற்கு ஆமாம் போட்டது போலத்தான் ஆகும்! ஏனெனில், பதவி உயர்வைக் கூட மறுத்து, அவள் வேலையை விட்டதும், அதற்கு அவள் உண்மை என்று நம்பிச் சொன்ன காரணமும் நாம் அறிந்ததே!" என்று அவள் கூறவும், நிகிலன் லேசாக முறுவலித்தான்!

"என்ன சிரிக்கிறீர்கள்?"

"உண்மை என்று நம்பிச் சொன்ன காரணம் என்றால், அது பொய் என்று நிச்சயப் பட்டுவிட்டது போல அல்லவா, இருக்கிறது!" என்றான் அவன் புன்னகையோடு!

தானும் முறுவலித்து, "வாய் விட்டுப் பேசப் பேச, அப்படித்தான் என்று நிச்சயப்பட்டுப் போன மாதிரிதான் எனக்குத் தோன்றுகிறது." என்றாள் சுசி நம்பிக்கையோடு!

"நம்பிக்கை பலிக்கட்டும்!" என்று கை உயர்த்தி ஆசீர்வதித்தவன், மீண்டும் அவளது தோளைப் பற்றி, "ஆனால் வெறும் நம்பிக்கை, நிரூபணம் ஆகாதே, சுசி! அதற்கு ஆதாரம் வேண்டுமே! அது இல்லாமல், ரஞ்சியிடம் இந்தக் கோணம் பற்றிச் சொல்லவே முடியாதே! " என்று மீண்டும் திரும்பிவிட்ட தவிப்புடன் கேட்டான்!

தமக்கையைப் பற்றிய தவிப்பில், மனைவியின் தோளில் கை இருப்பது மறந்துவிட்டதா என்று தோன்றியபோதும், அதை நினைவுபடுத்த அவளுக்கு மனம் வரவில்லை! தப்பு செய்துவிட்டதாக எண்ணி, அதற்காக வேறு, அவன் தவிக்க வேண்டுமா?

அத்தோடு, பேசிக் கொண்டிருக்கும் விஷயம், அதைவிட முக்கியமான விஷயம்!

"நிரூபணம் எதுவாக இருந்தாலும், சவிதா வாயிலிருந்துதான் வரவழைத்தாக வேண்டும். . . .என்ன காரணத்தினாலோ, இந்த அளவு புளுகிய அவளோ லேசில் அதை மாற்றிச் சொல்லப் போவது இல்லை! பாதகி!" என்று சலிப்புடன் கூறியவன், சட்டென நிறுத்தி, வியப்புடன் அவளைப் பார்த்தான்!

"உன்னைப் போலவே, சவிதா பொய் சொன்னதாகவே, எனக்கும் தோன்றத் தொடங்கிவிட்டதே!" என்றான் ஆச்சரியமாக.

தானாக விலகி, இருமுறை குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். "பழைய அத்தானை மனதில் கொண்டு யோசித்துப் பார்த்தால், இதுதான் மெய்யாக இருக்க முடியும் என்றும் தோன்றுகிறது! ஆனால், இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது, சுசி! சவிதா ஏற்கனவே வேலையை விட முடிவு செய்துவிட்டவள். அந்த இன்னொருத்தி . . . அவள் பெயர் நீதா என்று

ஞாபகம், அவளிடம் பொய் சொல்லியேனும், எதற்காக விரட்ட வேண்டும்? அவளுக்கு வேண்டாதது, யாருக்குப் போனால், அவளுக்கு என்ன?" என்று நிகிலன் கேட்டு முடிக்கு முன்னரே, "வைக்கோல் போர் நாய்!" என்றாள் சுசிதா!

திக்குத் திசை தெரியாத இருட்டுக் கானகத்தில் தென்பட்ட ஒரே ஒரு சிறு வெளிச்சத்தை விட்டுவிட, சுசிதாவுக்கு மனமில்லை! "மனிதர்களில், இந்த மாதிரி நிறையப் பேர் இருக்கிறார்கள், நிக்கி! இந்த சவிதாவும் அப்படிப் பட்டவளாக ஏன் இருக்கக் கூடாது? அத்தோடு அவள் வேலையை விடப் போவதாகச் சொன்னதுகூட, எந்த அளவு நிஜமோ? குணசீலனே அவளைப் பணிநீக்கம் செய்திருக்கலாமே! பணிநீக்கம் செய்வது, தொழிலாளியின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று, ராஜினாமா பெறுவது கூட வழக்கம்தானே?" என்று வாதிட்டாள் அவள்.

அதுவும் சரிதான்! ஆனால், நடந்த உண்மையைத் தெரிந்து கொள்வது எப்படி?

தனக்குத் தானே கேட்டுக்கொண்டவாறே மனைவியைப் பார்த்தவன், அவள் நிற்பதை அப்போதுதான் உணர்ந்தவனாக, "எவ்வளவு நேரம் நிற்பாய், சுசி? உட்கார்." என்று அவளை உட்காரச் சொன்னான். "இப்போது, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?" என்று வினவினான்.

சுசிதாவுக்கும் அதே சிந்தனைதானே? இப்போதும் யோசனையாக அவனைப் பார்த்து, "ஒன்று தோன்றுகிறது. ஆனால், அது ஓர் இருபுறம் தீட்டிய கத்தி! நமக்கே கூடக் காயம் பட்டுவிடக் கூடும்! அதுதான் பயமாக இருக்கிறது!" என்றாள் அவள் கவலையோடு!

கூர்மையாய் நோக்கி, "சொல்லு என்றான் நிகிலன்!

அத்தியாயம் -22

தீபு, தினுவின் அப்பா ஏக்கம்! ரஞ்சனியின் கண்களில் தென்பட்ட நிராசை! மீனவோசனியின் வருத்தம்! எல்லாவற்றுக்கும் மேலாக நிகிலனின் தவிப்பு!

இதற்கெல்லாம் தீர்வு தேடி, சுசிதாவின் மனது வெகு வேகமாக வேலை செய்துகொண்டே இருந்தது!

சவிதாதான் குற்றவாளியாக இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் நிச்சயமே!

இதை நம்பி, நிகிலன் சொன்ன சில உண்மைகளையும் கொண்டு, அவள் அருமையான ஒரு திட்டமும் தீட்டிவிட்டாள்! இதில் நிச்சயமாக உண்மை வெளிப்பட்டுவிடும்!

ஆனால், மீதி இருந்த அந்த ஒரு சதவீதம்?

அந்த நூற்றில் ஒரு வாய்ப்பாகக் குணசீலன் கெட்டவராக இருந்தால், அவரது சாயமும், முழுக்க வெளுத்துவிடுமே! யாரோ ஒருத்தி சொல்லக் கேட்டதுதானே என்று குணசீலனுக்காகப் பேசவே முடியாமல், அவர் முழுக் கெட்டவராகிவிடுவார்!

பின் வரும் காலத்தில், ஏதோ ஒரு கால கட்டத்தில், மக்களுக்காகவோ, தானாக மனம் மாறியோ ரஞ்சனி கணவனை மன்னித்து ஏற்கக் கூடும் என்பதும், அதன்பிறகு அடியோடு நடக்காமல் போய் விடலாம்!

எனவே, இந்த முயற்சியைச் செய்வதா, வேண்டாமா என்று, சுசிதாவுக்கு ரொம்பவும் தயக்கமாக இருந்தது!

எனவேதான், நிகிலனிடம், பீடிகை போட்டாள் அவள்.

ஆனால், அவன் வேறு சொன்னான்! “இப்போது மட்டுமென்ன, மகிழ்ச்சியோடா சுசி, எல்லோரும் இருக்கிறோம்? விபுவைப் பார்க்கிற நேரம் தவிர்த்து, கறையான் மாதிரி உள்ளே வலி அரித்துக்கொண்டேதானே இருக்கிறது? இதைவிட, அப்படியென்ன அழிவு நேர்ந்துவிடப் போகிறது? சும்மா சொல்லு!” என்று தூண்டினான், நிகிலன்.

“அதுவும் . . சரி . . . தான்!” என்று ஒத்துக்கொண்டு, சுசிதா சொல்லலானாள்.

அந்த சவிதா, காசுக்காக இப்படி அப்படி வளைந்து

கொடுக்கிறவள்தான் என்று, நிகிலன் சொல்லியிருந்தான்.

குணசீலன் பெண்ணாசை பிடித்தவர் என்பது, சவிதாவின் வாய்மொழி வாக்குமூலம்!

செக்சைப் பயன்படுத்தி, குணசீலனிடம் இருந்து, அவரது ஒரு தொழில் ரகசியத்தை அறிந்து வரும்படி, சவிதாவை அனுப்ப, இந்தக் குடும்பத்தின் தொடர்புடைய ஆள் என்று சவிதா அறியாத யார் மூலமாவது ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவள், அதற்குச் சம்மதித்துப் போய் வெற்றியோடு வந்தாள் என்றால், அப்புறம் குணசீலனை அடியோடு விட்டுவிட வேண்டியதுதான்!

முயற்சி பண்ணித் தோற்றாலும், சந்தேகத்தின் பலனைக் குணசீலனுக்குக் கொடுத்து விடலாம்!

அவள் போகவே மறுத்தாள் என்றால், குணசீலன் சொக்கத் தங்கம்! ரஞ்சனி மெய்யாகவே புத்தி வளர வேண்டியவள்தான்!

இதுதான் சுசிதாவின் திட்டம்! இருவகையான முடிவுகளுக்கும் மனதைத் தயார் செய்துகொண்டுதான் காரியத்தில் இறங்க வேண்டும்!

நாற்காலியை மனைவியின் அருகே இழுத்துப் போட்டு அமர்ந்து, அவளது கையைப் பற்றிக்கொண்டு சற்று நேரம் நிகிலன் சும்மா உட்கார்ந்திருந்தான்.

பிறகு அவளைப் பார்த்து, "செய்து பார்த்து விடவேண்டியதுதான், சுசி!" என்றான். "சாகக் கிடக்கிற நோயாளிக்கு, உயிர் பிழைப்பதற்கு வெறும் ஐந்து சதவீத வாய்ப்பைத் தரக்கூடிய அறுவை சிகிச்சையைக் கூடச் செய்து பார்த்து விடுவது இல்லையா? அதுபோல முயற்சிப்போம்! தானாகக் காலப் போக்கில் மறப்பது, சரியாவது எல்லாம், இந்த விஷயத்தில் அக்கா குணத்துக்கு ஒருபோதும் ஒத்து வராது. . . " என்றவன் பேச்சு நின்றுவிட, ஒரு தரம் கண்மூடித் திறந்தான்!

மறப்பது மன்னிப்பதில், நீயும் அப்படித்தான் என்று நினைக்கிறானோ என்று சுசிதா ஒரு திகைப்புடன் எண்ணமிடும்போதே, நிகிலன் மீண்டும் சொல்லலானான். "இந்த முயற்சி தப்பாகிப் போனாலும், இப்போது பட்டுக் கொண்டிருக்கிற வேதனை அப்படியே இருக்கப் போகிறது என்பது தவிர, புதிதாக வேறு நஷ்டம் ஏற்படப் போவது இல்லை! அதனால், இதைச் செய்துபார்த்துவிட வேண்டியதுதான்!" என்று முடித்தான்!

"நாளைக்கே இதற்கான ஏற்பாடுகளைத் தொடங்குகிறேன்! அக்காவைப்

பார்த்துவிட்டு வரும்போது, மனதுக்கு ரொம்பவும் சோர்வாக இருந்தது, சுசி! இப்போது முயன்று பார்க்க புதிதாக ஒன்று இருக்கிறது என்பதே, சோர்வைப் பறக்கடித்துவிட்டது! உன் உபயம்!" என்று முறுவலோடு எழுந்தவன், அப்போதுதான் உணர்ந்ததுபோல, அவளது விரல்களைச் சட்டென விடுவித்தான்.

"சாரி. தப்பாக எண்ணிவிடாதே! இந்தப் பேச்சில் ஈடுபட்டதில் . . ." என்று அவன் விளக்க முற்படுகையில், "நான் தப்பாக நினைக்கவில்லையே!" என்றுரைத்து அவனது விளக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் சுசிதா.

அதற்குள் அவளும் எழுந்துவிடவும், அவளுக்காக இழுத்துப் போட்டிருந்த மோடாவை மீண்டும் பழைய இடத்துக்குத் தள்ளினான் நிகிலன்.

சுவர்க் கடிகாரத்தைக் காட்டி, "மணி பன்னிரண்டு! வெகு நேரம் பேசி, உன் தூக்கத்தைக் கெடுத்து விட்டேன். நாளைக்கு வேலை நேரம் கடினமானதாக இருக்கப் போகிறது! அதற்கும் சாரி! இனியேனும், உடனே தூங்கிவிடு! குட்நைட்!"" என்றவாறு, அவன் அமர்ந்திருந்த நாற்காலியையும் நகர்த்தி, உரிய இடத்தில் வைத்துவிட்டுக் கிளம்பினான்.

என்னவோ மனதில் பட்டது.

அது என்னவென்று புரியாமலே அவனோடு கூட நடந்தபடி, "இன்று தூக்கம் தாமதமானதால், நாளைக்கு எனக்கு வேலையில் பிரச்சினை வராதே! " என்றாள் அவள் இலகுவாக.

"அதெப்படி? மிஸ்டர் ராமநாதனின் அலுவலகத்தில் தூக்கக் கலக்கத்தில் ஆடி விழுவதற்கெல்லாமா ஊதியம் கொடுக்கிறார்கள்?" என்று வியந்தான் நிகிலன்.

"போனால்தானே தேரியும்?" என்றாள் அவள். "விபு இன்னமும் சும்மாச் சும்மா அழுவதால், இந்த வாரம் முழுவதற்கும் விடுமுறை எடுத்துவிட்டேன். உடனே பயம் வேண்டாம். அவனது உடம்புக்கு ஒன்றும் இல்லை! இன்னமும் முழுபலம் வரவில்லை என்று தோன்றுகிறது! டாக்டர் சொன்னபடி, சனிக்கிழமை மீண்டும் ஒரு தரம் காட்டிவிட்டு, அதன்பிறகு வேலைக்குப் போய்க் கொள்ளலாம் என்று ஐடியா!" என்று, லேசான குரலிலேயே கூறி முடித்தாள் சுசிதா.

அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது!

அவள் ஒரு யோசனையைச் சொல்லி, அதை நிகிலன் ஏற்றதால், இந்த

உற்சாகம் ஏற்பட்டிருக்குமோ? இத்தனைக்கும், லேசாகப் பசி வேறு!

ஆனால், பசி பொறுப்பது பழக்கமே என்பதால், படுத்துத் தூங்கிவிட்டால் சரியாகிவிடும்!

அறை வாயிலில் நிகிலன் தயங்கினான்.

ஏறிட்டவளிடம், தப்பாக நினைக்கவேண்டாம் என்று, மீண்டும் கேட்டுக் கொண்டான். "வழக்கமாக உன் அறையில் சத்தம் அடங்கி நீ தூங்கப் போகிற நேரம் எனக்குத் தெரியும். அது தாண்டி, மேலே இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. கட்டாயம் பசித்திருக்கும். பசியோடு உறங்குவது கஷ்டம்! இங்கே சாப்பிடுவதாக நினைக்கவேண்டாம்! ஒரு பெரிய உதவி செய்ததற்குப் பரிசாக . . .ஏதாவது . . . "

அவள் பானங்கள் அருந்துவது, அவனுக்குத் தெரியாமல் இராது. , பசிப்பதும் உண்மைதான் என்றாலும் . . . என்று எண்ணமிடும்போதே, சுசிக்கு இன்னொன்று தோன்றியது.

அவனைப் பார்த்து, "உங்களுக்கும் பசிதான். இல்லையா?" என்று கேட்டாள்.

அவன் பேசாமல் நிற்கவும், "வாருங்கள். ஃப்ரிஜ்ஜில் பால் இருக்கும் சூடு பண்ணிக் குடிக்கலாம்." என்று, விபுவிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு நடந்தாள்.

பாலை அடுப்பில் வைத்துவிட்டு, உணவறையின் அலமாரியைத் திறந்து பார்த்தாள்.

புதிதாக இரண்டு டப்பாக்கள் கண்ணில் பட்டன. திறந்து பார்த்தால், ஒன்றில் பயறு மிக்சரும், அடுத்ததில் ரசகுல்லா மாதிரியில் ஏதோவும் இருந்தன.

ரஞ்சனி கூறியது நினைவு வர, "அக்கா அனுப்பியது போல! கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை. வேண்டாம்!" என்றான் அவன் எங்கோ பார்த்தபடி.

அவனது குரலும் முகமும் மறுபடியும் மனதில் நெருடின! அவன் தரையில் படுத்திருந்தது நினைவு வந்தது!

பாலை இரண்டு கப்புகளில் ஊற்றி எடுத்துவந்து மேஜைமேல் வைத்தாள்.

ஒன்றை அவன் பக்கம் வைத்துவிட்டு, "அக்கா வீட்டிலாவது சாப்பிட்டீர்களா?" என்று அவனைக் கூர்ந்து பார்த்தவாறு, சுசிதா வினவினாள்.

அவன் முகம் கன்றுவது போலத் தோன்றியது. பதிலேதும் கூறாமலே கையை நீட்டிப் பால் கப்பை எடுத்தான் அவன்.

“பாவம், உங்களுக்காகவே செய்யப் போவதாகச் சொன்னார்கள்! இப்போதேனும் கொஞ்சம் சாப்பிடுவதுதானே? பசி வேறு! எடுத்து வைக்கட்டுமா?” என்று கேட்டாள் மனைவி.

அவளை சற்று ஆழப் பார்த்து, “உனக்கும் பசிதானே?” என்று நிகிலன் கேட்கவும், சுசிதா திடுக்கிட்டு விறைத்தாள்.

ஒரேயடியாக நீர்த்துப் போனதாக எண்ணிவிட்டானா? மாமியாரிடம் இளகியது தப்போ?

பால் குவளையை எடுக்கப் போன கையை அவள் பின்னிழுக்கவும், நிகிலன் அவசரமாகப் பேசினான். “சாரி, சாரி. ரொம்ப ரொம்ப சாரி! விட்டுவிடு! நான் கேட்டிருக்கக் கூடாது! அதற்காகப் பாலைக் குடிக்காமல் இருந்துவிடாதே! ப்ளீஸ்.! அக்கா விஷயம், மற்ற எல்லாவற்றையும் லேசாக எண்ண வைத்துவிட்டதோ, என்னவோ! நான் கேட்டதையே மறந்துவிடு! என்ன? ஆனால், தயவு பண்ணி, என்னையும் விட்டுவிடு!” என்று, வேக வேகமாகப் பேசி வேண்டினான்.

“என்னையும் விட்டுவிடு” என்று நிகிலன் கூறியது உறுத்த, மௌனமாக மீண்டும் பாலை எடுத்துக் கொண்டாள் சுசிதா.

ஒரு பெருமூச்சுடன் தன்னதைக் குடிக்கலானான் அவன்.

விசித்திரமாக, அந்தப் பெருமூச்சும் அவளைப் பாதித்தது!

அதற்கு மேல் பேச்சின்றியே இருவரும் பாலைக் குடித்து முடித்தனர்!

எதையாவது சொல்லி வம்பை இழுத்துக்கொள்ளக் கூடாது என்று எண்ணுகிறான் என்று அவளுக்குத் தோன்றியது!

அவளது கோபத்துக்கு இவ்வளவு வலிமை இருக்கிறதா என்று, சசிக்கு ஆச்சரியம்! குட்நைட் கூடச் சொல்லாமல், வெறுமனே கையாட்டிவிட்டுப் போனவனைப் பார்க்கையில், சிரிப்புக் கூட வந்தது!

ஆனால், சிரிப்பை ஒதுக்கிக்கொண்டு, மனம் யோசித்தது!

நிகிலன் கெஞ்சியதற்கும், பிறகு மௌனமாக இருந்ததற்கும் காரணம், பால், பழச்சாறு என்று இந்தப் பானங்கள் அருந்துவதையும், அவள் நிறுத்திவிடக் கூடாதே என்ற கவலைதான்!

அதாவது, அவளிடம் அக்கறை!

ஆனால் எப்போதுமே, அந்த விஷயத்தில் நிகிலனைக் குறை கூற முடியாதுதான்.

இன்றைக்குமே, அவனை உட்காரச் சொன்னால், அவளுக்கு மோடா இழுத்துப்போட்டு அமரச் சொன்னது, எவ்வளவு நேரம் நிற்பாய் என்று மறுபடியும் உட்கார வைத்தது . . . எல்லாம் அப்படித்தானே?

இத்தனைக்கும் அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயம், வேறு சிந்தனைக்கே இடம்தர முடியாத அளவு, அவனுக்கு முக்கியமானது!

பிறகும், அறையை விட்டுக் கிளம்புமுன், மோடாவையும், நாற்காலியையும் உரிய இடத்தில் தள்ளி வைத்தானே! அவளுக்கு ஒரு வேலை என்றுதானே?

திருச்சியில் அந்த சைக்கிள்காரன் இடித்து விழுந்தபோதுகூட, அப்போது அவளை மருத்துவமனையில் சேர்த்தது பலரும் செய்யக் கூடியதே., ஆனால் அவள் விபுவைத் தேடுவாள் என்று ஊகித்து, அவனைக் கூட்டிவர ஏற்பாடு செய்தானே!

நிகிலனைப் பற்றி நல்ல விஷயங்கள் நிறையத் தோன்றவும், சுசிதாவுக்குச் சிரிப்பு வந்தது! போகிற போக்கைப் பார்த்தால, "நிகிலன் விசிறிகள் சங்க"த்தில் அங்கத்தினர் ஆவதற்குப் பதிலாக, அப்படியொரு சங்கத்தை அவளல்லவா தொடங்குவாள் போல இருக்கிறது?

அதற்கு அங்கத்தினர் சேர்ப்பது பற்றியும், அவள் கவலைப்படத் தேவையில்லை!

முதல் ஆளாகச் சேர்வதற்கு, அவள் பெற்ற பிள்ளையே துடித்துக்கொண்டு இருக்கிறானே. எங்கோ நிகிலனின் குரல் கேட்குமுன் அப்பா, அப்பா என்று தாவி ஓடிக்கொண்டு.

அப்புறம், அவனுடைய பெற்றோர்! தமக்கை! தமக்கை பிள்ளைகள்!

அந்தப் பிள்ளைகளும்தான், மாமா மாமா என்று என்னமாக உயிரை விடுகிறார்கள்!

தில்லைநாயகம் அங்கிள்கூட, அவனோடு அல்லவா ரகசியம் பேசுகிறார்! அவனோடு நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்று புத்திமதி வேறு!

பின்னே? வாயில் வரை சென்று வழியனுப்பியதோடு, காரையும் கொடுத்தானே!

ரகசியம் அதற்கு முன்பே பேசப்பட்டதுதான் என்றாலும், இப்படி எத்தனை செய்தானோ?

சின்னச் சின்ன வசதிகளையும், பார்த்துப் பார்த்து அக்கறையோடு செய்யும் ஒருவரிடம், ஈடுபாடு தானாக ஏற்படத்தானே செய்கிறது!

திடுமென ஏதோ தோன்றவும், ஒரு விதிர்ப்புடன் சுசிதா எழுந்து உட்கார்ந்தாள்.

அப்போது . . .அந்த இரண்டு நாட்கள்! அப்போதும் இப்படித்தானே?

என்ன மாதிரி மன நிலையில் அங்கே சென்றாள்! அதையும் மறக்கடித்து, அவளை ஒரு ராணி மாதிரி உணர வைத்தானே!

பின்னர் எண்ணுகையில் அருவருப்பாகவே இருந்தது என்றாலும், அவளுடைய பெற்றோர் இறந்திராவிட்டால், நிகிலனிடம் அவளுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டிருக்குமா?

என்ன மாதிரி வெறுப்பும் கொதிப்பும்! நெஞ்சுக்குள் தீயாய் எரிந்ததே!

ஒரு குடும்பத்தின் அங்கமாக வசிக்கும்போது, மனதில் இருப்பதை எப்போதும் காட்டிக் கொண்டிருக்க முடியாதே தவிர, என்னென்ன நேர்ந்தாலும், அவை எப்படி மாற முடியும்?

இப்போது நீறு பூத்து, வெளியே சாம்பலாகத் தெரியலாம்! ஆனால், உள்ளே இருப்பது நெருப்பே அல்லவா? நெருப்புக் கங்கு, சூடிழப்பது, எப்படி சாத்தியம்?

அத்தியாயம் -23

அடுத்து வந்த சில தினங்கள், தன் சொந்த மனநலை பற்றி ஆராயும் வாய்ப்பு, எண்ணம் எதுவுமே சுசிதாவுக்கு வரவில்லை! விபு அந்த அளவுக்கு அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தான்!

சுசியே கணவனிடம் சொன்னது போல, அவனுக்கு இன்னமும் பழைய பலம் வரவில்லையோ, அல்லது, மருத்துவமனையில் இருந்து வந்ததும் எல்லோரும் சற்று அதிகமாகக் கொஞ்சி, செல்லத் கொடுத்து விட்டார்களோ, அடிக்கடி கத்தி அழுதான் பிள்ளை!

எல்லோரும் அவனையே சுற்றி வந்தால், ஓரளவு திருப்தியோடு விளையாடினான். ஆனால், அவன் நினைத்த நேரத்தில் அன்னையோ, பாட்டியோ வரவில்லை என்றால் கத்துக் கத்து என்று கத்தித் தீர்த்தான்!

எனவே, மகனைச் சமாளிப்பதே, அவளுக்குப் பெரிய காரியமாக இருந்தது!

மருத்துவர் சொன்ன சனிக்கிழமை வரை காத்திராமல், அதற்கு முன்னதாகவே அவரிடம் போய் மகனைக் காட்டிவிடலாமா என்று கூட ஓரிரு முறை அவள் யோசிக்கும் அளவுக்கு விபுவின் ஆர்ப்பாட்டம் அதிகமாக இருந்தது!

நிகிலனோ, தமக்கையின் பிரச்சினை குறித்து, கணவன் மனைவி இருவருமாகத் திட்டமிட்டதைச் செயல்ப்படுத்துவதற்கு ஏற்ற ஒரு சரியான ஆளுக்காக ஓய்ச்சல், ஒழிவின்றி தேடி யலைந்தான்.

ஒரு வகையில் இது இறுதி முயற்சி என்று பட்டதால், எந்த வகையிலும், அதில் குறைபாடு நேர்ந்துவிடக் கூடாது என்பதில், அவன் கவனமாக இருந்தான். சுற்றி அலைந்து, அவனுடைய அன்பான தமக்கையாக ரஞ்சனியைப் பற்றியும் அறிந்திருந்த உண்மையான, பழைய நண்பன் ஒருவன் மூலம், சவிதாவுடன் பேசுவதற்கு ஆள் தயார் செய்து வைத்தான்.

திட்டத்தைச் செயலாற்ற சவிதாவைத் தேடினால், அவள் அப்போது பார்த்து, அதுவரை செய்துகொண்டிருந்த வேலையில் விடுமுறை எடுத்துக்கொண்டு, வெளியூர் சென்றிருந்தாள் என்ற தகவல் கிடைத்தது!

அவள் எப்போது திரும்பி வருவாள் என்று விசாரித்தால், யாருக்கும் தெரியவில்லை!

எப்படியும் ஒரு வாரத்துக்கு மேல் வெளித்தங்கமாட்டாள் என்று, சவிதாவுடன் ஒரே

வீட்டில் கூட வசித்த மற்ற மூன்று பெண்களில் ஒருத்தி, ஒரு மாதிரிச் சிரிப்புடன் சொன்னாள்!

“ஒரு தனி வேலை விஷயமாக” என்று செல் எண் கொடுத்துவிட்டு, நண்பர்கள் இருவரும் காத்திருந்தார்கள்.

சனிக்கிழமையன்று மருத்துவரைப் பார்க்க, நிகிலன்தான் மனைவி, மகனை அழைத்துப் போனான்.

மருத்துவமனையைப் பார்த்ததும், “அம்மா, விப்பு கைலே ஆ . . “ என்று ட்ரிப்சுக்காகக் கையில் ஊசி குத்திய இடத்தைக் காட்டிக் குழந்தை அழத் தொடங்கினான்.

“வெளீலே போ . .ணும் . .” என்று கத்தல்!

மருத்துவரைத் தொடவே விடாமல் அவன் அழுத விதத்தில், அவரே, இவர்களை வெளியே போகச் சொல்லி விடுவாரோ என்று சுசிதாவுக்குப் பயமாக இருந்தது!

ஆனால், இது போல எத்தனையோ பார்த்திருந்த அந்தக் வைத்திய நிபுணர், விபுவுக்கு விளையாட்டுக் காட்டியவாறே, அவனைப் பரிசோதித்து முடித்தார்!

விபு போன்ற பிள்ளைகளுக்காகவே வைத்திருந்த சீரக மிட்டாய்ப் பாக்கெட்டை விபுவிடம் கொடுத்துவிட்டு, பெற்றோரிடம் அவனைப் பற்றிப் பேகினார்!

“வீட்டில், இவன் ஒருவன் மட்டும்தான் சிறு குழந்தையா? “ என்று கேட்டார்.

“ஆமாம்” என்றதும், “அதுதானே பார்த்தேன்!” என்றார் அவர்!

தொடர்ந்து, “ஒரே பிள்ளை! அதற்கு சுகவீனம் என்றால், பெற்றவர்கள், பெரியவர்கள் எல்லோரும் அதற்குச் செல்லம் கொடுப்பது இயல்புதான். அதைத் தொடர்ந்து, பிள்ளைகள் சற்று அதிகப்படியாகக் கொஞ்சுவதும் வழமையே! இது தவிர, விபுவுக்கு உடல் ஆரோக்கியத்தில் குறைபாடு ஒன்றுமில்லை!” என்றார் வைத்தியர்.

“ஆனால், இதை வளர விட்டால் முசுட்டுத்தனம் வந்துவிடக் கூடும்! அதனால் . . இதை மறந்து, வேறு விஷயங்களில் விபுவின் மனம் ஈடுபடுமாறு ஏதாவது செய்யுங்களேன். இவன் வயது கிட்டத்தட்ட இரண்டரை இருக்காது? இந்த வயதுக்கு என்று, “ப்ளே ஸ்கூல்” நிறைய இருக்கிறதே! எதிலாவது சேர்த்து விடுங்கள்! சீக்கிரமாகப் பழைய

மாதிரி மாறிவிடுவான்! அத்தோடு, அடுத்துப் பள்ளியில் சேர்க்கும்போதும் வசதியாக இருக்கும்!" என்று ஆலோசனை கூறினார் அவர்!

"சரிதான் டாக்டர்!" என்று அவரிடம் விடை பெற்றுக்கொண்டுத் திரும்பினார்கள்.

ஏதோ யோசித்தவாறு, நிகிலன் காரை ஓட்டினான்.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, "ஏன், டாக்டர் சொன்ன யோசனை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? பள்ளியில் சேர்க்குமுன் "ப்ளே ஸ்கூலி"ல் சில மாதங்கள் விபுவை விட வேண்டும் என்பது, ஏற்கனவே நம் வீட்டில் திட்டமிட்டிருந்ததுதானே?" என்று கேட்டாள் சுசிதா.

"ஆமா . .ம். . .ஆனால், இப்போதே எதற்கு என்று தோன்றியது." என்றான் கணவன் இன்னமும் யோசனையுடனேயே!

ஆனால் உடனேயே தலையை லேசாக உலுக்கி, "எண்ணிப் பார்த்தால், இப்போதே என்றாலும், இன்னும் கொஞ்ச நாள் கழித்து என்றாலும் , அதில் பெரிய வேறுபாடு ஒன்றும் இருக்கப்போவது கிடையாதுதான். அதனால், அம்மாவிடம் கேட்டு, நல்ல சுகாதார வசதி உள்ளதாகப் பார்த்து, சேர்த்து விடலாம்!" என்று முடித்தான்.

இன்னமும் அவன் முழு மனதோடு சொல்வதாக அவளுக்குத் தோன்றவில்லை! ஆனால் கத்தி அழுது, அதிலேயே ஓய்ந்துபோய் மடியில் தூங்கும் மகனைப் பார்க்கையில், மருத்துவர் சொன்ன பள்ளி யோசனையே சிறந்ததாக அவளுக்குத் தோன்றியது! எனவே, அதைப் பற்றி மேலே வினவாமல், வேறு கேட்டாள்.

"உங்கள் அக்கா விஷயம் . . அந்த சவிதா திரும்பி வந்துவிட்டாளா?" என்று விசாரித்தாள்.

"அந்த ஊர் சுற்றிக் கழுதையை இன்னமும் கண்ணிலேயே காணவில்லை!" என்றான் நிகிலன் எரிச்சலோடு!

என்ன பேச்சு இது? நமக்கு அவசரம் என்றால், அதற்காக, அடுத்தவளைக் கழுதை என்பதா என்று எண்ணினாள் சுசிதா.

வெளியே சுற்றுவதோ, வீட்டில் இருப்பதோ, எதுவானாலும் சவிதாவின் செயல்பாடு, அவளது சொந்த விருப்பம் அல்லவா? அதை எப்படிக் கேவலமாகப் பேசலாம்?

பொதுவாக நிகிலனும், யாரைப் பற்றியும், இப்படித் தரக் குறைவாகப்

பேசுகிறவன் இல்லை என்பதால், சுசிதா அவனை வியப்புடனேயே பார்த்தாள்.

அவளது பார்வையை உணர்ந்து, “அந்த சவிதா சுற்றப் போய், ஒரு வாரத்துக்கும் மேலேயே ஆகிவிட்டதே, அவளோடு கூட இருந்த பெண்தான் அவளிடம் சொல்ல மறந்துவிட்டாளோ என்று, சரவணன் . .அவன்தான் என் நண்பன், மீண்டும் போய் சவிதாவைத் தேடியிருக்கிறான். அப்போதுதான், அவள் என்ன மாதிரிப் பயணம் போயிருக்கிறாள் என்று நன்றாகத் தெரிய வந்தது! ஒன்று, கூட்டிப் போனவனின் பணம் தீர்ந்துபோய், இவள் திரும்பி வருவாளாம்! அல்லது, அவனுக்கு இவள் அலுத்துப்போய்த் திருப்பி அனுப்புவானாம்! வழக்கமாக, ஒரு வாரத்துக்கு மேல், தாங்காதாம். இந்தத் தடவை, இன்னமும் காணோமே என்று அவளோடு கூட இருக்கும் அந்தப் பெண்களே அதிசயப்படுகிறார்களாம்! இதை விடவும் கேவலமாக, உங்களுக்கு அவள்தான் வேண்டுமா? நாங்கள் மூன்று பேர் இங்கே இருக்கிறோமே என்கிறார்களாம்! “கூடைச் செங்கல்லும் பிடாரிகள்” என்பது போல, ஒத்த குணமுள்ளவர்களாகச் சேர்ந்துதான் வீடெடுத்துத் தங்கி இருக்கிறார்கள்!” என்றான் அவன் வெறுப்புடன்!

அவளுக்கும் அருவருப்பாக இருந்தபோதும், இப்போது இன்னொரு விதத்தில், ஆச்சரியமாகவும் இருந்தது!

சவிதாவைப் பற்றி, இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறானே, இவன் எப்படி?

நிகிலனைப் பெற்ற தாயான மீனலோசனியின் வாயிலிருந்தே அவ்வப்போது கவனமற்று விழும் வார்த்தைகளைப் பார்த்தால், இவனும் ஒரு காலத்தில், இந்த மாதிரிப் பெண்களோடு தானே பழகியிருப்பான் போலத் தெரிகிறது என்று தோன்றியது!

அவர்களுள் ஒருத்தியின் வலையில் நிகிலன் மாட்டி, அவளை மருமகளாகக் கூட்டி வந்துவிடுவாளோ என்று அஞ்சியிருந்தது பற்றி, அன்று பங்கஜம் வாய் விடவில்லையா?

ஒரு காலத்தில் அவனுக்குமே இனித்த உறவுதானே என்று ஏளனமாக எண்ணினாள் அவள்.

ஆனால், ஒரு காலத்தில் மட்டுமா, இப்போதும்தானா என்று எண்ணமும் தொடர்ந்து தோன்றிவிட, சட்டென முகம் கனன்று காந்திவிட்டது சுசிக்கு!

சும்மாவே குணம் சரி கிடையாது! இப்போது, மனைவி, மனைவியாக

இல்லை எனும்போது, எப்படி எப்படி அலைகிறானோ? யார் கண்டது?

இவ்வளவு நாளும், சுசி இதை நினைத்துப் பார்த்ததே இல்லையே!

இல்லை! இருக்காது! ஒரு குழந்தையின் தகப்பனாக இருந்துகொண்டு நிகிலன் பொறுப்பின்றி நடக்கமாட்டான்!

அப்படி அவன் பொறுப்பற்றுத் தவறு செய்தாலுமே, அதைப் பற்றி, அவளுக்கு என்ன வந்தது? அது பற்றி அக்கறை ஏதும் இல்லாததாலேயே, இச்த மாதிரி எந்தக் கட்டுப்பாடும் நிகிலனுக்கு, அவள் விதித்திருக்கவில்லை!

இப்போதும், நிகிலனின் ஒழுக்கம் பற்றி சுசி யோசிக்க வேண்டிய அவசியமே கிடையாது! விபு நல்லபடியாக வளர்வது தவிர, மற்றதெல்லாம், அவளுக்கு அனாவசியம்!

எத்தனையோ எண்ணி, தன்னைத் தானே சமாளிக்க அவள் திணறிக் கொண்டிருந்தபோது, நிகிலன் மேலும் சொன்னான்!

“விட்டால், அவனைக் கையைப் பிடித்து இழுப்பது போலப் பேசினார்களாம்! ரஞ்சிக்காவுக்காகப் பொறுத்துப் போனேன் என்கிறான்! முன்பு காசுக்காக ஓரளவு தப்பாக நடந்தது, இப்போது சவிதாவின் முழு நேரத் தொழிலாகிவிட்டது போலத் தெரிகிறது! ஆனால், அது அவளது விருப்பம்! நம் விஷயத்தில், தனியாக அவளைத் தேடுவானேன் என்று சந்தேகம் வந்துவிடுமோ என்று வேறு கவலையாக இருக்கிறது! அப்படிக் கேட்டால் என்ன சொல்வது என்று சரவணன், என்னைக் கேட்கிறான்!” என்று கவலையோடு கூறினான் நிகிலன்!

தன்னைப் பற்றி அல்லாமல் வேறு விஷயங்களை யோசிக்க நேர்ந்ததும் அப்பாடி என்றிருந்தது, சுசிக்கு! அவசரமாக நிகிலன் சொன்னதைப் பற்றி சிந்தனையை விரட்டினாள்!

சற்று யோசித்துவிட்டு, “குணசீலனிடம் முன்பே வேலை செய்தவள் என்பதால், அவரை வளைப்பது, உனக்கு இலகுவாக இருக்கும் என்று உன்னைத் தேடினோம் என்று சொல்லலாம் இல்லையா?” என்று கேட்டாள் சுசிதா.

“நானும் அப்படித்தான் சரவணனிடம் சொல்லி வைத்திருக்கிறேன்! ஆனால், இருவருக்கும் இடையே வேறு ஏதேனும் தகராறு நேர்ந்து, அவள் வேலையிலிருந்து விலகியிருந்தால், இது எப்படித் திரும்புமோ என்று அது வேறு குழப்பமாக இருக்கிறது! அப்படி ஏதேனும் என்றால், வேறு யாரையாவது அனுப்பியேனும், முயற்சிக்க வேண்டியதுதான்! கிடைத்திருக்கும் ஒரேஒரு வழியையும் விட்டுவிட முடியாது! “ என்று

கடினமான குரலில் கூறியவன், லேசாகத் திரும்பி அவளைப் பார்த்தான்.

பார்வை மீண்டும் பாதைக்கு மாற, "ஸ்டியரிங் வீலி"ல் இருந்து ஒரு கையை எடுத்து, அவளது கை மீது வைத்து அழுத்தி, "அந்த ஒரு வழியும் உன்னால் கிடைத்ததுதான், சுசி! உன் உதவியின்றி, செய்வதற்கு ஒன்றுமே இருந்திராது!" என்றான் நன்றி நிறைந்த குரலில்!

சற்று முன் இருந்த மன நிலை அடியோடு மறைய, "கடவுள் அருளால், முதலில் காரியம் வெற்றியாகட்டும்!" என்றாள் அவள் இதமாக.

மருத்துவர் என்ன சொன்னார் என்று கேட்பதற்காக, சுந்தரமும் அலுவலகம் செல்லாமல் வீட்டில்தான் காத்திருந்தார்.

டாக்டர் சொன்ன யோசனை வீட்டில் அலசி ஆராயப்பட்டது!

நிகிலன், அதை எதிர்த்துப் பேசவில்லை என்றாலும், சாதகமாகவும் சொல்லாதது, சுசியை உறுத்தியது!

அவள் யோசனையாகப் பார்க்கவும், "பழக்கமற்ற ஒரு புது சூழ்நிலையாக இருக்குமே! இன்றைய மனநிலையில், மாற்றத்துக்குச் சிரமப் படுவானோ என்று இருக்கிறது." என்று தன் மௌனத்துக்கு விளக்கம் தந்தான் அவன்.

கவலை அகன்றவளாக, "விபு அப்படி சிரமப் பட்டுவிட மாட்டான். ஏற்கனவே "க்ரஷ்" வாசம் அவனுக்குப் பழக்கம்தானே? அத்தோடு, அவனது இன்றைய மனநிலை மாற வேண்டும் என்பதுதானே, குறிக்கோளே!" என்றாள் சுசிதா.

அவன் ஒப்புதலாகத் தலையை மட்டும் அசைக்க, "அதானே!" என்றாள் மீனலோசனி.

தொடர்ந்து, "வீட்டு மனிதர்களை விட்டு இருந்து விபுவுக்குப் பழக்கம் இருக்கிறதால், அவன் ஸ்கூலிலே அதிகம் அழ மாட்டான். நம் வீட்டிலிருந்து தூரம் என்பது இல்லாவிட்டால், தீபு, தினு படித்த இடத்திலேயே விபுவையும் சேர்க்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. நமக்குப் பழகிய இடம்! ரொம்பவும் சுத்தம் பார்ப்பார்கள்., பாதுகாப்பு அதிகம். நாம் சொல்கிறவர்களைத் தவிர, பிள்ளைகளை வேறு யார்கூடவும் விடவே மாட்டார்கள்! நிறைய ஆட்களை வைத்துப் பிள்ளைகளையும் நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள். நாம் கொடுத்து அனுப்புகிறதைப் பிள்ளைகளுக்கே கொடுப்பார்கள்! முக்கியமாக, அந்த "லாலிபாப்ஸ்" பள்ளி நடத்துகிறவர்கள், மாமாவுக்குத் தெரிந்தவர்கள்! ஒரு வார்த்தை சொன்னால், விபுவை ரொம்ப நன்றாகப் பார்த்துக்

கொள்வார்கள்!” என்று சுசிதாவிடம் விவரம் சொன்னாள் மீனலோசனி.

சுசிதா கணவனைப் பார்த்தாள்.

முறுவலித்து, “என்ன, அந்தப் பள்ளிக்கான விளம்பரம் மாதிரிச் சொல்கிறார்களே என்று தோன்றுகிறதா? நேரிடை அனுபவம்! அக்கா பிள்ளைகள் இரண்டு பேருக்கும் அங்கே சிறு பிரச்சினை கூட இருந்தது இல்லை!” என்றான் நிகிலன்.

“தூரம் அதிகம் என்று ஒரு பிரச்சினை இருக்கிறதே!” என்றாள் மீனலோசனி மீண்டும்.

“என்னம்மா தூரம்? கையில் கார் இருக்கிறது! ஐந்து நிமிஷம் முன்னதாகக் கிளம்பினால் சரியாகிப் போகிறது!” என்றார் சுந்தரம்!

“வேண்டுமானால், காரோடு நாகு அங்கேயே இருக்கட்டும்!” என்றான் நிகிலன்.

“அப்படியானால் “லாலிபாப்ஸ்”தான். நீ என்னம்மா சொல்கிறாய்?” என்று மருமகளைக் கேட்டாள் பெரியவள்.

திருச்சியில் விபுவை விட்டிருந்த “க்ரஷ்” , சுசிதாவுக்குத் தன்னை மீறி நினைவு வந்தது!

அந்த ஜானகி அம்மாள் மட்டும் இல்லையென்றால் . . .அந்த அம்மாள் இருந்துமே, வேலை முடிந்ததும், பயந்து, பயந்து அவசரமாக ஓடுவாளே!

இங்கே மகனுக்காக எல்லோரும் எப்படி அக்கறை காட்டுகிறார்கள் என்று பூரிப்பாக இருந்தது! முடிவு சொல்லும் உரிமை வேறு, பெற்றவளாக அவளுக்குத்தான்.

“எல்லோருக்கும் பிடித்திருந்தால், அதிலேயே சேர்த்துவிடலாம்! ஆனால், டிரைவரை அவ்வளவு நேரம், மொட்டுமொட்டென்று அங்கே காத்திருக்க வைக்காமல், விபுவை விட்டுவிட்டு வரச் சொல்லி விடலாம்! பள்ளி முடிகிறபோது மறுபடியும் போய் . . .” என்றவள் பேச்சை முடிக்கு முன்பாக, “இல்லை! நாகு அங்கேயே இருந்து, விபுவைக் கூட்டிக்கொண்டே திரும்பி வரட்டும்!” என்று, மறுப்புக்கு இடமற்ற தீர்மானமான குரலில் நிகிலன் கூறினான்!

ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு!

அத்தியாயம் - 24

பொதுவாக, நிகிலன் எல்லோரது சுகத்தையும் பார்க்கிறவன்! சின்னச் சின்ன விஷயங்களில் மற்றவர்களிடம் அவன் காட்டும் அக்கறையே, உறவினரின் பிரியத்தையும், பணியாட்களின் விசுவாசத்தையும் அவனுக்கு மிகுதியாகப் பெற்றுத் தந்திருந்தது!

தன்னையறியாமல் அவனைப் பின்பற்றியே, விபுவைப் பள்ளியில் விட்டதும் காரோட்டி வீட்டுக்குத் திரும்பி வந்து விடட்டும் என்று சுசிதா கூறியது!

ஆனால் அதை அவ்வளவு வேகமாக நிகிலன் மறுத்தது, அதிலும் சற்றுக் கடுமை என்று சொல்லக் கூடிய குரலில் முடிவு செய்தது, அவளுக்கு மட்டுமல்ல, அவனுடைய பெற்றோருக்குமே அதிசயமாகத்தான் இருந்தது!

சுந்தரம் கேட்கவே செய்தார். "ஏன் நிக்கி அப்படி? பள்ளி தொடங்கிவிட்டால், பன்னிரண்டு மணிக்குப் பள்ளி விடும் நெரம் வரை, "லாலிபாப்"சில் கதவைக்கூடத் திறக்க மாட்டார்கள்! அதுவரை, மருமகள் சொன்னது போல, நாகு எதற்காக அங்கேயே வெளியே கிடக்க வேண்டும்? வீட்டுக்கு வந்தால், அம்மா எங்கேனும் போக வேண்டுமானாலும் போய் வரலாமே!" என்றார் அவர்.

அப்போதும், "அம்மாவுக்கு வேண்டுமானால், அலுவலகக் கார் ஒன்றை அனுப்பி விடலாம்ப்பா! விபு. . . அவன் அங்கே நன்கு பழகட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் . . . மற்றதைப் பிறகு பார்க்கலாமே, அப்பா!" என்றுதான் நிகிலன் பதில் உரைத்தானே தவிரத் தன் தீர்மானத்தை மாற்றுவதாக இல்லை.

மகன் அங்கே பள்ளியில் இலகுவாகப் பொருந்திக் கொள்வான் என்று இன்னமும் நிகிலனால் நம்ப முடியவில்லை என்று புரிய, சுசி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

நேரமாகிவிட்டதால், சாப்பிட்டுவிட்டே அலுவலுக்குப் போகலாம் என்று மீனலோசனி கூற, ஆண்கள் இருவரும் சம்மதித்தார்கள்.

தட்டில் சாதத்தை வைத்தபடியே, "இன்று பங்கஜத்தின் வீட்டிலிருந்து கோஃப்தா கறி வந்தது! மருமகன் வருகிறார் என்று செய்தாளாம். உனக்குப் பிடிக்குமே என்று, மெனக்கெட்டு ஆளிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறாள்! " என்று சொல்லி, கரண்டியில் கோஃப்தாவை எடுத்தாள் மீனலோசனி.

“அப்பாவுக்கு வையுங்கள், அம்மா!” என்று கூறிய நிகிலன், மகனின் சொற்படி, கணவருக்குப் பரிமாறிய தாயார் திரும்புமுன், தன் தட்டிலிருந்த சாதத்தில் தயிரை ஊற்றியிருந்தான் .

“என்னடா, இது?!” என்று அதிர்ந்து கேட்டாள் அன்னை!

விழித்துவிட்ட மகனுக்காகத் தட்டில் சாதம் போட்டுக் கொண்டிருந்த சுசியும் சற்றுத் திகைத்தாள். “என்ன, விபு மாதிரி எடுத்ததுமே தயிருக்குப் போகிறீர்கள்? உங்கள் மகனை ஒழுங்காகச் சாப்பிடச் சொல்லுங்கள், அத்தை!” என்றாள் .

“இன்னுமாடா வயிறு சரியாகவில்லை?” என்று சுந்தரம் கேட்டார்.

“இன்னுமா என்றால், எப்போதிருந்து சரியில்லை?” என்று கேட்டாள் சுசிதா.

“அது நிறைய நாள் ஆகிறது! அன்று ரஞ்சி வீட்டிலேயே, இப்படிச் சொல்லி ஒன்றும் சாப்பிடவில்லையாம்! அன்று விருந்தில்கூட, எந்தப் பதார்த்தமும் இவன் சாப்பிடவில்லையே!” என்று மீனலோசனி வருத்தத்துடன் கூறினாள்.

“ஓ அப்படியா?” என்று, அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் மகனுக்குச் சோறு ஊட்டுவதில் சுசி ஈடுபட்டாள்.

ஆனால், வழக்கம் போல இரவில் மகனைப் பார்க்க வந்தவனிடம், “இதனாலெல்லாம், செய்த தப்பு இல்லையென்று ஆகிவிடுமா? எதற்கு இந்த அனாவசிய சொந்த சுக மறுப்புகள்?” என்று நேரடியாகக் கேட்டாள்.

நிகிலனும் புரியாதது போல நடிக்கவில்லை. “பிராயச்சித்தம் என்பது, மன்னித்து விடு என்பது போன்ற, வெறும் தளுக்கான வார்த்தைகளால் முடிந்துவிடுவது அல்ல. உப்பைத் தின்றால் தண்ணீரைக் குடிப்பது போல, இப்படியும் அனுபவித்துதான் ஆக வேண்டும்!” என்று விளக்கிவிட்டு, மேலே பேச இடம் தராமல், “ குட்நைட்!” சொல்லிவிட்டுப் பொனான் .

சுவையாகச் சாப்பிட்டுப் பழகிவிட்டு, இப்படிப் பத்தியம் போல உண்பது எவ்வளவு கடினம் என்று, சுசிதா அறியாதவள் அல்ல! “இல்ல”த்தில் வெறும் சாம்பார்க் காய்களை வைத்துக்கொண்டு, தொட்டுக்கொள்ள வேறு எதுவும் இல்லாமல் எத்தனை நாட்கள் தவித்தாள்!

பின்னர் வேலை பார்க்கத் தொடங்கிய பிறகும், தனக்காகச் செலவு பண்ணக்கூடாது என்று பிடிவாதமாக மிகமிக எளிய உணவுதானே?

ஆனால், இந்த சுயக் கட்டுப்பாடு சுகமானது என்று அவளால் ஒரு போதும் சொல்ல மாட்டாள்! ஏனெனில், “தன்னெஞ்சறிய பொய்யற்க” அல்லவா?

உணவில் மட்டுமின்றி, அறையில், வெறும் தரையில் வேறு படுக்கை.

போயேன்! பட்டினி கிடவேன்., கஷ்டப் படேன் என்று அலட்சியமாக , அவளால் நினைக்க முடியவில்லை!

வாழ்க்கை என்ன, அல்ஜீப்ரா கணக்கா, இரண்டு மைனஸ்கள் ஒரு ப்ளஸ் ஆவதற்கு?

ஒரு கஷ்டம், இன்னோரு கஷ்டத்தைச் சுகமாக்க முடியாது என்று இவனுக்கு ஏன் தெரியவில்லை?

கணக்குப் படி பார்த்தால், கஷ்டம்தான் பல மடங்கு பெருகும்! பெருகிற்று!

அன்றிரவு சுசிதா உறங்குவதந்கு வெகு நேரம் ஆயிற்று!

என்னென்னவோ நினைவுகள்! எதற்கும் சாதகமாகவும் பாதகமாகவும் மனம் வாதாடியது!

நல்லதும் கெட்டதும் கலந்ததே வாழ்க்கையாக இருக்கலாம்! ஆனால், கெட்டதை எப்படி அடியோடு அலட்சியப் படுத்துவது?

மறப்பதும், மன்னிப்பதும், தில்லைநாயகம் போன்றவர்களுக்கு எளிதாக இருக்கலாம்! ஆனால், அவள் அவரைப் போன்றவள் அல்ல!

கோப தாபங்களும், வெறுப்பு வஞ்சங்களும் உள்ள சாதாரண மனுஷி! மாறுவது கடினம்!

மறுநாள் காலையில் ஓட்டப் பயிற்சியை முடித்துக்கொண்டு, பத்திரிகையோடு உட்கார்ந்திருந்தவனைப் பார்க்கையில், சற்று சோர்ந்தாற்போலத் தோன்றவும், உள்ளூர வலித்தது!

அரைப் பட்டினியோடு, இது வேறு எதற்கு?

ஆனால், பிராயச்சித்தம், தண்டனை என்பன போன்றவற்றை மீண்டும் கேட்கப் பிடிக்காததால், அதுபற்றிப் பேசவும் அவளுக்கு மனமில்லை.

காரணமில்லாமலே குற்றவாளி போல உணர்ந்து, உள்ளே சென்று, வடிவு போட்டு வைத்திருந்த சத்துமாவுக் கஞ்சியில் பால் கலந்து, ஒரு பெரிய டம்ளர் நிறையக் கொணர்ந்து, நிகிலன் முன்னே வைத்தாள்.

பத்திரிகையைத் தாழ்த்திக்கொண்டு அவன் சற்று வியப்பாக நோக்கவும், “அத்தை தந்து, நானும் குடிப்பதுதான்!” என்று எரிச்சலோடு

மொழிந்துவிட்டுப் போனாள் சுசிதா!

சன்ன முறுவலுடன் கஞ்சியை எடுத்து, சொட்டு விடாமல் அருந்தினான் அவன்!

மனைவி கையால் பானம் அருந்திய ராசியோ, அன்று மூன்று மணிக்கே திரும்பி வந்திருந்த நிகிலன் அப்படித்தான் சொன்னான்.

அவனுடைய தமக்கை விஷயமாக, நல்லதாக ஒரு விவரம் கிடைத்திருந்தது!

சவிதா திரும்பி வந்திருந்தாள்.

அது மட்டுமல்ல. வந்த உடனேயே, நிகிலனுடைய நண்பன் கொடுத்திருந்த எண்ணுக்கு டெலிஃபோனும் செய்துவிட்டாள்!

ரொம்பப் பணத்தாசை பிடித்தவளாகத் தெரிகிறது என்று, சரவணன் சொன்னானாம்!

பத்து நாட்கள் சுற்றிவிட்டு வந்தவள்., ஒரு நாளேனும் ஓய்வெடுக்க எண்ணாமல், அடுத்த வேலை என்ன என்ன என்று பறக்கிறாளே!

“என்னவோ, அவள் எப்படிப் போனாலும், இப்படிப் பறப்பதால் நமக்கு வேலை சீக்கிரமாக நடக்கும் அல்லவா?” என்றாள் சுசிதா.

வியப்பாக நோக்கிவிட்டு, “நானும் இப்படித்தான் எண்ணினேன்!” என்றான் நிகிலனும். “ஆனால், அத்தான் மீள முடியாக மோசம் என்று, ஒரேயடியாக நிரூபணம் ஆகிவிடுமோ என்று பயமாக . . . படபடப்பாகவும் இருக்கிறது!” என்றபோது, அவன் குரல் ரொம்பவும் சின்னதாகி விட்டிருந்தது!

இறுக மூடியிருந்த கண்களும், விறைத்த உடலும், முஷ்டியாக மடங்கியிருந்த விரல்களும்!

சட்டென இளகி, அருகே மண்டியிட்டு அவன் கையைப் பற்றி, “எதற்கு பயம்? நாம் நல்லதையே நினைப்போமே! உங்கள் அத்தான் நல்லவர் என்றாகி, அக்காவின் குடும்பம் பழைய மாதிரி ஆகும்போது, எவ்வளவு நன்றாக இருக்கும் என்று, அது போல எண்ணிப் பாருங்களேன்! “ என்றாள் மென்குரலில்!

அவன் இன்னமும் கண்ணைத் திறக்கவில்லை! “அப்படி இல்லாவிட்டால்?”

“வாய்ப்பே கிடையாது!” என்றள் அவள் குரலில் உறுதியோடு! “அதிலும், சவிதா பற்றி உங்கள் நண்பர் சரவணனின் அபிப்பிராயத்தைக் கேட்டபிறகு, வெறும் ஐந்து சதவீத பிழைப்பு

வாய்ப்புள்ள அறுவை சிகிச்சையாகத் தொடங்கிய இந்த முயற்சியில், எனக்கு ரொம்பவே வெற்றி நிச்சயம் என்றாகிவிட்டது!" என்றாள் தெளிவாக!

மெல்லக் கண்ணைத் திறந்து, மனைவியை உற்றுப் பார்த்தான் நிகிலன்.

மூச்சு மெல்ல நிதானமாகி விட, "நான் அப்பா, அம்மாவிடம் கூட இந்த முயற்சி பற்றி, ஒன்றுமே சொல்லவில்லை, சுசி! ஒரு வேளை தோற்றுவிட்டால், வீணாக ஆசை காட்டி ஏமாற்றிய மாதிரி ஆகிவிடுமே என்றுதான்! ஆனால், இந்த இறுக்கம் . . . நீ இல்லாமல், என்னால் இதைத் தாங்க முடிந்திராது!" என்றான் மெதுவாக.

"ம்ம்ம் . . " என்று தலை சரித்து அவனைப் பார்த்தாள் சுசிதா. "இப்படிப் பயந்து போனவர்களுக்குக் கொழுமோர் காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்பார்கள்! அதை எப்படிக் காய்ச்சுவது என்று எனக்குத் தெரியாது! வேண்டுமானால், அத்தையிடம் கேட்டு, வடிவிடம் காய்ச்சச் சொல்லட்டுமா?" என்று ரொம்ப சீரியசாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டாள்!

"அம்மா . .விடம் கேட்டு . . .வடிவிடம் சொல்லியா? அவர்களிடம் மட்டுமென்ன? மொட்டை மாடியில் நின்று, ஓர் ஒலிபெருக்கி மூலம் அக்கம் பக்கம் யாருக்கேனும் அந்தக் கொழுமோர் காய்ச்சத் தெரியுமா என்று காரண காரியம் விளக்கி, ஒரே தடவையாக எல் . . லோரிடமும் சொல்லி . . .இல்லையில்லை, விசாரித்து விடுவதுதானே? " என்று அதட்டுவது போலக் கேட்டுவிட்டுச் சிரித்தான் அவன்.

"கேட்டுவிடுவேன்! ஆனால், வீட்டில் ஒலிபெருக்கி இல்லையே என்பதுதான் பெரிய பிரச்சினை! காரை எடுத்துக்கொண்டு போய் வாங்கி வந்துவிடலாமா?" என்று கேட்டாள் அவள்.

"தாராளமாய்! அப்படியே ஏதாவது பிரின்டிங் பிரஸ்சில் இது பற்றி பிட் நோட்டீஸ் அடித்து வழியெல்லாம் வினியோகித்து விட்டுக் கூட வரலாம்!"

தேவையற்ற பேச்சுதான். ஆனால், இருவருமாகச் சிரித்து முடித்தபோது, நிகிலன் இயல்புக்குத் திரும்பியிருப்பதை, சுசிதாவால் நன்றாகவே காண முடிந்தது!

அதற்கு இன்னொரு சான்றாக, நிகிலன் அவசரமாக எழுந்து, "அடடா! எவ்வளவு நேரமாக, இப்படி மண்டி போட்டு நிற்கிறாய்? முட்டி வலிக்குமே! எழுந்திரு!" என்று அவளைக் கையைப் பிடித்து, மெதுவாகத்

தூக்கிவிட்டான்.

“வலிக்கிறதா?”

எல்லோரிடமுமே அவன் அக்கறை காட்டுகிறவன்தான்! ஆனால் ஏனோ தொண்டையை அடைத்தது அவளுக்கு!

அதைக் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்கும் முயற்சியாக, “அதெல்லாமில்லை. நீங்கள் சவிதாவிடம் வேலையை எப்போது தொடங்கப் போகிறீர்கள்?” என்று சாதாரணம் போல விசாரித்தாள் சுசிதா!

“தொடங்கி ஆயிற்று!” என்றான் நிகிலன் சின்னத் தோள்க் குலுக்கலுடன்.

“என்னது!”

“ஆமாம்! வீணாகத் தாமதம் செய்வது எனக்கும் பிரியமில்லை! அவசரம் காட்டினால், அதிகப் பணம் கேட்பாள்தான் என்றாலும், சரவணன் மூலமாக ஏற்பாடு செய்த ஏஜன்சி ஆளைக் கொண்டு, பேச்சு வார்த்தைக்காக சவிதாவை நட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்துப் போக, ஏற்பாடு செய்துவிட்டேன்! ஆனால், அதற்கு மேல் எனக்கு வேலை ஓடவில்லை! அலுவலகத்தில் சும்மா உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை! இறுக்கம் தாங்க முடியாமல் இருந்தது! அதனால்தான் இங்கே வந்தேன்! நல்ல வேளை, வந்தேன்! இப்போது எவ்வளவோ அமைதியாக இருக்கிறது!” என்று முடித்தான் அவன்.

“உடனே முடிவு தெரிந்து விடுமா?”

“ஊகூம்! இந்த மாதிரி ஒரு சமாசாரம். செய்ய ஆள் இருக்கிறதா என்று முதலில் நூல் விட்டுப் பார்ப்பார்கள்! பிறகு, நீ நன்றாக இருக்கிறாயே, நீயே செய்வாயா என்று தொடங்குவார்கள். அப்புறம் பேரம்! பிறகுதான், யார் என்ன என்ற விளக்கம் கொடுப்பார்கள்!. முதலிலேயே நேராக விஷயத்துக்குப் போனால், சந்தேகம் வந்துவிடக் கூடும்! அல்லது, எதிராளிடமே பணம் பண்ணப் போய் விடுவார்கள்! அது நமக்குப் பாதகமே ஆகிவிடுமே!” என்றான் நிகிலன்.

படிப்படியாக அவன் சொன்ன விதமான முன்னுரை, முகவுரைகள் எல்லாம் முடிந்து, அன்று குணசீலனின் பெயரைக குறிப்பிடப் போவதாகச் சொல்லி, நிகிலன் கிளம்பினான்.

வெளியே அவனிடம் காட்டிக் கொள்ளாமல், கட்டை விரல் உயர்த்திக் காட்டி வழியனுப்பியபோதும், சுசிதாவுக்கும் உள்ளூர இறுக்கம்தான்!

அன்று அவன் வீடு திரும்ப மிகவும் தாமதமாகி விட்டிருந்தது!

விபு தூங்கிவிட, குறுக்கும் நெடுக்குமாக நடந்து, அறையை அளந்து கொண்டிருந்தாள், அவள். கார் வந்து நின்ற சத்தம் கேட்டதுமே, அவளது கால்கள் வேரோடிப் போயின!

சொத், சொத்தென்று படியேறிய களைத்த காலடிகள், அவளை இன்னமும் சிலையாக்கின.

நிகிலன் நேரே அவளிடம்தான் வந்தான். “தப்பாக நினையாதே, சுசி. ரொம்பவும் சோர்வாக இருக்கிறது! கொஞ்ச நேரம், இப்படி நிற்கிறேனே!” என்று அவளைத் தோளோடு அணைத்து, கன்னத்தை அவள் தலைமீதே சாய்த்து, கண்களை மூடிக்கொண்டு, அப்படியே சற்று நேரம் அசையாமல் நின்றான்.

அத்தியாயம் -25

முதலில் சில வினாடிகள் சுசிதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை!

நிகிலன் மிகவும் களைத்துப்போய் வந்திருக்கிறான். ஆனால், தனித்திருக்கப் பிடிக்காமல், அவளறைக்கு வந்திருக்கிறான்!

ஆனால், நிற்கக் கூட இயலாமல், அவள்மீது சற்று சாய்ந்து நிற்க அனுமதி கேட்கிறான்!

இந்தக் களைப்பின் காரணம் . . . என்பதற்கு மேல், அவளால் எதையும் யோசிக்க முடியவில்லை!

அவர்களது முயற்சி எப்படித் தோற்க முடியும்? முடியாது! முடியவே முடியாது!

சில வினாடி ஓய்வு எடுத்த பிறகு, வெற்றி பெற்ற விவரத்தை அவன் சொல்லப் போகிறான்!

வெற்றியாகத்தான் இருக்க வேண்டும்! ஏனெனில், தோல்வியை நிகிலன் தாங்கமாட்டான்!

யாரேனும் தாங்குவார்களா, அல்லவா என்றெல்லாம் பார்த்து, வெற்றி தோல்விகள் நேர்வதில்லை என்பதையெல்லாம், அவள் அப்போது ஒத்துக் கொள்வதாக இல்லை! நிகிலனால், இதில் தோல்வியைத் தாங்க முடியாது! அதனால், வெற்றிதான் கிடைத்தாக வேண்டும்!

வெற்றிதான்! வெற்றி மட்டும்தான்!

சில வினாடிகளில் நிகிலன் நிமிர்ந்து நின்று, அவர்களது திட்டம் ஜெயித்த கதையை அவளிடம் சொல்லப் போகிறான்!

சொல்லப் போகிறான், சொல்லப் போகிறான் என்று காத்திருந்தால், அவனிடமிருந்து சத்தம் எழும்பவே காணோம்1 அது மட்டுல்ல. அவள் மீது சாய்ந்து நின்றவனின் கனம் அதிகரிப்பது போலவும், அவளுக்குத் தோன்றியது! ஏன்?

உடம்பு சரியில்லையா? மயக்கமா ? என்னென்னவோ எண்ணங்கள் அலைபாய, அவனைப் பற்றி லேசாகக் குலுக்கி, “நிக்கி, நிக்கி!” என்று பதறினாள் அவள்.

திடுக்கிட்டுக் கண் விழித்தவன் ஒரு வினாடி திகைத்தான்.

“என்ன? உங்களுக்கு என்ன ஆயிற்று?”

அவனைப் பற்றிக் குலுக்கிக் கொண்டிருந்தவளின் முகத்தில் கப்பியிருந்த கவலையையும் பயத்தையும் பார்த்ததும், அவன் முகம் விசித்திரமாய் மலரச் சட்டென அவளை அணைத்து முத்தமிட்டான்!

ஒரு கணம் பிரமித்து நின்று, பின் அவள் விலக முற்படுமுன் தானாகவே விடுவித்து, அவளது கைகளைப் பற்றி, "நாம் ஜெயித்துவிட்டோம், சுசி!" என்றான் மகிழ்ச்சியோடு!

கண்ணும் முகமும் மலர்ந்து சிரிக்க, இப்படியொரு நல்ல சேதி சொல்லுகிறவனிடம், நீ எப்படி என்னை இப்படித் தொடலாம் என்று, எப்படி அதட்டுவது?

சந்தோஷத்தைப் பகிர்வது தவிர, அவனுக்கு வேறு நினைவு . . எதிரில் நிற்பவள் ஒரு பெண்., அதிலும் மனைவி என்கிற எண்ணம் இருப்பதாகவே தெரியாதபோது!

மனைவியே மறக்கிறபோது அவளிட்ட நிபந்தனை எப்படி நினைவிருக்கும்?

அத்தோடு, அவன் சொன்ன சேதி, அவளுக்கும் ஆனந்தம் தருவதுதானே! எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது?

திகைப்பும் கோபமுமாக அவளுள் எழுந்த உணர்ச்சிகள் தானாக மறைய, அவள் முகமும் மலர்ந்தது! "நிஜமாகவா? எனக்கு எவ்வளவோ நம்பிக்கைதான்! ஆனால், நீங்கள் சொத்தென்று வந்ததும், சக்தியே இல்லாமல் அரை மயக்கம்போல நின்றதும் பார்த்துப் பயந்தே போனேன்! சொல்லுங்கள், எப்படி? என்ன நடந்தது?" என்று ஆவலாகக் கேட்டாள்.

அவன் சொல்லத் தொடங்குமுன் அவளே குறுக்கிட்டு, "கொஞ்சம் பொறுங்கள். எதிலாவது ஓய்வாக உட்கார்ந்திருங்கள் இதோ வந்துவிடுகிறேன்!" என்று அவசரமாக வெளியே சென்றாள்.

திரும்பி வந்தபோது, அவள் கையில் கிண்ணம் நிறையக் கரைத்த மாதிரி மோர் சாதம், ஓரத்தில் சிறு ஊறுகாய்த் துண்டுடன் இருந்தது. ஸ்பூன் போட்டுக் கொண்டுவந்திருந்தாள்!

அவனிடம் கொடுத்து, "பார்த்தால், பஞ்சத்தில் அடிபட்ட மாதிரித் தெரிகிறீர்கள்! சும்மாவே அரைச் சாப்பாடு! இன்றையப் பதட்டத்தில், நீங்கள் ஒன்றுமே உண்ணவில்லை என்று நினைக்கிறேன். சொட்டு மோர் கூட மிச்சம் வையாமல் சாப்பிடுங்கள். அதன் பிறகு விவரம் சொன்னால் போதும்!" சிறு கண்டிப்புடன் கூறினாள்.

அவள் எதுவும் சொல்லவே தேவையில்லாத மாதிரி, கிண்ணத்தைக்

கையில் வாங்கியதுமே, நிகிலன் வேகமாகச் சாப்பிடத் தொடங்கிவிட்டான்!

அவன் உண்டு முடித்ததும், காலிக் கிண்ணத்தை வாங்கிக்கொண்டு, தண்ணீர் பாட்டிலைக் கொடுத்தாள் அவள்.

தண்ணீர் பாட்டிலை வாங்கியவன், உடனே குடிக்காமல், "இது உன் பணத்தில் வாங்கியதா, அல்லது இங்குள்ளதா?" கேட்டான்.

கணவன் கண்ணில் சிரிப்பைக் கண்டு, "கொழுமோர் குடித்த தெம்பில், தைரியமாகக் கேள்வியெல்லாம் கேட்கிறீர்கள் போல!" என்று கிண்டலாகச் சிரித்தாள் சுசிதா!

"கொழுமோரா? தண்ணீரில் கொஞ்சம் கலர் காட்டின மாதிரிக் கொஞ்ச. . . மாய் மோரை ஊற்றிக் கொணர்ந்துவிட்டு, அதன் பேர்தான் கொழுமோரா? " என்று நிகிலன் கேட்டான்.

"ஏதோ மோர் மாதிரித் தெரிந்ததுதானே? நிற்க முடியாமல் நடுங்கியவருக்கு, இப்போது பேச்சு வருகிறதே, அதிலிருந்தே தெரியவில்லையா, அது கொழுமோரேதான் என்று!" என்று அவள் மடக்கியதும், நிகிலன் வாய்விட்டுச் சிரித்தான்!

சிரிப்புச் சத்தத்தில் விபு அசையவும், அவசரமாக அவன் வாயைப் பொத்திக்கொள்ள, சுசிதாவுக்கும் சிரிப்பு வந்தது!

முறுவலித்தவாறே மகனை லேசாகத் தட்டிக் கொடுத்து, அவன் மீண்டும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்ததும், "இப்போது சொல்லுங்கள், என்ன நடந்தது என்று!" என்று, மோடாவைத் தானே இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள் அவள்.

"கதை கேட்பதற்கு வசதியாக உட்கார்ந்தாயிற்றா? என்ன கதை சொல்லலாம்? மதனகாமராஜனா? ஜெகதலபிரதாபனா? அல்லது, விக்கிரமாதித்தன் கதை வேணுமா?" என்று கிண்டலாகக் கேட்டான் அவன்.

எடுத்த காரியம் வெற்றியானதோடு, இனி ரஞ்சனியின் வாழ்வு சீராகிவிடும் என்ற நம்பிக்கையும் சேர்ந்துகொள்ள, இருவருக்குமே மனம் சுமையிறங்கி லேசாகியிருந்தது! முக்கியமாக தீபு, தினுவின் ஏக்கம் தீரும் என்பது, நிகிலனைப் போலவே, சுசிதாவுக்கும் மிக்க ஆறுதலை அளிக்க, அவனோடு சேர்ந்து இலகுவாகப் பேச, சிரிக்க, அவளாலும் முடிந்தது!

திட்டத்தின் வெற்றி தோல்வி பற்றிச் சில நாட்களாக இருந்த இறுக்கம் தீர்ந்தது வேறு!

விளையாட்டுப் பேச்சில், விஷயத்தைச் சொல்லாமல் அவன் காலம் கடத்த, அவள் மிரட்டுவது போலக் கையை ஓங்கிக் காட்ட, சத்தமின்றி நகைத்துவிட்டு, நிகிலன் சொல்லத் தொடங்கினான்.

சுசிதாவின் யோசனைப்படி போடப்பட்ட திட்டத்தின் கடைசிக் கட்டம் வரை, கிரீஸ் தடவிய இயந்திரம் மாதிரி, தங்கு தடையின்றி நடந்ததை, ஏற்கனவே அவன் அவளுக்குச் சொல்லியிருந்தான். அதற்கு மேல், அன்று நடந்ததைச் சொல்லலானான்.

“நான் மேனகையாக்கும்., எப்பேர்ப்பட்ட விசுவாமித்திரரையும் காலடியில் விழ வைத்து விடுவேனாக்கும் என்று, அந்த சவிதா ரொம்பவும் பெருமை அடித்தாளாம், சுசி! அதைக் கேட்டு, சரவணனுக்குச் சற்றுத் திகிலாகக் கூட இருந்ததாம்! இதுவரை, இவள் வலையில் விழுந்திராத மனிதரை, நாமே விழத் தட்டப் போகிறோமோ என்று, மிகவும் தயக்கமாக இருந்ததாம்! ஆனால், எப்படியும், ரஞ்சியக்கா தப்பான ஆளை ஏற்க மாட்டாள்., இன்று இவளிடம் மயங்கினால், அத்தான் தப்பான ஆளாகத்தானே இருந்தாக வேண்டும்., அதனால், முடிவு எப்படியும் ஒன்றாகவேதானே இருக்கப் போகிறது., செய்வதைச் செய்துவிடுவோம் என்றுதான், இன்று அந்த ஏஜென்சி ஆளிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தானாம்!

“அவனுக்குமே இறுக்கமாக இருக்கவே, அதே ஹோட்டலுக்கு முன்னதாகவே போய், இவர்கள் இருக்கை அறிந்து, அவனைப் பார்க்க முடியாதபடி உட்கார்ந்திருந்தானாம்.

“வழக்கம் போலவே, அந்த உயர் ரக ஹோட்டலின், விலை உயர்ந்த அயிட்டங்களை வரவழைத்து, சவிதா நன்றாகத் தின்றாளாம். பேரத் தொகையில் பாதியை முதலிலேயே தந்துவிட வேண்டும் என்றாளாம். அப்புறம்தான், செய்ய வேண்டியது பற்றிய விவரம் கேட்டிருக்கிறாள்.

“இயந்திர பாகங்கள் செய்கிற நிறுவனம். அவர்கள் செய்கிற பொருட்கள் மிகமிக உறுதியாக இருக்கின்றன. அவர்களது உலோகக் கலவையின் ரகசியம் வேண்டும். எந்தெந்த நேரத்தில், எந்தெந்த சூட்டில், எந்தெந்த உலோகத்தைக் கலந்து செய்வது என்று தெரிந்து வரவேண்டும்! “ என்றாராம் அவளை அழைத்துச் சென்றவர் .

“என்ன பிரமாதம்? ஒரே நாளில் ஆளை மடக்கி, விவரத்தைக் கறந்துவிடுவேன்” என்றிருக்கிறாள் சவிதா!

ஆனால், யார் என்று ஏஜன்சி மனிதர் சொன்னதும் ஆளே மாறிவிட்டாளாம்!” என்றான் நிகிலன் குதூகலத்துடன்!

“எப்படி? என்ன சொன்னாளாம்?” என்று ஆவலுடன் கேட்டாள் அவன் மனைவி!

“மில்லியன் டாலர் பெறுமான பதில்! அதைப் போய், ஒரு லாபம் இல்லாமல் ஓசியில் சொல்ல வேண்டியிருக்கிறதே! ஹூம்!” என்று அலுப்பு காட்டியவன், உடனே சிரித்து, சவிதாவின் வார்த்தைகளை அப்படியே சொல்லிக் காட்டினான்!

“அடப்பாவி! அந்த ஆளா? மனிதன், முழுச் சாமியார் ஆயிற்றே! பெரிய இதிகாச நாயகன் _ராமன் என்று நினைப்பு! ஆனால், இவன் பெண்டாட்டி இரண்டு பிள்ளை எப்படிப் பெற்றாள் என்பதே எனக்கு அதிசயம்!”

விழிகள் வட்டமாக விரிய, “அப்புறம்?” என்று கேட்டாள் சுசிதா.

“சரவணன் சொல்லி அனுப்பியதற்கு ஏற்ப, அவன் ஆள் இது விஷயம் பற்றித் துழாவியிருக்கிறார். அவள் பேச்சை நம்பாத மாதிரிப் பேசினாராம். நாலு நாள் நன்றாகத் தின்றுவிட்டுப் பாதிப் பணத்தை வாங்கிக்கொண்டு, எதையும் செய்யாமல் ஓட நினைத்தாய் என்று குற்றம் சாட்டினாராம்! அய்யோ, அப்படியில்லை! அது போலெல்லாம் செய்தால், என் தொழில் அழிந்து போகாதா என்று, வருத் . . தமாகக் கேட்டாளாம் அவள்! எப்பேர்ப்பட்ட தொழில், பார்! நம் ஆள் விடாமல், போய் வேலையைப் பார் என்று விரட்டியிருக்கிறார். அப்போதுதான் அம்மையார் விஷயத்தைக் கக்கியிருக்கிறாள்! இந்த ஆளிடம் போய் ஒரு பயனும் இராது! ஏனெனில், இவரிடம் நான் ஏற்கனவே ஒரு முயற்சி செய்து பார்த்துத் தோற்றிருக்கிறேன், என்றாளாம் சவிதா!” என்றபோது, நிகிலனின் குரலில் உற்சாகம் குமிழியிட்டது!

“ஏற்கனவே முயற்சியா? அதென்னது? சொல்லுங்கள், சொல்லுங்கள்!” என்று மோடாவைக் கணவன் அருகே இழுத்துப் போட்டுக்கொண்டு, அவளும் ஆர்வமாகக் கேட்டாள்.

“என்னென்ன விதமாகப் பேச வேண்டும் என்று ஏற்கனவே சொல்லி வைத்திருந்ததுதானே?

உடனே ஏஜன்சி ஆள், மறுபடியும் நம்பாத பாவனையில், இது என்ன புதுக் கற்பனை என்று கேட்டிருக்கிறார்! தன்னால் முடியாது என்றதும், சார் மோரெல்லாம் போட்டு, சவிதா ரொம்ப மரியாதையாகப் பேசியிருக்கிறாள். இதைக் கேட்டுப்பார்! அவளுக்குத் தெரியாமல், சரவணன் டேப் செய்தது!” என்று பையில் இருந்த ஒரு செல்லை எடுத்து “ஆன்” செய்தான்.

சவிதாவின் குரல் பதவிசாக ஒலித்தது!

“ஐய்யோ, கற்பனையே கிடையாது, சார்! நிஜம்! இந்த ஆளிடம் நான் வேலை செய்தவள். வேலையில் சின்னச் சின்னத் தப்புக்கும், இந்த ஆள் பயங்கரமாகக் கத்துவான்! இப்படி, அப்படி நெளித்து, உரசி, சமாளிக்கலாம் என்று பார்த்தால், கொஞ்சமும் மசிய மாட்டான்! மற்றதை விடுங்கள், சார்! இந்த ஆள் நிறைய நிறுவனங்களில் பங்குதாரர். சிலதில், “மீட்டிங்” எல்லாம் முடிந்த பிறகு, உல்லாசமாக இருப்பதுதான்! என்னென்னமோ நடக்கும்! இதற்கெல்லாம், என்னைப் போன்றவர்கள் எதற்காகப் போகிறோம்? ஏதோ, தனியாகக் கொஞ்சம் காசு கிடைக்கும் என்றுதானே? வேண்டாம் போ என்று விரட்டி விட்டு, அறையைப் பூட்டிக்கொண்டு தனியாகக் கிடப்பான், சார்! அப்படி ஒருநாள், “சும்மா வாருங்கள், டியர்” என்று கட்டிப் பிடித்தேனா? பிடித்துக் கீழே தள்ளிவிட்டான்! உடனடியாக “டிஸ்மிஸ்” வேறு பண்ணிவிட்டான்! ஆனால், அவன் ஏற்கனவே என் இடத்துக்கு . . .அதை விடுங்கள்! இந்தச் சாமியார் வேண்டாம், சார்! இவனுக்குப் பதிலாக, இவனுடைய பங்குதாரர் யாரையாவது பிடிக்கலாமே! வேறு யார் என்றாலும், ஒரே நாளில் வேலையை முடித்துத் தருகிறேன், பாருங்கள்! வேண்டுமானால், ரேட்டைக் கொஞ்சம் குறைத்து . . . “

சவிதாவின் கெஞ்சலும், ஏஜன்சி ஆளின் மறுப்புமாக, செல்லில் மெலும் ஏதோ பேச்சு தொடர்ந்தது.

ஒரு விரலால் சுசியின் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டு, “என்ன, போதுமா? எப்படியும்ரஞ்சிக்கு இது நிச்சயமாகப் போதும்! இந்த உரையாடலைக் கேட்டதும், அக்கா முகம் எப்படி மலரப் போகிறது என்று நினைக்கும்போது . . . அப்ப் . .பா! ஒரு பயங்கரக் கனவிலிருந்து விழித்து எழுந்த மாதிரி, எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது, தெரியுமா? “ என்று மகிழ்ச்சியோடு கூறினான் நிகிலன்.

சுசிதா ஏதோ யோசனையாகப் பார்க்கையில் அவன் மேலும் தொடர்ந்தான். “முதலில், இந்த செல்லை எடுத்துக்கொண்டு, நேராக அக்கா வீட்டுக்குப் போகலாமா என்று ஒரு தரம் நினைத்தேன்! ஆனால், இந்த முயற்சியைத் திட்டமிட்டது, நடத்தியது எல்லாவற்றையும் ரஞ்சியிடம் நிதானமாக எடுத்துச் சொல்லும் அளவுக்கு எனக்கு சக்தி இருப்பதாகவே தெரியவில்லை! காரைக்கூட ஓட்ட முடியாமல், சாலையோரம் நிறுத்திவிட்டு, எவ்வளவு நேரம் சும்மாக் கிடந்தேன், தெரியுமா?

“குற்ற உணர்வு தாக்க, அக்கா உணர்ச்சி வசப்பட்டுத் தவிப்பதை,

கட்டாயம் தவிக்கப் போகிறாள் அதை என்னால் தனியே தாங்க முடியும் போலவும் தோன்றவில்லை!

“அத்தோடு, இந்த முயற்சியின் மூல காரணமே நீதானே! நீ சொல்லாமல், இப்படியொரு முயற்சியைச் செய்து பார்த்திருக்கக் கூட, இங்கே யாருக்கும் தோன்றியிராது! முடிவை அறியும் முதல் உரிமையும் உனக்குத்தான் உண்டு என்று நினைத்தேன்! அக்காவிடம் கூட, நாம் இருவருமாகச் சென்றுதான் சொல்ல வேண்டும்! இப்போது கூட என்னால், தனியே போக முடியாது!

“மேலும் . . “ என்று இன்னமும் ஏதோ சொல்லத் தொடங்கியவன், அதை நிறுத்திக்கொண்டு, “ரொம்ப நன்றி, சுசி!” என்றுரைத்து, மனைவியின் கரத்தைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்!

கையை மெல்ல இழுத்துக் கொண்டாலும் அவள் முறுவலிக்க, அவள் முகத்தை ஆவலாக நோக்கி, “சுசி! இந்த விஷயமாக, நீ செய்த அனைத்து உதவிகளுக்கும், நான் என்ன கைமாறு செய்யப் போகிறேனோ, எனக்குத் தெரியவில்லை! ஆனால், எப்போதேனும் உனக்கு நான் ஏதாவது செய்யக் கூடுமானால், சற்றும் தயங்காமல், நீ என்னிடம் சொல்ல வேண்டும்!” என்று லேசாக வற்புறுத்தும் குரலில், நிகிலன் கேட்டுக்கொண்டான்.

அவனை ஒரு தரம் பார்வையால் அளந்துவிட்டு, அவள் பேசாதிருக்கவும், “ஏன் சுசி, நீ கேட்பதை, நான் செய்ய மாட்டேன் என்று எண்ணுகிறாயா?” என்று குறையாகக் கேட்டான்.

தலையசைத்து மறுத்தாள் சுசிதா. “நிச்சயமாக அப்படியில்லை! ஆனால், எதையும் உரிய நேரம் பார்த்துக் கேட்க வேண்டும் இல்லையா? “ என்றவள் ஓரக் கண்ணால் அவனைப் பார்த்து “கைகேயி, தசரதனிடம் வரம் கேட்ட மாதிரி!” என்று மர்ம முறுவலோடு முடித்தாள்!

அத்தியாயம் -26

அவள் கேட்க விரும்புவது என்ன, என்ன என்று நிகிலன் பல முறை கேட்டும், அதைச் சொல்ல, சுசிதா பிடிவாதமாக மறுத்துவிட்டாள்!

“ஏன்? கைகேயி மாதிரி, உங்கள் சொத்தையெல்லாம் விபு பெயருக்கு மாற்றச் சொல்லிவிடுவேன் என்று பயமா? பயமே படாதீர்கள்! அப்படியெல்லாம் நான் அடாவடியாக எதையும் கேட்டுவிட மாட்டேன்!” என்று அவள் கேலி போலக் கூறிச் சிரிக்கவும், அவனுக்குத்தான், மேற்கொண்டு வலியுறுத்திக் கேட்க முடியாமல் போயிற்று!

“இதிலென்ன பயம்? இப்போதே, என்னது எல்லாம் விபுவுக்குத்தானே? எழுத்தின் மூலமாக அதை உறுதிப் படுத்தத் தயங்குவேனா, என்ன? உனக்கு ஒரு விருப்பம் இருந்தால், அதைச் சீக்கரமாக நிறைவேற்றலாமே என்று பார்த்தேன்!” என்றவன், அவள் காது கேளாதவளைப் போல எங்கோ பார்க்கவும், தோளைக் குலுக்கித் தோல்வியை ஒத்துக் கொண்டான்.

சுசிதா ரொம்ப அழுத்தக்காரி ஆகிவிட்டாள் என்று மனதிற்குள் பொருமினாலும், இப்போது அதைப் பெரிதாக எடுக்க நிகிலனுக்கு மனம் வரவில்லை! அவளைக் கட்டாயப்படுத்திக் கேட்பதைவிட முக்கியமாக, இனிய கடமைகள் நிறைய இருக்கின்றன! இவ்வளவு செய்தவள், அதிலும் துணை நின்றால், மிகவும் சுகமாக இருக்கும்!

எனவே, நன்றிக் கடன் விஷயத்தை அத்தோடு விட்டுவிட்டு, “சொல்லு சுசி, அக்கா வீட்டுக்கு எப்போது போகலாம்? நீயும் கூட வரவேண்டும்! இப்போதே அவளிடம் போய்ச் சொல்ல எனக்கு ஆசைதான். ஆனால், நேரம் அதிகம் ஆகிவிட்டது. விபுவைத் தனியே விட்டுவிட்டும் போக முடியாது., இதற்கு மேல் அம்மாவை எழுப்பிப் பார்த்துக் கொள்ளச் சொல்வதும் தப்பு! காலையில் போகலாமா?” என்று வினவினான்.

ஆனால், உடனே அவனே ,”அது சரி வராதில்லையா? விபுவைப் பள்ளிக்குக் கிளப்ப வேண்டும்! உனக்கும் வேலைக்குப் போக வேண்டும்! ஆனால், எவ்வளவு சீக்கிரமாகச் சொல்கிறோமோ, அவ்வளவு சீக்கிரமாக, அக்காவும் சந்தோஷப் படுவாளே என்று இருக்கிறது! உனக்கு உணவு இடைவேளை இருக்குமே, அப்போது போகலாமா? அவளுக்குப் பிறகுதான், அம்மா, அப்பாவிடம்

சொல்வதாக இருக்கிறேன்! அல்லது மாலையில் போவதே வசதியா?” என்று பரபரத்தான்!

“நாளை மாலையில் செல்வதுதான் வசதி! ஆனால், முதலில் செல்ல வேண்டிய இடம், உங்கள் அக்கா வீடல்ல. வேறு!” என்றாள் சுசிதா முகத்தில் சிந்தனையோடு.

“சுசி ?”

“ஆமாம் நிக்கி! யோசித்துப் பாருங்கள், இப்போது உங்கள் அத்தானின் மனநிலை எப்படி இருக்கும்? ஒரு கணம் கூடத் தப்பு நினைக்காதவரை, தப்பான குற்றம் சாட்டி,விட்டுப் பிரிவதாகச் சொல்லி, வீட்டை விட்டு வெளியேற வைத்துவிட்டார்கள்! மனைவி மக்கள் மீது பாசம் மிகுந்த ஒருவர், என்ன மாதிரி உணர்வார்? அவர் கோபமாக இருப்பதாக நீங்களே சொன்னீர்கள்! உங்கள் அக்காவுக்குப் புத்தி வளர வேண்டும் என்று சொன்னார் என்றால், அவர் எந்த அளவு பாதிக்கப் பட்டாரோ? இப்போது, இதை எப்படி ஏற்கக் கூடும்? எதையுமே ஏற்பாரா என்பதே புரியவில்லை! முதலில் அவரிடம் சென்று, விஷயத்தை விளக்கி, அவரது மனநிலையை அறிந்துகொண்டு, அப்புறமாக அதற்கேற்ப உங்கள் அக்காவை நடந்துகொள்ளச் சொல்வது மேல் என்று எனக்குத் தோன்றுகிறது!” என்றாள் அவள். “தப்புச் செய்யாதவருக்கு வரும் கோபம் மிக அதிகமாக இருக்கும் என்பதோடு, லேசில் அடங்காது!”

சில வினாடி, நிகிலன் ஒன்றுமே பேசவில்லை!

அறை வாங்கியவன் போல, அவன் முகத்தைப் பார்க்கையில், சுசிதாவுக்குப் பாவமாகத்தான் இருந்தது! அத்தான் நல்லவரே என்றானதும், அக்காவின் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நினைத்திருப்பான்! அப்படியில்லை எனும்போது, பாவம், அதிர்ச்சியாகத்தான் இருக்கும்!

அவளை வேதனையோடு நோக்கி, “உனக்கும் அப்படித்தான் இருந்ததா, சுசி? மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, இன்னும் அப்படித்தானா?”என்று வருத்தத்துடன் கேட்டான் அவன்.

இப்போது சுசிக்கும் அதிர்ச்சிதான்.

இவன் இப்படி எடுக்கக் கூடும் என்று அவள் எண்ணவில்லையே!

சும்மாவே, தமக்கை பற்றிக் கலங்கிக் கொண்டிருந்தவனுக்கு, அதிகப்படியாக இன்னொரு துன்பமா? அதுவும் அவளால்!

நிகிலனின் முகத்தில் இருந்த அறைவாங்கிய தோற்றம், தன்னை

எண்ணி வந்தது என்றால், அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!

அவளுக்கு நிகிலன் மேல், பெரும் கோபம் இருந்ததுதான்! அவன் பேரைக் கேட்டாலே, உடம்பெல்லாம் தீப்பிடித்தாற்போலான சீற்றம் அனுபவித்திருக்கிறாள்! ஆனால், இன்னும் அது, அப்படியே இருக்கிறதா என்று கேட்டால், அப்போதைக்கு அது, அவளுக்கே சரியாகத் தெரியாத விஷயம்!

ஆனால், அதை வெளிப்படையாக அவனிடம் சொல்லவும், அவளுக்கு மனமில்லை!

அவசரமாக யோசித்து, "என்ன அசட்டுப் பேச்சு இது? கொஞ்சமும் தேவையில்லாததும் கூட! இப்போது, முக்கியமான விஷயம், உங்கள் அக்காவின் எதிர்காலம்! அதை முடிவு செய்யக் கூடிய உங்கள் அத்தானின் மனநிலை! இந்த வயதில் பெரிய தொழில் நடத்தி, வெற்றி காண்கிறவர் என்கிறார்கள்! முதலில், உடனடியாகச் செய்ய வேண்டிய, நாளைய வேலையைப் பற்றி யோசியுங்கள், சார்!" என்று அவள் இலகுவாகப் பேசினாள்.

உடனடியாக எதுவும் பேசாமல், சற்று நேரம் நிகிலன் சும்மா இருந்தான்!

மனைவியின் பதிலில் அவனுக்குத் திருப்தி இல்லைதான்!

தேவையில்லாதது என்று சொன்னாளே தவிர, கோபமில்லை என்று சொல்லவில்லை! ஆனால், அதைப் பற்றி இப்போது பேசிப் பயனில்லை என்பதும் புரிந்தது!

அத்தோடு, அக்கா விஷயம்தானே, இப்போது முக்கியமும்!

ஒரு பெருமூச்சுடன், "நீ சொன்னதுதான் சரியாகத் தோன்றுகிறது, சுசி! அத்தானைப் பார்த்துப் பேசிய பிறகுதான் அக்காவிடம் போக வேண்டும்! நாளை மாலை, உன் அலுவலகம் முடிகிற நேரம், அங்கே வருகிறேன். இருவருமாகப் போய், அத்தானைப் பார்த்துவிட்டு வருவோம்!

வரவில்லை என்று சொல்லி விடாதே! இந்த மனசு சம்பந்தமான விஷயத்தில், எப்படி நடந்துகொள்வது என்று, இன்னமும் எனக்குச் சரியாகத் தெரியவில்லை!" என்றான் நிகிலன்.

மீண்டும் அவன் குரலில் சோர்வு தெரியவும், அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது!

எனவே மறுப்பின்றி, "வருகிறேன்." என்றாள். "ஆனால், உங்கள்

அத்தானை எங்கே, சந்தித்து, பேசுவது என்று, அவரோடு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்! “ என்றாள் அவள்.

தலையாட்டிவிட்டுச் சென்றான் அவன்.

மறுநாள், அவர்களைப் பார்க்க குணசீலன் மறுக்கவில்லை என்பதே, இருவருக்கும் பெரும் நிம்மதியாக இருந்தது!

ஒரு பெரிய ஹோட்டலில்தான், குணசீலன் இப்போது தங்கியிருந்தார்.

இவர்கள் சென்ற நேரத்துக்கு, அவரும், அன்றைய அலுவல்களை முடித்து திரும்பி வந்து, கைகால் கழுவி, லுங்கிக்கு மாறியிருந்தார்.

ஒழுங்கு முறைப்படி வரவேற்று, டீ, பிஸ்கட் கொடுத்து, விபுவைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் விசாரித்தார்.

பொதுவான ஒரு சில வார்த்தைகள்தான்.

அதற்குமேல், “அத்தான், நீங்கள் எங்களை மன்னிக்க வேண்டும். அக்காவையும், என்னையும்!” என்று நிகிலன் தொடங்கிவிட்டான்.

அவர் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, நடந்தது முழுவதையும், அவரிடம் படமாகப் படைத்தான். “அப்போதும் உங்களைத் தப்பாக நினைக்க முடியாமல், ரொம்பக் கஷ்டப்பட்டு, வேறு காரணம் தேடினோம், அத்தான்! ஆனால் ஒன்றும் கிடைக்காமல் போகவே . . .” என்றபோதுதான், குணசீலனின் சீற்றம் தெரிந்தது!

நிகிலனின் பேச்சில் குறுக்கிட்டு, “கிடைக்காமல் போனால்? உடனே குற்றவாளி என்று, கழித்து விடுவதா? அப்புறம், இந்தப் பதினைந்து ஆண்டுகள் உயிராய் வாழ்ந்ததற்கு என்ன அர்த்தம்? ஒன்று தெரிந்துகொள் நிக்கி, ரஞ்சி ஒருவனைக் கட்டிப்பிடித்து முத்தமே கொடுப்பதைப் பார்த்தாலும், யார், என்ன மாதிரி பிளாக்மெயில் பண்ணி, என் கண்மணியை இப்படிச் செய்ய வைத்திருக்கிறார்களோ என்று கவலையாக எண்ணுவேனே தவிர, அவளை ஒரு போதும் நான் சந்தேகப் படவே மாட்டேன்!” என்றார் அவர், கடுமையான குரலில்!

சொல்லிக்கொண்டே போனவர், சட்டென சுசியிடம் திரும்பி, “நீ என்னம்மா சொல்கிறாய்?” என்று கேட்டார்!

என்ன சொல்ல முடியும்? “உங்களைப் பாராட்டுவேன்!” என்றாள் அவள் சுருக்கமாக.

நிகிலன் திகைத்து நோக்க, குணசீலன் தொடர்ந்தார். “பாராட்டென்ன? கணவன் மனைவிக்குள் இருக்க வேண்டிய

நம்பிக்கை! ஆனால், என்ன பிரயோஜனம்? எத்தனை முறை, இது போன்ற நிரூபணங்கள் சாத்தியம்? என்றைக்குமே, எதைப் பார்த்து, கேட்டு, எப்போது சந்தேகப்பட்டு விடுவாளோ என்ற கவலையோடு அல்லவா, நான் வாழ்க்கை நடத்த நேரும்! அதைவிட, இப்படியே இருந்துவிடுவது, மேலானதாகாதா?" என்று கேட்டார் அவர்.

பதறிப்போய், "அத்தான், ப்ளீஸ்! பிள்ளைகள் உங்களுக்காக ரொம்ப ஏங்குகிறார்கள், அத்தான்! " என்றான் நிகிலன் கெஞ்சுதலாக!

அவனை ஒரு பார்வை பார்த்து, "பிள்ளைக்காகத் திருமணம் செய்த உன் கருத்து, இது! ஆனால், நேசத்துக்காக மணந்துகொண்ட எனக்கு அப்படித் தோன்றவில்லையேப்பா! எல்லோர் எதிர்ப்பையும் சமாளித்து எதற்காக மணந்துகொண்டோமோ, அந்த அடிப்படையே பொய்யாகி விட்ட பிறகு, எதற்காக இதைத் தொடர்வது?" என்று கேட்டார் குணசீலன்.

கலங்கிப் போய் மனைவியைப் பார்த்தான் நிகிலன்.

அவள் சொன்னது சரிதான்! தப்புச் செய்யாதவருக்கு வரும் கோபம், தாங்க முடியாததாகத்தான் இருக்கிறது!

தவிப்புடன், "அக்கா ரொம்பவும் கஷ்டப் படுகிறாள், அத்தான்! இந்த மூன்று மாதங்களில், அவள் வாடி வதங்கிப் போனாள். இதோ, இதோ என்று எந்நேரமும் கண்ணில் நீர்.
" என்றவனை இடைமறித்து, "தேவை என்ன?" என்று, கோபமாகவே கேட்டார் அவர். "தானாக இழுத்துக் கொள்கிறவர்கள் தவித்துத்தானே ஆக வேண்டும்? இதற்கு, நான் என்ன செய்ய முடியும்?" என்றார் இளக்கமற்று!

நிகிலனுக்கு ஒரே திகைப்பு! தன் காதுகளையே நம்ப முடியாத நிலை!

மனைவியின் சந்தோஷத்துக்காக, அவளது கண் பார்த்துச் செயல்படும் அத்தானா என்று அதிர்ந்து போனான் அவன்! இவ்வளவு இளக்கமற்றுப் பேசுகிறவரிடம், வேறு என்ன சொல்வது?

குணசீலனையே பார்த்துக் கொண்டிருந்த சுசிதா அப்போது பேசினாள். "அவ . . .அண்ணியின் அன்பு பொய்யாகி . .அதாவது, உங்கள் திருமணத்தின் அடிப்டையே பொய்யாகி விட்டதாகச் சொன்னீர்களே சார், அப்படியானால், உங்கள் நேசமும் பொய்தானா?" என்று கேட்டு, அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தாள்!

ஒரு கணம் அவளைக் கண் இடுக்கிப் பார்த்தவர், "ரஞ்சனி எப்படி நடந்தாலும், அவளது காலடியில் கிடந்து என் அன்பை நிரூபித்திருக்க

வேண்டும் என்கிறாயாக்கும்? ஆனால், அவளது அவநம்பிக்கை என் அன்பைக் கொன்றிராதா?" என்று குரலில் ஏளனம் தொனிக்க வினவினார்.

"அப்படி நடக்கவில்லையே! " என்றாள் அவள் அமைதியாக.

இரு ஆண்களும் அவளைப் பார்க்கவும், "அவ்வளவு எளிதில் சாகிற அன்பு, உண்மை அன்பாக இராது என்பதோடு, அப்படி உங்கள் அன்பு செத்திருந்தால், உங்களது இந்தக் கோபமும் அத்தோடு போயிருக்குமே! அடச்சீ என்று அலட்சியமும் தோன்றியிருக்கும்! அதே போல, இவர் அக்காவின் அன்பு பொய்யாகி விட்டிருந்தால், நிராசையும் வேதனையுமாக, அவர்களும் தவித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்! பல மலர் தாவும் வண்டு புத்தி என்று உதாசீனப்படுத்தி இருப்பார்கள்! கோபமும், கண்ணீருமாக ஆளுக்கொரு விதமாக நீங்கள் இருவரும் தவிப்பதன் காரணமே, அழியாத நேசத்தினால்தான்! " என்றாள் அவள்.

"பதினைந்து ஆண்டுகள் ஒன்றி வாழ்ந்துவிட்டு, என்ன என்று கூடக் கேளாமல் . . ."

"அண்ணி செய்தது தவறுதான்! ஆனால், என்னம்மா உளறல் என்று, நீங்களும் அதைக் கேட்டு சீர் செய்திருக்கலாம்தானே? ஆனால், நான் எந்தத் தவறையும் பற்றி, இப்போது பேசப் போவது இல்லை!" என்றவள் ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, தொடர்ந்தாள்.

"என்னைப் பற்றி உங்களுக்குச் சரியாகத் தெரியாது, சார்! தெரிய வாய்ப்பில்லை! ஒரு நாள் எனக்கு அம்மா, அப்பா இருந்தார்கள். பசிக்கு உணவளிக்க, நொய்க்கு மருந்து கொடுக்க, வருத்தப்பட்டால் ஆறுதல் சொல்ல . ." பேச்சு அரை வினாடி நிற்க, பார்வை நிகிலனிடம் ஒரு தரம் பாய்ந்து மீள, மீண்டும் தொடர்ந்தது. ". . சிரிப்பில் கலந்து கொள்ள . . .முகம் சுளித்தால் என்னவென்று பதற, இன்னும் எல்லாவற்றுக்கும் என் பெற்றோர் இருந்தார்கள்! ஆனால், மறுநாள் . . . உனக்கு ஒருவரும் இல்லை என்று, வெறும் துணி மூட்டைகளாகத்தான் கொண்டுவந்து போட்டார்கள்! . . அப்போது மட்டுமின்றி, அப்புறமும் நான் என்ன பாடு பட்டேன் தெரியுமா? பசிக்கும்., ஆனால், சாப்பிட ஒன்றும் இராது! அழுதழுது தலைவலி, காய்ச்சல்கூட வந்தது. மருந்து யார் தருவார்? அந்த வீட்டில், தனியாக இருந்து . . .கண் மூடப் பயந்து. . .வெறுமனே மிரட்டுவதற்காகச் சொல்லுகிறேன் என்று நினையாதீர்கள் சார், மனித உயிர்களில் யாருடையது, எப்போது, எப்படிப் போகும் என்று யார் சொல்ல முடியும்? இழந்து தவித்த அனுபவத்தில் சொல்கிறேன்., இருக்கிற நாளை . . ."

“போதும்மா!” என்றார் குணசீலன்.

அருகில் இருந்தவள் இன்னமும் எதற்காகவெல்லாம் தவித்திருக்கக் கூடும் என்று தெரிந்திருந்ததால், உறைந்து அமர்ந்திருந்த நிகிலனிடம் திரும்பி, “சவிதா விஷயம் நீ கண்டுபிடித்தது பற்றி, ரஞ்சிக்குத் தெரியுமா?” என்று வினவினார்!

பேச முடியாமல், இல்லை என்பது போலத் தலையை மட்டும் அசைத்தான் அவன்.

“அது சரி., சொல்லியிருந்தால்தான், உனக்கு முன்னே, அவள் இங்கே வந்திருப்பாளே! போய்ச் சொல்லிவிட்டு, அவள் கூடவே இரு! நான், இங்கே காலி பண்ணிக்கொண்டு வருகிறேன்! பிள்ளைகள் முன்பு எதையும் காட்டிக்கொள்ள வேண்டாம் என்றும் சொல்லு!” என்றார் குணசீலன்.

அத்தியாயம் -27

ரஞ்சனிக்கு விவரம் சொன்னதோடு அல்லாமல், குணசீலன் வீடு வந்து சேர்ந்த பிறகும், சற்று நேரம் இங்கே இருந்துவிட்டே, நிகிலனும் சுசிதாவும் வீட்டுக்குக் கிளம்பி வந்தார்கள்.

அதற்குள், "குணாவைப் போய்த் தப்பாக நினைத்துவிட்டேனே., என்னை என்ன செய்தால் தகும்?" என்று ரஞ்சனி தன்னை வருத்திக் கொள்ள முனைந்தபோதுதான், குணசீலன் எதற்காகஅவர் வரும்வரை, தங்களை அங்கே இருக்குப்படிக் கூறினார் என்று சுசிதாவுக்குப் புரிந்தது!

மனைவியைப் புரிந்து வைத்திருக்கிற மனிதர்!

ஆனால், "பிள்ளைகள் முன்பு எதையும் காட்டிக்கொள்ள வேண்டாம்" என்று மனைவியிடம் சொல்லச் சொன்னவர், தானே கண் கலங்கவும், அதற்கு மேல் அந்த வீட்டில் தாங்கள் அதிகப்படி என்ற எண்ணம் சுசிக்கு உண்டாயிற்று!

அவளைப் போலவே நினைத்தவனாக, தீபு, தினுவிடம், "வெளியூர் வேலைகளை முடித்துக்கொண்டு, அப்பா சீக்கிரமாக வந்துவிடுவார் என்று சொன்னேன் அல்லவா? இதோ வந்துவிட்டார்! இனிமேல், அப்பாவிடம் சொல்ல வேண்டிய கதைகளை எல்லாம் சொல்லுங்கள். அத்தையும் நானும் கிளம்புகிறோம்! " என்று நிகிலன் உரைக்க, அதன்பின் இருவருமாக விடைபெற்றுக் கிளம்பினர்!

வீட்டை அடைந்ததும், மாமியாரிடமிருந்து விபுவை வாங்கிக்கொண்ட சுசிதா, கணவனிடம் தலையசைத்துவிட்டு மாடிக்குச் சென்றாள்.

"என்னடா, என்ன புது விஷயம்? சுசி என்ன சொல்லச் சொல்லுகிறாள்?" என்று சிறு பதட்டத்துடன் மீனலோசனி விசாரித்தாள்.

"எல்லாம் நல்ல விஷயம்தான், அம்மா!" என்றுஹமுறுவலித்தான், மகன். "நம் ரஞ்சி விஷயம்! இனி அவளுக்குப் பிரச்சினையில்லை! அத்தான் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டார்! " என்று தொடங்கி, நடந்தது அனைத்தையும் பெற்றோரிடம் தெரிவித்தான்.

"அடியம்மா! உப்புப் பெறாத விஷயம்! சம்பந்தமே இல்லாதது! இதற்குப் போய், என் மகள் என்ன பாடு பட்டுவிட்டாள்!" என்று அங்கலாய்த்தாள் பெற்றவள்!

"நிக்கியின் பிராயச்சித்த விவகாரத்தில், ரஞ்சிதான்

அனாவசியமாகக் கஷ்டப்பட்டு இருப்பதாக, அன்றைக்குச் சொன்னாயே! பார்க்கப் போனால், நம் பெண்ணரசியின் பிரச்சினை தீர்வதற்காகவே, இவன் பிராயச்சித்தம் என்று போய், சுசியைத் தேடிப் பிடித்துக் கூட்டி வந்தது போல, இப்போது தெரியவில்லை? "என்று சுந்தரம் ஒரு போடு போட்டார்.

"ஐயோ, ஆமாம்ப்பா!" என்று அதிசயப்பட்டாள் மீனலோசனி!

"மொத்தத்தில் எல்லோருக்குமே லாபம்! நிகில் பிராயச்சித்தம் என்று போனதில், அவனுக்கு ஒரு குடும்பம் கிடைத்தது! கணவன் மனைவி உறவு பற்றி, ரஞ்சிக்கு ஒரு பாடம் கிடைத்தது!"

"ஐயோ! இதுவும் நிஜம்ப்பா! அதிலும், இவனுக்குக் கெட்டிக்கார மனைவி வேறு கிடைத்திருக்கிறாள்! பாருங்கள், நாம் இத்தனை பேர், எத்தனை விதமாகவோ யோசித்தோமே, யாருக்காவது, தெரிந்ததா? அவள்தானே கண்டுபிடித்திருக்கிறாள்! " என்று மருமகளை மெச்சிக் கொண்டவளின் முகம் உடனேயே லேசாக வாடியது!

இந்தக் கெட்டிக்காரத்தனத்தை, அவள் தன் சொந்த வாழ்வைச் சீர்ப்படுத்துவதிலும் காட்டலாமே! இந்தப் பையனோடு, அவளும் நல்லபடியாக வாழலாம்!

அதுதான் போகிறது என்று பார்த்தால், அவளோடு சேர்ந்து, இப்போது பையனும் அல்லவா அரைப்பட்டினி, கால்ப் பட்டினி கிடக்கிறான்!

இது எப்போது சரியாகுமோ?

என்றேனும் சரியாகுமா?

அந்தக் கவலையை ஒரு புறம் ஒதுக்கி, மீனலோசனி, மருமகளிடமும், தடையின்றித் தன் மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்தாள்.

மறுநாள் மாமியாரும் மருமகளுமாக, விபுவைப் பள்ளிக்குக் கிளப்பிக் கொண்டிருந்தனர்.

சுசிதா மகனுக்கு சாக்ஸ் போட்டு, ஷூ மாட்டி விட்டுக் கொண்டிருக்க, மீனலோசனி அவனுக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டிருந்தாள்!

"பள்ளிக்குப் போவதில், விபு அதிகம் தொல்லை பண்ணாதது, எனக்கு இன்னமும் ஆச்சரியம்தான்! ஆனால், சீக்கிரமாகப் பள்ளிக்குக் கிளம்புவதில், சரியாகச் சாப்பிட மாட்டேன் என்கிறானே!" என்று

வருத்தப்பட்டவள், “இன்னும் மூன்றே மூன்று ஸ்பூன் சாப்பிடு, கண்ணா! ஒன், டூ த்ரீதான்!” என்று பேரனைக் கொஞ்சிக் கெஞ்சி ஊட்டினாள்.

அதே சமயம் வந்து உட்கார்ந்து, தட்டில் மூன்றே மூன்று இட்டிலிகளைப் பேருக்குக் கொஞ்சம் சட்டினியை ஊற்றி எடுத்துக்கொண்டு, அமர்ந்து உண்ட மகனைப் பார்க்கையில், அவளுக்கு ஆத்திரம் வந்தது!

“இதோ, இவனாவது சின்னப் பிள்ளை! நல்லது, தேவை தெரியாது! நீயும் இப்படிச் சாப்பிட்டால், எப்படிடா?” என்று பெற்றவள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, வேகமாக இட்டிலியை விழுங்கிவிட்டு, நிகிலன் கிளம்பிவிட்டான்.

“இன்றைக்குச் சீக்கிரமாகப் போக வேண்டியிருக்கிறதும்மா! எல்லோருக்கும் பை! பை கண்ணா!” என்று மகன் கன்னத்தை ஒரு தரம் தட்டிவிட்டு, வேகமாகச் சென்றுவிட்டான் !

டிரைவர் நாகு வந்து, விபுவை அழைத்துச் சென்றான்.

“சே! சாம்பார், கொத்து மல்லிச் சட்னி, அது போக பூரிக் கிழங்கு எல்லாம் யாருக்குச் செய்து வைத்திருப்பதாக நினைத்தான்? பத்திய உணவுக்கார நாங்கள் கொட்டிக் கொள்வதற்கா? “ என்று கோபத்துடன் பொருமிய மாமியாரைப் பரிதாபமும், யோசனையுமாகப் பார்த்தாள் சுசிதா.

பிறகு, “இன்னும் ஒரு நாள், இதே போலப் புலம் . . .பேசுங்கள், அத்தை! அப்புறம் உங்கள் பிள்ளையைச் சாப்பிட வைத்து விடலாம்!” என்றாள் அவள்.

“அது எப்படி?” என்று புரியாமல் கேட்டாள் பெரியவள்!

“எல்லாம் நடக்கும், பாருங்களேன்! நானும் வரட்டுமா?” என்றவளிடம் தலையாட்டிவிட்டு, உடனே நினைவு வந்தவளாக, “இரு, இரு. இந்தச் சத்துமாக் கஞ்சியைக் குடிக்காமல் கிளம்புகிறாயே! முதலில், அதை முடி!” என்று அதை எடுத்து, மருமகள் கையில் கொடுத்தாள்.

பால் போல ஏதாவது குடிப்பதாக விட்டுக் கொடுத்ததில் இருந்து, அதிலேயே முடிந்த அளவு சத்தை மருமகளுக்கு ஏற்றிவிட, மாமியார் முனைந்திருப்பதை, சுசியும் அறிந்தே இருந்தாள்.

ஒரு புறம் தன் கொள்கை நீர்த்துப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்தாலும், ஒரு தாயின் கனிவும் அக்கறையும், அவளுக்குமே இதமான தேவையாகவும் இருந்தது!

புன்னகையோடு, “நாளைக்கு மறந்து விடாதீர்கள், அத்தை!” என்று நினைவுறுத்திவிட்டுக் கிளம்பிச் சென்றாள் அவள்.

மருமகளிடம் மதிப்பு பயங்கரமாக ஏறியிருக்க, அவள் கூறியபடியே, மகன் வியஞ்சனங்களை ஒதுக்கிவிட்டுப் பேருக்குச் சாப்பிடத் தொடங்குகையில், சுசியை ஒரு தரம் பார்த்துவிட்டு, மீனலோசனி மகனின் தற்போதைய உணவு முறை பற்றிக் குறைப்படத் தொடங்கினாள்.

அதற்குள் விபு பள்ளிக்குத் தயாராகி விடவே, “இவனை நாகுவிடம் விட்டு விடுகிறீர்களா, அத்தை?” என்று மீனலோசனியோடு அனுப்பிவிட்டு, சுசிதா கணவனிடம் திரும்பினாள்.

அவனது தட்டில் ஒரு சப்பாத்தியை வைத்துக் குருமாவை ஊற்றியபடி, “எனக்கு வேண்டியதைக் கேட்கச் சொன்னீர்களே, இதுதான் எனக்கு வேண்டியது! அத்தையின் நிம்மதி! பாவம், பிள்ளை உணவைக் குறைக்கிறானே என்று ரொம்பவும் வருத்தப்படுகிறார்கள்! இது, கைகேயிக்குக் கொடுத்த வரம்! மீற முடியாது! அதனால், இனிமேல் பழைய வழக்கம்போலவே சாப்பிட்டாக வேண்டும்!” என்று சிரித்தாள்.

“நீ மட்டும் . . .” என்று தொடங்கியவனிடம், சுட்டு விரலால் எச்சரிக்கை செய்து, “இப்படி மாட்டிக் கொள்ளக் கூடாது என்றுதான், நான் யாருக்கும் வாக்குக் கொடுப்பதே இல்லை! அதனால், என்னை மடக்கவே முடியாது, நிகிலன் சார்!” என்று இலகுவாகவே மொழிந்துவிட்டு, அவளுக்காக மீனலோசனி வைத்திருந்த சத்துமாவுக் கஞ்சியை எடுத்தாள் சுசிதா.

உணவு பற்றிய பேச்சை விடுத்து, “இன்று அந்தப் பக்கம்தான் போகிறேன். உன்னை அலுவலகத்தில் விட்டுவிட்டுப் போகட்டுமா?” என்று கேட்டான் நிகிலன்.

இப்போதெல்லாம், கணவன் அடிக்கடி இப்படிக் கேட்கிறான் என்று எண்ணியவாறு, “அரசாங்கம் அவ்வளவு பெரிய காரை எனக்காக அனுப்பும்போது, உங்கள் சின்ன வாகனத்தில் என்னை அடைக்கப் பார்க்கிறீர்களே! மூச்சு முட்டாது? வேண்டாம்ப்பா, வேண்டவே வேண்டாம்!” என்று கேலியாகவே பதிலிறுத்தாள் மனைவி.

அவளிடம் வற்புறுத்திப் பயனிராது என்று தெரியும்தான். என்றாலும், “அந்தப் பக்கம் வேலை என்பதால் கேட்டேன். அப்போதும், பஸ்சுக்குப் பணம் கொடுத்தே ஆக வேண்டும் என்று என்ன கட்டாயமோ? போக்குவரத்துத் துறை நஷ்டத்தில் முழுகிவிடுமா?” என்று, அவனும் வேடிக்கை போலவே கேட்டான்.

வேடிக்கையின் பொருளும், காரில் வா என்பதுதானே?

இந்த அழைப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பியவளாக, “எண்ணிப் பாருங்கள், நிக்கி. அங்கே, என்னை விட முக்கியமான, பெரிய வேலை செய்கிறவர்கள் எல்லாம், பஸ்சிலும், இரு சக்கர வாகனங்களிலும் வரும்போது, நான் மட்டும் உங்கள் பெரிய காரில் போய் இறங்கினால், பார்ப்பதற்கு எப்படி இருக்கும்? அதனால், ப்ளீஸ், வேண்டாம்.” என்றாள் முடிவாக.

இதிலும், மேலே ஒன்றும் சொல்வதற்கு இல்லை!

அவள் கஞ்சியை முடித்துவிட்டு எழவும், அவசரமாக, “எப்போதும் எச்சரிக்கையொடுதானே இருக்கிறாய்?” என்று கேட்டான் அவன்.

கணவனின் அக்கறையும் சந்தோஷமாகவே இருக்க, “காட் ப்ராமிஸ்!” என்று தலைக்கு மேல் கைவைத்துச் சொன்னாள் அவள். “குறைந்த பட்சமாக, யாரும் சைக்கிளில் வந்து மோதிவிடாத அளவுக்கு எச்சரிக்கைதான்! இங்கே கண் பார்க்கும் தூரத்தில் பஸ் நிறுத்தம். வேண்டாம் என்றாலும் கேளாமல், பஸ் ஏறும்வரை, நம் வாட்ச்மேன் கூட வந்து நிற்கிறான்! அங்கே, பஸ்சிலிருந்து இறங்கி, நேராக அலுவலகத்தினுள் செல்ல வேண்டியதுதான்! அலுவலக வாசலிலும் காவலாள்! மெய்க் காவலர்கள் புடைசூழப் பத்திரமாக இருப்பதில், பழைய ராஜாக்கள் கெட்டார்கள்!” என்று சிரித்தபடியே சொல்லிக் கிளம்பினாள்.

மருமகளின் முகத்தில் புன்னகையைப் பார்த்து, முறுவலித்தபடி உள்ளே வந்த மீனலோசனிக்கு, மகன் சாப்பிடுவதைப் பார்த்ததும் உச்சி குளிர்ந்து போயிற்று! முக்கியமாக வயிறு! மருமகள் சாதித்துவிட்டாளே!

மீனலோசனிக்கு இன்னோரு சந்தோஷமாக, அன்று ரஞ்சனி கணவரோடு வந்துவிட்டுப் போனாள்.

குணசீலனைப் பார்த்ததும், குற்ற உணர்ச்சியில், மீனலோசனி மருமகனிடம் மன்னிப்புக் கேட்டாள். “உங்களைத் தப்பாக நினைத்திருக்கக் கூடாது, மாப்பிள்ளை! ஆனால், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் . . .” என்று அவள் இழுக்க, “புரிகிறது, அத்தை! ரஞ்சி சொன்னாள். எல்லாம் முடிந்து போனது. மறந்துவிடுங்கள்!” என்ற மருமகனின் பெருந்தன்மையில், மாமியாருக்குக் கண் கலங்கியது!

மகள் முகத்தில் பழைய புன்னகையைப் பார்த்ததும் அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது!

இழந்த சொர்க்கத்தை மீட்டுத் தந்ததற்காகத் தம்பி குடும்பத்துக்கு

விருந்து வைக்கப் போவதாகவும், பெற்றோரும் சேர்ந்து வரவேண்டும் என்றும் ரஞ்சனி அழைத்தாள்.

“ஓ!” என்று சந்தோஷமாகக் கூறியவள், உடனே முகம் வாடி, “சுசி சாப்பிடுவாளோ, என்னவோ, தெரியவில்லையேம்மா!” என்று கவலைப்பட்டாள்.

“அதெல்லாம் சாப்பிடுவாள், அம்மா! நிக்கி பணத்தில் சாப்பிடத்தானே மறுப்பு? எங்கள் வீட்டில் உண்பதற்கென்ன? அத்தோடு, சுசியை அவள் வார்த்தைகளைக் கொண்டே மடக்குவதற்கு, இவர் ஒரு “சூப்பர்” திட்டம் போட்டு வைத்திருக்கிறார். அதனால், சீக்கிரமே, தம்பி, சுசி வாழ்விலும் எல்லாம் சரியாகிவிடும்!” ரஞ்சனி நம்பிக்கையும் பெருமையுமாகக் கூறவே, தாயின் முகமும் மலர்ந்தது!

விருந்து திட்டத்தில் யாருக்கும் மறுப்பு இல்லாததால், அந்த ஞாயிறன்றே, எல்லோரும் அங்கே சென்றனர்.

அத்தை மக்களுடன் சேர்ந்து, விபு கும்மாளம் போட்டான்!

ரஞ்சனியின் முகத்தில் இருந்த புது சோபை, சுசிதாவுக்கு ஆச்சரியத்தை அளித்தது!

“துக்கப்படத் தகாத அரசகுமாரி”யை விட்டுத் துக்கம் விலகிப் போய்விட்டது, நன்றாகத் தெரிந்தது!

வீட்டின் குதூகலத்தின் காரணம் சுசியே என்று அறியாத சிறியவர்கள் தவிர எல்லோரும் வெளிப்படையாகப் பேச, சுசிக்குக் கூச்சமாகிப் போயிற்று!

குணசீலன் வேறு விதமாக நன்றியை வெளிப்படுத்தினார்.

“அன்றைக்கு, உன் பெற்றோரோடு யாரும் இல்லாமல் போனதாகச் சொன்னாயம்மா! இந்த வீட்டை, இனி நீ உன் பிறந்த வீடாக எண்ணிக் கொள்ள வேண்டும்! இனி நடக்கக் கூடிய ஒவ்வொரு விசேஷத்துக்கும், உன் பிறந்த வீட்டுச் சீர் இங்கிருந்து வரும். முதல் சீராக, உன் அண்ணி வாங்கி வைத்திருக்கும் இந்தச் சேலையை ஏற்றுக்கொள்!” என்றார் அவர்!

விலை உயர்ந்த பட்டுச் சேலைதான்! ஆனால், ரஞ்சனி தந்ததை, சுசிதா மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். இது ஒன்றும் நிகிலனின் பணத்தில் வாங்கியது அல்லவே!

உணர்ச்சிகரமான சூழ்நிலையை மாற்றும் முயற்சியாக, குணசீலன் இன்னும் சொன்னார். “பிறந்த வீடாகக் கருதுகிற விஷயம் எளிதாக

ஏற்கப்பட்டுவிட்டது. இனி அது தொடர்பாக எழுக் கூடிய மற்ற பிரச்சினைகளைப் பார்ப்போம்! முதலில், இது அப்பா வீடா? அண்ணன் வீடா? கிட்டத்தட்ட உன் அப்பாவின் வயது எனக்கு இருக்கக் கூடும் என்றாலும், உன் அண்ணியின் வயதுக்கும், தோற்றத்துக்கும், அவளை அம்மா ஆக்க முடியாது! ஆனால் என்னை அண்ணன் என்று அழைப்பதிலும் . . .” என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது, நிகிலன் குறுக்கிட்டான்.

“ஒரு பிரச்சினையும் இராது! நீண்ட இடைவெளிக்குப் பிறகு பிறந்த தங்கை என்று வைத்துக் கொள்ளலாம்! “ என்றான் அவன்!

“தாராளமாக! ஆனால், மைத்துனன் மாப்பிள்ளை உபசாரத்துக்கு ஆசைப்பட்டுச் சொல்லுகிறானோ என்று ஒரு சின்ன சந்தேகம்! இருந்தாலும் பரவாயில்லை. அதையும் செய்துவிடலாம்! ஆனால், ஒன்று, எங்கள் வீட்டுப் பெண்ணை நன்றாக வைத்துக் கொண்டால் சரி! இல்லையென்றால், மவனே, உன் பாடு டமால், டுமீல்தான். மன்சிலே வச்சுக்க, ஆ . . ம்மா!” என்று குணசீலன் மெட்ராஸ் ரௌடியாக மிரட்டவும் எல்லோரும் நகைத்தனர்!

ஒரு கட்டத்தில், “எடுத்த விஷயத்தை, மறுக்க முடியாமல், பிரமாதமாகப் பேசுகிறாயே சுசி, சட்டம் படித்தாயோ?” என்று குணசீலன் கேட்டார்.

எதைக் குறிப்பிடுகிறார் என்று புரிந்து, “பட்டறிவு என்பது சட்ட அறிவை விடச் சிறந்ததாக்கும்! அதை அடிக்க ஒன்றுமே கிடையாது!” என்று சுசிதா பதில் தர, அவர் கையாலேயே வாயைப் பொத்திக்கொள்ள, எல்லோரும் மீண்டும் சிரித்தனர்!

கேலியும் சிரிப்புமாகப் பொதுவான பேச்சு இலகுவாகவே நகர்ந்தது!

கிளம்புகிற நேரம் வரை!

அத்தியாயம் -28

ரஞ்சனியும் குணசீலனும் ஒத்த மனத்து தம்பதியாக விருந்துபசாரம் செய்தது, மிகவும் சிறப்பாக இருந்தது! புன்னகையும், கண் குறிப்புமாக அவர்கள் செயல்பட்ட விதம், அக்காவும் அத்தானும் ஒரே மனமாக எப்படி இருப்பார்கள் தெரியுமா என்று நிகிலன் சொன்னதைப் புரியவைப்பதாகவும் இருந்தது!

அவ்வப்போது, இருவரும் அருகருகே நெருங்கி நிற்பதைப் பார்க்கும்போது, அவர்களுக்கு இடையே இருந்த பதினைந்து ஆண்டு வித்தியாசம் கண்ணிலோ, கருத்திலோ படவே இல்லை!

நல்லவெளை! இந்த ஜோடி பிரிந்து போய்விடாமல், மீண்டும் இணைந்தது என்ற நிம்மதியோடு நினைக்கும்போதே, உள்ளூர ஒரு தவிப்பையும் சுசிதா உணர்ந்தாள்!

அவளுக்கு ஒருநாளும் இல்லாது போனவற்றுள் இதுவும் ஒன்றல்லவா?

அந்தத் தவிப்பை அதிகரிக்கும் படியாக, விருந்து முடிந்து கிளம்பும்போது, பெரியவர்கள் பிள்ளைகளோடு முன்னே செல்ல, சுசிதாவையும் நிகிலனையும் நிறுத்தி, "மனித உயிர் பற்றி, அன்று அவ்வளவு சொன்னாயம்மா! மற்ற எதையும்விட, அதுதான் என்னை உடனே திரும்பி வர வைத்தது! ஆனால், உயிர் எல்லோருக்கும் பொதுதானே? நீ புத்திசாலி! யோசித்து, நல்லபடியாக வாழ வேண்டும்!" என்று குணசீலன் அறிவுரை கூற, தம்பி மனைவியின் கரங்களைப் பற்றி, "என் உயிரை எனக்குத் திருப்பித் தந்தவள் நீ! நீயும் என்னைப் போல சந்தோஷமாக இருந்தால்தான், எனக்கு முழு நிம்மதி! செய்ய வேண்டும்! என்ன?" என்று, உரிமையும் கெஞ்சலுமாகக் கேட்டாள் ரஞ்சனி.

இருவருமாக ஆசைப்பட்டு, முறைப்படி மணந்து குடும்பம் நடத்துகிறவர்கள்! இடையிலே ஒரு சிறு கசப்பு நேர்ந்தாலும், அது மாறி, பழைய இனிமையில் இணைவது, சாத்தியமே.

இனிப்பையே அறியாத, கொடும் கைப்பு, எப்படி மாற முடியும்?

கசப்பும் கைப்பும் பழகிவிட்டதால், சுசிதா அவற்றைப் பொருட்படுத்தாமல் சாதாரணமாக இருக்கிறாள்! இயற்கையான இயல்பில் சிரித்துப் பேசிக்கொண்டு! அவ்வளவே!

அதற்காக, என்னவோ, அவள் அனுபவித்தது கடுகளவு துயரமே போல, அதை மறந்து மகிழ்ச்சியோடு இருக்கச் சொல்வதா?

ஆனால் ஒன்று! தம்பிக்கு மனைவியாகி விட்டவள், முன்னர் அனுபவித்த வேதனை தெரியாதவள் என்பதால், தம்பி மனைவியும் சந்தோஷமாக இருக்கட்டும் என்று நல்ல எண்ணத்தில் சொல்லுகிறாள்!

இவளைத் தப்பு சொல்ல முடியாது என்பதோடு, சட்டென மறுத்துப் பேசுவதே முகத்தில் அடித்தாற்போல இருக்கும்!

அப்படித் தோன்றாமல் மறுப்பது எப்படி?

ஆனால், அந்த மறுப்புக்கு அவசியமின்றி, நிகிலன் குறுக்கிட்டுப் பேசினான். தமக்கையின் காதைப் பற்றி, லேசாகத் திருகி, "மூன்று நாட்களுக்கு முன்பு வரை, "ஞைஞை" என்று மூக்கால் முகாரி ராகம் பாடிவிட்டு, அத்தானைக் கண்டதும், அடுத்தவருக்குப் புத்திமதியா? முதலில், உங்கள் வீட்டை ஒழுங்காகப் பாருங்கள், மேடம்! மணி என்ன ஆகிறது என்று கவனித்தாயா? தினு, தீபு நாளைக்குப் பள்ளிகூடம் செல்ல வேண்டும்! அப்பாவுக்கும் தூங்குகிற நேரம் நெருங்கிவிட்டது! அம்மா, அப்பாவைக் காத்திருக்க வைத்துவிட்டு, இங்கே வாயடித்துக் கொண்டு நிற்பதா? கூடாது, தாயே, கூடாது! அதனால், நாங்கள் கிளம்புகிறோம். வரட்டுமா? வருகிறோம், அத்தான். வா சுசி, வா சீக்கிரம்!" என்று யாரும் குறுக்கிட இடம் கொடாமல் மடமடவென்று பேசியவன், வாயிலை நோக்கி நடக்கவே தொடங்கிவிட்டான்!

ஒரு தலையசைப்புடன் அவளுக்கும், அவனைப் பின்தொடர முடிந்தது!

சுசிக்கு உதவிதான்! ஆனால், விசித்திரமான விதமாக, இந்த உதவியும், அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது!

இவன் இப்படிக் குறுக்கே வந்து விழுவதற்கு, அவள் என்ன பதில் சொல்லத் தெரியாத முட்டாளா? நோகாமல் பதில் தருவது பற்றி, யோசித்துக் கொண்டிருந்தாள். அவ்வளவுதானே? அதற்குள், ஆபத்பாந்தவன், அனாதரட்சகனைப் போல, இவனை யார் பேசச் சொன்னது . . .

மனதிற்குள் பொருமிக்கொண்டே இருந்ததால், யாருடனும் பேச மனமின்றி, திரும்பி வருகையில், அசதியாக இருப்பது போலக் கண்களை மூடிக்கொண்டு, மௌனமாகவே இருந்தாள் சுசிதா!

அத்தை மக்களுடன் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில், பாட்டியின் மடியில் விபுவும் தூங்கிவிட்டிருந்தான்.

வீட்டுக்கு வந்ததுமே, "நான் தூங்கப் போகிறேன், அத்தை!" என்று பிள்ளைக்காக சுசிதா கையை நீட்டினாள்.

"அசந்து தெரிகிறாய். அக்கா தந்த சேலைப் பெட்டியை நீ எடுத்துப்போ. விபுவை நான் தூக்கி வருகிறேன்." என்று காரை நிறுத்திவிட்டு, தாயிடம் மகனை வாங்கிக்கொண்டு சென்றான் நிகிலன்.

"உடம்பு கழுவாமலே தூங்கிவிட்டான் . . ." என்று முணுமுணுத்தபடி, விபுவின் தொட்டில்கட்டிலில் விரிப்பு தலையணையைச் சரியாக வைத்தாள் சுசிதா.

"ஒரு நாளில் ஒன்றும் ஆகாது! அத்தோடு, பார்த்துப் பார்த்துத்

துடைத்து அக்காவும் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பாள்!" என்றபடி, மகனைத் தொட்டிலில் கிடத்தினான் நிகிலன்.

பிள்ளை காலில் ஷூ இருப்பதைப் பார்த்ததும், அதைக் கழற்ற இயல்பாகக் குனிந்தான் அவன்.

அதே எண்ணத்துடன் சுசிதாவும் கைகளை நீட்ட, இருவரும் இடித்துக் கொண்டனர்.

"சாரி!" என்று சிரித்தவாறே நிகிலன் நிமிர, அவள் வெடித்தாள்!

"வேண்டும் என்றே இடித்துவிட்டு, என்ன "சாரி" ?"

"சுசி?!" என்றான் அவன் திகைப்புடன்.

"அக்கா வீட்டுக்குப் போக ஆசைப்பட்டது ஏன் என்று இப்போது புரிகிறது! இப்படி ஏதாவது புத்திமதி வரும்! கடைப் பிடிக்க வேண்டாமா என்று சாக்கு சொல்வதற்காகத்தானே? ஆனால், இதிலெல்லாம் மயங்குவதற்கு நான் முட்டாள் அல்ல!" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

தலையசைத்து, "அவர்கள் ஆசை அது! ஆனால், நான் எதையும் கோரவில்லையே! நீயும், விபுவும் இங்கே இருப்பதே எனக்குப் போதுமானது! தயவு செய்து புரிந்துகொள், சுசி!" என்றான் நிகிலன் அமைதியாகவே.

அப்போதிருந்த மனநிலையில், சுசிதாவுக்கு, இதுவும் குற்றமாகவே தோன்றியது! தேடித் தேடி, இதிலும் குற்றம் கண்டுபிடித்தாள் எனலாம்!

எனவே சீற்றத்துடன் கணவனை நோக்கி, "ஆமாமாம்! மறந்து போய்ச் சொல்லிவிட்டேன்! உங்களுக்குப் புதிய பதினெட்டு வயசு இளசுகளிடம்தானே மயக்கம்! இருபதுக்கும் மேலாகி, பிள்ளையும் பெற்று விட்டவளை எப்படிப் பிடிக்கும்?" என்றாள் எகத்தாளமாக!

எப்படியாவது அவனையும் நோகடிப்பதே குறிக்கோளாக, வாயில் வந்ததைச் சொல்லித் தீர்த்தாள் அவள்.

ஆனால், வாயை விட்டு வார்த்தைகள் வெளி வந்ததுமே, என்ன பேச்சு பேசினோம் என்று திகைத்துவிட்டாள். "என்னைப் பிடிக்கவில்லையா" என்று கெஞ்சுகிற மாதிரியல்லவா தோன்றும்!

அதற்கேற்ப, "பிடிக்காமல் போவானேன்?" என்று நிகிலன் வேறு சட்டென அவளது கையைப் பற்றவும், அப்படியே குன்றிப்போய், "சா. . சாரி! ஏஏதோ எரிச்சலில், தப்பாக உஉளறி விட்டேன்." என்று இறங்கிவிட்ட குரலில் தவிப்புடன் உரைத்தாள்!

"இப்போது, நீ சீண்டிவிட்டு, "சாரி" சொல்வதாகக் கூறலாமா?"

அவள் கலக்கத்துடன் நோக்கவும், பற்றிய கையை விட்டுவிட்டு, அவன் சொன்னான். “பார் சுசி, அவரவர், அவரவர் ஆசைக்கு ஏதேதோ சொல்வார்கள்தான்! ஆனால், நம் உறவை, நாம் இருவர் மட்டும்தான் முடிவு செய்ய வேண்டும்! என்னை மணப்பதற்கு நீ சில நிபந்தனைகள் விதித்தாய். முக்கியமானது, நம் இருவரின் உறவைப் பற்றியது! அதை நான் இதுவரை மீறியது இல்லை! மீறப் போவதும் இல்லை! ஆனால், நான் ஆசையே இல்லாதவன் அல்ல! ஊர், உலகம் போல அழகான மனைவியோடு குடும்பம் நடத்த எனக்கும் ஆசைதான்! அதற்கு வாய்ப்பில்லை என்றாலும், என்னை அடக்கிக்கொள்ள என்னால் முடியும்! ஆனால் தயவு பண்ணி, இதில் என்னைச் சீண்டாதே! இரண்டாவது நிலையே என்றாலும், மனைவி, மகனாக நீயும் விபுவும் இந்த

வீட்டில் என்னோடு இருப்பதே, எனக்குப் போதுமானது! என்னுடைய இன்னொரு தவறால், நான் அதை இழக்க மாட்டேன்! அதனால், என் காரணமாக , உனக்கும் சஞ்சலமோ, பயமோ தேவையில்லை! நிம்மதியாகத் தூங்கு. குட்நைட்!” என்றவன், அதற்குமேல் நில்லாமல், அறையை விட்டு வெறியேறிவிட்டான்.

கண்டபடி உளறியதற்காக, அவள் குன்றிக் கூசிவிடக் கூடாது என்று இவ்வளவும் சொன்னானா? இந்த நினைப்பும் கூசத்தானே செய்கிறது?

நிகிலன் சென்ற வழியையே பார்த்தபடி, சுசி சற்று நேரம் அசையாமல் நின்றாள்.

ஆனால் மனதில் ஏதோ தோன்றியது!

உன் அறையில் சத்தம் அடங்கி, நீ தூங்கப் போகிற நேரம் தெரியும் என்று ஒரு தரம் நிகிலன் சொன்னானே!

அவசரமாகத் தரையில் தனக்கு விரித்துவிட்டு, விளக்கையும் அணைத்துவிட்டு, அசையாமல் நின்று கவனித்தாள்.

இடைச் சுவரின் கனத்தையும் தாண்டி, நிகிலன் தரையில் விரிப்பது, படுப்பதை லேசாக உணர முடிந்தது! அதற்காகக் கவனித்தால்!

அவள் தூங்கப் போகிற நேரம் தெரியும் என்றால், தினமும் அதைக் கவனித்துக்கொண்டு, இருந்தானா? ஏன்? அன்பு, அக்கறை இருக்கத்தான் செய்கிறது!

என்னவோ? ஆறுதலாக இருந்தாலும், அவளுக்கு அழுகையும் வந்தது!

சத்தமின்றிப் படுத்தவள், கண்ணீருடனேயே உறங்கிப் போனாள்!

அடுத்த நாள், இன்னொரு நாளாகப் பொலிவுடன் மலர்ந்தது!

விபு விழிக்கும்போதே, “அண்ணா, அக்கா” என்று தீபு, தினுவைப் பற்றிய நினைவுகளுடன் விழித்து, அவர்களைப் பற்றியே பேசவும், வீட்டுப் பெரியவர்களுக்கு சந்தோஷமாகி, பெரிய பேரன் பேத்தியின் சிறு பிராயத்து விளையாட்டுகள் பற்றிக் கூற, காலைக் காஃபி நேரம் மகிழ்ச்சியோடு கழிந்தது!

வீட்டில் முந்தைய இரவு நேரவே இல்லாதது போல நிகிலனும் அந்தப் பேச்சில் கலந்துகொள்ள, சுசிக்கும் அதை ஒதுக்கிச் சிரிக்க முடிந்தது!

ஆனால், இரவு நெருங்கவும், தினமும் போல விபுவைப் பார்த்துவிட்டுப் போகக் கணவன் வருவானோ, இனி வரவே மாட்டானோ என்று அவள் மனம் அலைபாய்ந்தது!

வழக்கம் போலவே நிகிலன் வந்து, தொட்டிலருகே நின்று மகனைப் பார்த்தவாறு அன்றைய நடப்புகள் பற்றி இயல்பாக இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போன பிறகுதான் சுசிதாவால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது!

சின்னச் சின்ன ஏக்கங்கள், தவிப்புகளை ஒதுக்கிவிட்டால், வாழ்க்கை மீண்டும் இயல்பாகச் செல்லலாயிற்று.

இடையிலே ஒரு நாள் நிகிலன் வழக்கம் போல வந்தானே தவிர, மகனைப் பார்த்தபடி நிற்பதை விடுத்துக் குறுக்கும் நெடுக்கும் நடக்கலானான்.

“என்ன?” என்று சுசிதா கேட்கவும், அந்தக் கேள்விக்காகவே காத்திருந்தவன் போல, படபடவெனப் பொரிந்து கொட்டிவிட்டான் அவன்.

“அந்த சவிதா! சும்மா என்றால், எனக்கு இவ்வளவு கோபம் வந்திருக்காது, சுசி! ஆனால், அத்தானைப் பற்றி, அவ்வளவு பொய் சொல்லிவிட்டு அவள் என்ன செய்தாள் தெரியுமா? வேலைக்கு ஆள் எடுப்பதற்காக விளம்பரம் கொடுத்திருந்தோம் அல்லவா? சவிதாவும் விண்ணப்பம் அனுப்பியிருந்தாள்! அதிலே, அவளது வேலைத் திறமைக்கும் நன்னடத்தைக்கும் சான்றாக, அத்தான் நிறுவனத்தில் வேலை செய்ததையே குறிப்பிட்டிருக்கிறாள்! அங்கே அவளைப் போகாதே, போகாதே என்று கெஞ்சியபோதும் சொந்தக் காரணங்களுக்காக அந்த வேலையை விட்டாளாம்! நான் மறைவாக இருந்து “பாடி லாங்வேஜ்” கவனித்துக் கொண்டிருப்பது தெரியாமல், நேர்முகப் பேட்டியை நடத்திய தலைமை நிர்வாகியிடம் அளந்து

கொண்டிருக்கிறாள்! என்ன திமிர் பார்! அங்கேயே அவளைப் பிடித்துக் கிழி, கிழியென்று கிழித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், என்ன, ஏது என்று வளர்ந்து, அத்தான் பெயர்

வீணே அடிபடும்! அதனால், அவளது முகவரியைக் குறித்துக்கொண்டு, திரும்பி வரும் வழியில் அங்கே போய், அவளை நன்றாகத் திட்டிவிட்டு வந்தேன்! அவளைப் போலக் கேடு கெட்ட கழுதைகளுக்கு, நம் நிறுவனங்கள் பக்கமாகத் திரும்பிப் பார்க்கும் தகுதிகூடக் கிடையாது என்று சொல்லிவிட்டு வந்தேன்!" என்றான் அப்போதும் சீறலாக!

காட்சியை மனதுள் சித்தரித்துப் பார்த்த சுசிக்குச் சிரிப்பு வந்தது!

நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்துவிட்டதாக எண்ணியிருப்பாள்! அங்குள்ள முதலாளியே வந்து, இந்த வாங்கு வாங்குவான் என்று அந்த சவிதா கனவிலும் கருதியிருப்பாளா, என்ன?

புன்னகையோடு அவள் அதைச் சொன்னதும், அவன் முகத்திலும், மெல்லச் சிரிப்பு மலர்ந்தது! "நீ சொல்வது சரிதான், சுசி! அத்தானின் உறவைச் சொன்னதும், அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமே! "என்னைப் பார், என் அழகைப்பார்" என்கிற மாதிரி போஸ் கொடுத்துக் கொண்டிருந்தவள், அப்படியே ஒடுங்கி சொத்தென்று ஆகிவிட்டாள்!" என்றவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது!

"ஒரு மாதிரி, திருப்தியாக இருக்கிறது, சுசி! அதுவரை, எவ்வளவோ கஷ்டப் பட்டாலும், அவளது கலகத்தால் நல்லதுதானே நடந்திருக்கிறது என்று, மனதை அமைதிப்படுத்திக் கொள்வேன்! ஆனாலும், அநியாயமாகப் புளுகிய அவளுக்கு ஒரு தண்டனையும் இல்லையே என்று உள்ளூர ஓர் எரிச்சல் மட்டும் அடிக்கடித் தோன்றும்! இன்று திட்டித் தீர்த்தது, அவளைத் தண்டித்துவிட்டதுபோல, நிம்மதியாகிவிட்டது! இத்தோடு, அதை மறப்போம்! இன்றைக்குக் குட்டி மாஸ்டர், புதிதாக என்ன படித்துக்கொண்டு வந்தான்?" என்று மகனைப் பற்றி விசாரிக்கலானான்.

"சொன்னால் நம்ப மாட்டீர்கள்! உங்கள் பிள்ளை மூன்று மொழிகளில் பேசப் படித்திருக்கிறான்! நாம் என்ன செய்யச் சொன்னாலும், "நோ, நஹீ, முடியாது" என்று ஒரே வார்த்தை போலச் சேர்த்துச் சொல்லி முடிக்கிறான். இதுதான் விபுவின் இன்றைய முக்கியப் பாடம் போலத் தெரிகிறது!" என்று அவள் சொல்ல, இருவருமாகச் சேர்ந்து சிரித்தார்கள்!

மறுபடியும் வாழ்க்கை ஓரளவு தெளிந்த நீரோடையாகச் செல்லத் தொடங்கி ஓரிரு தினங்கள் கழித்து, , ஒருநாள் மதியத்துக்கு மேல்

அலுவலகத்துக்கு வந்த ராமநாதன், சுசிதாவைக் கூப்பிட்டு அனுப்பினார்.

வேலையில் என்னவோ என்று சென்றவளிடம், “தில்லைநாயகம் ஐயா வீட்டுக்கு வந்திருந்தார், அம்மா! வைகையில் ஏற்றி விட்டுவிட்டு வந்தேன். உன்னைப் பற்றி ரொம்ப விசாரித்தார். அதனால்தான் சொல்லி விடலாம் என்று கூப்பிட்டேன். வேறு ஒன்றும் இல்லை!” என்றார்.

அப்போதைக்கு வெளிக் காட்டாமல் சமாளித்துவிட்டு வந்தபோதும், சுசிதாவுக்கு உள்ளூர மிகவும் வேதனையாக இருந்தது!

சென்னை வரை வந்த தில்லைநாயகத்துக்கு, அவளைச் சந்திக்கும் எண்ணமே இல்லையே! சொல்லியிருந்தால், அவளே போய்ப் பார்த்திருப்பாளே! அது கூடத் தோன்றவில்லையே!

அவளுடைய பெற்றோரோடு சம்பந்தப்பட்ட ஒரே மனிதர்! அவர் தன்னை அலட்சியப் படுத்திவிட்டார் என்றால், அவளால் தாங்கவே முடியவில்லை!

ஆனால் அவளிடம் விவரம் கேட்டறிந்த நிகிலன், அவர் ஒன்று செய்தால், அதற்குச் சரியான காரணம் இருக்கும் என்றான்!

“அப்படி என்ன காரணம்?” என்று கேட்டவள், அவனைக் கூர்ந்து நோக்கி, “உங்களுக்குத் தெரியும்!” என்றாள்.

அத்தியாயம் -29

ரொம்பச் சின்ன வயதில் இருந்து, சுசிதாவுக்குத் தில்லைநாயகத்தைத் தெரியும்!

அவளது ஒவ்வொரு பிறந்த நாளும், அவரது "இல்ல"த்தில்தான் கழிந்திருக்கிறது! கேக்கும் பலகாரங்களும், பாயசத்துடன் சாப்பாடுமாக இல்லத்துப் பிள்ளைகளோடுதான், பெற்றோரும், சுசியும் சாப்பிடுவார்கள்!

தொழிலில் அவள் தந்தை எப்படியோ? இல்லத்துக்காகச் செலவு செய்வதில் அவரைக் குறை கூறவே முடியாது!

திருமணமாகிப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் கருணை இல்லத்துக்குப் பணம் கொடுக்கத் தொடங்கிய பிறகுதான், தங்களுக்குக் குழந்தை பிறந்தது என்று, இல்லத்துக்கு நன்றாகவே செய்வார்! தானாகக் கொடுப்பது மட்டுமன்றி, பணம் திரட்டியும் கொடுப்பார்!

அதனாலேயே தில்லைநாயகத்தை அடிக்கடிப் பார்த்துப் பழகியதோடு, அவரை "அங்கிள்" என்று அழைப்பதும் அவளுக்கு வழக்கமாயிற்று!

அவள் ஒன்று கேட்டு அவரும் செய்யாதிருக்க மாட்டார்!

பின்னரும், மின்னாமல், முழங்காமல் அவளது தலையில் இடி விழுந்தபோது, அவரிடமே, அவள் சரணடையவும் முடிந்தது!

சொத்து, பத்து என்று அனைத்தையும், அவரது இல்லங்களுக்கே அவள் கொடுத்தது, அவளது தனிப்பட்ட முடிவுதான்!

சொல்லப் போனால், "உனக்கென்று கொஞ்சமேனும் வைத்துக்கொள்!" என்று அவர் வற்புறுத்தத்தான் செய்தார்! சற்று அழுத்தமாக மறுத்தே பேசினார்.

அப்போதுதான் நடந்ததையெல்லாம் அவள், அவரிடம் சொன்னது! சொல்லி, அவர் வாங்கிக் கொள்ளாவிட்டால், "எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எங்காவது போய்விடுவேன்!" என்று அவள் பிடிவாதமாகக் கூறிய பிறகே அவளது சொத்துக்கள் அனைத்தையும் பெற, அவர் ஒத்துக் கொண்டார்!

விபு பிறந்தது, அவரது கருணை இல்லத்தில்தான்.

வேலை பார்க்கப் பயிற்சி கொடுத்தது, வேலை வாங்கிக் கொடுத்தது, அதில் கஷ்டம் என்று அடுத்த வேலைக்கு ஏற்பாடு செய்தது . . . எல்லாமே அவர்தான்!

ஏன், இந்தத் திருமணம் கூட, அவர் நடத்தி வைத்ததுதானே?

இங்கே அவள் ஒன்றும் அவ்வளவு நன்றாகப் பொருந்தி வாழவில்லை என்றும் அறிந்தவர், இவ்வளவு தூரம் வந்துவிட்டு, "எப்படியிருக்கிறாய்" என்று அவளிடம் ஒரு வார்த்தை கேளாமலே திரும்பிச் சென்றிருக்கிறாரே!

அவள் எவ்வளவு வேதனைப் படுவாள் என்று எண்ணிப் பார்க்கவே இல்லையே!

வழக்கம்போலப் படுக்கச் செல்லுமுன் வந்த நிகிலன், ஒரே பார்வையில், "என்ன விஷயம்?" என்று அவளிடம் கேட்டான்.

"ஒன்றும் இல்லை . .யே என்று மறுத்தவளுக்கு, வாக்கியத்தை முடிக்கு முன்னரே,

வரவேற்பு விழாவுக்கு மறுநாள், கணவனிடம் அங்கிள் தனியே பேசியது நினைவு வந்தது!

அது பற்றி, அவன் குறிப்பாகச் சொன்னான் என்றாலும், அவர் ரகசியம் பேசியது, அவனிடம்தானே?

யோசித்துவிட்டு, தில்லைநாயகம் சென்னைக்கு வந்தது பற்றி அவனிடம் தெரிவித்தாள்!

"ஓ!" என்றான் அவன்.

ஆனால், "என்ன ஓ!" என்றாள் சுசிதா மிகுந்த சினத்துடன்! "எப்போது வந்தாரோ? திரும்பிப் போன பிறகுதான், அவர் வந்ததே எனக்குத் தெரிகிறது! அவருக்கு வேலை அதிகமாக இருந்திருக்கலாம்! ஆனால், சொல்லியிருந்தால் நானாவது போய்ப் பார்த்திருப்பேனே!" என்றாள் வருத்தமும் கோபமுமாக.

அப்போதுதான், தில்லைநாயகம் வந்தது சொல்லாததற்குச் சரியான காரணம் ஏதாவது இருக்கும் என்று நிகிலன் சொன்னான்!

அவனை ஒரு கணம் வெறித்துவிட்டு, "உங்களுக்குத் தெரியும்!" என்றாள் சுசிதா!

"உனக்கும்தான் தெரியும்!" என்றான் நிகிலனும்!

"தங்கராசுவா?" என்று கேட்டவள், "ஆமாம்!" என்ற கணவனைப் புரியாத வியப்புடன் பார்த்தாள். "முதலைக்குத் தண்ணீரில்தான் பலம்! இவன் திருச்சியிலேயே தோற்றவன் . . .?"

"அதை அவன் முடிவான தோல்வியாகக் கருதவில்லை, சுசி!

அப்போதைக்கு ஒரு பின்னடைவாக நினைத்திருக்கிறான்! அத்தோடு, அது பெரிய முயற்சியும் அல்ல! பத்தோடு, பதினொன்றாக வேலை செய்யும் உனக்கு, இது போதும் என்ற கருத்து! நீ வேலையை விட்டபோது கூட, அப்படி எங்கே போய்விடுவாய் என்ற எண்ணம்தான் அவனுக்கு! ஆனால், நீ அடியோடு காணாமல் போய்விடவே, தில்லைநாயகம் சாரைப் போய்த் துளைத்து எடுத்திருக்கிறான்! திருச்சி வேலையும், உனக்கு அவர்தானே வாங்கித் தந்ததாம்! தன் மூலம் நீ இருக்குமிடம் அவனுக்குத் தெரிய வராது என்றாலும், அவன் சற்று வெறி பிடித்தவன் போல இருப்பதால், சற்று எச்சரிக்கையோடு இருக்குமாறு, அன்று அவர் சொன்னார்! நீ கவனமாகவே இருப்பது, தெரியும். எதற்கும் இருக்கட்டும் என்றுதான், விபுவுக்கு நாகுவைக் காவல் வைத்தேன்! தில்லைநாயகம் சார் இப்போது சொன்னதை வைத்துப் பார்த்தால், விஷயம் பெரிதாக இருப்பதாகத் தோன்றுகிறது!" என்றான் நிகிலன் யோசனையோடு!

"என்ன பெரிய விஷயம்? சுத்தப் பைத்தியக்காரத்தனம்! வேண்டாம், வேண்டாம் என்கிறவளைப் போய், விரட்டிக்கொண்டு! வெறுப்பு என்றால், மரியாதையாக விலகத் தெரிய வேண்டாம்?" என்று எரிச்சலுடன் தலையைச் சிலுப்பினாள் சுசிதா.

சற்று நேரம் அவனிடமிருந்து பதிலின்றிப் போகவும் திரும்பிப் பார்த்தால், வலித்தாற்போல, இருகண் மூடி நின்றான் நிகிலன்.

"என்ன?" என்றாள் புரியாமல்.

கண்கயை ஒரு தரம் இறுக மூடித் திறந்து, "உனக்குப் புரியாது, சுசி! அழகான பெண்களின் அலட்சியமும், மறுப்பும் ஆண்களின் வேட்டை புத்தியைத்தான் கிளப்பிவிடும்!" என்ற குரலிலும் வேதனை தெரிந்தது!

கண்ட தப்புப் பண்ணியிருக்கவும் வேண்டாம்! இப்படி, எதிர்பாராத நெரத்தில் எல்லாம் நெஞ்சிலேயே அறைவாங்கி, வருந்தவும் வேண்டாம்! ஆனாலும் . . .

"உங்கள் விஷயம் வேறு! கடைசிவரை தேர்ந்தெடுக்க, எனக்கு இன்னொரு வழியும் இருந்தது! அந்த வழியைத் தேர்வு செய்யாததற்கு நானும் பட்டுவிட்டேன். நீங்களும் பிராயசித்தம் செய்தவர். அத்தோடு, கையில் ஒரு பிள்ளையோடு அமைதியாக வாழும் ஒரு பெண்ணைப் போய், நீங்கள் துரத்தித் தொல்லை செய்யவில்லையே. " என்றாள் சுசிதா!

"அதற்கும், காரணம் நான்தானே? பிள்ளைக்குத் தந்தையாக கணவனைக் காட்ட முடியாத பெண் என்ற ஏளனத்தில்

தொடங்கியதுதானே? என்னவோ அலட்சியப் படுத்தியவளை ஜெயிப்பதாக எண்ணி . . சே! என்னால், நீ எவ்வளவு கஷ்டப்படும்படி நேர்ந்துவிட்டது?”

அவனால் மட்டுமா? அவளும்தான், கொஞ்சம் யோசித்திருக்கலாம்!

அப்படியென்ன, ஒரே நாளிலா, அப்பாவைச் சிறையில் தள்ளியிருப்பார்கள்? கோர்ட் இருக்கிறது! அங்கே பணத்தைக் கட்ட அவகாசம் கேட்டு . . . எதுவுமே முடியாவிட்டாலும், “போடா போ, என்ன வேண்டுமானாலும் செய்துகொள்” என்று அவனை அலட்சியப்படுத்தி, விலகிப் போயிருக்கலாம்! ஓட்டுரிமையே பெற்றுவிட்ட அந்தப் பதினெட்டு வயதில், அவள் இவ்வளவு யோசித்திருக்க வேண்டாமா?

அத்தோடு, நிகிலன் சொன்னது போலத் தப்பு, தப்புதானே? அப்பா சிறைக்குப் போனால் என்ன? அவர் அப்பா இல்லை என்று ஆகிவிடுமா? அதை விட்டு . . .

ஆனால், இப்போது எதற்கு இந்தப் பயனற்ற சிந்தனை?

நிகிலனைத் தொடர்ந்து, அவனைப் போலவே ஆத்ம விசாரணையில் இறங்கிய சுசிக்குச் சுள்ளென்று கோபம் வந்தது!

“பாருங்கள் நிக்கி, சிந்திய பாலுக்கு அழுவதைப் போல, முன் கதையை எண்ணி வருத்தப்படுவதால், இப்போது யாருக்கு, என்ன லாபம்? அதைவிட, அங்கிள் உங்களிடம், சொன்னதை . . . இப்போது என்றீர்களே, அப்படியானால் இன்றேதான், இல்லையா? என்னவோ நீங்கள்தான் சர்வ ரட்சகன் என்று நினைத்து, அப்படி அவர் உங்களிடம் என்னதான் சொன்னார்?” என்று பொறுமையிழந்த குரலில் கேட்டாள்.

தில்லைநாயகம் அப்படி நினைத்துச் சொல்லவில்லை!

மனைவி, மகனின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பணக்கணக்குப் பாராமல், நிகிலனால் செய்ய முடியும்., செய்வான் என்று கருதிச் சொன்னார்! அவ்வளவே! அத்தோடு, சென்னை அவனுக்குத் தெரியும் என்பது வேறு! ஆனால் இதையெல்லாம் எடுத்துச் சொன்னால், இப்போதைய மனநிலையில், மனைவி அதைக் காது கொடுத்துக் கேட்பாள் என்று சொல்ல முடியாது!

எனவே, நேரே விஷயத்துக்கு வந்தான், அவன்!

“தங்கராசு உன் விஷயத்தில் ரொம்பவும் வெறி பிடித்து அலைகிறானாம்! தொழில் பங்குதாரரிடம், அவரது வயதையும் மதிக்காமல் உன்னை எப்படிப் போக விடலாம் என்று சண்டை

போட்டானாம்! நீ வசித்த இடத்தில் போய்க் குடைந்திருக்கிறான்! அந்த ஜானகி அம்மாளிடம் கையை ஓங்கி, மிரட்டி . . . அடித்ததாகவே கேள்வியாம்!

“எவ்வாவற்றுக்கும் மேலாக, தில்லைநாயகம் சாரைப் பின்தொடர ஆள் வைத்ததிருக்கிறான்! அதனால்தான், அவர் உன்னைப் பார்க்க வரவில்லை! ஃபோனில் சொன்னாலும், நீ அவரைப் பார்க்க ஓடுவாய்! அதே பிரச்சினை தானே? இதெல்லாம் யோசித்துதான், அவர் எனக்கு ஃபோன் செய்து சொன்னார்.

“நீ எந்த ஊரில், எங்கே இருக்கிறாய் என்று ஒன்றும் தெரியாமல் சுற்றிக்கொண்டு இருக்கிறான். கொஞ்ச காலம் இந்த அலைச்சலிலேயே கடந்தால், அலுத்துப் போய்த் தானாகத் திருந்தக் கூடும்., அதுவரை, அவனுக்கு நீ இருக்கும் இடம் தெரியக் கூடாது என்றார்!” என்று முடித்தான் நிகிலன்.

சற்று யோசித்துவிட்டு, “ஆனால், லட்சத்தில் ஒரு வாய்ப்பாகச் சென்னையில் அவன் என்னைக் கண்டுபிடித்தாலுமே, இங்கே அவனால் எதுவும் செய்ய முடியாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது! இங்கே எனக்குப் பாதுகாப்பு அதிகம்! அன்று உங்களிடம் வேடிக்கை போலச் சொன்னாலும், அது நிஜமேதானே! “ என்றாள் சுசிதா.

“ஆனாலும், “கள்வன் பெரிதா, காப்பான் பெரிதா” என்று ஒன்று இருக்கிறதல்லவா? கள்வன் எப்போது, எப்படித் தாக்கக் கூடும் என்பது நமக்குத் தெரியாது! ஊகத்தில். . . ஓரளவு இருட்டில் துழாவுகிற மாதிரிதான்! ஆனால், “உறுமீன்” பிடிக்கும் கொக்கு போலத் திட்டமிட்டுச் செயல்படுவது, அவனுக்கு அதிகப்படி வசதிதானே? இப்போது கூட, நீ இருக்குமிடம் கண்டுபிடித்து, அவன் ஏதேனும் சதி செய்துகொண்டு இருக்கவில்லை என்று, நமக்கு என்ன நிச்சயம்?” என்று கேட்டான் நிகிலன்.

லேசாகத் தலையைச் சிலுப்பி, “இங்கே வாட்ச்மேன்., அங்கே காவலாள்., அரசுப் பேருந்து! எனக்கு வேண்டிய மற்றது கூடப் பக்கத்துப் பெரிய கடை வளாகத்தில்தான் வாங்குவதுதான்! ஊகூம். வாய்ப்பே கிடையாது! “ என்றாள் அவள்.

சற்றுத் தயங்கிவிட்டு, “இதற்காக நீ பயந்து விடக் கூடாது! கன்றை ஓட்டிப் போனால் பசு தானாகப் பின்னே வரும் என்று அந்தத் தங்கராசு சொன்னதாகத் தில்லைநாயகம் சார் . . . “ என்றவன், அவள் திகைத்து நோக்கவும், “பயம் வேண்டாம் என்றேனில்லையா? விபுவுக்காக இன்னும் அதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான்

வந்தேன். அதற்குத்தான் இவ்வளவு தாமதம்.” என்று, அவளுக்குத் திடமூட்டும் விதமாக, நிகிலன் பேசினான்.

அவளும் யோசித்து, “ஆனாலும், இன்னொருவர் மனைவி என்று தெரியும்போது அடங்கிவிடுவான்.” என்றாள் சற்று நம்பிக்கையோடு.

“அப்படி நினைத்துக் கவனக் குறைவாக இருக்க வேண்டாம், சுசி. ஏனென்றால், அவனுடைய பார்ட்னர் அறியவே, தங்கராசுக்கும் அவன் மனைவிக்கும் பெரிய சண்டை நடந்திருக்கிறது! அவனைக் குப்பையாக மதித்து, அலட்சியப்படுத்திவிட்டு, இன்னொருவனோடு நீ போய்விட்டதாகக் கூறி, அவன் மனைவி, அவனை எள்ளி நகையாடி இருக்கிறாள்! “என்னைத் தவிர, இந்த மூஞ்சியை எவள் சகிப்பாள்” என்றாளாம்! அதில்தான், அவனுக்கு அதிகமாக வெறி பிடித்துவிட்டதாம். தான் யார் என்று இரண்டு பொட்டச்சிகளுக்கும் காட்டப் போவதாகச் சூள் உரைத்து. . . .வாயால் சொல்ல முடியாத எத்தனையோ! பார்ட்னர் வீட்டில் வைத்தே, ரொம்பவும் ரசாபாசம் ஆக, அவர்தான் ரகசியமாகத் தில்லைநாயகத்திடம் தெரிவித்து, எச்சரித்திருக்கிறார்! அவன் செய்வது, வடிகட்டின மடத்தனம்தான்! ஆனால், முட்டாளுக்குச் சரி தப்பு பற்றித் தானாகவும் தெரியாது., சொல்லிப் புரிய வைக்கவும் முடியாது! நாம்தான் எச்சரிக்கையோடு இருந்துகொள்ள வேண்டும்!”

“இவ்வளவு நடந்திருக்கிறது! என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை?”

“இவ்வளவும், இன்றுதானே எனக்கும் தெரிய வந்திருக்கிறது! ராமநாதன் வீட்டில் இருந்து, தில்லைநாயகம் சார், வெகு நேரம் என்னோடுதான் பேசினார்! அப்போது சொன்னதுதான்! வெறி பிடித்துக் கிளம்பியிருக்கிறான். கொஞ்சகாலம் . . .அந்த வெறி தணியும் வரை கவனமாக இருங்கள் என்றார். ஆனால், இப்போதும் நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமே தவிர, எப்போதும் கவலையும் பயமுமாக வாழத் தேவையில்லை, சுசி! இந்தப் பரந்த தமிழ் நாட்டில் நீ எங்கே இருக்கிறாய் என்று, கண்டுபிடிப்பது, அவனுக்கு அப்படி ஒன்றும் எளிதல்லவே! அதனால், வீட்டில்கூட, அறியாத யாரையும் நம் அனுமதி இல்லாமல் உள்ளே விடக் கூடாது என்று வாயில் காவலர்களிடம் சொல்லி வைத்தால் போதும் என்று நினைக்கிறேன்! உனக்கு என்ன தோன்றுகிறது?” என்று கேட்டான். நிகிலன்.

பெரிய விஷயம் இல்லை என்றாலும், கணவன் தன்னிடம் அபிப்பிராயம் கேட்டது இதமாக இருக்க, “நிச்சயமாகப் போதும்ப்பா! நடப்பதற்கு வாய்ப்பே இல்லாத ஒன்று! அதற்காக, இந்தக் கண்ணராவியை எல்லாம்

சொல்லி அத்தை மாமாவைக் காபுராப் படுத்துவானேன்!
கவனித்துவிட்டு என்ன என்று கேட்டாலும், பத்திரிகைகளில்
என்னென்னமோ செய்திகள் வருவதால், பணியாட்களிடம் கொஞ்சம்
எச்சரிக்கை செய்ததாக மட்டுமே இருக்கட்டும்! “ என்றாள் அவளும்.

சுசியும் விபுவும் எந்த ஊரில், எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்று
கண்டுபிடிக்கத் தங்கராசுவுக்கு, ஓர் ஆயுட்காலம் போதாது என்று,
நிகிலனும் அவன் மனைவியும், சர்வ நிச்சயமாகத்தான் நினைத்தார்கள்.,
சொன்னார்கள்!

ஆனால், அவர்கள் இருவரும் அது பற்றிப் பேசியதற்கு ஒரு நாள்
முன்னதாகவே, அவளது இருப்பிடம் பற்றிய விவரத்தை அவன்
அறிந்திருந்தான் என்பதோ, அது அவனுக்குத் தெரிய வரக் காரணமே
நிகிலன்தான் என்பதோ, அப்போது அவர்கள் இருவருக்குமே
தெரியாது!

அத்தியாயம் -30

தங்கராசு, சவிதாவுடைய உறவினன். ஒன்றுவிட்ட அண்ணன் முறை!

வெகு அபூர்வமாகச் சென்னைக்கு வரும்போது, அவள் வீட்டில் வந்து எட்டிப் பார்த்துவிட்டுத்தான் போயாக வேண்டும். அப்படித் தன் மகளைப் பாராமல் அவன் திரும்பி வந்தது தெரியவந்தால், சவிதாவுடைய தாய், அவனைப் பிலுபிலுவென்று பிடித்துப் பேயோட்டி விடுவாள்!

கட்டிய கணவரையே பரதேசியாக வீட்டை விட்டு ஓட வைத்த சித்தியம்மாளின் வாய்க்குப் பயந்தே, சென்னை வரும்போது, சவிதா வீட்டுக்கு அவன் செல்லத் தொடங்கியது!

ஆனால், பழமோ, பலகாரமோ வாங்கிச் செலவு பண்ணிக்கொண்டு போவது கட்டாயம் என்று ஆகி விட்டதால், ஓட்டலில் தங்கும் செலவை மிச்சம் பிடித்து, தோழிகளோடு சவிதா வசித்த வீட்டிலேயே தங்கி விடுவான்!

அத்தோடு, இளம் பெண்களாக நாலு பேர் இருக்கும் இடத்தில், உரிமையோடு கைலியில் சுற்றுவதும் அவனுக்குப் பிடித்துவிட்டிருந்தது!

சில தினங்களாக, அவனுக்கு மனைவியிடம் மிகுந்த கோபம்!

ஒழுங்காகப் பொங்கிப் போட்டுப் புருஷனுக்குக் கால் அமுக்கிவிட்டு, மூலையில் கிடக்க வேண்டிய கழுதை! என்னவெல்லாம் பேசிவிட்டது!

அவனைக் குப்பையாக உதறிவிட்டு, சுசிதா போய்விட்டாளாமா?

அவள் படிந்து வராமல், மறைந்து போனதே எங்கே, எங்கே என்று தவிப்பாக இருக்கிறது என்றால், அடுத்தவர் வீட்டில் வைத்து, இந்த நாய் வேறு கேவலப்படுத்திவிட்டதே!

அந்தப் பார்ட்னர், அவளுக்குச் சொந்தக்காரன் அல்லவா? அந்தத் திமிர்!

எவ்வளவு பணம் போனாலும், அவளுக்குப் பாடம் கற்பித்தே ஆக வேண்டும்! ஓசைப்படாமல் ஓடிப் போனாளே, அந்த மற்றவளுக்கும்!

இந்த ராசுவை யார் என்று நினைத்தார்கள்? அவன் ஒன்றை நினைத்துவிட்டால், அதை நடத்தியே தீருவான் என்று இரண்டு பொட்டைக் கழுதைகளுக்கும் காட்டியே ஆக வேண்டும்!

சுசிதாவைத் தேடி அலைவதில்தான், தங்கராசு சென்னைக்கும் வந்தது! எல்லாப் பெரிய ஊர்களையும் முதலில் ஒரு “ரவுண்டு” சுற்றிவிட்டு, அப்புறமாக நிதானமான அலசவேண்டும் என்பது, அவனது திட்டம்!

அவன் சவிதாவின் வீட்டில் இருந்தபோதுதான், நிகிலனை விதி அங்கே கொண்டு சேர்த்தது!

தன் நிறுவனத்திலேயே இவள் வேலை கேட்டு வருவதா?

அதிலும் யாரைப் பற்றி, அநியாயப்பழி சுமத்தி, அவரது குடும்பத்தையே சிதறடித்தாளோ, அவரது சொந்த நிறுவனம் கொடுத்த நற்சான்றைக் காட்டிக்கொண்டு!

அந்தச் சான்றிதழும் கூட, ஐயோ பாவம், ஒரு பெண்ணின் எதிர்காலத்தைக் கெடுக்கவேண்டாம்., எப்படியோ பிழைத்துப் போகட்டும் என்று, இரக்கப்பட்டுக் கொடுத்தது என்பது, இப்போது அவனுக்கு நன்றாகத் தெரியுமே!

தப்புக்குத் தீர்வு இரண்டுவிதம்! ஒன்று பிராயச்சித்தம்., அல்லது தண்டனை என்பது, உலக இயல்! நிகிலனுக்கும் அதில் மிகவும் நம்பிக்கை வந்திருந்தது!

சவிதாவைப் பார்த்துக் கொதித்துப் போயிருந்த நிகிலன், அவளைத் தண்டிக்கும் வேகத்தில் வந்து, அவளிடம் தன் கோபத்தையெல்லாம் காட்டிக் கத்திவிட்டுப் போனான்!

ஓர் ஆண்மகன் வந்து கத்தியபோது, தங்கராசு, அறைக்குள்ளிருந்துகொண்டு, அங்கே ஆளிருக்கும் அரவமே காட்டவில்லை!

நிகிலனின் கார் கிளம்பி, அவன் அங்கிருந்து போய்விட்டான் என்று நன்கு தெரிந்த பிறகே மெல்ல வெளியே வந்து, பெரியப்பா மகளிடம் துக்கம் விசாரித்தான்!

எதிர்பாராமல் நிகிலன் வந்து கத்திய அதிர்ச்சியும், கூடவே பயமுமாக உறைந்திருந்த சவிதாவுக்கும், நிகிலனின் கார் கிளம்பிச் சென்று, அதன் சத்தமே மறைந்துவிட்ட அப்போதுதான் தைரியம் வர, அலறிக் கூப்பாடு போடத் தொடங்கியிருந்தாள்!

அந்தக் கத்தலில், தங்கராசுவுக்கு வேண்டிய சில வார்த்தைகளும் வந்து விழுந்தன!

“என்னை சொல்ல, இவனுக்கு வாய்வேறு இருக்கிறதா? கன்றுக்குட்டியோடு மாடு பிடிக்கிற மாதிரி, இரண்டு வயசுப் பிள்ளையோடு பெண்டாட்டி கொண்டு வந்தவன்., என்னைப் பேசுவதா?” என்றது, அதிலே முக்கியம்!

“அந்த அலுவலகத்திலே இருந்து என்னை விரட்டிய, திமிரெடுத்த பாவி,

இவனுடைய அத்தான்காரன் என்பது, எனக்கு எப்படித் தெரியும்? போலீசுக்குப் போவேன் என்கிறானே, இவன் நன்றாயிருப்பானா?" என்று சவிதா புலம்பியதெல்லாம் அவனுக்கு அனாவசியம்!

நிகிலன் அதட்டிப் பேசியபோது தங்கராசுவைப் போலவே பயந்து ஒதுங்கி இருந்துவிட்டு, விசாரிக்க வந்த மற்ற பெண்கள், போலீஸ் தொடர்பு உள்ளவனிடம் எந்த வித வம்பும் வைத்துக் கொள்ளாதே., ஒதுங்கிவிடு என்று, சவிதாவுக்குப் புத்தி சொன்னதிலும் அவனுக்கு அக்கறை இருக்கவில்லை!

"பிள்ளையோடு பெண்டாட்டியா? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்று, தனக்கு வேண்டிய வார்த்தைகளை மட்டும் பிடித்துப் பரபரப்போடு விசாரித்தான் அவன்!

"அதெல்லாம் எனக்கெப்படித் தெரியும்?" என்று எரிந்து விழுந்தாள் அவள்!

"பின்னே சொன்னாயே? இப்போதுதானே சொன்னாய்! யார் அது என்று தெரிந்துதானே, சொன்னாய்! சொல்லு! சொல்லு! " என்று துளைத் தெடுத்தான் தங்கராசு!

"முன்பு அங்கே என் கூட வேலை பார்த்த ஒருத்தியைக் கொஞ்ச நாட்களுக்கு முன்னே பார்த்தேன்! அவள்தான், மச்சான்காரன் இப்படி அசிங்கம் பண்ணிவிட்டானாம். அதனால் அவனிடம் கோபித்துக்கொண்டு, முதலாளி தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்துவிட்டார் என்று சொன்னாள்! அந்த மச்சான்தான் இந்தக் காட்டான் என்றோ, இவன் எங்கே இருக்கிறான் என்றோ, எனக்கு எப்படித் தெரியும்? நானே, அவன் போலீசுக்குப் போவேன் என்கிறானே, எதெதற்குப் போவானோ, என்னவோ, என்று கலங்கிப் போய் இருக்கிறேன்! என்னைப்போய்க் குடைய வந்துவிட்டாயே! அவன் வந்து கத்துகிறபோது, கட்டிலுக்கு அடியில் ஒளிந்துகிடந்தாயே, நீயும் ஆண்பிள்ளையா? வெறும் வெண்ணை வெட்டிச் சிப்பாய்! சோளக் கொல்லை பொம்மை! நீயெல்லாம் ஒரு சொந்தக்காரன்! எரிச்சல் மூட்டாமல் எங்கேயாவது போய்த் தொலை! கண் முன்னே நிற்காதே, போ!" என்று விரட்டினாள், அவள்.

சவிதா என்னதான் கேவலமாகத் திட்டினாலும், இந்த விவரங்களைத் திரும்பத் திரும்ப அவளிடம் கேட்டுத் தொணதொணத்தான் தங்கராசு!

உன்னை இவ்வளவு திட்டினானே, அவனைப் பழி வாங்கலாம் என்றுகூட ஆசை காட்டிப் பார்த்தான்.

ஆனால், போலீஸ் என்ற ஒரு சொல்லில் மிரண்டு போயிருந்த சவிதா, அவனுக்குக் கொஞ்சமும் ஒத்துழைப்பதாகவே இல்லை!

சொல்லப் போனால், அங்கிருந்த அத்தனை பெண்களுமே, அவனை விரட்டுவதில்தான் இப்போது முனைப்பாக இருந்தனர்!

கடைசியாக, அந்த சவிதா முன்பு எங்கே பணி புரிந்தாள் என்பதை மட்டுமே அவனால் அறிய முடிந்தது!

ஆனால், அதைக்கொண்டே மேலும் விசாரித்து, சுசிதாவைப் பற்றிய பல தகவல்களை, அவனால் திரட்ட முடிந்தது!

ஒரு பணக்கார வீட்டு மருமகளாக அவள் இருப்பதைத் தங்கராசுவால் நம்பவே முடியவில்லை!

கையில் பிள்ளையோடு, இப்படி ஒரு புளியங்கொம்பை, அவள் எப்படிப் பிடித்தாள்?

அழகு! அந்த அழகில் கொண்டிருந்த மோகம், இன்னமும் பன்மடங்காயிற்று!

எந்த அழகைக் கொண்டு, சுசிதா இந்தப் பணக்காரப் பயலைப் பிடித்தாளோ, அந்த அழகின் மேல், அவளைப் பார்த்த முதல் நாளில் இருந்தே ஆசைப்பட்டவன் அவன்! அதனால், அவனுக்குத்தான் முதல் உரிமை! அதைச் சும்மா விட்டுவிட முடியாது! எதற்காகவும்!

அங்கேயே சுற்றிச் சுற்றி வந்து பார்த்தான்!

சுசிதா இருந்த வீடு, கோட்டை போல இருந்தது! உள்ளே புகுவது, முடியாத காரியம்!

உள்ளே நுழைவதே முடியாத போது, அங்கிருந்து அந்தப் பையன் விபுவைக் கடத்துவது எப்படி?

தன் விருப்பம் போல சுசிதாவை ஆட வைக்க வேண்டுமானால், அந்தப் பையன் விபுவின் உயிர்நிலை, தன் கையில் இருந்தாக வேண்டும் என்று, தங்கராசு முன்னரே முடிவு செய்துவிட்டான்! அவனைத் தன் பிடியில் வைத்துக்கொண்டு மிரட்டினால், அவன் என்ன சொன்னாலும், அவள் கேட்பாள்! கயிறு கட்டிய குரங்கு போல, ஆட வைத்து விடலாம்!

ஆனால், அதற்கு முதல்படி, விபுவைக் கடத்துவது!

அந்த வீட்டில் அக்கம் பக்கம் நின்று பார்த்தால்கூட, “இங்கே நிற்காதே” என்று காவல்காரன் விரட்டினான்! அவன் ஓர் ஆளை மடக்கி விடலாம் என்று பார்த்தாலோ, உள்ளேயும் பல வேலையாட்கள் நடமாட்டம் தெரிந்தது! ஒரு குரலில் எல்லோரும் குழுமி விடுவார்கள்!

அப்புறம், அவன் பாடு ஆபத்தாகிவிடும்!

வீட்டில் முடியாது என்று நன்கு தெரிந்தது!

இனி அடுத்த இடம் அந்தப் பிள்ளை போகும் பள்ளி!

அங்கேயும் பிரச்சினை இருந்தது! அங்கே பயிலும் பிள்ளைகளுடைய பெற்றோரோ, பொறுப்பாளரோ பள்ளிக்கு அறிமுகப்படுத்தி வைத்திருப்பவர் தவிர வேறு யாருடனும் பிள்ளையை அனுப்ப மாட்டார்கள் என்று விசாரித்ததில் அறிந்தான். விபத்து, அப்படி, இப்படி என்றால்கூட, அதை உறுதிப்படுத்திக் கொண்டு, அப்போதும் பள்ளி ஆட்களோடு அவர்களது வாகனத்தில்தான் அனுப்புவார்கள் என்றார்கள்! பணக்காரப் பிள்ளைகள் படிக்கும் பள்ளி என்பதால், பிள்ளைகளைக் கடத்திப் போய்ப் பணம் பறிக்கக் கூடிய அபாயத்தைத் தவிர்ப்பதற்காக இந்த ஏற்பாடாம்!

பள்ளி என்றால் பாடத்தை மட்டும் பார்த்துக்கொண்டு சும்மா இராமல், இதெல்லாம் என்ன அதிகப்பிரசங்கம் என்று ஆத்திரமாக வந்தது, தங்கராசுவுக்கு!

அத்தோடு, பள்ளி தொடங்கிவிட்டால், முடியும்வரை, கதவைத் திறப்பதே இல்லை!

இத்தனைக்கும் மேலாக, விபுவைப் பள்ளியில் கொண்டு விடும் காரோட்டி நாகு, பள்ளி விடும்வரை, அங்கேயே காத்திருந்து பிள்ளையைக் கூட்டிக்கொண்டுதான் வீட்டுக்குப் போனான்!

இத்தனை கஷ்டத்துக்கும் இடையில், அந்தக் குட்டிக் குரங்கைக் கடத்தவேண்டுமா, பேசாமல் சுசிதாவையே கொண்டு போய்விட்டால் என்ன என்று கூடத் தங்கராசு ஒரு தரம் யோசித்துப் பார்த்தான்.

ஆனால், அந்தக் குட்டிக் குரங்கு கையில் இருந்தால்தான், தாயை அவனிஷ்டம் போல ஆட்டி வைக்க முடியும்! மற்றபடி, அவள் போடா என்றுவிடுவாள்! சுசிதாவை அவனுடைய அடிமையாகக் கூட்டிப் போய், அவன் மனைவி முன் ஆடவைத்துக் காட்டியாக வேண்டுமே! அப்படிக் காட்டாவிட்டால், அவன் என்ன ஆண்பிள்ளை?

இதற்கெல்லாம் அடிப்படையாக விபுவைக் கைப்பற்றியே தீர வேண்டும் என்று திட்டமிட்டான் தங்கராசு!

பள்ளி முடிந்து, பிள்ளைகளை அழைத்துச் செல்லும் வாகனங்களும், ஆட்களுமாகக் குழுமி, இங்குமங்குமாகப் பிரிந்து செல்ல முயலும் ஓர் ஏழெட்டு நிமிஷ நேரத்து நெரிசல்தான், அவனுக்குரிய ஒரே வாய்ப்பு! அதிலும்கூட, நெரிசல் குறைகிற கடைசி சில நிமிஷங்கள்தான். அதிக

நெரிசலில் முயன்றால், அவன் தப்புவதே இயலாமல் போய்விடலாம்!

கிடைக்கக் கூடிய அந்த நேரத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று கவனத்துடன் திட்டமிட்டான் தங்கராசு.

முதல் படியாக, நாகுவிடம் நின்று பேச்சுக் கொடுக்க ஆள் ஏற்பாடு செய்தான்.

முதலில் நாகு அதைப் பெரிதாக எண்ணவில்லை. காரை எடுத்துக்கொண்டு வெளியே போகிறபோது, அவரவர் வேலையில் ஈடுபட்டிருக்கும் உரிமையாளர்களுக்காகக் காத்திருப்பதும், காத்திருக்கும் வேளைகளில், உடனொத்த சக காரோட்டிகள் சேர்ந்து பேசிக் கொள்வதும் பழக்கம்தான்.

இப்போது பேச வந்தவனும் தன்னைப் போன்ற ஒருவன் என்று எண்ணியே, அவனோடு பேசினான்.

அந்த மாதிரி சாதாரணமாக உரையாடியபோதும், நிகிலன் தனிப்பட எச்சரித்திருந்ததால், நாகுவின் பார்வையில் கவனமும் இருந்தது!

எந்தக் குழந்தையையும் அழைத்துக் கொள்ளாமலேயே, தான் கிளம்பியதும், தன்னொடு பேசிக் கொண்டிருந்தவனும் கிளம்பிவிட்டதை, அந்தக் கவனம் குறித்தும் கொண்டது!

மறு நாளும் இது தொடரவே, தனிப்படத் தன்னிடம் இந்த வேலையை ஒப்படைத்திருந்த முதலாளியிடம் அவன் இந்த விவரத்தைத் தெரிவித்தான்.

அதற்குள்ளாக சுசிதா, விபு இருக்கும் இடத்தைத் தங்கராசு கண்டுபிடித்துவிட்டது, நிகிலனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது! ஆனால், ஒரு வகையில் இந்த விவகாரம் சீக்கிரமாக முடிவுக்கு வந்துவிடும் என்பது, அவனுக்கு நிம்மதியாகவும் இருந்தது!

அலைந்து ஓய்ந்து போய், விரைவிலேயே தங்கராசு திரும்பிப் போய்விடக் கூடும் என்பதில், நிகிலனுக்கு ஏற்கனவே அதிக நம்பிக்கை இருக்கவில்லை!

அதற்கு, அப்படி நல்ல புத்தி வருவதற்கு, தங்கராசுவுக்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ என்பதோடு, தோற்று சலித்துப் போகிறவன், அப்படியே இருந்துவிடுவான் என்றும்தான், என்ன நிச்சயம்? இப்போது மனைவி சீண்டியதால் வந்தவன், அடுத்து மைத்துனனின் கிண்டலில் மீண்டும் வர மாட்டான் என்று எப்படி நம்புவது?

எப்போது, என்ன விதமாக வில்லன் நெருங்குவானோ என்று கையைக்

கட்டிக்கொண்டு காத்திருக்கும் இந்தத் துன்பம், எப்போது முடிவுக்கு வரும் என்று, இரண்டு நாட்களுக்குள்ளாகவே நிகிலனுக்கு தோன்றத் தொடங்கி இருந்தது!

திடும், திடும் என, மனைவி மகனுக்குச் செய்திருக்கும் பாதுகாப்பு ஏற்பாடு போதாதோ என்ற பயமும், இப்போது பத்திரமாக இருப்பார்களா என்ற சந்தேகமும் ஆட்டிப் படைக்கையில் கலக்கமாகத்தானே இருக்கும்?

இந்த நிலை மாறப் போகிறது, என்பதே அவனுக்கு ஆறுதல்தான்!

தங்கராசு சென்னையிலேயே சுற்றிக்கொண்டு இருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதால் எச்சரிக்கையோடு இருக்குமாறு, சுசிதாவிடம் தெரிவிக்கலாமா என்று யோசித்து, அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

சுசிதாவைப் பொறுத்தவரையில், அவள் கவனமாகத்தான் இருந்தாள். அவளுக்குத் தேவையான ரொட்டி, காய்களைக் கூட, இப்போது அவளது அலுவலக ப்யூனை அனுப்பி வாங்கிக் கொண்டிருந்தாள்! அல்லது, அவளது அலுவலகத்துக்குப் பயன்படுத்தும் நம்பிக்கையான ஆட்டோவில் ஏறிச் செல்வாள்! மொத்தமாகப் பணம் எடுக்கும்போதும், கட்டும்போதும், அந்த அலுவலகத்தில் இதே ஆட்டோவைத்தான் வரச் சொல்வது!

நம்பிக்கை என்பதோடு, அந்த ஆட்டோ ஓட்டுனரே, ஒரு பயில்வான் மாதிரி, பாதுகாப்பாகவும் இருப்பார் என்பதால், நிகிலனே இதற்கு எதிர்ப்பாக எதுவும் சொல்வதில்லை!

ஆயினும் வீட்டுக்கு வந்ததும், மகனை ஒரு பரிதவிப்புடன் தேடுவாள்! அவனை ஒருதரம் தொட்டுத் தடவிப் பார்த்து, அவனுக்கு ஒன்றும் இல்லை என்று திருப்தியடைந்த பிறகுதான் அவளுக்கு மூச்சு நேராக வரும்!

இப்போது தங்கராசு இவ்வளவு முன்னேறிவிட்டான் என்று அவளிடம் சொல்லி, அவளை இன்னும் கொஞ்சம் கலங்க வைப்பதில் என்ன லாபம்?

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி, மனைவி, மகனுக்காகச் செய்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை, நிகிலன் இப்போது இன்னும் கொஞ்சம் அதிகரித்தான்! பக்காவாக!

நண்பன் சரவணனோடும், மூலமாக ஏற்பாடு செய்திருந்த துப்பறியும் நிறுவனத்தாருடனும், காவல் துறை நண்பருடனும், மீண்டும் மீண்டும் கலந்து பேசி, தங்கராசுவை மடக்கும் விதமான ஒரு திட்டத்தை

உருவாக்கி, அதைப் பலமுறை ஆராய்ந்து, ஒத்திகையும் பார்த்து, எந்தவிதத் தாக்குதலுக்கும் தயாராக இருந்தார்கள்!

வாழ்க்கை முழுவதற்கும், தங்கராசு இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூடப் பயப்படும் விதமான திட்டம்!

தங்கராசு அவனது சதியை நடைமுறைப் படுத்தியபோது, அதை முடக்கும் விதமாக நிகிலன் குழுவினரின் திட்டமும், உடனே செயல்படலாயிற்று!

எல்லாம் நல்லபடியாக முடிந்திருக்கும்!

ஆனால் தலைவிதி வேறு விதமாக இருந்தது. எந்த மனைவியின் கலக்கத்தை அதிகப் படுத்தக் கூடாது என்று, அவளிடம் சில உண்மைகளை நிகிலன் சொல்லாதிருந்தானோ, அவள் காரணமாகவே, அவன் அடிபட்டு ரத்தக் களரியில், நடுச் சாலையில் பேச்சு மூச்சின்றிக் கிடக்கும்படி ஆயிற்று!

அத்தியாயம் -31

அதிகம் காத்திருக்கத் தங்கராசுவுக்குப் பிடிக்கவில்லை!

ஏன் காத்திருக்க வேண்டும்?

அந்தத் தில்லை நாயகம் கிழவன் என்னதான் மறைத்தாலும், சுசிதாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தாயிற்று! அவளை ஆட்டி வைக்கும் கருவியாக அவளுடைய பிள்ளையைக் கடத்திக் கொண்டு சென்று ஒளித்து வைக்கும் திட்டமும் தயார்!

அந்த வகையில் தங்கராசுவுக்கு, அவனது கெட்டிக்காரத்தனம் குறித்து ரொம்பவே பெருமை!

சுசிதாவைப் பிடித்துப் போவதுதான் அவனது நோக்கமாக இருக்கும் என்று தில்லைநாயகமும், அவர் சொல்லி சுசிதாவும், இன்னும் வேறு யாரிடமும், அதாவது அவளுடைய புருஷன் என்று இருப்பவனிடமும், அவள் சொல்லியிருந்தால், அவர்கள் எல்லோருமாக நினைத்துக் கொண்டிருப்பார்கள்!

ஏனெனில், மிகவும் சுசிதா எச்சரிக்கையோடு இருப்பது, ஒரு நாள் கவனிப்பிலேயே தெரிந்து போயிற்று!

ஆனால், அவளைக் கடத்திப் பயன் என்ன? மறுப்பாள் என்பது, திருச்சியிலேயே தெரிந்து போன விஷயம்! இப்போதும் அதுதான் நடக்கும்!

இடைப்பட்ட காலத்தில் அவள் போர்க் கலைகள் ஏதும் பயின்று வைத்திருந்தால், இன்னமும் கஷ்டம்! கையில் பிள்ளையோடு மாயமாய் மறைந்து, இன்னொருவனோடு சேர்ந்து இருப்பவள் எதையும் செய்வாள்!

அதைவிட, அவளுடைய உயிரான மகனைக் கொண்டுபோவது மேல் என்று, அடுத்த திட்டத்தை அவன் போட்டதே, அதற்காகத்தான்!

அதனாலேயே, அவன் பணத்துக்காகப் பிள்ளை கடத்த வந்தவர்கள் இன்னும் கொஞ்சம் சூழ்நிலை கவனித்துச் செய்வோம் என்றதை, அவன் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை!

பிள்ளையைக் கொண்டு போனால் அல்லவா, அவன் கையை ஒடிப்பேன்., கண்ணைக் குத்துவேன் என்று மிரட்டி, சுசிதாவைப் பின்னோடு ஓடி வரச் செய்ய முடியும்? இதற்கு, இன்னமுமா அவன் காத்திருப்பது?

எனவே “பணத்தைக் கொடுக்கிறவன் நான்! எப்போது, எப்படி என்று என் சொல்படிதான் செய்யவேண்டும்!” என்று பொறுமையிழந்து விரட்டினான்.

முட்டாளின் மூர்க்கம்! இவர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால், இன்னொரு அடியாள் கும்பலைப் பிடிப்பான்! பணம் அவர்களுக்குப் போய்விடும்!

அத்தோடு, இது பெரிய வேலையும் இல்லை! கூட்டம் இருக்கிற நேரத்தில், ஓர் இரண்டு வயசுப் பிள்ளையைக் கடத்துவது, கடினமா, என்ன?

அதுவும், எதிர்ப் பக்கத்து ஆள் என்று, ஒரே ஒரு டிரைவர் மட்டுமே ! அடிதடி கூடத் தேவையில்லை! ஆளை வழி மறித்தாலே போதும்! டிரைவரைப் பிடிக்க, பிள்ளையைத் தூக்கிவர, பின்தொடர முடியாமல் வழி மறிக்க, கார் ஓட்ட . . .எல்லவற்றுக்கும் சேர்த்தே, ஐந்தாறு பேர் போதும்! இந்தச் சின்ன வேலைக்கு, ஒரு லட்சம் தருகிறேன் என்கிறானே!

எனவே, அன்று விபுவின் பள்ளி முடிகிற நேரத்துக்கு, வழக்கமாகப் பிள்ளைகளை அழைத்துச் செல்லக் காத்திருக்கும் வாகனங்களோடு, வாகனங்களாக, மேலும் சில கார், பைக்குகளும் வந்து, பள்ளியின் முன்னே, அங்கும் இங்குமாக நின்றன! உள்ளே சிலபல மனிதர்களோடு! மேலும் பல வந்துகொண்டும் இருந்தன!

ஆனால், யார், யாரின் வாகனம் என்று அடுத்தவருக்கு எப்படித் தெரியும்?

ஒரு காரினுள் அமர்ந்து, கடத்தப்பட இருந்த சிறுவனுக்காகக் காத்திருந்த தங்கராசுவைப் போலவே, அவன் அழைத்து வந்திருந்த அடியாட்களுக்கும் இதே எண்ணம்தான்!

அவர்களது வாகனங்களோ, அவர்களோ அடையாளம் காணப்பட வழியில்லை என்ற நம்பிக்கை!

ஆனால், அவர்களைப் போலவே அடையாளம் காட்டாமல், வேறு சிலரும் வரக் கூடும் என்று அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை!

ஆனால் அதுவே நடந்திருந்தது!

பள்ளி முடிந்ததும், பிள்ளைகளை அழைத்துச் செல்ல வந்திருந்த மற்றவர்களோடு, டிரைவர் நாகுவும் பள்ளியினுள் சென்றான். எப்போதுமே, ரொம்ப நெரிசலில் இடித்து முண்டியடித்து விபுவைக் கூட்டி வரக் கூடாது என்று அவனுக்கு உத்திரவு!

எனவே, சற்று நேரம் வகுப்பறை வாயிலிலேயே நின்றுவிட்டு, கூட்டம் சற்றே குறைந்ததும், தோளில் பிள்ளையோடு பள்ளியை விட்டு வெளியே வந்தான்.

இரண்டு, மூன்று தினங்களாக அவனோடு வந்து பேசியவன் கையை ஆட்டவும், நாகுவும் அவனைப் பார்த்துச் சிரித்தான்.

அந்தப் புதியவனைப் பற்றி நாகு கூறியபோது, அவனோடு சாதாரணமாகவே பழகுமாறும், அவனை அதிகம் விலக்க வேண்டாம் என்றும், நிகிலன் அவனிடம் கூறியிருந்தான்!

அதன்படியே நாகு சிரிக்க, அவனும் சிரித்த முகமாகவே வேகமாக அருகில் வந்தவன், சட்டென நாகுவின் கைகளை பின்புறமாய் அசையாமல் பிடித்துக்கொள்ள, ஏற்கனவே நெருங்கி வந்திருந்த இன்னொருவனும் அதே வேகத்துடன் விபுவை நாகுவின் தோளிலிருந்து இறக்கித் தூக்கிக்கொண்டு வெகு விரைவாக விலகிச் சென்றான்.

கண் மூடித் திறப்பதற்குள்ளாக நடந்துவிட்ட செயலில் ஒரு கணம் அதிர்ந்துபோன நாகு உடனே சுதாரித்து, விடுபடத் திமிறியபடி, “ஏய் . பிடிபிடி! “ என்று கத்தினான்.

“நாகு ! நாகு!” என்று விபு கத்தியதும்கூட, சுற்றிலும் நகர்ந்துகொண்டிருந்த வாகனங்களின் ஓசையிலும், பிள்ளைகள் பெரியவர்கள் பேச்சிலுமாக, மற்றவர்களின் கவனத்தைக் கவரும் அளவு உயர்ந்து ஒலிக்கவில்லை! அதற்கு வாய்ப்பும் இல்லை!

நாகுவைப் பிடித்திருந்தவன், தானாகவேதான் விட்டானோ, அன்றி நாகுதான் அவனை உதறி, அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டானோ, எப்படியோ விடுதலை அடைந்த நாகு, “பிடியுங்க, பிடியுங்க!” என்று கத்தியவாறு, விபு கடத்தப்படும் திசை நோக்கி ஓட முயன்றான்.

ஆனால், அவனது வழியை மறைத்து ஒரு பைக் குறுக்கே வர, அதிலிருந்த இருவரும் இறங்கி, “என்ன , என்ன? என்ன விஷயம்?” என்று அக்கறையோடு கேட்டான்.

“பிள்ளை, பிள்ளையைக் கடத்துகிறார்கள்! வழியை விடு!” என்று பைக்கைச் சுற்றிச் செல்ல முயன்ற நாகுவைக் கையைப் பிடித்து நிறுத்தி, அவர்கள் மேலும் விவரம் கேட்ட நிதானம், அவனுக்கு ஐயம் தர, அவர்களைப் பிடித்துத் தள்ளிவிட்டு, நாகு மீண்டும் ஓடலானான்!

ஆனால், அதற்குள்ளாக, விபு சென்ற இடமே தெரியாது போக, மலங்க விழித்தான்!

“என்ன?” என்று, போகிறபோக்கில் ஓரிருவர் கேட்டபோதும், யாருமே நின்று, அவனுக்கு உதவ முன்வரக் காணோம்!

எல்லோருமே, அவரவர் ஒரு சிறுவன் அல்லது சிறுமியை அழைத்துப் போக வந்தவர்கள்! சின்னக் குழந்தையோடு, வம்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று எண்ணினார்களோ, என்னவோ? வாகனம் நிறுத்தும் இடம் கூடக் கிட்டத்தட்டக் காலியாகி விட்டிருந்தது!

சுற்றிச் சுற்றிப் பார்த்தால், சாலையில் நாலைந்து கார்களும், சில பைக்குகளும் மட்டுமே இன்னமும் நின்று கொண்டிருந்தன.

ஆனால், எங்கேயுமே விபுவைக் காணாமல் போகவே, நாகு பயந்து கலங்கிப் போனான்! இப்போது, அவன் என்ன செய்வது? பிள்ளை இல்லாமல் எப்படி வீட்டுக்குப் போவது?

அவனது பொறுப்பில் விட்டிருந்த வீட்டு வாரிசு!

கலக்கத்துடன், நிகிலனுக்கு ஃபோன் செய்வதற்காக, அவனுக்கு அளிக்கப் பட்டிருந்த செல்ஃபோனை எடுக்கையில், ஒரு கார் விடாமல் ஹார்ன் அடிக்கவும் என்ன என்று அங்கே பார்த்தான்!

சற்று ஓரமாக நின்ற ஒரு காரில் இருந்து, அந்தக் காரை எடுக்க முடியாமல் முன்னே நிறுத்தியிருந்த பைக்கை எடுக்கும்படி, ஹார்ன் அடித்ததோடு கத்தவும் செய்தார்கள்!

மிகவும் அவசரம் போலும்!

என்னவோ உறுத்தியது அவனுக்கு! இப்படித்தானே, விபுவைத் தொடர்ந்து ஓட முடியாமல், பைக்கில் வந்த இருவர் தடுத்து நிறுத்தினர்! இங்கேயும், அதுதான் நடக்கிறதா?

ஒரு வேளை, காரினுள்ளே விபு இருக்கிறானா? அது தெரிந்து, விபுவைக் காப்பாற்றுவதற்காக, யாரோ இந்த உதவி செய்கிறார்களா? “விபுத் தங்கம் . . “ என்று அலறியவாறு, அந்தக் காரை நோக்கி ஓடத் தொடங்கினான் நாகு!

“நாகு, நில்லு! “ என்று நிகிலனின் குரல் அவனைப் பேர் சொல்லிக் கட்டளையிடவும் திகைத்துத் திரும்பிப் பார்த்தான் அவன்.

அதற்குள், அங்கே நின்று கொண்டிருந்த இன்னொரு காரிலிருந்து இறங்கிய சிலர், என்னவென்று கேட்கும் பாவனையில், ஹாரன் அடித்துக் கொண்டிருந்த முதல் காருக்குப் போனார்கள்!

ஆனால், நின்ற காரின் இருபுறமுமாகச் சென்றவர்கள், திடுமென அதைச் சூழ்ந்து கொள்ள, அவர்களில் இருவர் கைத்துப்பாக்கியை எடுத்து,

காரின் உட்புறம் குறி பார்த்து நிற்க, இன்னொருவர், குனிந்து கையை நீட்டி, காரின் உள்ளிருந்த விபுவைத் தூக்கிக்கொண்டு நிமிர்ந்தார்!

நாகு ஆச்சரியமும் கவலையுமாகப் பார்த்தால், அதற்குள் அவன் அருகில் நின்றிருந்த காரிலிருந்து, "என்ன நாகு, பயந்துவிட்டாயா?" என்று கேட்டபடி நிகிலன் இறங்கினான்!

இறங்கி, "ஒன்றும் பயமில்லை! இதோ, இவர் போலீஸ்காரர்! என்ன நடந்தது என்று, இவரிடம் எல்லாம் தெளிவாகச் சொல்லு! சரவணன் உன் கூட இருப்பார்! சரவணன், எல்லாம் நாம் திட்டமிட்டபடி நடக்க வேண்டும்ப்பா! இனி, இந்தப் பக்கம் அவன் திரும்பிப் பார்க்கவே கூடாது! முழுக்க முழுக்க அது உன் பொறுப்பு!" என்றுவிட்டு, மகனை நோக்கிச் செல்லலானான்.

அதற்குள்ளாகத் தந்தையைக் கண்டுவிட்ட விபு, "அப்பா, அப்பா . . " என்று கத்தியவாறு கைகளை நீட்ட, அவனைத் தூக்கியிருந்த மனிதரும், நிகிலனை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

மிஞ்சி மிஞ்சி ஓர் இருபதடி தூரம் இருக்கலாம்!

ஆனால், அவர்கள் இருவரும் அதைக் கடந்து வந்து ஓரிடத்தில் சேருமுன், என்னென்னவோ நடந்து போயிற்று!

விபுவுக்குப் பள்ளியிலிருந்து திரும்பும்போது குடிப்பதற்காக, இரண்டு சாத்துக்குடி பழங்களைச் சாறு பிழிந்து ஃப்ளாஸ்கில் கொடுத்தனுப்புவது வழக்கம்!

பள்ளியில் ஆடுவதோடு, மதிய வெயிலில் வீடு திரும்பும் பிள்ளை, "தண்ணி, தண்ணி." என்று வயிறு நிரம்பத் தண்ணீரைக் குடித்துவிட்டு, மதியச் சாப்பாட்டைச் சரியாக உண்ணுவதில்லை என்று மீனலோசனி சொல்ல, மாமியாரும் மருமகளுமாக யோசித்து, இப்படிப் பழச் சாறு அனுப்பத் தொடங்கினர்!

இது சரியான முயற்சியாக விபுவும், பள்ளி முடிந்ததும் ஜூசைக் குடித்துவிட்டு, இருபது நிமிஷங்களுக்கு மேலான கார்ப் பயணத்தின் பின் வீடு வந்ததும் நன்றாகச் சாப்பிடலானான்!

ஆனால், விபுவுக்குப் புதிதாக அன்று பிழிந்த சாறு மட்டும்தான் கொடுப்பது! "பிரிசர்வேட்டிவ்" போட்டு, பதப்படுத்தியது எதையும் அவனுக்குக் கொடுக்க, மீனலோசனி விட மாட்டாள். அதில் வீட்டில் எல்லோருக்குமே ஒத்த மனது!

ஆனால், வழக்கமான தினப்படி வேலைகளின் இடையே, இந்தப் புதிய வேலையைச் செய்வதற்கு, சமையல்கார வடிவு அடிக்கடி

மறந்துபோவதும், நினைவு வந்து அவசரமாகச் செய்வதும், அவ்வப்போது நடக்கும்!

அப்படித் தாமதம் ஆகும் சமயங்களில், பள்ளி தொடங்கும் நேரம் தாண்டிப் பள்ளிக்குத் தாமதமாகச் செல்வது விபுவுக்குப் பழகிவிடக் கூடாது என்று, விபுவை நாகு கூட்டிப் போய்விட, வேறு யாராவது, பழச்சாறைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருவார்கள்!

ஓரிரு தருணங்களில், சுசிதாவும் எடுத்துப் போய், மதிய இடைவேளை தொடங்கும்போதே அலுவலக ஆட்டோவில் ஏறி, வேகமாகப் போய்க் கொடுத்துவிட்டுத் திரும்புவது உண்டு!

அப்படியே மகனை ஒரு தரம் பார்த்துவிட்டு வருவது, அவளுக்கு அதிகப்படி சுகம்!

அன்றும் அப்படி எண்ணியே, தாமதமாகத் தயாரிக்கப்பட்ட பழச்சாறை, சுசிதா தன்னோடு எடுத்துச் சென்றிருந்தாள்.

விபுவின் பள்ளிக்குச் செல்லும் சாலை நடுவே பெரிய கற்களால் ஆன தடுப்பு இருந்தது!

எதிர்ப் புறமாக இறங்கி நேராக வந்தால் பள்ளி! ஆனால், அதற்கு அரைக் கிலோ மீட்டர் தூரம் சென்று, முழு வளைவாகத் திரும்பி வர வேண்டும்!

வளைவு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதுதான், விபுவை, பள்ளியை விட்டு வெளியே, அறிமுகமற்ற ஒருவர் தோளில் வைத்திருக்க, அவன் இரு கைகளையும் நீட்டி, ஏதோ கத்துவதை, சுசிதா கண்டாள்.

அறிமுகமற்ற ஒருவர்!

அப்படியானால், அவளுடைய பிள்ளையை யாரோ . . யாரோ என்ன, தங்கராசுவுடைய ஆள் கடத்திக் கொண்டிருக்கிறான்! பிள்ளை பயந்து கத்தக் கத்த!

“விபு!” என்று அவள் போட்ட கூச்சலில், ஆட்டோ ஓட்டி, வண்டியை வேகம் குறைக்க, ஆட்டோவில் இருந்து குதித்து, “விபு, விபு . . “ என்று கதறியவாறு, “சிக்னல்” விழுந்து சீறிப் பாய்ந்து வந்துகொண்டிருந்த வாகனங்களைப் பற்றிய கவனமே இல்லாமல், மீடியமாக வைக்கப்பட்டிருந்த பெரிய கற்களைத் தாண்டிக்கொண்டு, சுசிதா சாலையின் குறுக்கே ஓடி வரலானாள்!

மிகுந்த வேகம்தான்! இன்னும் சில வினாடிகள் கிடைத்திருந்தால், சாலையை முழுதாகத் தாண்டி, மகன் இருந்த பக்கம் அவள் வந்துமிருப்பாள்!

ஆனால், வேகமாக வந்துகொண்டிருந்த ஒரு கார் அவளுக்கு அந்த அவகாசத்தைக் கொடுப்பதாக இல்லை!

மனைவியின் கதறலில் திரும்பிய நிகிலன் நிலைமை உணர்ந்து, மின்னலாய் விரைந்து, அவளைப் பிடித்து, இந்தப் பக்கம் இழுத்துத் தள்ளினான்.

ஆனால், வேக விதிகளின்படி, சமமான எதிர்விசையாக அவன் சாலைக்குள் சென்றுவிட, சுசிதாவுக்குப் பதிலாக, அந்தக் கார், நிகிலனின் மீது மோதிவிட்டு, திடுமென அழுத்தப்பட்ட பிரேக்கினால் கிரீச்சிட்டு நின்றது!

காரினால் மோதப்பட்டு விழுந்த நிகிலன் எழவில்லை! எங்கே, எப்படிப்பட்ட அடி பட்டதோ, அவன் அசையவுமில்லை!

அத்தோடு, நிகிலன் விழுந்த இடத்தில் ரத்தம் பெருகிச் சுற்றிலும் பரவவும், மற்ற எல்லாம் மறந்து, கணவனிடம் ஓடிச் சென்று, அவனருகே மண்டியிட்டு விழுந்து, அவன் முகத்தைத் தொட்டுத் தடவி, “நிக்கி, நிகில், என்னைப் பாருங்கள்!” என்று கதறினாள் சுசிதா!

மனைவியின் கதறலில் தலை திருப்பி, அரை குறையாகக் கண் திறந்து பார்த்த நிகிலன், லேசாக முறுவலிக்க முயன்றவாறே, “விபுவுக்கு ஒன் . . .றுமில்லை, பபயப் . . படா . .தே என்றதோடு மறுபடியும் கண் மூடித் தலை சரிந்தான்!

அத்தியாயம் -32

நிகிலனின் கண்கள் மூடித் தலை சரியவும், சுசிதாவுக்கு ஒரு கணம் எல்லாம் இருட்டிப் போயிற்று!

இனிமேல், உலகம் எப்படி நடக்கும்?

இல்லை! அப்படி ஒன்றும் ஆகாது! நிகிலனுக்கு ஒன்றும் ஆகாது! முதலில் . . .

இருட்டையும், சோர்வையும் விலக்க முயன்றபடி நடுங்கும் கரங்களால் அவனைத் தொட்டுப் பார்த்தால், நாடி துடிப்பதும், துடிக்காததும், அவளுக்கு ஒன்றும் புரியவில்லை!

ஆனால், அக்கம் பக்கம் ஆட்கள் வருவது போலத் தெரியவும், “டாக்டர்! யாராவது ஒரு டாக்டரைக் கூப்பிடுங்களேன். ப்ளீஸ்.” என்று கதறலாகக் கெஞ்சினாள்.

“சற்று நகருங்கள் மேடம்!” என்று யாரோ நிகிலனின் கையைப் பிடித்துப் பார்த்தார்கள்!

“ஆபத்தான நிலைமைதான். இன்னமும் ரத்தம் நிறையச் சேதமாகிக்கொண்டு இருக்கிறது! மருத்துவ மனைக்கு உடனே கூட்டிப் போக வேண்டும்! ஆனால், நாமாகத் தூக்கிப் போவது நல்லதல்ல. ஆம்புலன்சைக் கூப்பிடுங்கள்! என் காரில் முதலுதவிப் பெட்டி . . .”என்று அவர் கூறி முடிக்குமுன், “எங்கே இருக்கிறது?” என்று பரபரப்புடன் எழுந்தாள் சுசிதா!

ஆனால், அதற்குள் முதலுதவிப் பெட்டியையே யாரோ கொண்டுவந்து கொடுக்க, நிகிலனுக்கு அப்போதைக்குத் தேவையானது செய்யப்பட்டது!

தொடர்ந்த இரு தினங்கள் எங்கே எப்படிப் போயின என்று ஒன்றும் தெரியாத நிலை சுசிதாவுக்கு! சாப்பாடு, தூக்கம் என்பதெல்லாம் அவளுக்கு நினைவு கூட வரவில்லை!

நிகிலனுக்கு இன்னமும் சுயநினைவு வரவில்லை என்பது மட்டும்தான் அவள் அறிந்த விஷயம்!

மற்றபடி, அவள் சாப்பிட்டாளா, தூங்கினாளா என்று இப்போது கேட்டால், பதிலும் தெரியாதுதான்!

அந்த நிலை, அவளுக்கு மட்டுமல்ல என்பது, மூன்றாவது நாள் தெரிந்தது!

“என்னம்மா இது? நீங்கள் இரண்டு பேரும், இப்படி ஊண் உறக்கம் இல்லாமல் இங்கேயே கிடப்பதால், அது நம் நிக்கியை எந்த வகையில் பிழைக்க வைக்கும் என்று, இப்படிப் பழி கிடக்கிறீர்கள்? இப்போது, அவன் கூட நீங்களும் இந்த மருத்துவ மனையிலேயே படுத்துக்கொள்ளப் போகிறீர்களா? டாக்டர்கள் நிக்கியை பிழைக்க வைக்க அவகாசம் கேட்கிறார்கள்! அவ்வளவுதானே? அவன் பிழைப்பான்! பிழைப்பான் என்று முதலில் நம்புங்கள்! “ என்று அழுகையும் ஆத்திரமுமாக ஒரு குரல் உயர்ந்து கேட்டது, முதல் முதலாக சுசியின் காதுகளில் கேட்டது!

“பிழைப்பார் . . .நிச்சயம் பிழைப்பார்தானே?” என்று கேட்ட தீனக் குரல், அவளதுதானா?

தம்பி மனைவியைத் திரும்பிப் பார்த்த ரஞ்சனி, துடித்த உதடுகளைக் கட்டுப்படுத்தி, வேகமாகப் பதில் சொன்னாள். “நிச்சயம்! நிச்சயமாய்! மற்றபடி, இந்த மருத்துவமனையில் இத்தனை மருத்துவர்கள் இருப்பது

நோய் என்று வந்தவர்களைப் பிழைக்க வைக்கத்தானே? அப்படியில்லாமல், சப்பாத்தி சுட்டுப் போடுவதாக என்றா இருவரும் நினைத்தீர்கள்? “

வார்த்தைகள் எப்படி இருந்தாலும், நாத்தனாரின் படபடத்த குரல், அவளுள்ளும் இருந்த கலக்கத்தைத்தான் காட்டியது!

ஆனால், சுசியின் மூளையை லேசாக உசுப்பவும் செய்தது!

இருவரும்! இன்னும் யார்?

பக்கத்தில் பார்த்தால், மீனலோசனி, அப்படியே ஓய்ந்து கிடந்தாள்!

பெற்ற வயிறு! இந்தத் தாயின் மகன், அவளைக் காப்பாற்ற வந்து, அடிபட்டுக் கிடக்கிறான்! என்னவோ, தனக்கு மட்டும்தான் வேதனை என்று இருந்துவிட்டாளே!

விபு உடம்பு சரியில்லாதபோது, இதே மாமியார் சாதம் அள்ளி, வாயில் தந்தது நினைவு வந்தது!

இப்படிக் கிடக்கிறாளே! இந்த வயதில்!

மெல்ல “அத்தை . .” என்று கூப்பிடுமுன் குரல் உடைந்து அழுகை வந்தது!

ஆனால், மருமகள் சற்றுத் தெளிவதைக் கண்டதும் அருகில் வந்து, “நாங்கள் யார் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாள். கொஞ்சம் எதையாவது, அத்தையைக் குடிக்கவாவது வை, சுசிம்மா!” என்று அவளிடம் ஒரு பொறுப்பைத் தந்தார் சுந்தரம்!

தீனமாக அவரைப் பார்த்தாள் சுசிதா!

அவளது கண்ணில் இருந்த கேள்வியைப் புரிந்துகொண்டு., “நிச்சயமாகச் சொல்வதற்கு, டாக்டர்கள் அவகாசம் கேட்கிறார்கள். உடைந்திருந்த எலும்புகளைச் சேர்த்தாயிற்று! செய்யக் கூடிய அனைத்தையும் செய்கிறார்கள். ரத்தம் நிறையப் போய் விட்டதால் இந்த நிலையாம்! ஆனால், நிலைமை மோசமாகப் போகாதிருப்பதே, நல்ல அறிகுறி என்றும் சொல்லுகிறார்கள்.”

என்ற சுந்தரம் ஒரு மூச்செடுத்துக் கொண்டு, “எனக்கும் கவலைதான், அம்மா! ஆனால், நம்புவோம்! நம்பிக் காத்திருப்போம்! அதை விட்டு, உண்ணாமல் கிடந்து, நம் உடம்பையும் கெடுத்துக்கொள்வதால் என்ன பயன் சொல்லு! நம்மால் எந்த உதவியும் செய்ய முடியாததோடு, நம்மாலும் தொல்லைதானே ஏற்படும்? “என்று மெதுவாக எடுத்துரைத்தார்!

இடித்துரைத்ததாகவும் சொல்லலாம்!

சொன்னதெல்லாம் அவளுக்கும் சேர்த்துதான்!

ஐசியுவின் பக்கமாக ஒரு தரம் கவலையோடு பார்த்துவிட்டு, சுசிதா மாமியாரிடம் திரும்பினாள்.

மாமனாரோடு, அவள் பேசத் தொடங்கியதுமே, அங்குள்ள காண்டீனுக்குச் சென்றுவிட்ட குணசீலன் தம்பதி, இரண்டு கப் பாலோடு திரும்பி வந்தனர்.

மீனலோசனியை அதற்குள் சுசிதா தயார்ப்படுத்தி வைத்திருக்கவே, அவளைக் கொஞ்சம் பாலைக் குடிக்க வைத்துவிட்டு, ஐசியு கண்ணாடி வழியே, நிகிலனை ஒரு தரம் எட்டிப் பார்த்துவிட்டு வந்து, சுசிதாவும் கப்பைக் கையில் எடுத்தாள்!

ஆனால், வீட்டுக்குப் போய்ச் சற்று ஓய்வெடுத்துக் கொண்டு வருமாறு, கூறியபோது, ஒத்துக்கொள்ள மறுத்தாள்!

“நிக்கி கண்ணைத் திறக்கிறபோது, நான் இங்கே இருக்க வேண்டும், மாமா!” என்று முடித்துவிட்டாள்.

நிகிலன் பிழைப்பான் என்கிற உறுதி இல்லாமல், அங்கிருந்து கிளம்ப அவளுக்கு மனமில்லை என்று புரிந்து, அதற்கு மேல், யாரும் அவளை வற்புறுத்தவில்லை!

சற்றுப் பொறுத்து, “வீட்டுக்குப் போய்ப் பிள்ளைகளுக்கு ஆகாரம் சொடுத்துவிட்டு, வருகிறேன்!” என்ற ரஞ்சனி, சுசிதாவை விசித்திரமாகப் பார்த்தாள்.

அவளாக எதையும் கேளாமலே இருக்கவும், “விபு எங்கள் வீட்டில்தான் இருக்கிறான்! இந்தப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடிக்கொண்டு பத்திரமாக இருக்கிறான்.” என்றாள் ரஞ்சனி, தானாகவே.

அப்படியா என்பது போலப் பார்த்துவிட்டு, மறுபடியும் ஐசியு கதவின் பக்கம் பார்வையைத் திருப்பினாள் சுசிதா!

அழுதுகொண்டே வந்த மனைவியைத் தட்டிக்கொடுத்து சமாதானம் செய்தார் குணசீலன். “நல்லபடியாக சமாளிக்கிறாய் என்று பார்த்தேன். என்னம்மா திடீரென்று, நீ கூட இப்படி?” என்று பரிவோடு வினவினார்.

கண்ணைத் துடைத்துக்கொண்டே, “அதில்லை . . .பிள்ளைக்காகத் திருமணம் என்றார்கள்! விபுவின் நினைவு கூட, இப்போது அவளுக்கு

இல்லையே! இது தெரியாமலே தம்பிக்கு என்னமும் . . ஆ . .ஆகி வி . .. “ என்றவள் மீண்டும் விசும்பினாள்.

“ஷ்! அது போல நினைக்கக் கூட வேண்டாம்! எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்! இப்போது வீட்டில் செய்ய வேண்டியது பற்றி யோசி! நாமும் சீக்கிரமாகத் திரும்பி வந்து, மாமாவை ஓய்வெடுக்கச் செய்ய வேண்டும்! அல்லது, அவரது உடல்நிலை கெட்டுவிடுமே!” என்று குணசீலன் கூறவும், ரஞ்சனியின் மனமும் துக்கத்தை மீறி ஓரளவுக்கு, அப்போதைக்குச் செய்ய வேண்டியதில் திரும்பியது!

காத்துக் கிடந்தவர்களை அதிகம் சோதிக்காமல், நிகிலன் பிழைத்து விடுவான் என்று மருத்துவர்கள் நல்ல வார்த்தை சொன்னார்கள்.

“நோயாளிக்கு நினைவு திரும்புகிற அறிகுறி தெரிகிறது. யாராவது ஓரிருவர் உள்ளே வந்து பார்க்கலாம். ஆனால், உணர்ச்சி வசப்பட்டு ஆர்ப்பாட்டம் பண்ணிவிடக் கூடாது! “என்ற எச்சரிக்கையோடு, உள்ளே அழைத்தார்கள்.

மருமகளோடு எழுந்த மீனலோசனி இறுக்கத்துடன் ஐசியு வாயிலிலேயே நின்றுவிட, மற்றவர்கள் நிகிலனின் படுக்கையின் பக்கம் சென்றார்கள்.

இமைகளுக்கு அடியில் கண் மணிகள் அசைவது தெரிய, சுசிதாவை முன்புறம் இழுத்து நிறுத்தினாள் ரஞ்சனி.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, சிரமத்துடன் நிகிலன் கண்விழித்தான்.

விழித்தவனின் பார்வை லேசாகச் சுழன்று, சுசிதாவின் முகத்தில் வந்து நிலைக்கவும், அவசரமாகக் குனிந்து, “என்னப்பா? என்ன? என்ன செய்கிறது?” என்று பதட்டத்துடன் கேட்டாள் அவள்.

“விபு . .விபுவுக்கு ஒன் . . றுமில்லை . .பயப்ப . . டாதே!” என்று சிரமத்துடன் கூறியவனின் கண்கள் மீண்டும் மூடிக் கொண்டன!

கைகளால் வாயைப் பொத்திக்கொண்டு, ஓசையற்று அழுதாள் அவள்!

நாடி பிடித்து, இமைகளை விரித்துப் பார்த்துவிட்டு, “இது வெறும் உறக்கம்!” என்றார்கள் மருத்துவர்கள்!

போதை, குடி போன்ற கெட்ட பழக்கங்களால் சீரழிக்கப் படாத ஆரோக்கியமான உடம்பு. இளமை இரண்டும் இருக்கவே, பின்னடைவு

இன்றி, நிகிலனின் உடல் நிலை சீராகக் குணமடையலாயிற்று! கண் விழித்த மூன்றாம் நாளே, ஐசியுவிலிருந்து தனியறைக்கு வந்துவிட்டான்.

மற்றவர்கள் வீட்டுக்கு வந்து போகையில், சுசிதா மட்டும் மருத்துவமனையிலேயே தங்கினாள். நிகிலன் பிழைத்துவிடுவான் என்றதும், வீட்டுக்கு வந்து, துணிகளை எடுத்துப் போனதோடு சரி!

மருத்துவ மனையில் இருக்கும் நோயாளிக்குத் துணையாக இருப்பவர் செய்யும் கடமைகள்தான். மருந்து, ஆகாரம் தருவது போன்றவை.

ஆனால், தூக்கமும் விழிப்புமாக இரு தினங்கள் கிடந்தவன், மூன்றாம் நாள் அவளை அழைத்து, "இதெல்லாம் நீ செய்துதான் ஆக வேண்டும் என்று கட்டாயமில்லை, சுசி. பரிதாபப் பட்டும் செய்ய வேண்டாம்! மருத்துவமனையிலேயே பார்த்துக் கொள்வார்கள்.எனவே, லீவு போட வேண்டிய அவசியம் இல்லாமல், நீ வேலைக்கே போய்வரலாமே! " என்று கூறினான்.

ஒருகணம் அசையாமல் நின்றவள், விழி உயர்த்திப் பார்த்து, "நான் இங்கே இருப்பது பிடிக்கவில்லையா?" என்று, கட்டுப் படுத்திய குரலில் கேட்டாள் சுசிதா.

"அப்படியில்லை!" என்றான் அவன் அவசரமாக. "நீ இப்போதுதானே, வேலையில் சேர்ந்தாய்? அதற்குள் அதிக விடுமுறை எடுப்பது பிரச்சினை ஆகக் கூடுமே என்பதால் . . உனக்கு எதற்கு வீண் கஷ்டம்? அத்தோடு விபுவையும் பிரிந்து இருக்க வேண்டியதாக . . . "

"இதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்வோமே!" என்று அவள் முடித்துவிட, அதற்கு மேல், அவனும் ஒன்றும் சொல்லவில்லை!

ஆனால், இருவர் முகத்திலும் யோசனை இருந்ததை, அடுத்தவர் அறியாமல் இல்லை.

ஒருநாள், சரவணன் வந்தான்!

"அன்று என்ன ஆயிற்று?" என்று நிகிலன் கேட்க, அவன் நண்பன் பதில் சொன்னான்.

"எல்லாம் திட்டப்படி செய்தாயிற்று! ஆனால், திடுமென சிஸ்டர் வர, அவர்களைக் காப்பாற்றுகிறேன் பேர்வழி என்று நீ அடிபட்டு விழ, சற்று நேரம் எனக்குத்தான் கதி கலங்கிப் போயிற்றப்பா! இது போல நிறையப் பார்த்துப் பழக்கப்பட்டுப் போனதாலோ, என்னவோ, உன் போலீஸ் நண்பர், துப்பறியும் நிறுவனத்தார் எல்லோரும், அவரவர் வேலையிலேயே குறியாகத் திடமாக நின்றுவிட்டார்கள்! உன்னிடம் ஓடி

வர இருந்த என்னை நிறுத்தி, அங்கே டாக்டர் இருப்பது தெரிகிறது., பார்த்துக் கொள்வார்கள், நாம் நிகிலன் விரும்பியபடி, இங்கே வேலையைப் பார்ப்போம் என்று, உனக்குத் தேவையானதைச் செய்ய ஓர் ஆளை மட்டும் அனுப்பிவிட்டு, நாம் திட்டமிட்டபடி எல்லாம் செய்தார்கள்!

“போலீசைக் கண்டதும், தங்கராசு ஏற்பாடு செய்த அடியாட்கள் பறந்துவிட்டார்கள்! லஞ்சம் கொடுத்து சாதிக்கலாம் என்று அவன் நினைத்தான் போல! ஆனால், அதையே சாக்காக வைத்து கண்ணபிரான் சார் ஓங்கி ஒன்று வைக்கவும், ஆள் ரொம்பவும் செல்லப் பிள்ளையாக வளந்திருப்பானோ, என்னவோ, ஒரேயடியாக மிரண்டு போனான்! சொன்னதெல்லாம் எழுதித் தந்தான்! கேட்டால் வெற்று ஸ்டாம்ப் பேப்பரில்கூடக் கையெழுத்துப் போட்டுத் தந்திருப்பான் போல! அவ்வளவு நடுக்கம்! சிஸ்டர் குடும்பத்தில் யாருக்கு, என்ன என்றாலும், முதலில் பிடிக்கப் போவது அவனைத்தான் என்றதும், ஆள் அழுதுகொண்டே கும்பிட்டான்! எப்படியோ, ஒரு வழியாக அந்த விஷயம் நல்லபடியாக முடிந்தது! தங்கராசுவால், இனி உங்களுக்குப் பிரச்சினை வராது!” என்று நீளமாக, முழுதும் சொல்லி முடித்தான் சரவணன்.

காஃபியைக் கப்பில் ஊற்றி அவன் முன்னே கொண்டுவந்து வைத்துவிட்டு, “எடுத்துக் கொள்ளுங்கள்!” என்று உபசரித்துவிட்டு, “நீங்கள் எல்லோருமாக, இவ்வளவு செய்திருக்கிறீர்கள்! ஒன்றும் தெரியாமல் குறுக்கே வந்து, நிகிலன் உயிருக்கே ஆபத்தைக் கொண்டுவந்துவிட்டேனே! “ என்றாள் சுசிதா வருத்தத்துடன்.

“நீ கொண்டுவரவில்லை! நடந்தது, நானே இழுத்துக் கொண்டதுதான். உன்னிடம் சொன்னால், விபுவுக்காகப் பயந்து அனாவசியமாகக் கலங்குவாயே., பிரச்சினையைத் தீர்த்துவிட்டு, அப்புறமாகச் சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்தேன்! அது வேறு விதமாக இடித்துவிட்டது!” என்றான் நிகிலன்.

“பரவாயில்லை! அதுவும் நல்லதுதான்! இனிமேல், நல்லது, கெட்டது எதுவானாலும், சிஸ்டருக்குத் தெரியாமல் விரல் அசைக்க உனக்குத் தெரியம் வருமா? கைக்குக் கிடைத்த குடுமியைப் பிடித்த பிடி விட்டுவிடாதீர்கள், சிஸ்டர்!” என்று சரவணன் கேலியாகக் கூற, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது!

சிரிப்பொலியைக் கேட்டபடியே வந்த மருத்துவரும், “மறுநாள் வீட்டுக்குப் போகலாம்.” என்று நல்ல சேதியைச் சொன்னார்.

வீட்டுக்குப் போனதும் விரைவிலேயே தில்லைநாயகம் வந்தார்.

முன்பு அலுவலகத்தில் கூட அவளைப் பாராதவர், இப்போது வீட்டுக்கே வந்தார்!

நிகிலனை ஓய்வாகப் படுத்திருக்கச் சொல்லிவிட்டு, சுசியிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

“உன்னைக் காப்பாற்றுவதற்காக, உயிரைக் கொடுக்கிறான்! இன்னமும், அந்தத் தப்பையே நினைத்துக்கொண்டு இருவர் வாழ்வையும் கெடுப்பாயாம்மா?” என்று அவர் சற்றுக் கடுமையாகக் கேட்கவும், அவளுக்கு முகம் வாடிப் போயிற்று!

இன்னும் கூட அவளுக்குத் தெரியும்! ஆனால், அவனது யோசனையும், அதற்கு மேல் ஒன்றும் சொல்லாதிருப்பதும் கூடத் தெரியுமே! அப்படியிருக்க . . .

சமாளித்துக்கொண்டு, “அப்படியில்லையே, அங்கிள்! அவர் கூடவே இருந்து எல்லாம் செய்கிறேனே!” என்றாள் அவள்.

அவளை கூர்ந்து பார்த்துவிட்டு, “உன் பெற்றோர் மரணத்தையும் நிகிலனையும் சேர்த்து எண்ணி, இன்னமும் குழம்பிக் கொண்டிருக்கிறாயா, சுசிம்மா?” என்று வெளிப்படையாகக் கேட்டார் அவர்!

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு!

இதுதானா? அவள் இன்னமும் யோசிப்பதன் காரணம், இதுவேதானா? கடவுளே!

அத்தியாயம் -33

நிகிலன், அவனது உயிரையும் திருணமாக மதித்து, அவளைக் காப்பாற்றியது சுசிதாவுக்கும் தெரியும்!

தெரிந்தது, அது மட்டுமல்ல!

அடிபட்டு விழுந்து, உடம்பெல்லாம் ரத்தம் வழிய, உணர்வு மயங்கிக் கொண்டிருந்த அந்த நிலையிலும், மகனுக்காக அவள் அஞ்சி வருந்தக்கூடாது என்பதற்காக, மகனுக்கு ஒன்றுமில்லை., பயப்பட வேண்டாம் என்று அதை மட்டும்தான் சொன்னான்!

அதே போல, மூன்று நாள்ப் போராட்டத்திற்குப் பிறகு உணர்வு திரும்புகிற அந்த நேரத்திலும், அவளது வருத்தம் போக்குவதுதான், அவனுக்கு முதன்மையாக இருந்தது!

இதற்கு மேலும், கணவனின் அன்பு புரியவில்லை என்றால், அவள் வெறும் ஜடமாகத்தான் இருக்க வேண்டும்!

அவளிட்ட நிபந்தனை! மீறுவதாக இல்லை என்றபோதே, நல்லபடியாகக் குடும்பம் நடத்தும் ஆசை உண்டுதான் என்றும் ஒத்துக் கொண்டிருக்கிறான்!

சம்மதமாய் அவளது ஒரு சொல்தான் தேவை!

ஆனால் . . . இன்னதென்று சொல்ல முடியாத கலக்கமும் இவளுக்கு இருந்தது!

அந்த "ஆனாலி"ன் காரணத்தைத் தில்லைநாயகம் பிட்டு வைத்தபோதுதான், அவளே, அதைச் சரிவரப் புரிந்து கொண்டாள் எனலாம்!

சுசிதா திகைத்து நோக்கவும், "பாரம்மா, அப்போது நடந்தது தெரிந்து, தங்களுக்காக நடந்தது என்று அவர்கள் தற்கொலை செய்துகொண்டிருந்தால், இந்தக் குழப்பத்துக்கு ஓரளவு காரணம் இருப்பதாக ஒத்துக் கொள்ளலாம்! ஒரு விபத்தாக, விதியால் நடந்ததற்கு, நிகிலனை எப்படிப் பொறுப்பாளியாக்க முடியும்?" என்று அவர் சொல்லுகையில், குறுக்கிட்டு, "என்னுடைய பிழையையும் நான் மறுக்கவில்லையே, அங்கிள்! நானும் பொறுப்புதான்! " என்றாள் பெண்.

ஆனால், சுசியின் பேச்சில், பொறுமையிழந்து பெரியவர் குறுக்கிட்டார். "அவர்களது இறப்புக்கு, உங்கள் இருவரில் யாருடைய செய்கையுமே காரணம் இல்லை என்பதைத்தான் நான் இப்போது சொல்லிக்

கொண்டிருக்கிறேன்!” என்றார் சற்று அழுத்தமான குரலில்!

“ஆனால் . . .”

“எனக்கு நன்றாக யோசித்து பதில் சொல்லு. உன் தந்தையைக் காப்பாற்றுவதற்காக, நீ இந்த மாதிரி ஒரு தவறான செயலில் ஈடுபடப் போகிறாய் என்று, ஒரு சின்ன சந்தேகமாவது, உன் பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கும் என்று உனக்குத் தோன்றுகிறதா? “

“இஇல்லை! வாய்ப்பே இல்லை! அவர்கள் கோயிலுக்குப் போய்ப் பூஜையை முடித்துவிட்டுத் திரும்பும் வரை, நாங்கள் சினேகிதர்கள் சேர்ந்து சுற்றப் போவதாகத்தான் சொல்லியிருந்தேன். யார்,யார் போகிறோம் என்றுகூடச் சொல்லாததால், நட்பு வட்டத்தில் ஓரிருவரைப் பார்த்திருந்தால்கூட, சந்தேகப் பட வாய்ப்பில்லை! சந்தேகப் பட்டிருக்கவும் மாட்டார்கள் என் மேல் அவ்வளவு நம்பிக்கை!” என்றவளுக்கு அடக்க முடியாமல் அழுகை வந்தது!

அவர்களைப் போய் ஏமாற்றினாளே!

“பிறகு அழலாம்!” என்ற கடுமையில் அவளது அழுகை நின்றது!

“அங்கிள். . .?” என்று விழித்தாள் அவள்.

“ஆமாம்! இப்போது அழுவதை விட முக்கியமானது, அவர்களுக்கு நடந்தது விபத்து என்பது குறித்து எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என்பதுதான்! அப்படி இருக்க, இந்த மாதிரி வந்த சொத்தை அனுபவிக்கக் கூடாது என்று அவர்கள் உயிரை விட்டதாக, நீ எப்படிச் சொல்லலாம்? அத்தோடு, அந்தப் பத்து லட்சத்தில், அவர்களது சொத்து மதிப்பு முழுவதும் அடங்கி விடுமா? அப்படி ஒரு காரணத்துக்காக அவர்கள் இருவரும் உயிரை விட்டதாகச் சொல்வது, மூளையற்ற முழுப் பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை? “

எப்போதும் கனிவாகப் பேசும் தில்லைநாயகத்தின் இந்தக் கடுமையான பேச்சு இரு மடங்கு வலுவுடன், ஓங்கி அறைந்து அவளை எழுப்பியது!

“அது மட்டுமில்லாமல், தங்கள் உயிராக நினைத்திருந்த உன் எதிர்காலத்துக்காக எந்த ஏற்பாடும் செய்யாமல், உயிரை விடுவதற்கு, அவர்கள் என்ன பொறுப்பற்ற, அறிவு கெட்ட முட்டாள்களா?”

“அங்கிள், ப்ளீஸ்! அப்பா, அம்மாவை அப்படியெல்லாம் பேசாதீர்கள்!” என்று தவிப்புடன் கேட்டுக் கொண்டாள் பெண்.

“நீ நினைக்கலாம்! நான் சொல்லக் கூடாதா?”

“நான் ஒன்றும் . . .” என்று வேகத்துடன் தொடங்கிய சுசிதா சட்டென அடங்கினாள்.

அருவருப்பினால் பெற்றவர்கள் போய்விட்டதாகவே அவள் எண்ணினாள்தான். ஆனால், அவர்களது உள்ளுணர்வில் ஏதோ தோன்றி, ஒரே ஒரு வினாடி உயிர்ப் பற்றை விட எண்ணியிருந்தாலும், அந்த ஒரு வினாடியிலும், அவளை மறக்கிறவர்கள் அல்லவே, அவளை பெற்றவர்கள்! அவளது கற்பனை சரியென்றால், அவளுக்காகவே உயிரோடு அல்லவா இருந்திருப்பார்கள்!

சுசிதாவின் முகத்தில் குழப்பம் தெரியவும், தில்லைநாயகத்தின் குரலும் கனிந்தது!

“தப்பும்மா! எல்லாமே, நாம் பார்க்கிற விதத்தில்தான் இருக்கிறது! உயிரை விடுவதும் வைத்துக் கொள்வதும், நம் கையில் இல்லை! என்னவென்று உணரக் கூட அவகாசம் இல்லாத உடனடி மரணம் உன் பெற்றோருடையது என்கிறது, போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்! அப்படிப்பட்ட மரணத்துக்கு உன் விருப்பப்படி ஒரு காரணம் கற்பித்துக்கொண்டு, நீயும் வாடி, பிறரையும் வாடவைத்து . . . நியாயமாம்மா? அதைவிட, மீண்டும் கேட்கிறேன் சொல்லு, உன் வருத்தமும், வாடலும் உன் பெற்றோருக்குமே சம்மதமாக இருக்குமா? வாழ்ந்த போதெல்லாம் அவர்களது ஒரே குறிக்கோளே, நீ மகிழ்ச்சியோடு இருப்பதுதானே?”

யோசிக்க அவகாசம் கொடுத்தவர் போல, சில வினாடி பேசாதிருந்துவிட்டு, மீண்டும் தொடங்கினார். “நிகிலனுக்கு நேர்ந்த விபத்து பற்றி, ராமநாதன் தகவல் கொடுத்து வந்தேன். ஆனால், ராமநாதனிடம் சொல்லச் சொன்னது, குணசீலன். நான் வருவது தெரிந்து, கணவனும் மனைவியுமாக வந்து, என்னைச் சந்தித்துப் பேசினார்கள்! பிரிந்து வாழ்ந்த அவர்களைச் சேர்த்து வைத்தது, நீதானாமே!

“குணசீலனிடம் உயிர் பற்றி அழகாகச் சொன்னாயாமே! சொல்வதெல்லாம் நமக்கும் நடக்கலாம்தானே? இந்த விபத்தில் நிகிலனுக்கு உயிர் போயிருந்தால் . . “

“ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள், அங்கிள்! என்னால் தாங்க முடியாது!” என்று பதறினாள் சுசிதா!

“சொல்வதே தாங்க முடியவில்லை என்கிறாய்! அப்படியானால், உனக்கும் அன்புதானே? மேலும், அது போலவே நிகிலனுக்கு நடந்திருக்கவும் கூடும்தானே? நடந்திருந்தால், வாழ்நாள் முழுவதும்,

அது, உனக்கு எப்படிப்பட்ட சித்ரவதையாகிப் போயிருக்கும்? தப்புக்குத் தண்டனை உண்டுதான்! ஆனால், எப்படிப்பட்ட தண்டனைக் காலமும் ஒரு நாள் முடியவேண்டும் அல்லவா? யோசி, இரண்டு பேருமே, நிறைய அனுபவித்து விட்டீர்களே, இது போதும்தானே?"

நீர்த் திரையிட்டவிழிகளை உயர்த்தி நோக்கி, "ஆமாம், அங்கிள்." என்று தலையாட்டினாள் அவள்.

புன்னகை விரிய, "ஆனால், இன்னமும் வேலையை விடுவதாகச் சொல்லக் காணோமே!" என்று விடாமல் கேட்டார் பெரியவர்!

"விட்டுவிடுகிறேன், அங்கிள்!" என்றாள் அவள். "அந்த வேலை மிகுதியாகத் தேவைப்படுகிற பெண்கள் இருப்பதாகச் சொன்னீர்களே! அவர்களில் யாருக்காவது வேலையைக் கொடுக்கச் சொல்லுங்கள், அங்கிள்."

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு, தில்லைநாயகம் கிளம்பிவிட்டார்.

அன்று வரை நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த சுமை ஒன்று இறங்கிவிட்டது போன்ற உணர்வு சுசிக்கு!

ஆனால், தில்லைநாயகத்தின் வேறு சில வார்த்தைகள், பசையிட்டாற்போல அவளது மனதில் ஒட்டிக் கொண்டன. "எல்லாமே நாம் பார்க்கிற விதத்தில்தான் இருக்கிறது" என்றாரே!

அப்படியானால் . . .

அவளது இன்னொரு பார்வையும் தவறாக இருக்குமா?

வீட்டுக்கு வந்த பிறகு, பழைய வழக்கம் தொடர, இரவில் தூங்குமுன் விபுவை எட்டிப் பார்த்துவிட்டே, நிகிலன் தன்னறைக்குச் செல்லலானான்.

ஆனால், முன் போலன்றி, சுசிதா கணவன் பின்னோடு சென்று, நிகிலன் அறையில், அவனுக்குத் தேவையான எல்லாம் இருக்கிறதா என்று சரிபார்த்துவிட்டுத் திரும்புவது வழக்கமாகிக்கொண்டு இருந்தது.

மருத்துவமனையில் பழகி விட்டதாலோ, என்னவோ, அவள் வந்து, முதலில் மருந்து மாத்திரைளும் தண்ணீரும் எடுத்துக் கொடுப்பதற்காக, அவனும் காத்திருப்பான்!

மாத்திரை கொடுத்து, அதை அவன் உட்கொண்ட பிறகு, எக்காரணம் கொண்டும் தரையில் படுக்கக் கூடாது என்று வற்புறுத்தி, அவன் கட்டிலில் படுத்துக்கொண்ட பிறகே, சுசிதாவும் தன்னறைக்குத்

திரும்புவாள். மாத்திரைகள் முடிந்த பிறகும், அவன் அறைக்குச் சென்று, ஏதேனும் தேவைப்படுகிறதா என்று பார்த்துவிட்டே, திரும்பி வந்து கொண்டிருந்தாள் அவள்.

அன்றும் அதுபோல, அவனது கட்டிலில் தலையணை, விரிப்புகளைச் சரி செய்தவள் சற்றுத் தயங்கி நின்றாள்.

“சுசி . .?” என்றவனின் முகத்திலும், கேள்வியை விட எதிர்பார்ப்பே இருந்தது!

யோசனையோடு அவனைப் பார்த்து, “நாம் சற்றுப் பேச வேண்டும் என்று நினைத்தேன். உங்களுக்குத் தூக்கம் வரவில்லை என்றால் . . . “ என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தி,

கேள்வியாக அவனைப் பார்த்தாள் மனைவி.

லேசாகச் சிரித்தான் நிகிலன்.

“என்ன?”

“நீ பேச வேண்டும் என்ற பிறகு, என் பக்கம் வருவதற்குத் தூக்கத்துக்கு ஏதும்மா, தைரியம்?” என்றவன், அவள் முகத்திலும் புன்னகையின் கீற்று ஒன்று தோன்றி மறையவும், தொடர்ந்து, “என்ன பேச வேண்டும், சொல்லு!” என்று கேட்டான் .

அப்போதும், அவளுக்குத் தயக்கம்தான்! அவள் விரும்பிய பதில் அல்லாமல், வேறு ஏதாவது சொன்னான் என்றால், அப்புறம் என்ன செய்வது? அதைச் சிந்திக்க அவளால் முடியவுமில்லை., மனமுமில்லை!

ஆனால், தில்லைநாயகம் அங்கிள் சொன்னது போல, எந்த ஒரு தண்டனையும் முடிந்துதான் ஆக வேண்டும்! இது தண்டனைக் காலம் முடிந்து, சுகப்படுகிற நேரம்! எல்லாம் சரியாகத்தான் நடக்கும்!

“சுசி?”

ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு, சுசிதா கேட்டாள். “நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்! முதல் முதலில் என்னைப் பார்த்தபோது, உங்களுக்கு எஎன்ன தோன்றியது?”

சற்றும் யோசியாமல், “அழகான பூ! அன்றலர்ந்த பூ மாதிரி என்ன அழகு என்று நினைத்தேன்!” என்றான் அவன்.

அவள் பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்கவும், “பளீரென்று இருந்த அந்த அழகுக்கு ஏற்றவாறு உன் பேச்சில் புத்திசாலித்தனத்தை எதிர்பார்த்தபோதுதான், நீ அவமதிப்பாகப் பேசினாய். முள் உள்ள பூவாக உன்னை நினைத்து, அந்த முள்ளை ஒடிக்க வேண்டும் என்று . . .

அந்த வயதில், எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல் நிறையப் பணத்தடன் எனக்கு, நினைத்ததைச் சாதித்துப் பழக்கமா. . . சாரி!" என்றான், குரலில் வருத்தத்துடன்.

"ஏன் அப்படிப் பேசினேன் . . " என்றபோது, அவளது குரலிலும் வருத்தம் இருந்தது! "என்னவோ உங்களைப் பார்த்தபோது, புரியாத ஒரு குழப்பம் . . . என் அழகான உலகத்தில் எதையோ தலைகீழாக மாற்றப் போகிறீர்கள் போல ஒரு பயமும் படபடப்பும் . . . அது வேறு மாதிரிப் படபடப்பு என்று இப்போது தெரிகிறது! ஆனால், அப்போது ஏதோ அபாய அறிவிப்பாகவே தோன்றியது! அதற்குச் சரியாக அப்பாவும் உங்களைப் பார்த்துப் பயப்பட்டது போலத் தோன்றவும், உங்களை அங்கிருந்து விரட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணி, அப்படிக் கண்டபடி பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். ஒரு வேளை . . . ஒருவேளை, நான் அப்படிப் பேசாமல் இருந்திருந்தால்? கேலி, கிண்டலாகப் பேசியிருந்தால் . . . மோதல் . . அப்புறம் கதைகளில் வருகிற மாதிரி, நமக்குள் . . . "என்று ஆவலாக அவனைப் பார்த்தாள் சுசிதா.

அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "உன்னிடம் பொய் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை, சுசி! " என்று நிகிலன் அமைதியாகக் கூறவும், அவள் முகம் சட்டென வாடிக் கூம்பியது!

அவளுக்கு அதிகப்படி ஆசைதான் போலும்!

உதட்டைக் கடித்துக்கொண்டு அவள் நிற்கையில், "அப்போது உன்னை மிகவும் சின்னப் பெண்ணாகத்தான் நினைத்தேன். ஒரு சின்னப் பெண்ணுக்கு இவ்வளவு துடுக்கா என்று என்பதுதான் பெரிதாகத் தெரிந்தது! ஆனால், உன் முகம் மறக்கவில்லை! அந்தக் கோபமும், கொதிப்பும்! அதைத் தேள்க் கொடுக்காகத்தான் முதலிலும், தொடர்ந்த மூன்று ஆண்டுகளும் கூட நினைத்தேன். ஆனால், பிறகு அதுவே வேறு மாதிரிப் புரிந்தது! பிராயச்சித்தம் என்று ஓடி வந்தேனே! அன்றைய ஒரு பார்வையில், இனி உன்னை விட முடியாது என்று எனக்குப் புரிந்துபோயிற்று! அப்போதுதான், இந்த மாதிரி யாரையும் அடக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது இல்லையே என்பது மனதில் பட்டது! அதிலும், அத்தானைப் பற்றிய உண்மையை அறிந்து திரும்பினேன் பார், அன்றுதான், இனி என் உயிர்ச் சக்தியே நீதான்., நீயின்றி, நான் ஒன்றுமே இல்லை என்று தெரிந்துகொண்டேன்! " என்று நிறுத்தி, மனைவியைப் பார்த்தான் அவன். லேசாக முறுவலித்து, "என்ன? இப்போது உன்னைப் பற்றிச் சொல்வது இலகுவாக இருக்குமா?" என்று மென்மையாகக் கேட்டான்.

ஆம் என்பது போலத் தலையசைத்துவிட்டு அவள் சொன்னாள்!
“முதலிலேயே எனக்குப் பாதிப்புதான் என்று நினைக்கிறேன்! வெறுப்புக்கும், விருப்புக்கும் இடையில் இருப்பது மெல்லிய கோடுதான் என்று படித்திருக்கிறேன்! ஆனால், அப்போது புரிந்துகொள்ளத் தெரியவில்லை! பிறகும் . . .நீங்கள் தரையில் படுத்தது, சரியாக உண்ணாதது எல்லாம் கஷ்டமாக இருந்தாலும், அப்போதும் உண்மைக் காரணத்தை யோசிக்கவே இல்லை! . . வரவேற்பன்று . .அப்புறம், அண்ணி வீட்டு விருந்தின்போது . . . அந்த ஏக்கங்களைக் கூட, எரிச்சலாக மாற்றியதோடு இருந்திருக்கிறேன்! அந்த அளவுக்கு, என் பெற்றோரின் மரணத்தை உங்களோடு இறுக்கி முடிச்சுப் போட்டு, புத்தியை மழுங்கடித்து, அங்கிள் சொன்னது போல, நானும் வாடி, உங்களையும் வாட்டிவிட்டேன்! கடைசியாகப் பெரிய அடி விழுந்து, அந்த அதிர்ச்சியல்லவா, உண்மையை எனக்குப் புரிய வைத்திருக்கிறது! “ என்று வருத்தத்துடன கூறும்போதே, மருத்துவமனை நினைவில் உடல் சிலிர்த்தது, அவளுக்கு!

“ஒரொரு சமயம் என் மனம் இளகினாலும், தீக்கங்கு சூடிழப்பது எப்படி சாத்தியம் என்று எனக்குள்ளேயே வாதிட்டுப் பழைய நிலைக்கே போய்விடுவேன்! ஆனால், ரத்தத்தை ஊற்றி அணைக்கும்போது, சூடு எப்படி நிலைக்கும்?

“பாதி உயிரை விட்டல்லவா, எனக்குப் புரிய வைத்திருக்கிறீர்கள்! எனக்காக உயிரை விடத் துணிந்ததில் உங்கள் அன்பும், நீங்கள் இல்லாமல் எனக்கு ஒன்றுமே இல்லை என்று உணர்ந்ததில் என் மனமும், அப்போதுதானே முழுசாகப் புரிந்தது! இந்த இரண்டும் புரிவதற்கு, உங்களை எவ்வளவு கஷ்டப்பட வைத்துவிட்டேன்!” என்றாள் கண்ணீர் மல்க!

தானாக அவள் புறம் சென்ற கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, “நான் உன்னை வருந்த வைத்ததை விடவா? நம்முள் தோன்றியது உயிர்ப் பொறி என்று தெரியாமல், இருவருமேதான், அடுத்தவரை வருத்தப் படுத்தியிருக்கிறோம்!” என்று ஆழ்ந்த குரலில் கூறியவன், தொடர்ந்து, “ஆனால், இதற்கு ஓர் அருமையான தீர்வு இருக்கிறது! “ என்றான் மெதுவாக.

“என்ன அது?”

“பழக்கமானதுதான். பிராயச்சித்தம்! இருவருமே ஒருவருக்கு ஒருவர் ஏதேனும் பிராயச்சித்தம் செய்து, அடுத்தவரை வருத்தியதை ஈடு செய்துவிடலாம்!” என்றான் சாதுவாக.

சீரியசான மனநிலையை மாற்ற எண்ணுகிறான் என்பது, அவனது குரலில் புரிந்தது!

அதுவும் சரிதானே? நெஞ்சுக் கூட்டுக்குள் அடைபட்டுக் குழப்பியடித்துக் கொண்டிருந்த அத்தனையையும் ஒளிவு மறைவின்றிக் கொட்டியாயிற்று! பளுவும் மறைந்துவிட்டது! இனியென்ன? உல்லாசம்தானே?

ஆவலாக நோக்கி, "எப்படியோ?" என்று கேட்டாள் அவள்!

"கோடு கிழித்தவளே கேட்கிறாய்! சொன்னால் அடிக்க வருவாயோ என்று பயம் . . மாக இருக்கிறதே!" என்றான் அவன் பயந்தவன் போல.

சிட்டுக் குருவியாய்த் தலை சரித்து நோக்கி, "சொன்னால்தானே அடி? சரி, எழுதிக் கொடுங்கள்!" என்றாள் மனைவி.

"நான் மட்டுமா? நீயும்தானே பிராயச்சித்தம் செய்கிறவள்! நீயும் எழுது!"

"என்னவென்று?"

"அதை நீதான் முடிவு செய்ய வேண்டும்!"

"தப்பாக எழுதிவிட்டால்?"

"ஒத்த மனம் இருந்தால், தப்பாக எப்படி எழுதுவாயாம்?"

"ஓ! அப்படி ஒன்று இருக்கிறதோ?" என்று விழி விரித்து அவனைப் பார்த்தாள் அவள்.

அவன் முறுவலிக்கவும், அவனது மேஜைக்குச் சென்று இரண்டு காகிதங்களையும் பால் பேனாக்களையும் சுசிதா எடுத்து வந்தாள் . "இந்தாருங்கள். எழுதுங்கள்!" என்று கொடுத்தாள்.

"சுசி . . ."

"பிராயச்சித்தம் பற்றிச் சொன்னவர் நீங்கள். அப்புறம் என்ன தயக்கம்?"

"ரொம்பத் தைரியமாகச் சொல்லுகிறாய்!"

"தைரியத்துக்கு என்ன? நீங்கள்தான் முதலிலேயே குறிப்புக் கொடுத்துவிட்டீர்களே!"

உடனே புரிந்து, "ஓ! அது ஒன்று இருக்கிறதோ?" என்று கேட்டுச் சிரித்தான் அவன்.

இருவரும் எழுதியது ஒன்றேதான்! "விபுவுக்குத் தங்கை. அல்லது தம்பி"

கண்ணில் சிரிப்புடன், " "கோடு கிழித்தவ"ளில் கண்ட குறிப்பா? ஆனால், தம்பி, தங்கை என்றுவிட்டு, அங்கேயே நின்றால் எப்படி?"

என்று கேட்டு, ஆவலாகக் கைகளை விரித்து, அவளை நெருங்கினான் நிகிலன்.

கன்னம் சிவக்க, கணவனின் அணைப்பில் வாகாகப் பொருந்திக்கொண்டாள் மனைவி!